

# வாழ்க்கை அழைக்கிறது



ஜெயகாந்தன்


வாழ்க்கை
அழைக்கிறது
ஜெயகாந்தன்

http://www.pustaka.co.in

# வாழ்க்கை அழைக்கிறது

# Vazhkai Azhaikkirathu

Author:

## ஜெயகாந்தன்

**Jayakanthan**

For more books

http://www.pustaka.co.in/home/author/jayakanthan-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

அத்தியாயம் 28

அத்தியாயம் 29

அத்தியாயம் 30

அத்தியாயம் 31

அத்தியாயம் 32

அத்தியாயம் 33

அத்தியாயம் 34

# முன்னுரை

இது எனது முதல் நாவல். இந்த நாவலில் வரும் பாத்திரங்களிடையே குணமும் உண்டு; குறையும் உண்டு.

ஏனென்றால், அவர்கள் மனிதர்கள்! - நம்மிடையே வாழ்ந்து, தினசரி நம்மோடு பழகும் மனிதர்களும் இதில் உண்டு, நம்மால் ஒதுக்கி வைக்கப்பட்டு, நாம் ஒதுங்கி வந்துவிட்ட மனிதர்களும் உண்டு.

எனினும் வாழ்க்கை யாரையும் ஒதுக்கி வைத்து விடவில்லை; அவர்களும் வாழத்தான் வாழ்கிறார்கள்.

சாரங்கன் - நாவலுக்காக உயிர்பெற்றவனல்ல; வாழ்க்கையில் நான் சந்தித்த மறக்க முடியாத மனிதன்தான் அவன்.

இந்த நாவலில் நான் கண்ட உண்மைகளை எல்லாம் கூறிவிட்டேன் என்பதில்லை; கூறாமல் மறைத்துவிட்ட விஷயங்களும் உண்டு; எனது கைச்சரக்கும் உண்டு

இதில் கூறப்படாத விஷயங்களைக் கூறுவதற்குக் குறுக்கே நின்று ஏதோ ஒன்று தடுத்து விட்டது.

இதில் என்னென்ன இல்லை என்பதைப் பார்க்காமல், என்னென்ன இருக்கிறது, எப்படியெப்படி இருக்கிறது என்று கூறுவீர்களானால் அது எனது வளர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் உதவும் என்று நம்புகிறேன்.

முதல் பதிப்பிலிருந்தபடியே பின்னர் வந்த மறுபதிப்புகளில் எவ்வித மாற்றமும் செய்யாமல் என் முதல் 'படைப்பு' என்று கருதி அப்படியே விட்டிருக்கிறேன்.

- த. ஜெயகாந்தன்

*****

# 1

கிருஷ்ணபட்சத்து நிலவின் மங்கிய ஒளி ஆற்றின் அக்கரையில் நின்றிருந்த மரங்களிடையே புகுந்து அந்த ஒற்றைத் தனிக் கட்டிடத்தின் மீது வீசிக்கொண்டிருந்தது.

சரிந்து, இடிந்து சிதிலமாகிக் கிடந்த அந்த மாஜிக் கட்டிடம் காலதேவனின் கடைசி உதைக்குக் காத்திருக்கிறது. காலம் அதை உதைக்கத் தயாராக இல்லை. இற்றுப் போன சமூகத்தையும், செல்லரித்த அதன் சட்ட திட்டங்களையும், சொறி பிடித்த தத்துவ சாஸ்திரங்களையும், தேய்ந்துபோன மனித ராசியின் அசைக்க முடியாத பலஹீனத்தையும் எந்தக் காலம் உதைத்துத் தகர்க்குமோ அந்தக் காலம்தான் இந்தக் கட்டிடத்தையும் அழிக்க முடியும். அதுவரை கட்டிடமும், அதன் தன்மையும் சிரஞ்சீவித்வம் பெற்றவை.

ஊருக்கு வெளியே, சுடலைக்கரையை அடுத்த பெரிய சாலையில் – கழனி வெளியாக்க முடியாத கட்டாந் தரையில் ஒரு கட்டிடத்தைக் கட்டிப்போட்டு, போகும் வழிக்குப் புண்ணியமும் ஏகநாயகனின் திருவடியில் நிரந்தர ஸ்தானமும் பெற்று விடலாம் என்ற எண்ணத்துடன் ஒரு முஸ்லீம் பெரியார் தர்மத்துடன் நடத்திய தரகு வியாபாரத்தின் விளைவு அந்தக் கட்டிடம்.

கட்டிடத்தின் முகப்பிலே அதைக் கட்டிய புண்ணியவாளனின் பட்டயம் செதுக்கப்பட்டிருக்கிறது: 'பிஸ் மில்லாஹ்... எனது பாரியாளாகிய பாதிமா பீபி ஞாபகார்த்த தர்ம சத்திரம் - ஹக்கீம் ஆதம் மரைக்காயர், சித்த நல்லூர்.'

ஆம்; அது ஒரு சத்திரம்தான்!

அந்தச் சத்திரம் வாழ்க்கையைக் காணாதவர்களின் தங்கு மடம்; வாழ்க்கையினால் வெறுக்கப்படுவோரின் ஆஸ்ரமம். சமூகத்தினால் வெறுத்து, உதைத்து, உதறித் தள்ளப்பட்டவர்களின் இறுதிப் புகலிடம் அந்தச் சத்திரம்.

பெரிய சாலையில் லாந்தர் கம்பத்தின் விளக்குகள் குடிகாரனின் கண்களைப்போல சிவந்திருந்தன. அவை சேவை வைராக்கியத்துடன் தம்முடைய மங்கிய ஒளியைச் சிதறடித்துக் கொண்டிருந்தன. சத்திரத்துக்கு அருகே இருந்த விளக்கு சேவை செய்து தேய்ந்துவிட்டது. சிவந்து துடிக்கும் அந்த விளக்கு இன்னும் சிறிது நேரத்தில் தனது உயிரையும் தியாகம் செய்து விடலாம்.

ஒளியிழந்த விளக்கு! வாழ்விழந்த மனிதர்கள்! அதுவும் எரிகிறது; அவர்களும் வாழ்கிறார்கள்! ரத்தம் கக்கிச் சிவந்து துடிதுடித்து அது தன் சீவனை இழந்து விட்டது. எங்கும் ஒரே இருள்...! மனிதர்கள் செத்துப் போகிறார்கள் அல்லவா? அப்படித்தான் அந்த விளக்கும்! இருந்தும் இருள் தான்; அணைந்தும் இருள்தான்!

இந்த மனிதர்கள்...? ஆமாம், ஆமாம் அப்படித்தான்

அதோ ஒரு மனிதன்!

பெரிய சாலையில் நடந்து வருகிறான். நைந்து கிழிந்து அழுக்கேறிய வேஷ்டி வாடைக்காற்றில் படபடக்கிறது. சாலையோர லாந்தர் கம்பத்தைப் பற்றிக்கொண்டு நிற்கிறான். அந்த விளக்கு இன்னும் அணையவில்லை. நெற்றியில் சரிந்து கிடந்த முன் மயிரைத் தள்ளிக்கொண்டு வியர்வையால் நனைந்த முகத்தைத் துடைத்துக் கொள்கிறான். அவன் முகத்தில் அரும்பியிருந்த மெல்லிய ரோமம் விளக்கொளியில் மினுமினுக்கிறது... கண்களில் கிறக்கம்.

"அப்பாடா..." ஆழ்ந்த நீண்ட அவலப் பெருமூச்சு, மீண்டும் நகர்கிறான். அவன் நிழல் வீதியிலே நீண்டு கிடந்தது. அவனினும் பெரிது அவன் நிழல்; அவன் பலத்தைவிட அதிகம் அவன் தைரியம்.

அவன் பெயர் ராஜா!

ஒரு பெயரில் என்ன இருக்கிறது என்று விட்டுவிடுவோமானால் அதைப்பற்றிக் கவலையில்லை.

ஏனென்றால் இந்த ராஜா அரண்மனையில் வாழவில்லை. மண்குடிசையில் வாழ்ந்திருக்கிறான். சிரத்தில் முடி தரித்ததில்லை, தலையில் மூட்டை சுமந்திருக்கிறான். வாழ்க்கையைச் சுவைத்தறியாத வாலிபன்! இருபது வயது கூட நிரம்பாத அவன், பந்தமற்ற, நாதியற்ற, கடமைகளற்ற தனிமனிதன்; அனாதை! பருவகாலத்தில் ஆசாபாசங்களை அவன் கனவு கண்டதில்லை. பசி போக்க ஏதாவது வேலை கிடைக்குமா என்று ஊரூராகத் திரிபவன். வேலைகள் கிடைத்தன; நிலைக்கவில்லை. அவனுக்குப் படிப்பு இல்லை; பட்டம் இல்லை. ஆனால் அறிவு இருந்தது. படித்தவர்களும் பட்டம் பெற்றவர்களும்தான் சம்பாதிக்க முடியும் என்ற விதியா...!

'இல்லை! அவரவர்களின் திறமைக்கேற்ப யாரும் சம்பாதிக்கலாம்' என்று சிலர் சொன்னார்கள். அவனும் அதை நம்பினான். அவர்களின் உதவியினாலேயே மளிகைக் கடையில் சரக்கு நிறுப்பவனாகவும், ஜவுளிக் கடையில் துணி அளப்பவனாகவும், செருப்புக் கடையில் வாடிக்கைக்காரர்களின் காலைப் பிடிப்பவனாகவும் இன்னும் என்னென்னவோ சில்லரை வேலைகளில் கொஞ்ச நாட்கள் காலம் கழித்தான். அவன் வேலை செய்யும் இடங்களிலெல்லாம் இவன் 'ஒன்றை' எதிர் பார்த்தான், அது கிட்டவில்லை. ஆத்திரமடைந்தான்; வேலை இழந்தான்!

அவன் வேலை செய்த இடங்களில் அவனுக்குக் கூலி கிடைத்தது என்னவோ உண்மை. அது அவன் உழைப்புக்கல்ல; அவன் கௌரவத்திற்கு விலையாக அந்தக் கூலி கிடைத்தது. அவன் மனிதாபிமானத்தை, அவன் உரிமையை, அவன் இதயத்தை அவர்கள் விலை பேசினார்கள். அதற்கு அவன் சம்மதிக்க முடியுமா? - அவனால் முடியவில்லை.

அவனுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக அவனை ஒரு பொய்யனாய், ஏமாற்றுக்காரனாய், திருடனாய் மாற்ற

அவர்கள் "தர்மம்" விரும்பியது. அதற்கு அவன் சம்மதிக்கவில்லை.

"நன்றியில்லாதவன்!" என்று அந்தச் சமூகப் பெரியார்கள் அவனைக் குற்றம் சாட்டினர். நன்றியிருந்தது அவனுக்கு. நல்லது எது, கெட்டது எது என்று எண்ணிப் பார்க்க இதயமும் இருந்ததே... அவன் அவர்களுக்கு - அவனுக்கு வேலை கொடுத்து, கூலி கொடுத்தவர்களுக்கு நன்றியுள்ள மனிதனாக இருக்க விரும்பினான். 'நன்றியுள்ள மிருகமாயிருக்க வேண்டும்' என்று கட்டளை விதித்தார்கள்.

அவன் மறுத்து விட்டான்.

"தம்பி... நீ வாழ முடியாது!" என்றார்கள்.

"இந்த வாழ்க்கையை நான் ஏற்றுக் கொள்ள முடியாது!" என்று கூறிவிட்டான் அவன்.

"வியாபாரம் என்பதே தேவடியாள்தனம்!" என்று ஒரு வியாபாரி நயமாகப் பச்சையாக உண்மையை விளக்கினார்.

"உங்கள் வியாபாரத்தின் தன்மைக்குக் கோடி நமஸ்காரம்" என்று கூறிவிட்டு வெளியே நடந்தான் அந்த வாழத் தெரியாதவன். "உருப்படாப்பயல்!" என்ற கௌரவப் பட்டத்துடன் வேலையின்றித் தாய்க்குப் பாரமாய் திரிந்து கொண்டிருந்தான்.

அவன் வேலையற்றவன்; வெறுங்கையன். இல்லானை ஈன்றெடுத்த தாய்கூட விரும்பமாட்டாளாமே! அதனால் தான் அவன் தனியனானான். அவனுக்கு ஜீவிதமே வெறுத்தது. 'வஞ்சகமும், பொய்ம்மையும், எத்துவாளித்தனமும் நிறைந்து சமூகம் அழிந்து கொண்டிருக்கிறது. இதுதான் சமூக வளர்ச்சியா!' - அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

'மனிதர்கள் வாழவில்லையா? அவர்களுக்கு இதயமில்லையா? நீ மட்டும் என்ன தெய்வப் பிறவியா?' என்று ஆத்மா அடிக்கடி அவனுள் குரலெழுப்புகிறது.

அப்பொழுதெல்லாம் அவன் பதில் இதுதான்:

'மனிதர்களில் சிலர்தான் வாழ்கிறார்கள்! பலர் பிழைக்கிறார்கள் - வாழ்பவர்களுக்கு இதயமில்லை; பிழைப்பவர்களுக்கு அறிவில்லை, வாழும் சிலர் வாழவேண்டும் என்பதற்காக இதயத்தைக் கொன்றுவிடுகிறார்கள். பிழைக்கும் பலர் பிழைக்க வேண்டும் என்பதற்காக அறிவைப் புறக்கணித்து விடுகிறார்கள்.

'வாழும் சிலர் வாழவேண்டும் என்பதற்காக, என்றைக்குமே, தங்கள் இதயத்தைக் கொன்று கொண்டு இருந்துவிட முடியும். பிழைக்கும் சிலர் என்றைக்குமே தங்கள் அறிவைப் புறக்கணிக்கும் அறியாமையைச் செய்து கொண்டிருப்பார்களா?'

அது அவனுக்குப் புரியவில்லை.

அப்பொழுது அவன் ஒரு செருப்புக் கடையில் வேலை செய்து கொண்டிருந்தான்.

முதலாளி காகித அட்டை வாங்கி வரச் சொன்னார்; வாங்கிக் கொண்டு வந்தான்.

'செருப்புக் கடையில் அட்டை எதற்கு?' என்று கேட்டது அவன் மனம். 'முதலாளி சொல்கிறான்; அவன் செய்ய வேண்டும்' - இது நியதி.

தோலுக்குப் பதிலாக அட்டையில் செருப்புத் தைத்தான் தொழிலாளி. அவனுக்கு அந்த எண்ணம் ஏற்பட்டதோ, என்னவோ? முதலாளிக்கு அப்படிப்பட்ட எண்ணம் நிச்சயமாக ஏற்படவில்லை என்று சொல்லி விடலாம். அதனால்தான் அட்டையில் தைத்த செருப்பைக் 'கான்பூர் கம்ப்ரெஸ்டு லெதர்' என்று மனம் ஒப்பி அவரால் சொல்ல முடிந்தது. ஆனால் பிழைக்கத் தெரியாத ராஜாவுக்கு அப்படிச் சொல்ல முடியவில்லை. முதலாளி சொன்னதை அவனால் செய்ய முடிந்தது. ஆனால் முதலாளி சொல்வதை அவனால் சொல்ல முடியவில்லை. முதலாளி அவனை

அடிக்க வந்தான். தன்னுடைய மான உணர்ச்சிக்கு விடப்பட்ட சவாலை ஏற்றுக் கொண்டு கொதித்து எழுந்தது ராஜாவின் இளம் உள்ளம்... ரகளையும், கூச்சலும் அதிகமாகவே, கடைத் தெருக் கூட்டம் முழுவதும் அந்தக் கடைமுன் கூடி நின்றது.

'அகம்பாவி, முரடன், போக்கிரி, பணிவில்லாதவன், மரியாதை கெட்டவன்' என்றெல்லாம் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தப்பட்டான் ராஜா; ஜனங்களால்தான்! ஏமாற்ற நினைத்த வியாபாரியும், ஏமாறப்போகும் வாடிக்கைக்காரர்களும் அவனை வெறுத்து ஒதுக்கினார்கள்.

கணக்கைத் தீர்த்துச் சம்பளப் பாக்கி பதினைந்து ரூபாயைக் கையில் வாங்கிக்கொண்டு யாரையும் லட்சியம் பண்ணாமல் வீட்டை நோக்கி நடந்தான் ராஜா.

'இதனால் உனக்கு என்ன லாபம்?' என்றது மனசு; 'எல்லா விஷயங்களிலும் லாப நஷ்டக் கணக்குப் பார்க்க என்னிடம் என்ன மூலதனம் இருக்கிறது?' என்று சிரித்துக் கொண்டான் அவன். 'என்ன சிரிக்கிறாய்? - உன் செயலால் நாளைக்கு உன் நிலை என்ன என்று எண்ணிப்பார். சிரிப்பு ஒரு கேடா?' என்று சினந்தது மனசு.

'அதற்கு நான் என்ன செய்வது? பாழும் இதயம் கேட்க மாட்டேன் என்கிறதே!'

'உன் தாய் வருத்தப்படுவாள்.'

'ஏன்? தன் மகன் நேர்மை தவறாதவன் என்று பெருமை கொள்ளக்கூடாதா?'

'உன் நேர்மை யாருக்கு வேண்டும்?'

'சீ! வேடிக்கையான மனிதர்கள்...'

'இனிமேல் இந்த ஊரில் யார் உனக்கு வேலை கொடுப்பார்கள்? - அவன் தனக்குத்தானே சிரித்துக்

கொண்டான். குடிசையும் வந்து விட்டது.

"டேய் ராஜா, நீ பொழைக்கத் தெரியாதவண்டா…” என்று சப்தம் போட்டுச் சொல்லிக் கொண்டே குடிசைக்குள் நுழைந்தான்.

"இந்த லெச்சணத்தை நீ வேறே சொல்லிக்கிறையோ?” என்று சிரித்துக்கொண்டே அடுப்பிலிருந்த சோற்றுப் பானையை இறக்கி வைத்தாள் அவன் தாய் லட்சுமி.

"அம்மா ஒரு விஷயம்” என்று மெள்ள ஆரம்பித்தான்.

“என்னடா விஷயம்?”

“நா, வேலையை விட்டுட்டேன்.”

“என்ன?”

“ஆமாம். நான் வேலையை விட்டுட்டேன்.”

“எதுக்கு”

“அவன் என்னை அடிக்க வந்தான்.”

“எவன்…?”

"முதலாளி”

“அவனுக்கென்ன பைத்தியமா?”

“ஆமாம்! பணப் பைத்தியம்!”

“டேய், நீ பொழைக்க மாட்டே…”

“எனக்கும் அப்படித்தான் தோணுது!”

"நான் செய்த பாவம், பொறுப்பில்லாத பிள்ளையைப் பெற்று வைத்திருக்கிறேன்."

“பொறுப்பிருக்கிறது, எனக்கு மானமும் இருக்கிறது அம்மா!”

"மானம் இருப்பது சரி; வயிறும் இருக்கிறதடா மகனே!" இதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. நின்றது நின்றபடி இருந்தான். பார்வை எங்கோ நிலைத்தது. மனம் எதிலும் நிலைக்காமல் தடுமாறி என்னென்னவோ நினைத்தது.

தாயின் துயரத்தையும், அவள் படும் சிரமத்தையும் எண்ணி உள்ளுக்குள் மறுகிக் கொண்டிருந்த அவனை அந்த வார்த்தை எரிசரம் போல் சுட்டுவிட்டது.

'வயிறும் இருக்கிறது' அவன் தனக்குள் முனகிக் கொண்டான். அவன் வயிற்றில் என்னவோ செய்தது. கண்கள் கலங்கின.

'வயிறும் இருக்கிறது... வயிறும் இருக்கிறது' என்று அவன் மனம் வீணையின் அறுந்த தந்திபோல் ஒலித்துக் கொண்டே இருந்தது.

"ஆமாம்! எனக்கு வயிறும் இருக்கிறது. அது அம்மாவுக்குத் தெரியும். எனக்கு வேலையும் இல்லாவிட்டால் இது இன்னும் பெரிசாத் தெரியும் - " அவன் தனக்குள் பேசிக் கொண்டான்.

அவன் தாயின் கௌரவம் இட்டிலி, அடுப்பினாலும், அப்பளக் குழவியினாலும் காப்பாற்றப்பட்டு வருகிறது, அவளுக்கு அதுவே சாஸ்வதம் அவனுக்கு?

பத்து வருஷங்களுக்கு முன் - அவன் தந்தை இறந்ததிலிருந்து லட்சுமியம்மாளின் சாஸ்வத உழைப்பில்தான் அவன் வளர்ந்து வந்திருக்கிறான். ராஜாவின் தந்தை இருக்கும்போதே குடும்பம் ஓட்டைப் படகு. தத்துவங்களிலும் அருள் நெறி முறையான தவஞானங்களிலும் லயித்துப் போன சராசரி மத்தியதரத் தமிழ் குடும்ப மனிதரான அவருக்குப் பற்றெல்லாம் பரலோக நித்தியத் துவத்தின் மீது இருந்ததேயல்லாமல் 'இகலோக இச்சா மாயை'களின் மீது சற்றும் மோகமோ, பற்றோ இருந்ததில்லை. அவருக்கு அவர் லட்சியம் கைகூடி

விட்டது. அதாவது பரம் காணவேண்டிய பாக்கியம் லயித்து விட்டது. அதன் பிறகு தனது ஒரே பற்றுக் கோடான, லட்சியமான ராஜாவை வளர்ப்பதற்குத்தான் லட்சுமியம்மாளுக்கு எத்தனை சிரமங்கள்!

குடிசை வாயிலில் மௌனமாக உட்கார்ந்துவிட்ட ராஜாவின் மனம் தன் தாயைப் பற்றி உழன்றுகொண்டே இருந்தது. 'அம்மாவுக்கு என்னால் பலனில்லை; பாரமாவது இல்லாமலிருக்கலாம் அல்லவா? என்னால் அம்மாவுக்குச் சிரமம்! பாவம் அம்மா...' கன்னங்கள் இரண்டிலும் கைகளை ஊன்றிக்கொண்டு கண்களில் கண்ணீர் கலங்கி வழிய எங்கோ வானவெளியை நோக்கிக் கொண்டிருந்தான். மனம் நைந்து நைந்து புலம்பியது.

"கண்ணா" - அவன் தாய் அவனைச் செல்லமாக அழைப்பது அப்படித்தான்.

"கண்ணா சாப்பிட வாடா" அவன் மௌனமாக எழுந்து சென்றான். அவள் உணவு பரிமாறினாள்.

"நம்ம நிலையை நாம் உணரலேன்னா..." அவள் என்னவோ புத்திமதி கூறினாள். அவள் சொல்லுவது ஒன்றும் அவன் காதில் விழவில்லை. அவள் பரிமாறுவது ஒன்றும் அவன் வாய்க்கு ருசிக்கவில்லை. அவன் மனம் எங்கோ - எங்கோ, எதையோ நினைத்து எட்டிப் பிடிக்கத் தாவி விழுந்து, தடுமாறி, நிலைக்க முயன்று கொண்டிருந்தது.

அன்று மாலை, அவன் புறப்பட்டு விட்டான். எங்கே?

சூனியத்திலிருந்து ஜனித்த அவன் சூனியத்தை நோக்கிப் போவதைத் தவிர்த்து வேறு எங்கே போவது? வேறு போக்கிடம் ஏது?

ஒன்றுமற்ற பாழ் வெளியை நோக்கி, விரக்தியெனும் இருட் குகையை நோக்கி - நோக்கமற்ற, குறியற்ற, பிடிப்பற்ற, லட்சியமற்ற அவன் வாழ்க்கைப் பயணம் தொடங்கி விட்டது. மனம் போன போக்கெல்லாம் கால் நடக்க கால் நடந்த திசையெல்லாம் பாதை விரிய அவன் போய்க்

கொண்டிருந்தான் - காலம் அவனை இட்டுச் சென்றது. கால்கடுக்க அவனும் நடந்து கொண்டிருந்தான்.

அவனுக்கென்று இந்த உலகத்தில் என்ன இருக்கிறது? அவன் உண்டு, அவன் செயல்கள் உண்டு. அவற்றின் பலன்கள் உண்டு!

பாவம்! அவன் வாழ்க்கைப் பாதையிலே அந்தச் சத்திரம், அந்தப் பலிபீடம் குறுக்கிட்டு விட்டது.

அதோ! இருளோடு இருளாக ஐக்கியமாகிவிட்ட அந்தச் சத்திரத்துப் படிக்கட்டுகளில் தள்ளாடித் தள்ளாடி ஏறுகிறான். உறக்கம் கண்களைச் சுழற்றுகிறது. மேல் துண்டை உதறித் தரையைத் தட்டிப் படுத்துக் கொள்கிறான். பெரிய சாலைக்கப்புறத்திலே ஓடும் ஆற்று நீரின் 'சலசலப்பு' காற்றில் கலந்து ஒலிக்கிறது. ஆற்றின் அக்கரையிலே சுடலைப் பூமியில் தீப்பற்றி எரிகிறது. மயானக் கரையின் பிணவாடை எங்கும் பரவுகிறது. புளிய மரக் கிளையில் கோட்டான் ஒன்று குரலெடுத்துக் கொக்கரிக்கிறது. 'சீ... இன்னும் உறக்கம் வரவில்லையே' என்று புரண்டு படுக்கிறான் ராஜா.

"ஐயோ... மாட்டேன்... மாட்டேன்...” என்ற ஒரு பெண்ணின் அவலக் குரல் அந்தப் பயங்கர அமைதியைக் கிழித்துக்கொண்டு சரேலென்று பாய்ந்து அவன் வயிற்றைக் கலக்கிற்று. அந்த ஓலத்தைத் தொடர்ந்து 'சடார்... சடார்' என்ற சாட்டையடியின் குரூரமான ஓசை! ராஜா எழுந்து நின்று ஒன்றும் புரியாமல் விழித்தான்!

*****

# 2

இறந்தகால அரண்மனை நிகழ்கால சத்திரமென்பது காலம் வகுத்த விதி. இந்த விதி தங்கத்தின் வாழ்க்கைக்கும் பொருந்தும். தங்கம் மலையாளத்தைச் சேர்ந்தவள். கட்டை குட்டையாக, கண்ணுக்குக் கவர்ச்சியான உடற்கட்டு உடையவள், வசீகரமான மேனி வளப்பம், அரண்மனை தாசிகளுக்குரிய - அஞ்சனம் தீட்டிய அகன்ற நீள - அழகிய கண்கள்; கனவில் ஆழ்ந்த நீலக் கருவிழிகள். அந்த விழிகள் சத்திரத்து விபசாரிகளுக்கு இருக்க வேண்டிய விழிகளல்ல. கவிஞனின் லட்சிய உருவான காவிய நாயகியைக் காலம் எங்கோ கொண்டுவந்து தள்ளிவிட்டது. திசைமாறித் திரியும் காலச் சூறாவளியில் - வாழ்வுச் சுழலில் சிக்கித் தவிக்கும் எண்ணற்ற துரும்புகளில் அவளும் ஒருத்தி.

தங்கத்தின் தகப்பனார் பெரிய மிராசுதார்தானாம், பட்டணம் வந்து பணம் சேர்க்க எண்ணினார். கடன் தொந்தரவுகளிலிருந்து தப்பவும் வேறு வழியில்லை. சென்னைப் பட்டணத்தில் மலபார் மிலிடெரி ஹோட்டல் நடத்தியதன் விளைவாய்ப் பணம் சேர்ந்தது உண்மை. அனுபவிக்க ஆயுள் வேண்டாமா?

தந்தை இறந்த பிறகு தாய்மாமன் ஆதரவில் வளர்ந்தாள் தங்கம். வளர்த்த மாமா அவளை மணக்கவும் விரும்பினார்.

தாயும் தகப்பனும் இல்லாத காரணத்தினாலோ என்னவோ தங்கம் தனக்கென ஒரு நாயகனைத் தானே வரித்துக் கொண்டிருந்தாள். மாமாவின் ஏற்பாடு அவள் மனசுக்கு ஒவ்வாதது. ஆனால் மாமாவின் முடிவு மாற்ற முடியாதது - தங்கத்தின் இளம் உள்ளம் காதற் கனவுகளில் சஞ்சரிக்கும் அந்தப் பேதை மனம் எதற்கும் துணிந்திருந்தது. ஏற்கனவே தன் இதயத்தைக் கவர்ந்த நாயகனான சர்வர் சங்கர நாராயணனுடன் ஒருநாள் இரவு வீட்டை விட்டே ஓடிப்போனாள்.

ஐயாயிரம் ரூபாய் ரொக்கப் பணத்துடனும் நகைகளுடனும் அவள் கரம் பற்றி வழி நடந்த காதலன் கொஞ்ச நாள் இவளுடன் காதல் வாழ்க்கை நடத்தினான், பிறகு...?

பிறகு, செத்துப் போய்விட்டானா? - ஆம்; ஒருநாள் இரவு திடீரென அவள் இன்னுயிர்க் காதலன் செத்தே போனான். அவளைப் பொருத்தவரை! பாவம், தங்கம் என்ன செய்வாள்? தற்கொலை செய்து கொள்ளலாம்! முடியுமா? உயிராசை அவ்வளவு சாமான்யமா...?

தற்கொலை கோழைகளின் செயல் என்று போகிற போக்கில் சொல்பவர்கள் சொல்லிக் கொள்ளட்டும்.

வாழ்பவர்கள்தான் கோழைகள்! சாவதற்குத் தைரியம் இல்லாமல்தான் மனிதன் விரும்பத்தகாத சூழ்நிலையிலும் கூட ஈன வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறான் - இது தங்கத்தின் அனுபவ சித்தாந்தம்.

சாவதற்குத் தைரியமில்லை; வீட்டிற்குச் சென்று வாழ்வதற்கும் தைரியமில்லை. சித்த பிரமை கொண்டவள் போல் எங்கெங்கோ திரிந்து கொண்டிருந்த அவளுக்கு, போகும் வழியில் புகலிடமாக அடைக்கலமளித்தது சித்த நல்லூர் தர்மசத்திரம்.

இரவில் சத்திரத்துக்கு வெளியே மண் தரையில் தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்த அவளை யாரோ ஒரு பெண் தட்டியெழுப்பினாள். அவள் பசி அறிந்து சத்திரத்தினுள் அழைத்துச் சென்று தங்கத்திற்கு உணவளித்தாள். தங்கத்தின் பூர்வோத்திரத்தை அனுதாபத்தோடு விசாரித்தாள். அவளுக்காகக் கண்ணீர் வடித்தாள். உண்மையாகவே இந்தப் பேதைப் பெண்ணை அவள் நேசித்தாள்.

அவள் தர்மசத்திரத்தின் ஸ்தாபகரான ஹக்கீம் ஆதம் மரைக்காயரின் பரம்பரையைச் சேர்ந்தவளும், தற்போதைய சத்திரத்து நிர்வாகியான ரெஸாக்கின்

தூரத்து உறவினரும், நிக்காஹ் செய்யப்படாத மனைவியுமான ரஸியா பேகம்!

தன் இஷ்டப்படி எதையும் செய்ய ரஸியா சத்திரத்தின் பட்டத்தரசியல்ல. ரெஸாக்கின் ஏவலாள்தான் அவள். ரஸியாவை ஏவி, தங்கத்தைக் கைப்பற்றிச் சத்திரத்து ஏக நாயகிகளில் ஒருத்தியாக்க எண்ணினான் ரெஸாக். அவனுடைய கூட்டாளியும் தலைவனுமான சாரங்கன் அதற்குத் தூபமிட்டான். உள்ளூர் செல்வந்தரும், முனிசிபல் சேர்மனுமாகிய சிதம்பரம்பிள்ளையெனும் கிழட்டு ஓநாய் அவளைச் சுவைக்கத் துடித்தது. காட்டு ஓநாய்க்கும் இவருக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றே ஒன்றுதான். ஆட்டின் ரத்தத்தைச் சுவைக்க எண்ணும் ஓநாய் ஆட்டின் சம்மதத்தைப் பெற முயல்வதில்லை. ஒரு பெண்ணின் இளமையை அவள் சம்மதமின்றி அனுபவிப்பதில் எவ்விதச் சுகமுமில்லை என்பதைத் தனது நாற்பதாண்டு அனுபவத்தின் விளைவாக உணர்ந்த பெரிய மனிதர் ஸ்ரீமான் சிதம்பரம்பிள்ளை அவர்கள்.

தங்கத்தைப் பார்த்ததும் அவளுக்காக இருநூறு ருபாய் தருவதாக அந்தக் கனவான் ஒப்புக்கொண்டார். ஒரே நிபந்தனையின் பேரில், அவள் தானாகவே அவரிடம் வந்து அவரை முத்தமிட வேண்டும். இது சிதம்பரம் பிள்ளையின் சுய தீர்மானம் அன்று. ஏனென்றால் அவளைப் பார்த்தபோதும் நிபந்தனை விதித்தபோதும் அவர் சுயநினைவுடன் இல்லை. சத்திரத்தில் கிடைத்த பட்டைச் சாராயம் முதல் 'வின் கார்னிஷ் ஒயின்' வரை வகைக்கு ஒரு டோஸ் குடித்திருந்தார். இந்த சமயத்தில் அவர் அபிலாஷை பூர்த்தியாகுமானால் ஒப்பந்தத் தொகை ஒன்றுக்கு இரண்டாகவும் மாறலாம்.

இந்த வியாபாரத் தந்திரத்தை ரஸியாவும் ரெஸாக்கும் சாரங்கனும் உணர்ந்திருந்தால் மட்டும் போதுமா? - இது இந்த முட்டாள் பெண் தங்கத்திற்குத் தெரியவில்லையே என்று வெகுண்டான் சாரங்கன்.

தங்கம், அவர்களின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு அழுதாள்; கூவினாள்; தீர்மானமாகச் சிரத்தை உலுப்பிக் கொண்டு மறுத்தாள்; அதெல்லாம் நடக்குமா?

படியாதவர்கள், துணிந்து எதிர்ப்பவர்கள் - அவர்கள் யாராயிருந்தாலும் சரி, பணக்காரனாயிருந்தாலும், ஏழை ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் அவர்களை அடக்கி வழிக்குக் கொண்டு வருவதில் அல்லது ஒரேயடியாகத் தீர்த்துக் கட்டுவதில் கெட்டிக்காரனென்று போலீஸ் 'ரெக்கார்'டில் 'சர்டிபிகேட்' வாங்கியவன் சாரங்கன். ஊரிலுள்ள பணக்காரர்களுக்கிடையே பகை முற்றிவிட்டால் அவர்களுடைய போட்டி, முதலில் சாரங்கனை விலைக்கு வாங்குவது யார் என்பதாகத்தானிருக்கும். ஆம்; அவன் ஒரு ரௌடி; "அடியாள்!"

தங்கம் அவனிடம் ஒப்புவிக்கப்பட்டாள்.

சாரங்கனின் ராட்சஸத்தனமான சாட்டையடியின் முன்பு வாழவழியற்ற ஒரு பெண்ணின் உறுதி நிமிர்ந்து நின்றது; சவால் விடுத்தது. அவனுக்கு வெறி பிடித்தது.

*****

# 3

தனித்து நின்ற ராஜா ஏதோ விபரீதம் நடப்பதாக உணர்ந்தான். மேல்துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு ஓசையில்லாமல் ஓலம் வந்த இடம் நோக்கி நகர்ந்தான்.

இடிந்து போன சத்திரத்தின் பின்புறச் சுவர் ஓரமாக ஹரிக்கேன் லைட்டின் வெளிச்சம் வீசிக் கொண்டிருந்தது. உளுத்துப்போய்க் காரை உதிரும் சுவரில், பழம்பாய், உடைந்த மண்சட்டி, கந்தல் மூட்டை முதலியன அடைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிறிய சன்னலின் வழியாக உள்ளே நடப்பதை எட்டிப் பார்த்தான் ராஜா!

'இதென்ன கொள்ளைக் கூட்டமா...? ஒரு பெண்ணை இப்படிச் சித்ரவதை செய்கிறார்களே இந்தப் பாவிகள்!' என்று அவன் மனம் துடித்தது.

'அடே நீசப்பதர்களே...! என்று பாய்ந்து அவர்களைத் தாக்கி அந்தப் பெண்ணை விடுவித்தால் என்ன?' என்று அவன் நெஞ்சு பதைத்தது.

'இன்னும் சற்றுப் பொறுப்போம்' என்று புத்தி நிதானித்தது. அவன் உடலும் மனமும் அந்த கொடுமையைச் சகிக்க முடியாமல் பதறின; துடித்தன! ஆத்திரத்துடன் பற்களைக் கடித்தான்... என்றாலும் அறிவிழக்கவில்லை.

"சாரங்கா, இவள் பணியமாட்டாளா?" என்று ஆத்திரத்துடன் உறுமி, கையிலிருந்த சுருட்டுத்துண்டை எரிச்சலுடன் ஜன்னல் வழியே வீசியெறிந்தார் சிதம்பரம் பிள்ளை. வீசியெறிந்த எச்சில் சுருட்டு ராஜாவின் முகத்தில் விழுந்தது. அருவருப்புடன் முகத்தைத் துடைத்த அவன் கரம் அவசரத்தில் ஜன்னல் கம்பிகளுக்கிடையே இருந்த கந்தல் மூட்டையின் மீது விழுந்து, கந்தல் மூட்டை நழுவி ஓட்டைப் பானையின் மீது சரிந்து ஓட்டைப்பானை உருண்டு கீழே விழுந்து படீரென உடைந்து சகலரின் கவனத்தையும் சன்னலுக்கு வெளியே கவர்ந்தது. ரெஸாக் ஹரிக்கேன்

லைட்டை உயர்த்திப் பிடித்துச் சன்னலுக்கு வெளியே நோக்கினாள். நிலை குலைந்த ராஜா அப்படியே சுவரடியில் குறுகித் தவழ்ந்து நடந்து விரைந்து சத்திரத்துத் திண்ணையின் மேல் படுத்துக் கொண்டான். அவனை யாரும் பார்க்கவில்லை. ஆனால் துணைதேடித் தவிக்கும் தங்கத்தின் கண்கள் அவன் முகத்தை வெகு சூட்சுமமாகக் கண்டு கொண்டன. சில நிமிஷங்கள் ஒரே மௌனம். அதன் பிறகு அங்கு ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை. ராஜா உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான். வெகுநேரம் கழித்துச் சிதம்பரம் பிள்ளையும், சாரங்கனும் சத்திரத்து வாயிற் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தனர். இருளில் சிதம்பரம்பிள்ளையின் கையிலிருந்த சுருட்டின் நெருப்புக் கனிந்து கொண்டிருந்தது. அவர் சுருட்டைப் புகைக்கும் போது கனன்ற ஒளியில் சாரங்கனின் தோள் மீது கிடந்த கரிய தோல்வார்ச் சாட்டை மினுமினுத்தது. சிதம்பரம் பிள்ளை குரலைத் தாழ்த்திப் பேசினார்.

"என்னப்பா சாரங்கா, பாச்சா பலிக்காது போலிருக்கிறதே!" அவர் குரலில் ஏளனம் தொனித்தது. சாரங்கன் சப்தம் போட்டுச் சிரித்தான். அவன் முரட்டுச் சிரிப்பு, சத்திரத்துச் சுவர்களில் மோதி எதிரொலித்தது.

"என்ன பிள்ளை, யாருகிட்ட பேசுறீங்க? சாரங்கன் சொன்னது நடக்கும்; நடக்க வைப்பான்."

"சாரங்கா, வெறும் முரட்டுத்தனத்தினால் மட்டும் இதை சாதிச்சுட முடியாது. வேறு ஏதாவது வழி இருக்கா?"

“இல்லாமலென்ன? உங்களை மாதிரி கிழவனாயில்லாவிட்டால், அவள் எப்போதோ சம்மதிச்சிருப்பாள்.”

"நானா கிழவன்? காமாட்சியைக் கேட்டுப்பார். உன்னை விட வாலிபன் நான் என்று சொல்லுவாள்" என்று கூறிக் கர்வத்துடன் சிரித்தார் பிள்ளை.

“அது வேறு விஷயம்! எனக்கொரு யோசனை தோணுது!”

"என்ன!”

"உம்... என் தம்பி - சபாபதி இருந்தா இவளை ஒரு நிமிஷத்திலே பணிய வச்சிடுவான்... எப்பேர்ப்பட்ட பொம்பிளை ஆனாலும் அவன்கிட்டே மயங்காம இருக்க முடியாது. என்னவோ வசிய மருந்து வச்சமாதிரி தான்...” என்று பெருமூச்சு விட்டான் சாரங்கன்.

"பழைய கதையெல்லாம் எதுக்கு? இவளை வசியம் பண்றது என்ன பெரிய விஷயம்? உன்னாலே முடியலேன்னு சொல்லு" என்று கேலியாகச் சிரித்தார் பிள்ளை. சாரங்கன் பதிலொன்றும் பேசவில்லை.

"அவளைக் கையையும் காலையும் கட்டிப்போட்டு...”

“அதுக்கு நீ வேணுமா? அது என்னாலேயேயும் முடியும் எனக்கு அதில் பிடித்தமில்லை.”

இவ்விதம் அவர்களின் வாதம் பிரதிவாதங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. திண்ணையில் படுத்துக் கொண்டிருந்த ராஜா மெள்ளத் தலையை உயர்த்தி அவர்களைக் கவனித்தான். சத்திரத்து முன்புறக் கதவு திறந்தது. கையில் ஹரிக்கேன் விளக்குடன் ரஸியா நின்றிருந்தாள்.

"ஆட்டத்துக்கு எல்லாரும் வந்தாச்சு, வாங்களேன்" என்று அழைப்பு விடுத்தாள் ரஸியா. அவர்களிருவரும் அவளைப் பின்தொடர்ந்து உள்ளே நுழைந்ததும் சத்திரத்தின் வாயிற் கதவுகள் மீண்டும் மூடிக்கொண்டன. வெளியே ஒரே இருள்.

பெரிய சாலையில் வெளிச்சம் தெரிந்தது. அது ஒரு சைக்கிள். சத்திரத்தருகே சைக்கிளை நிறுத்தி அதிலிருந்து ஒரு வாலிபன் இறங்கினான். கையிலிருந்த டார்ச் லைட்டின் ஒளி சத்திரத்து முன்புறத்தில் வட்டமிட்டுச் சுழன்றது. திண்ணையோரத்தில் படுத்திருந்த ராஜாவின் முகத்தில் ஒளிபட்டு அவன் கண்கள் கூசின. கண்களைக் கசக்கிக்கொண்டு புரண்டு படுத்தான். விளக்கை அணைத்து விட்டுச் சத்திரத்தின் கதவருகே சென்று லேசாகக் கதவில் விரலால் சொடுக்கி மெல்லிய ஓசை

எழுப்பினான் அந்த வாலிபன். சிறிது நேரம் கழித்துக் கதவைத் திறந்து கொண்டு ஒருத்தி வந்தாள்.

“யாரு சோமுதானே?”

“ஆமா, அப்பா போய்விட்டாரா?”

“அந்தக் கிழம் விடிஞ்சுதான் போகும் போலிருக்கு;"

“காமாட்சி, கொல்லைப்புறமா வந்து கதவைத் திறக்கறையா? ஆட்டம் நடக்குதா?”

“உம்... உம்... அதெல்லாம் ரொம்ப மும்முரமா நடக்குது. அதனாலே யாரும் நம்மைக் கவனிக்க மாட்டாங்க. தோட்டத்துக் கதவைத் திறந்து வைக்கிறேன்; நீ அப்படியே மாடிக்குப் போயிடு" என்று ரகசியமாகக் கூறினாள் காமாட்சி

"சரி இதையும் எடுத்துக்கிட்டுப் போயிடு.”

“என்ன இது?”

“பிராந்தி...”

“சோடா...”

"அப்பாகிட்டே இருக்குமே... நைஸா ஒரு பாட்டிலை எடுத்துக்கிட்டு வந்துடு."

"சரி சரி, நீ தோட்டத்துப்பக்கம் வா."

மீண்டும் சத்திரத்தின் கதவுகள் மூடிக்கொண்டன.

ராஜாவின் மனம் அங்கு நிகழ்ந்தவைகளைக் கிரகித்துக் கொண்டு, அந்த அபலைப் பெண்ணைக் காப்பாற்ற ஏதாவது வழியுண்டா என்று யோசித்த வண்ணம் இருந்தது. சத்திரத்தின் உட்புறத்தில் ஒரே சிரிப்பும், கும்மாளியுமாக இருந்தது. காசும் பணமும் கலகலத்தன. கண்ணாடித் தம்ளர்கள் விழுந்து நொறுங்கின. பெண்களும் ஆண்களும்

கட்டிப்புரண்டு போதை மயக்கத்தில் தங்களை மறந்து உளறுவதும், கூச்சலிடுவதும் சத்திரத்துக்கு வெளியே லேசாகக் கேட்டது. சில சமயத்தில் பலமாகவும் கேட்டது.

ஏதேதோ யோசனைகளில் ஆழ்ந்திருந்த ராஜா, திடீரென நம்பிக்கையுடன் எழுந்து உட்கார்ந்தான். "சபாஷ்டா…” என்று கைகளைச் சொடுக்கிக் கொண்டான். லேசாகச் சிரித்தான். இருளில் அவன் பற்கள் ஒளிவீசின. அவன் கண்களில் நம்பிக்கை சுடர்விட்டது!

*****

# 4

மேல் துண்டை உதறித் தோள் மீது போட்டுக் கொண்டு சத்திரத்து வாயிற்படியில், பல்குச்சியும் கையுமாய் உட்கார்ந்திருந்தான் சாரங்கன். அவன் மனம் சிதம்பரம்பிள்ளையிடமிருந்து இருநூறு ரூபாயைக் கறப்பதற்கு வழி என்ன என்று துருவித் துருவித் தேடிக் கொண்டிருந்தது. 'சபாபதி இருந்தால்? - ' அவன் தம்பி சபாபதி போலீஸாரால் கொல்லப்பட்டதிலிருந்து, எந்த விஷயத்திற்கும் சாரங்கன் இப்படி நினைப்பது சகஜமாகி விட்டது.

சபாபதி சாரங்கனின் அன்புக்குப் பாத்திரமாயிருந்த ஒரே பிறவி. இந்த உலகத்தில் சாரங்கன் யாரையும் நேசித்ததில்லை. தன்னையும் நேசித்ததில்லை. மனித சாதியின் கீழ் மட்டத்தில், சமூகம் ஒதுக்கி வைத்த சாக்கடையிலிருந்து அவதரித்தவர்கள் சாரங்கனும் அவன் தம்பியும். சாரங்கனுக்கு அவன் தந்தை யாரென்று தெரியாது. அவன் தாய் அவனுக்குச் சொல்லிக் கொடுத்ததில்லை. அவளுக்கே தெரியுமோ, என்னவோ? அவன் தம்பி சபாபதிக்குத் தாயைக்கூடத் தெரியாது. அவள் வயிற்றில் பிறந்த பாவத்திற்காகத் தன்னையும் தன் உடன் பிறந்த தம்பியையும் தானே வளர்க்க வேண்டிய பொறுப்பு சாரங்கனைச் சார்ந்துவிட்டது.

காலம் அந்த இருவர் குணநலன்களிலும் வெவ்வேறான இணைத்துப் பார்க்க முடியாத இரு துருவங்களை சிருஷ்டித்து விட்டது. இளமையில் சாரங்கனை யொத்தே வளர்ந்தான் சபாபதியும்.

அப்பொழுதுதான் அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிட்டாள் காமாட்சி. இராமநாதபுரத்தைச் சேர்ந்த பிராமணப் பெண். ஏழைக் குடும்பத்தில் பிறந்துவிட்டாள். இளமையில் கைம்மைக் கோலம் பூண்ட பின் கூட அவள் வாழ்வதற்காக 'மேனி வர்த்தக'த்தில் ஈடுபடவில்லை. தன்னந்தனியளாய்

நாதியற்ற அபலையாய் இருந்தாலும் கூட மான உணர்ச்சி இருந்தது அவளுக்கு.

ரயில்வே ஸ்டேஷனை அடுத்திருந்த சாலையோரத்தில் ஒரு குடிசை வேய்ந்து கொண்டு பட்சணக் கடை வைத்து நடத்தி வந்தாள்.

நாளடைவில் ஒருவனைக் காதலிக்க ஆரம்பித்தாள். அவள் காதல் நித்தியமானதாய், சத்தியமானதாய் இருந்தது அவளைப் பொறுத்தவரை. ஆனால் அவள் காதலன், அவளைப் போலவே உலகமறியாப் பேதையல்ல. ஒரு நாள் அவன் நாலும் தெரிந்த 'நல்லவனாக' நடந்து கொண்டான்...

அவன் அவளைக் கைவிட்ட பிறகு - அவனுக்காகச் சில காலம் அழுதுகொண்டே இருந்தாள் காமாட்சி காலம் அவள் கண்ணீரை மாற்றிவிட்டது. ஒருவன் போன பின் வேறு ஒருவன் வந்தான்! இப்படியாக ஆரம்பித்த அவள் 'காதல் வாழ்வு' இட்டலி வியாபாரத்திலிருந்ததை விட அதிக லாபம் கொடுத்தது.

அப்பொழுது ஏதோ ஒரு கொலை வழக்கில் சிக்கியிருந்த சாரங்கன் போலீசுக்குப் பயந்து தன் தம்பியுடன் ராமநாதபுரத்திற்கு ஓடி, தலைமறைந்து வாழ்ந்தான். அவர்களுக்குப் புகலிடம் அளித்தாள் காமாட்சி. சாரங்கனைப் போன்ற ஆளின் துணை, அவள் 'வியாபாரம்' வெற்றிகரமாக நடப்பதற்கு அவசியமாயிருந்தது. சாரங்கனும், சபாபதியும் கொஞ்ச காலம் அவளுடன் சேர்ந்து வாழ்ந்தனர். அவளுடன் அவர்களுக்கும் சேர்த்து ஊதியம் கொடுக்க உள்ளூர் மைனர்கள் நிறைய இருந்தனர்.

சபாபதி சாரங்கனின் தம்பியான போதிலும்கூட அவனில் அவன் மிகவும் வேறுபட்டிருந்தான். கேவலமும், அருவருப்பும் மிக்க இந்த ஈன வாழ்க்கையை அவன் மனம் வெறுத்தது. காமாட்சியின் இந்த நிலைக்காக அவன் மிகவும் மனம் நொந்தான். இந்த வாழ்க்கையை கைவிட்டு விடுமாறு பலமுறை அவளுக்கு ஆலோசனை கூறினான்.

சபாபதியின் போக்கு சாரங்கனுக்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் சாரங்கன் வெளியே போய்விட்டு வந்த பொழுது குடிசைக்குள்ளே சபாபதியும், காமாட்சியும் தீவிரமாகச் சர்ச்சை புரிந்து கொண்டார்கள்.

"சீ... இப்படிப் பிழைக்க உனக்கே அவமானமாயில்லை?"

"வேறே என்ன பண்றது?”

"நீ ஒண்ணும் பண்ண வேண்டாம்! நாலு இடத்திலே கூலி வேலை செய்து அரை வயித்துக் கஞ்சியாவது என்னால் சம்பாதிக்க முடியும். கூழோ, கஞ்சியோ, மானத்தோட குடிக்க முடியும். மானங்கெட்டு வாழறதை விட செத்தே போகலாம்.” அவன் தொண்டையில் கசப்புக் குமட்டியது.

“நா மட்டும் இதையெல்லாம் நினைக்காமலா இருக்கேன்?" அவள் குரல் தழதழத்து விக்கியது.

"சீ, இதுக்கா அழறே...? நாமும் நல்லா வாழ முடியுமென்கிற நம்பிக்கை வேணும் - சரி, அண்ணன் வந்தா அதுகிட்டேயும் இந்த முடிவைச் சொல்லிடு.”

“இனிமே... இனிமே... நா... நா... உனக்கு... உனக்கே தான்...”

சாரங்கனுக்கு, காமாட்சியின் மனமாற்றம் பிடிபடவில்லை, சபாபதியின் போக்குப் பிடிக்கவில்லை.

"பொம்பளைகளை வசியப்படுத்தறதிலே இவன் பெரிய ஆளு" என்று தனக்குள் முனகிக் கொண்டான். ஆம்; கேவலமான அவிசாரிக்கே உண்மைக் காதல் உணர்வை உண்டாக்க முடியுமானால், சபாபதியின் ஆண்மை வியப்பிற்குரியதுதான்! - இதுதான் சாரங்கனின் முடிவு.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு சபாபதியும், காமாட்சியும் கணவன், மனைவியாகவே வாழ்ந்தார்கள். சாரங்கன் அவர்களுக்கு குறுக்கே நிற்கவில்லை.

காமாட்சியைச் சபாபதியுடன் விட்டுவிட்டு போலீசுக்கும் சட்டத்துக்கும் பயந்து எங்கெங்கோ திரிந்து

கொண்டிருந்தான் சாரங்கன். எங்கிருந்தால் என்ன, அவனுக்கு ஒரே வாழ்க்கைதான்.

சபாபதி தன்னை விட்டுப் பிரிந்திருந்தாலும், தனக்கு ஒரு தம்பி இருக்கிறான் என்ற நினைப்பிலேயே சாரங்கனுக்கு ஒரு நிம்மதி இருந்தது.

சில மாதங்களில் அந்த நிம்மதியும் குலைந்தது. சாரங்கனைத் தேடித் திரிந்த போலீஸிடம் சபாபதி சிக்கிக் கொண்டான். சபாபதி சித்ரவதை செய்யப்பட்டான் என்றாலும் அவன் வாயிலிருந்து தன் தமையனைப் பற்றி ஒரு வார்த்தை கூட வெளிவரவில்லை. கடைசியில் குற்றமெல்லாம் அவன் மீதே சுமத்தப்பட்டு அவனுக்குப் பத்து வருஷம் தண்டனை விதிக்கப்பட்டது. இதெல்லாம் சாரங்கனுக்குத் தெரியாது. அந்தக் காலத்தில் அவன் அறிமுகமில்லாத வேற்றூர்களில் திரிந்து கொண்டிருந்தான்.

சில வருஷங்களுக்குப் பின் தம்பியைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று.

ராமநாதபுரத்திற்கு வந்து சேர்ந்தான் சாரங்கன்.

காமாட்சியின் பக்ஷணக்கடை இருந்தது. சபாபதியைத்தான் காணோம்.

ஆம்; சபாபதி இறந்து விட்டான்.

போலீசாரின் சித்ரவதையாலும், பிரிட்டிஷ்காரனின் சிறைக் கொடுமைகளாலும் பத்து வருஷக் கடுங்காவல் தண்டனையில் இரண்டு மாதத்தை மட்டும் அனுபவித்து விட்டு அவன் தப்பித்துக் கொண்டான்.

உயிரை சிறை வைக்க யாரால் முடியும்?

காமாட்சியைக் கண்ணீரும் கம்பலையுமாய் விட்டு விட்டுப் போய்விட்டான். காமாட்சி தன் விதியை நொந்து கொண்டு

மீண்டும் பக்ஷணக் கடைவைத்து ஒழுக்கத்தோடு வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தாள்.

சாரங்கனைக் கண்டதும் 'கோ' என்று கதறினாள். விஷயமறிந்த சாரங்கனின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. அவன் மௌனமாய், சிலையாய் நின்று விட்டான்.

சில மாதங்களுக்குப் பின் போலீஸ் பயமெல்லாம் நீங்கி விட்டதால் - காமாட்சியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சித்தாநல்லூருக்கே திரும்பிவிட்டான் சாரங்கன்.

சபாபதியின் பிரிவு காமாட்சிக்கு ஆற்ற முடியாத துயரமாய், மாற்ற முடியாத விரக்தியாய்க் கொஞ்ச நாட்கள் வரை நீடித்திருந்தது. சாரங்கன் அவளை அன்புடனும், அனுதாபத்துடனும் தேற்றி ஆறுதல் கூறினான். அவன் ஆதரவு அவளுக்குத் தேவையாயிருந்தது. மனித பலஹீனம் அவர்களிடமும் குடி கொண்டிருந்தது அல்லவா? நாளடைவில் காமாட்சி சாரங்கனின் 'ஆசை நாயகி'யாக மாறினாள். சிற்சில சமயங்களில் சபாபதியின் கனிவும், அன்பும் அவள் கண்களை கலக்கும். அவன் அளித்த வாழ்வு இவ்வளவு விரைவில் அழிந்துவிடும் என்று அவள் எண்ணியதில்லை. துயரத்தில் வெதும்பிய மனத்துடன் சாரங்கன் ஒருவனுக்கே தான் உரியவள் என்று எண்ணி வாழ்க்கையை மாற்றிக் கொண்டு வாழத் தலைப்பட்டாள்.

சாரங்கன் மட்டுமென்ன, உள்ளூர் போலீஸ் இன்ஸ்பெக்டர், முனிசிபல் சேர்மேன், அவர் மகன் சோமு எல்லோரும் பேதா பேதமின்றி, வர்ஜா வர்ஜமின்றி அவளிடம் வந்து வந்து போனார்கள். முதலில் சில நாட்கள் சபாபதியின் நினைவும் அவன் கூறிய வாழ்க்கை நெறிகளின் உறுதியும் அவள் மனசில் சில சலனங்களை ஏற்படுத்தியது உண்மை. வாழ்க்கை நிர்பந்திக்கும்போது 'வாழ்க்கை நெறி' என்னும் தத்துவப் பிரமைகள் பறந்து விட்டன. காமாட்சி ஆரம்பத்தில் தனது 'நாயகர்'களை கண்ணீருடன் தழுவினாள். நாட்கள் செல்லச் செல்ல அந்த வாழ்க்கை இன்பமளித்தது. அவளுக்கு கண்ணீர் வரவில்லை.

'அடி பைத்தியக்காரி, இந்த இன்பங்களை இழந்து வாழ்க்கையில் அடிபட்டுச் சாகத் தெரிந்தாயே' என்று நாளடைவில் அவள் மனம் அவளையே பரிகசித்தது. அவள் ரஸியாவிடம் போட்டியிட்டு ஆள் பிடித்தாள். அதில் பெருமை அடித்துக் கொண்டாள்.

சத்திரத்து நாயகிகளாய் ரஸியாவும், காமாட்சியும் திகழ்ந்தனர். இன்னும் பல ரஸியாக்களுக்கும், காமாட்சிகளுக்கும் ஆதரவளிக்கத் தயாராக இருந்தது ரெஸாக்கின் தர்மசத்திரம். சத்திரத்தின் அறைகள் அவனுக்கு வாடகை அளித்துக் கொண்டிருந்தன. அங்கே யார் எதற்கு வரப் போகிறார்கள் என்ற சந்தேகத்திற்கு இடமில்லாமல் சத்திரத்தின் கீர்த்தி பிரபல்யமாயிருந்தது. பெரிய மனிதர்களின், கிராமத்து மைனர்களின் கோலாகல லீலாவினோ தங்களில் கோபியராய் ஈடுபட்டுள்ள பாரததேவியின் திருப் புதல்விகளைத் தாங்கித் தவமிருக்கும் அந்த பிருந்தா வனத்திற்கு வாடகை கொடுக்க ஆள் பஞ்சம் ஏற்படுவதில்லை. மேலும் பல கோபியரைத் தேடிக்கொண்டிருந்தது சத்திரம். ஆதரவற்ற தங்கம் அங்கு வந்து சேர்ந்தாள்...

"அவளை மசிய வைக்க எத்தனை பாடு!" என்று சலிப்புடன் கையிலிருந்த பல் குச்சியை வீசி எறிந்தான் சாரங்கன்.

“ஐயா...” என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். ஆற்றில் குளித்து, தூய உடையணிந்து அவனருகே பவ்யமாய் நின்றிருந்தான் ராஜா.

அவனைப் பார்த்தவுடன் சாரங்கனின் மனதில் ஏதோ கனிவு பிறந்தது. சபாபதியின் உருவம் அவன் மனக் கண்முன் நிழலாடியது...

"தம்பீ...” அந்தக் குரலில்தான் என்ன குழைவு!

"ஐயா, எனக்கு அசலூரு... இங்கே ஏதாவது வேலை கிடைக்குங்களா?”

"வேலை... தம்பீ, உனக்கு இங்கே வேலை வேணுமா? உள்ளே வா... சாப்பிட்டியா? ரொம்ப களைச்சிருக்கியே... உன் பேரு என்ன...? பரவாயில்லை வா.” அன்பும் கனிவும் வரண்டுபோன அந்த உள்ளத்தில் ராஜாவைக் கண்டவுடன் இனம் தெரியாத ஒரு பரிவு; விவரிக்க இயலாத ஒரு பாசம்; ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. எங்கிருந்தோ வந்த அவன் மீது இவனுக்கு ஏன் இத்தனைப் பற்று! உறவினர்களாலும், சமூகத்தாலும் உதறி எறியப்பட்ட அவனை இத்தனை உறவோடு கூப்பிடுபவனின் அழைப்பு விசித்திரமானதுதான். சமூகத்தின் கண்களுக்குச் சாரங்கன் மாஜி மனிதனேயானாலும் கூட அவன் மனிதனே தான்! அதில் சந்தேகமில்லை. போலி கௌரவத்திற்காகவோ, வெறும் உபசரணைக்காகவோ சாரங்கன் அவனை அழைக்க வேண்டிய அவசியமில்லை. பிறரின் அன்புக்கும், ஆதரவிற்கும் ஏங்கித் திரியும் ராஜா சாரங்கனைப் பின்தொடர்ந்து சத்திரத்துக்கு நடந்தான்.

*****

# 5

மனித மனம் மிகவும் விசித்திரமானது. காரணமின்றியே சிலரை வெறுப்பதும், சிலரை விரும்புவதும் அதன் விசித்திர இயல்புகளில் ஒன்று. மனோதத்துவவாதிகள், ஒரு மனிதனின் தோற்றமும், பார்ப்பவரின் மன இயல்பும் இதற்குக் காரணமென்று கூறுகிறார்கள். சில வேதாந்திகள் பூர்வ ஜன்ம உறவு அல்லது பகையே இதற்குக் காரணமென்று சொல்லுகிறார்கள். இந்த விசித்திர நிலைக்குக் கூறப்படும் காரணங்கள் பொய்யோ மெய்யோ? ஆனால் காரண காரிய வரம்பில்லாமல் இப்படிப்பட்ட விசித்திர உணர்ச்சிகள் மனித சித்தத்தில் குடிபுகுவது என்னவோ சத உண்மை!

ராஜாவின் தோற்றமும், பணிவும் சாரங்கனை வெகுவாகக் கவர்ந்தன. ராஜாவின் நடிப்பில் சத்திரத்து மனிதர்கள் அனைவரும் ஏமாந்தனர். அவன் கதையை அனுதாபத்தோடு விசாரித்தறிந்தனர். சத்திரத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிடும்படி அவனை மிகவும் வற்புறுத்தினான் ரெஸாக். சாரங்கனுக்குத் தன் தம்பியைக் கண்டது போலவே மனம் குதூகலித்தது.

முதல் நாளிரவு சிதம்பரம் பிள்ளையுடன் பேசிக் கொண்டிருந்தது சாரங்கனின் மனசில் ஓசையிட்டது. "என் தம்பி சபாபதி இருந்தா இவளை ஒரு நிமிஷத்திலே பணிய வச்சிடுவான். எப்பேர்ப்பட்ட பொம்பளையானாலும் அவன்கிட்ட மயங்காமே இருக்க முடியாது. என்னவோ வசியம் வச்ச மாதிரிதான்..."

"ஏ, ராசா..." என்று ராஜாவை அன்புடன் அழைத்தான் சாரங்கன். கையில் ஒட்டடைக் கம்புடன் சத்திரத்தின் முன்புறத்தைச் சுத்தம் செய்து கொண்டிருந்த ராஜா "இதோ வந்துட்டேன்" என்று சிரித்துக் கொண்டே ஓடிவந்தான். அருகே வந்ததும் அவன் தோள் மீது கை வைத்துக் கொண்டு சற்று நேரம் மௌனமாய்ச் சிந்தித்தான்

சாரங்கன். பலமான சிந்தனை ரேகைகள் அவன் நெற்றியில் கீறலிட்டன.

"தம்பீ..." என்று அவன் தோளைப் பிடித்துக் குலுக்கினான் சாரங்கன். இரண்டு கைகளாலும் அவன் தோளைப் பற்றிக்கொண்டு மெல்லிய குரலில் உணர்ச்சி கரகரக்கப் பேசினான்.

"எனக்கு ஒரு உதவி செய்வீயா...? அது உன்னால் மட்டுமே முடியும். நிச்சயமா முடியும், செய்வியா?"

"என்ன உதவி?"

"ஒரு பொண்ணு... ஒரு பொண்ணு... ஆமா ஒரு பொண்ணு" விஷயத்தை ஆரம்பிக்க முடியாமல் திணறினான் சாரங்கன்.

"நா பொண்ணு இல்லீங்க, ஆம்பிளெ" என்று சிரித்தான் ராஜா.

"சபாஷ்... அவளையென்ன? உன் பேச்சு என்னையே மயக்கிடும்" என்று சப்தம் போட்டுச் சிரித்தான் சாரங்கன். விஷயத்தைத் தெரிந்து கொண்டும் தெரியாததைப்போல நடித்தான் ராஜா.

"ஏ ராசா, உனக்கு கலியாணம் ஆயிடுச்சா?"

“ஊஹும்...”

“யாரையாவது காதலிச்சிருக்கியா?"

ராஜா நகத்தைக் கடித்துக்கொண்டு நாணிக்கோணி நின்றான்.

"அது... அது ஒரு பெரிய கதைங்க" என்று கதை ஜோடிக்க ஆரம்பித்தான் ராஜா.

"ஓஹோ... கதையா? சொல்லு கேட்போம்" என்று சுவாரஸ்யத்துடன் ஒரு பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு

முற்றத்துத் திண்ணையில் துண்டை விரித்து உட்கார்ந்தான் சாரங்கன். அவனருகே மரியாதையுடன் நின்று கொண்டிருந்தான் ராஜா.

"என்னப்பா இது? பரவாயில்லை உட்காரு. நமக்குள்ளே என்னடா மரியாதை? உன்னே மாதிரி நா; என்னெ மாதிரி நீ... சும்மா உக்காரு" என்று தன்னருகே உட்காரச் சொன்னான்.

“பீடி குடிப்பியா...? இந்தா.”

“பழக்கமில்லே...”

“பரவாயில்லை, சும்மா குஷியாப் பத்த வைடா...”

சாரங்கன் சுவாரஸ்யமாகப் பீடிப் புகையை ரசித்தவாறே, "ஏய் என்னமோ கதையின்னு சொன்னியே?” என்று அவனைக் கிளறினான்.

ராஜா பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு கதை சொல்ல ஆரம்பித்தான்.

"எங்க ஊர்லே ஒரு பணக்காரக் குட்டியிருந்தா; அவளுக்கு எம்மேல ரொம்ப ஆசை! என் பேரைச் சொன்னா எங்கேயிருந்தாலும் பைத்தியம் பிடிச்ச மாதிரி ஓடி வந்துடுவா. எனக்கென்னவோ அவ மேலே கொஞ்சம் கூடப் பிரியமில்லை...”

"அதனாலே அவளை விட்டுட்டியா?”

“உம்... அப்படியெல்லாம் செய்வனோ? அவளை மயக்கி அவகிட்டேயிருந்து காசு பறிச்சுக்கிட்டு இருந்தேன்.”

"உம் உம்... செஞ்சிருப்பே-ஆளைப் பார்த்தாலே தெரியுதே...” என்று ராஜாவின் முதுகில் தட்டிச் சப்தம் போட்டு சிரித்தான் சாரங்கன். ராஜாவும் அவனுடன் சேர்ந்து சிரித்துக் கொண்டே மேற்கொண்டு சமத்காரமாகப் புளுகுவதற்கு யோசனை செய்தான்.

"உம் அப்புறம் என்ன நடந்தது?"

"என்ன நடக்கிறது? ஒரு நாளு அவங்கப்பாவோட பெட்டியிலிருந்து ஒரு ஐநூறு ரூபா திருடிக்கிட்டு வந்து கொடுத்தா."

"நீ வாங்கிக்கிட்டியா?"

"பின்னே வாங்காமெ மேனகை பெத்த கொழந்தெயே வேண்டாம்ங்கிற விசுவாமித்திர முனிவர் மாதிரியா நிற்பேன்?" - சாரங்கன் சிரித்தான்.

"இந்த விஷயம் அவங்கப்பாவுக்குத் தெரிஞ்சு போச்சு அப்புறம் என்ன பண்றது?"

“உடனே அவங்கப்பன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனான்... அப்படித்தானே?"

"உம்... போவானா...? அவன் பொண்ணு பேரில்லே கெட்டுப்போகும்...? உடனே பெண்ணுக்குக் கல்யாண ஏற்பாடு பண்ணினான். அவளும் கல்யாணம் பண்ணிக் கிட்டா. ஒழிஞ்சது சனின்னு நானும் விட்டுட்டேன்... அதெல்லாம் பழைய கதை!"

"டேய் ராஜா, நீ பெரிய ஆளுடா."

“அப்படித்தான் ராதா கூடச் சொன்னா."

“அது யாரு ராதா?"

"அவ இன்னொரு காதலி."

"பலே பலே" என்று சந்தோஷ மிகுதியால் ராஜாவின் முதுகில் தட்டிக் கொடுத்தான் சாரங்கன்.

"பொம்பளைகளை மயக்கறதிலே நீ பெரிய சூரன்னு சொல்லு."

"ஹி... ஹி... அப்படியெல்லாமில்லை."

"இங்கே ஒரு பொம்பளை இருக்கா... அவளை மயக்க உன்னால் முடியுமா?"

"அதெல்லாம் இப்ப எனக்குப் புடிக்கலீங்க" என்று தயங்கினான் ராஜா.

"போடா முட்டாள், பணத்துக்காக எதையும் செய்யலாம். நாமா செய்யறோம்? பணம்டா, பணம்... இங்கே ஒரு குட்டியிருக்கா... பாத்தா பச்சைக்கிளிதான்! அவளை நிச்சயமாய் உன்னால் மயக்க முடியும். அப்படி மயங்கிட்டா எனக்குப் பணம் கிடைக்கும். அதிலே உனக்கும் ஒரு பங்கு உண்டு. நீ சொல்ற மாதிரியெல்லாம் அவளே ஆட வைக்கணும் என்ன சொல்றே?”

"ஹூம்... சரி இதென்ன பிரமாதம்? பார்த்துக்குவம்" என்று விரலைச் சொடுக்கிக் கொண்டு முற்றத்துத் திண்ணையிலிருந்து துள்ளி இறங்கினான் ராஜா. 'என்ன பிள்ளை யாருகிட்டே பேசுறீங்க? சாரங்கன் சொன்னா நடக்கும் - சாரங்கன் நடத்துவான்' என்று சிதம்பரம் பிள்ளையிடம் வர்மமுரைத்ததை நினைத்துப் பார்த்த சாரங்கன் வெற்றிப் பெருமிதத்துடன் சிரித்துக் கொண்டான்.

*****

# 6

மாலை மயங்கியபின் சிதம்பரம்பிள்ளை வந்தார். சற்று நேரத்திற்குப்பின் வேறு சிலரும் வந்தார்கள். அவர்களை ராஜாவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான் சாரங்கன். "இவரு இந்த ஊரு பெரிய மனுசரு. முனிசபல் சேர்மன்; நமக்கு ரொம்ப வேண்டியவர். ரொம்ப தங்கமானவர்...” என்று அடுக்கிக்கொண்டே போனான் சாரங்கன், சிதம்பரம் பிள்ளை இடைமறித்தார்!

"என்னப்பா ஒரேயடியாக அளக்கறே? பையன் யாரு?” என்று ராஜாவை உற்று நோக்கினார். ராஜா மனத்திற்குள் சிரித்துக்கொண்டே அவருக்கு நமஸ்காரம் செய்தான்.

"தம்பி நமக்கு ரொம்ப வேண்டியவன். ராசான்னு பேரு. குத்து வரிசை, சிலம்பம் எல்லாத்திலேயும் ரொம்ப புலி, நம்ம தயாரிப்பு” என்று புளுக ஆரம்பித்தான் சாரங்கன். ராஜா எல்லாவற்றிற்கும் தலையாட்டினான். அதன்பிறகு சிதம்பரம்பிள்ளை தம் கூட்டாளிகளுடன் மாடிக்குப் போய்விட்டார். அவர் போன பிறகு ராஜாவிடம் மெதுவாகக் கூறினான் சாரங்கன்.

"கெழவன் ரௌடிகளுக்கு மட்டுந்தான் பயப்படுவான். இந்தக் கெழவனென்ன, உலகமே போக்கிரிகளுக்குத் தான் பயப்படும். அதனால்தான் உன்னை ரௌடின்னு சொன்னேன். என்ன சிஷ்யா சரிதானே?” என்று சிரித்தான் சாரங்கன்.

அவன் சிரிப்பு சத்திரத்துச் சுவர்களில் மோதி கடகடத்தது.

ராஜாவுக்குச் சாரங்கனைப் பிடித்திருந்தது. அவன் ரொம்ப நல்லவன் என்று தோன்றிற்று. மகான்களும், தீர்க்கதரிசிகளும் புனிதத்தின் புதல்வர்களும் நிறைந்த சமூகம் அவனை அகம்பாவி என்று தூற்றியதல்லவா! அந்த உலகத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட சாரங்கனிடம் இருக்கும் நல்ல பண்புகள் அதனிடம் இல்லை என்பதை அனுபவித்து உணர்ந்தவனல்லவா அவன்? இத்தனை

நாளாய் அவன் அறிந்திருந்த உலகம் அவனை வெறுப்பதற்கு அவன் என்ன செய்தான்? அது அவனை உதறி எறிந்துவிட்டது. தனக்கு யாருமில்லையென்று எண்ணி ஏகாங்கியாத் திரிந்து கொண்டிருந்த அவனுக்கு 'இதோ நாங்கள் இருக்கிறோம்' என்று ஒரு குரல் கேட்கிறது. அந்தக் குரல் சத்திரத்திலிருந்தா ஒலிக்க வேண்டும்? அவனுக்கு இப்பொழுதுதான் புரிகிறது, இந்த உலகத்தின் ஒரு மூலையில் இவர்களும் இருக்கிறார்கள் என்று!

தத்துவங்களிலும், லட்சியங்களிலும் உழலும் பெரிய சமூகத்துக்கிடையே அப்படிப்பட்ட மனிதர்களும் இருக்கத் தான் இருக்கிறார்கள்.

சத்திரத்து மனிதர்களுடன் ராஜா சங்கமம் ஆகவில்லையென்றாலும் அவர்களைப்பற்றி அவன் நன்கு புரிந்து கொண்டான்.

அந்தச் சத்திரம், வாழ்க்கையை வெறுத்துவிட்ட ஏகாங்கிகளின் ஞானபோதமடம் அன்று; வாழ்க்கையை அனுபவிக்க ஆசை கொண்டு, வாழ முடியாமல் - சமூகத்தால் உதறியெறியப்பட்ட கழிசடைகள் வாழ முயன்று கொண்டிருந்த பலிபீடம்!

அது தரத்தில் தாழ்ந்தது தான்; அதனால் என்ன சமூகத்தின் உயர்ந்த பீடத்தில் வீற்றிருக்கும் கௌரவமிக்க பெரிய மனிதர்கள் கூட, தரத்தில் தாழ்ந்த அந்த விபசார விடுதிக்கு விஜயம் செய்து கொண்டிருந்தனர். அவர்களால் அந்தச் சத்திரம் வாழ்ந்தது. அவர்களை மகிழ்விப்பதற்காக அந்தச் சத்திரம் வளர்ந்தது. வருபவர்களையெல்லாம் மகிழ்வித்து அனுப்ப அங்கே மதுவகைகள் இருந்தன. 'ரெங்காட்டம்' இருந்தது. கடைசி இன்பமாகக் காமாட்சி இருந்தாள்; ரஸியா இருந்தாள். அவ்வப்போது அங்கு வந்து ஒதுங்கும் சமூகப் புத்திரிகளான எத்தனையோ அபலைகள் இருந்தார்கள்.

இவர்களை, இவர்கள் வாழும் வாழ்க்கையைப் பரிசீலித்துக் கிரகிப்பதே ராஜாவின் தொழிலாயிற்று. அவர்களில்

ஒருவனாக அவனும் வாழ வேண்டியதாயிற்று. தங்கத்தையும், அவள் வாழ்க்கையையும் கிரகிக்க வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது.

இரவு!-சத்திரத்து மாடியில் சீட்டாட்டமும், சிரிப்பொலியும் ஏகக் களேபரமாக இருக்கிறது. ஒரே சாராய நெடி.

முற்றத்துத் தூணில் சாய்ந்து கொண்டு நட்சத்திரங்கள் கண்சிமிட்டும் வானவெளியில் மனம் லயித்து நிற்கிறான் ராஜா. குடிபோதையில் தள்ளாடிய வண்ணம் அவனருகே வந்து நின்றான் சாரங்கன்.

"ராஜா, தயாராயிட்டியா?”

“ஓ... ஓ, எங்கேயிருக்கா அவ?”

“ஏய்... ரஸியா" என்று கூவினான் சாரங்கன்.

கூந்தல் அவிழ்ந்து சரிய, ஆடை குலைந்து தள்ளாடிய வண்ணம் மாடிப்படிகளிலிருந்து இறங்கி வந்தாள் ரஸியா.

"தம்பியெ அழைச்சிகிட்டுப் போ... வேணுங்கிற தெல்லாம் குடு. ராஜா இனிமேல் உன்பாடு... உன் கை வரிசையைக் காட்டு, பார்ப்போம்" என்று சிரித்துக் கொண்டே சாராயம் நிறைந்த பாட்டிலை அவனிடம் நீட்டினான் சாரங்கன். அதை வாங்கும் பொழுது ராஜாவின் கைகள் நடுங்கின.

“சோடா வேணும்னா ரஸியாக்கிட்டே சொல்லி யனுப்பு.”

ராஜா ரஸியாவைத் தொடர்ந்து சத்திரத்துப் பின் கட்டுக்கு நடந்தான். இருள் கவிந்த முற்றத்துத் தாழ்வாரத்தில் மங்கிய சிம்னி விளக்கு ஒரு மூலையில் எரிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கைத் தூண்டி கையிலெடுத்துக் கொண்டு முற்றத்து மூலையில் பூட்டிக் கிடந்த அறையருகே சென்றாள் ரஸியா. கையிலிருந்த விளக்கை மாடக் குழியில் வைத்துவிட்டு இடுப்பிலிருந்த சாவியை எடுத்துக் கதவைத் திறந்தாள். இருளில் ஒரு மூலையில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தைக் கண்டதும்

ராஜாவின் ஹிருதயமே வெடித்து விடும் போலிருந்தது. விளக்கொளியைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்த தங்கம், ராஜாவைக் கண்டு திகைத்தாள். முதல் நாள் இரவு சன்னலில் பார்த்த அந்த முகம்...

அவள் கண்களில் கண்ணீர் சுரந்தது. அவள் பார்வை அவன் பாதங்களில் விழுந்து கெஞ்சியது. உதடுகள் துடித்தன. கைகள் கூம்பித்தொழ நடுங்கின. எழுந்து நின்றாள். கண்களில் கண்ணீர் பெருகி மாலை மாலையாய் வழிந்தது.

ராஜா ஒருமுறை அந்த அறையைச் சுற்றிப் பார்வையை ஓட்டினான். அறையின் ஒரு மூலையில் அவள் ஒதுக்கி வைத்த உணவு ஒரு தட்டில் காய்ந்து கிடந்தது. அவன் அவளைக் கண்களால் பார்த்தான். அவள் நிலையை இதயத்தால் எண்ணினான். தன் நிலையைச் சாமர்த்தியமாக உணர்ந்தான்.

"ரஸியா நீ போகலாம்; இந்தச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு போய்க் கொட்டிவிட்டு வேறு கொண்டுவா" என்று கட்டளையிட்டான். அவள் போன பிறகு தங்கத்தை கூர்ந்து கவனித்தான். அவள் கரம் கூப்பிக் கும்பிட்ட காட்சி அவன் கண்களைக் கலக்கிற்று. சமாளித்துக் கொண்டு, "என்னைப் பாத்தா ஒனக்குக் கும்பிடத் தோணுதா?" என்று கழிவிரக்கத்துடன் கேட்டான் ராஜா.

“ஆமாம். நேத்து ராத்திரி, சன்னல் வழியா உங்களைப் பார்த்தப்பவே எனக்குக் கும்பிடணும்னு இருந்தது" என்று அவள் கம்மிய குரலில் கூறியதைக் கேட்டு ராஜா திகைத்தான். அறைக்கு வெளியே தலையை நீட்டி ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் குரலைத் தாழ்த்தி ரகசியமாகக் கூறினான்.

"பயப்படாதே தங்கம்... நிச்சயம் இங்கிருந்து உன்னைக் காப்பாற்றுவேன். ஆனால் பொறுமையாக தந்திரமாகக் காரியத்தைச் சாதிக்க வேண்டும். ஜாக்கிரதை."

அருகே காலடியோசை கேட்டது.

கையில் சாப்பாட்டுத் தட்டுகளுடன் ரஸியா அறைக்குள் பிரவேசித்தாள்.

"சரி, இனிமே நீ போகலாம்"... என்று அவளை அனுப்பினான் ராஜா, ரஸியா அறையிலிருந்து வெளியேறி இரண்டடி நகர்ந்து மீண்டும் திரும்பி வந்தாள்!

“உங்களுக்கு ஏதாவது வேணும்னா...?”

"ஒண்ணும் வேண்டாம்...” என்று சொல்லியனுப்பி விட்டான் அவன்.

அவள் போன பிறகு அறைக்கதவை மூடித் தாழிட்டான் ராஜா.

தங்கம் ஜன்னலோரமாக ஒடுங்கி நின்றாள். அவள் உடல் காரணமின்றி நடுங்கிற்று. ராஜா அவளைப் பார்க்காமல் கூரை முகட்டைப் பார்த்துக் கொண்டே சட்டைப் பையிலிருந்து ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

அவர்களிடையே தர்மசங்கடமான அமைதி நிலவியது.

“கடவுளே!” என்று பெருமூச்சு விட்டாள் தங்கம்.

"கடவுளுக்கென்ன? இந்த இடத்தில் கடவுள் வர மாட்டார்."

"கடவுள்தான் உங்களை இங்கு அனுப்பி இருக்கிறார்."

"அப்படியா அப்படியானால் சாரங்கன்தான் கடவுள்.”

"கடவுளை இழிவாகப் பேசாதீர்கள்."

"இல்லையில்லை! என்னை இங்கு அனுப்பிய கடவுளுக்கு நீ நன்றி கூறுவது சரிதான். உன்னை இங்கு அனுப்பிய கடவுளை...?”

"எல்லாம் என் விதி!”

"ஆமாம்; விதிதான்... அதை மாற்ற எந்தக் கடவுளும் இல்லை. எந்த சக்தியுமில்லை!”

"நின்னுக்கிட்டே இருக்கீங்களே?”

அருகே இருந்த கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தான் ராஜா! கீழே, தரையில் அவளும் உட்கார்ந்தாள்.

"நீ சாப்பிடவே இல்லையா...?” என்று அனுதாபத்துடன் விசாரித்தான்.

“சாப்பிடாமல் என்ன செய்யறது, பசி வந்த நேரத்தில்?”

"இந்த ஜனங்கள் ரொம்ப நல்லவர்கள், தெரியுமா?”

“நல்லவர்களா?”

"ஆமாம் தங்கம்; சாரங்கனும் ரஸியாவும் நல்லவர்கள்தான்! ரௌடிகள் நல்லவர்களோ கெட்டவர்களோ...? அவர்களில் நல்லவர்கள் நிறைய இருக்கிறார்கள்.”

"உங்களுக்கென்ன, நீங்கள் சொல்வீர்கள். சாரங்கனிடம் சாட்டையடிபட்ட எனக்கல்லவா தெரியும்?”

"அவனா உன்னை அடித்தான்? சிதம்பரம் பிள்ளையின் பணம் உன்னை அடித்தது... பணக்காரர்கள் துணிச்சல் மிக்க ஏழைகளை, அவர்களின் ஏழ்மையைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களை ரௌடிகளாக்குகிறார்கள்? உன்னை சிதம்பரம் பிள்ளைக்கு விற்பதன் மூலம் அவர்கள் பணம் பெறுவார்கள். இந்தச் சத்திரத்துக்குள் இது நடப்பதால் குற்றம் என்று கருதப்படுகிறது. பரந்த அளவில் சமூகத்தில் நடக்கும் இதே குற்றம் நியாயமாகப் போற்றப்படுகிறது.”

"நீங்க சொல்றது எனக்குப் புரியலை. நீங்க நெறையப் படிச்சிருக்கீங்க!”

ராஜா சிரித்தான்!

“கல்விமான்கள் என்ற பட்டத்துடன் தற்குறிகளும், தற்குறிகள் என்ற பட்டத்துடன் கல்விமான்களும் நிறைந்துள்ள நாடு இது."

"வெள்ளைக்காரன் வந்ததன் விளைவு அது!”

“அடடே! நீயும்...”

"ஆமாம்; உங்களைப் போன்ற தற்குறிதான்!” என்று சொல்லிச் சிரித்தாள் தங்கம்.

“சரி சாப்பிடுவோமா?”

"எனக்குப் பசிக்கவே இல்லை. உங்களோடே பேசிக் கொண்டே இருக்கலாம் போலிருக்கு. ஜெயில்லே அடைபட்டுக் கிடப்பது போலிருந்தது. சரி, இனிமே என்ன செய்யறது?”

“அதெல்லாம் அப்புறம் யோசிப்போம். இப்போ சாப்பிடுவோம்” என்று சாப்பாட்டுத் தட்டுக்களை அருகில் இழுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தான் ராஜா.

"அந்த பாட்டிலில் என்ன?”

“சாராயம்?”

“எதுக்கு?”

“குடிக்க...”

“நீங்களா?”

“ஆமாம்; ஏன் கூடாதா?”

"அது உங்கள் இஷ்டம்!” - அவள் அவனிடம் மறுத்துச் சொல்ல அஞ்சினாள்!

"என்னிஷ்டம் இருக்கட்டும், உனக்கு இதில் ஆட்சேபணை உண்டோ?”

அவள் மௌனமாக இருந்தாள்.

“தங்கம், மனிதர்கள் ஏன் குடிக்கிறார்கள்?”

“குடிப்பதற்காக,”

“நீ, குடிப்பதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?”

"பிறருக்கு இடைஞ்சல் இல்லாமலிருக்குமானால் அது அவரவர் இஷ்டத்தைப் பொறுத்தது."

"நமது நடிப்பு வெற்றி பெற நான் இதைக் குடிக்க வேண்டுமாம்" என்று வெறுப்புடன் கூறிவிட்டு ஜன்னல் வழியே அந்தப் பாட்டிலிலிருந்த சாராயத்தை ஊற்றினான் அவன்.

"நான் உங்களுக்கு ஒரு பெயர் வைத்திருக்கிறேன்!”

“என்ன பெயர்?”

“ஆபத் பாந்தவன்" - அவள் சிரித்தாள்.

"இல்லை; என் பெயர் ராஜா.”

“சரி; சாப்பிடலாமே” என்று பானையிலிருந்து கண்ணாடித் தம்ளரில் தண்ணீர் எடுத்து வைத்தாள் அவள்.

“நீயும் உட்காரு, சாப்பிடலாம்.”

இரவெல்லாம் அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். பரஸ்பரம் அவரவர் கதைகளைப் பரிமாறிக் கொண்டு அவளுக்கு அவன் துணையாய், அவனுக்கு அவள் துணையாய் அந்த அறைக்குள் அடைந்து கிடந்தனர்.

ஆபாசமும் மிருகத்தனமும் நிலைத்துவிட்ட அந்தச் சத்திரத்தின் ஒரு மூலையில், சகோதரத்வமும் புனிதமும் குடி கொண்டன.

இரவு நகர்ந்து கொண்டிருந்தது!

*****

# 7

"ஆச்சீ..." என்று பரிவுடன் அழைத்துக் கொண்டே லட்சுமி அம்மாளின் குடிசைக்குள் நுழைந்தாள் அம்புஜம்.

"ஆச்சீ, ராஜாவைப் பத்தி ஏதாவது தெரிஞ்சுதா..."

"ஒண்ணும் தெரியலைடி அம்மா! எங்கே போயி என்ன கஷ்டப்பட்டுத் தவிக்கிறானோ?" என்று கண் கலங்கினாள் லட்சுமி.

"வருத்தப்படாதீங்க ஆச்சீ! ராஜா என்ன, கொழந்தையா? நல்லபடியா எங்கேயாவது வேலை தேடிக்கிட்டு சந்தோஷமா ஒரு நாளைக்குத் திரும்பிவரும்!" என்று தைரியம் கூறினாள் அம்புஜம்.

"வீட்டைவிட்டுப் போயி ஒரு மாசம் ஆகுதே... இன்னைக்குதான் சித்தநல்லூருக்கு, அண்ணாவுக்கு கூட கடுதாசி எழுதினேன். அங்கெல்லாம் போகமாட்டான்... ஒருவேளை போயிருந்தால்?" என்று தனக்குத்தானே புலம்பிக் கொண்டிருந்தாள் லட்சுமி அம்மாள்.

"ஆச்சீ, ராஜாவைப் பத்திக் கவலைப்படாதீங்க. அது எப்பிடியும் பொழைச்சிக்கும். அது சரி, சாப்பாடெல்லாம் ஆச்சோ?" என்று பேச்சை மாற்றினாள் அம்புஜம்.

"உம்..."

"சித்தநல்லூரிலே உங்களுக்கு ஒரு அண்ணா இருக்காரா? - எனக்குத் தெரியவே தெரியாதே"

"அண்ணா இருந்தார் - அண்ணா இருந்து என்ன? தம்பி இருந்தென்ன? பெண்களுக்குப் புருஷன் இருந்தால் தான் எல்லாம்!"

"அங்கே அவர் என்ன பண்றார்?"

"அவர் அங்கே தாசில்தாராக இருந்து, பத்து வருஷத்துக்கு முன்னே ரிட்டயர் ஆனவர்... நெறைய பணம் சேத்துட்டார். நான் புகுந்த வீடோ நொடிச்சுப் போச்சு... ராஜாவோட அப்பாவும் இறந்து போனப்புறம் தான் எங்க நிலை இவ்வளவு மோசமாயிடுச்சு!"

"ஆச்சீ, உங்க அண்ணாவுக்கும் உங்களுக்கும் ஏதாவது மனஸ்தாபமா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே; என் மேலே உயிர் தான்! என்னதான் இருந்தாலும் பிறந்த வீடே கதின்னு ஆயிட்டா, நம்ம கௌரவம் கெட்டுத்தான் போயிடும்."

"ஆமாம் ஆமாம்..."

"அதுவும் அண்ணாவுக்கு வாய்த்தவள் ஒரு காலண்டி."

"ஓஹோ..."

“ராஜாவோட அப்பா இறந்தவுடனே அண்ணா ரொம்ப வற்புறுத்திக் கூப்பிட்டார். நான்தான் பிடிவாதமா மாட்டேனுட்டேன்... அதிலே அவருக்கு ரொம்ப வருத்தம்."

"ராஜாவை மட்டுமாவது அவர்கிட்டே அனுப்பி வைச்சிருக்கலாம்..."

"அது எப்படியம்மா முடியும்? ஒரே பிள்ளை..." அவள் கண்கள் மீண்டும் கலங்கின.

“இப்போ அண்ணாவுக்கு எழுதின கடுதாசியிலே அப்படித்தான் எழுதியிருக்கேன்! 'எப்படியாவது அவனுக்கு ஒரு வழி செய்யணும்'னு எழுதியிருக்கேன். அவன் அங்கே போயிருந்தான்னா ரொம்ப நல்லதுதான்."

“ஆச்சி, கொஞ்சம் இருங்க, வீட்டுக்குப் போயிட்டு வர்ரேன், அடுப்பிலே உலை கொதிக்குது..." என்று எழுந்து சென்று அடுத்த குடிசைக்குள் நுழைந்தாள் அம்புஜம்.

அம்புஜம் இளம் விதவை; அனாதை! வாழ்க்கைத் திருப்பங்களில் மண்டையை மோதிமோதி அனுபவப்பட்டவள்; அந்த அனுபவத்தின் விளைவாய் யாரைக் கண்டாலும் தலைகுனிந்து அஞ்சி நடக்கும் அனுதாபத்திற்குரிய சகோதரி, அவளைச் சகோதரியாக நினைத்து நடப்பவர்கள் ரொம்பக் குறைவு.

அவள் நெருப்பு...! சில பெரிய வீடுகளில் வேலை செய்து அதில் கிடைக்கும் வருமானத்தில் கௌரவமாய், நாணயமாய் மானத்தோடு வாழ்கிறாள். அவளுக்கு இந்த உலகத்தில் ஒரே துணையும் ஆதரவும், 'ஆச்சி'யென்று அவளால் அன்புடன் அழைக்கப்படும் லட்சுமி அம்மாள் தான்.

அன்று...

மாலையில் தனது வேலைகளை முடித்துவிட்டு, கையில் சோற்றுக் கிண்ணத்துடன் தன் குடிசைக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள் அம்புஜம்.

எதிரே அவளைப் பார்த்தும் பேசாமல் எங்கோ அவசர அவசரமாய்ப் போய்க்கொண்டிருந்தான் ராஜா.

"தம்பீ, எங்கே போறே?” என்ற அம்புஜத்தின் குரல் கேட்டு நின்றான் ராஜா. சிறிது நேரம் மௌனமாக நின்று யோசித்தான்.

"அக்கா, நான் வெளியூருக்குப் போறேன்னு அம்மாகிட்டே சொல்லிவிடு.”

"என்ன தம்பீ” என்று திடுக்கிட்டு நின்றாள் அம்புஜம்.

"ஏதாவது வேலை பார்க்க... இந்த ஊரே எனக்குப் பிடிக்கலை.”

“இதென்ன திடீர்னு?”

“அக்கா, எனக்கு மனசு ஒண்ணும் சரியாயில்லை...”

"வா தம்பீ, வீட்டுக்குப் போவோம்... உனக்கும் உன்கடை மொதலாளிக்கும் நடந்த சண்டையெல்லாம் கேள்விப்பட்டேன். இவன் இல்லாட்டி, இன்னொருத்தன்... இதுக்காக ஊரைவிட்டுப் போறதாவது?”

"அக்கா, இனிமே இங்கே எனக்கு எவனும் வேலை தரமாட்டான்; நான் போறேன். நீ அம்மாகிட்டே சொல்லி விடு...” என்று கூறிவிட்டு வேகமாகப் போய்விட்டான் ராஜா.

"தம்பீ...!" அவள் குரல் விக்கிற்று. அவன் போன திசையைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

"ராஜா, நீதான் மனிதன்... மானி...!” என்று தனக்குள் முணகிக் கொண்டாள்.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, தினசரி அவளும் லட்சுமியம்மாளும் ராஜாவைப் பற்றிப் பேசுவதே வழக்கமாகிவிட்டது. லட்சுமி அம்மாள் தன் மகனை நினைத்து வருந்தும் பொழுதெல்லாம் அம்புஜம் அவளைத் தேற்றுவாள்; தைரியமளிப்பாள்; நம்பிக்கையூட்டுவாள். அந்த நம்பிக்கையின் தைரியத்தில் தான் லட்சுமியம்மாள் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறாள்; ஓடிக் கொண்டிருக்கும் காலம் அவள் செல்வ மகனை எங்கு கொண்டு போய்த் தள்ளி இருக்கிறது என்று அவள் அறிவாளா, என்ன?

*****

# 8

இன்னும் பொழுது விடியவில்லை. இரவெல்லாம் கண்விழித்துப் பேசிக்கொண்டிருந்த ராஜா அப்பொழுது தான் உறங்க ஆரம்பித்தான். கயிற்றுக் கட்டிலில் சுகமாக நித்திரை செய்து கொண்டிருக்கும் அவனைப் பார்ப்பதும், தனக்குள் ஏதோ முனகிக் கொள்வதுமாக இருந்த தங்கம் சுவரோரமாயிருந்த பழம் பாயில் படுத்துக் கண்களை மூடினாள்; தூக்கம் வரவில்லை.

'ராஜா...' அவள் அதரங்கள் மெள்ள அசைந்தன. சுவர் ஆணியில் மாட்டியிருந்த அவன் சட்டை காற்றில் அசைந்தாடியது. தூக்க அசதியில் அவன் புரண்டு படுத்தான். முதுகில் பட்டை பட்டையாய் கயிற்றின் முத்திரை...

"ராஜா...” அவள் கண்களில் நீர் நிறைந்தது.

'இனிமேல் என்ன செய்வது...? இங்கிருந்து தப்பித்துக் கொண்டாலும், அதன்பிறகு...? ராஜாவின் துணை என்றுமே நிரந்தரமாகக் கிட்டுமா...?' என்று தங்கத்தின் மனம் தவித்தது.

'அப்படியென்றால்...? அப்படியென்றால்...?’ என்று ஹிருதயம் அடித்துக் கொண்டது.

'சீ சீ இதென்ன பைத்தியக்காரத்தனம்? ஆபத்தில் சிக்கித் தவிக்கும் ஒரு அபலைக்கு உதவி செய்ய வந்தவர் அவளையே காதலிக்க வேண்டுமா, என்ன - அதுவுமில்லாமல், நான்... நான் ஏற்கெனவே ஒருவனுடன்...' அவள் தொண்டையில் துக்கம் அடைத்தது. கண்களில் நீர் பெருகிற்று. பழம் பாயில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். பழைய நினைவுகள்... பெற்றோர் பாசம் - எல்லாம் அவள் மனசைக் குடைந்தன. அவள் அழுது கொண்டே இருந்தாள்.

திடீரென, சத்திரத்து மாடியில் ஒரே இரைச்சல் கேட்டது! சாமான்கள் உடைபடும் சப்தமும் மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் கட்டிப் புரளுவதும், அடிபட்டு ஓலமிடுவதும் அசிங்கம் பிடித்த வார்த்தைகளால் திட்டிக் கொள்வதும்... ஒரே ரகளை...!

தங்கம் திடுக்கிட்டு எழுந்தாள். சப்தம் அதிகமாயிற்று.

"ராஜா... என்னங்க...”

அவன் புரண்டு படுத்தான்.

"என்னங்க...” அவன் தோளைப் பிடித்துக் குலுக்கினாள். ராஜா திடுக்கிட்டு எழுந்தான்.

அவள் கரங்களை வெடுக்கென எடுத்துக் கொண்டாள். விரல்களைப் பிசைந்து கொண்டே, தடுமாறி நின்றாள்.

"மன்னிச்சிக்கணும்...” என்று குரல் தழுதழுக்க முகம் சிவக்கக் கூறினாள்.

"பரவாயில்லே. என் அம்மாகூட என்னெத் தொட்டுத் தான் எழுப்பறது வழக்கம். அதென்ன சப்தம்...?”

“அதுக்குத்தான் கூப்பிட்டேன்...”

அவசர அவசரமாகக் சட்டையை மாட்டிக் கொண்டு அறைக்கதவைத் திறந்தான் ராஜா.

"பொழுது விடிஞ்சு போச்சு... தங்கம் நாம் நடிக்க வேணும் மறந்துடாதே...!”

"உம்...”

மாடக்குழியிலிருந்த பூட்டையெடுத்து அறைக் கதவைப் பூட்டி, சாவியைச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு மாடியை நோக்கி ஓடினான் அவன்.

'ராஜா... ராஜா...' என்று தனக்குள் முணகிக் கொண்டு அறையில் அடைந்து கிடந்தாள் தங்கம்.

சத்திரத்து மாடியறையில் ஜன்னலோரமாக சாரங்கன் நின்றிருந்தான். மாடியறையின் முன் தாழ்வாரத் தூணில் கயிற்றினால் கட்டப்பட்டிருந்தான் சித்தநல்லூர் மாடல் மைனர் ஒருவன் - அவன்தான் சிதம்பரம் பிள்ளையின் செல்வ மகன் சோமு.

"ஏய்... மரியாதையா சேரவேண்டிய பணத்தைக் கீழே வெக்கலே... மரியாதை கெட்டுப் போகும்" என்று கொண்டை அவிழ்ந்து சரிய, கைகளை வீசி வீசி ஆவேசத்துடன் பேசினாள் காமாட்சி.

"இந்த மாசத்திலே நூறு ருபாய் உன் எழவுக்கு அழுதிருக்கேனே, போதாதா?" என்று ஆத்திரத்துடன் பேசினான் சோமு. கயிற்றால் பிணிக்கப்பட்ட அவன் கைகள் பதறின.

"சும்மாவாடா குடுத்தே பேமானி...?" அதற்குமேல் அசிங்கம் பிடித்த வார்த்தைகளால் அர்ச்சனை செய்ய ஆரம்பித்தாள் காமாட்சி.

"இப்போ என்னைக் கட்டிப்போட்டு என்னாடா செய்யப் போறீங்க?" என்று திமிறினான் சோமு

கையில் கத்தியுடன் அவனை நெருங்கினான் ரெஸாக்.

"பேசிக்கிட்டு இருக்கும்போதே பெரிய சண்டியர் மாதிரி கையிலே கத்தியெ எடுத்தியே... இப்ப உன்னாலே என்ன செய்ய முடியும்?" என்று பிச்சுவாவை அவன் முகத்துக்கு நேரே ஆட்டினான் ரெஸாக்.

"ஏய் ரெஸாக்... அவனை எதுக்குக் கட்டிப்போட்டுருக்கோம்கிற விஷயத்தைச் சொல்லப்பா" என அலட்சியமாகச் சிரித்தான் சாரங்கன்.

"நாளைக்கு அந்தக் கெழட்டுப்பய - ஒங்கப்பன் வரும் போது சிதம்பரம் பிள்ளையின் சீமந்த புத்திரன் என்ன நெலையிலே இருக்காருங்கறதைக் காட்டத்தான்...” என்று சிரித்தான் ரெஸாக்.

“சாரங்கா... உனக்குப் புண்ணியமாகப் போகும், அது மட்டும் செய்யாதே... உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். அப்பாவுக்கு இந்த விஷயம் தெரிய வேண்டாம்" என்று கண்களில் நீர் வழிய மன்றாடினான் சோமு.

"அழுவாதேடா பொட்டைமாறிப் பயலே... உம் மொகறைக்கு வைப்பாட்டி வேறே கேக்குதா... தூ...” என்று அவன் முகத்தில் காறி உமிழ்ந்தாள் காமாட்சி. மாடிப் படியில் நின்றிருந்த ராஜா திகைத்தான்!

இவள் என்ன பெண் தானா?

'ஆமாம். இங்கே பெண்கள் இப்படித்தான் இருப்பார்கள். இந்த உலகத்தாரைப் பழிவாங்க இது ஒரு சந்தர்ப்பம் அல்லவா அவர்களுக்கு...?'

'இவன் யார்? சிதம்பரம் பிள்ளையின் மகனா? அப்பனும் மகனுமா...? அட, மிருகங்களே!' ராஜாவின் நினைப்பு கசந்தது.

"அப்பாவுக்குத் தெரியவேணாம்...” என்று அந்த நிலையிலும் நடுங்கினான் சோமு.

"உம்... உங்கப்பன் மகாயோக்யன்; இவனுக்கு ரொம்ப ரோஷம். அவிசாரி பெத்த பயலே” என்று சீறினாள் காமாட்சி

"என்ன சொன்னே...? தேவடியா சிறுக்கி...” என்று பற்களைக் கடித்துக்கொண்டு, தூணோடு கட்டப்பட்ட கயிற்றுடன் துள்ளிக் குதித்தான் சோமு.

"யாருடா தேவடியா?" என்று ஆவேசத்தோடு கூவியவாறு அவன் முகத்தில் பாய்ந்து குத்தினாள் காமாட்சி. அவன்

அவள் முகத்தில் காரி உமிழ்ந்தான். அவள் மீண்டும் குத்தினாள். அவன் மீண்டும் துப்பினான். இரண்டாவது துப்பியது எச்சிலல்ல; ரத்தம்! அவன் வாயில் ரத்தம் ஒழுகிறது...

"ஐயோ! ரத்தம்... அடிபாவி"

காமாட்சி வெறிகொண்டு சிரித்தாள், ரெஸாக்கும் சிரித்தான்.

“சரிசரி... அவனை அடிக்க வேண்டாம். அவன் அப்பன் வரட்டும். நீங்க கீழே போங்க" என்று ரெஸாக்கையும் காமாட்சியையும் அடக்கினான் சாரங்கன்.

"என்ன விஷயம்?” என்று கேட்டுக்கொண்டே மாடியறைக்குள் பிரவேசித்தான் ராஜா.

“யாரது, ராசாவா?” என்று வரவேற்றான் சாரங்கன்.

“என்ன தம்பி காரியம் ஜெயம்தானே?”

“காரியம் சொல்கிறேன்; இது என்ன கலாட்டா?”

"இவுரு நம்ம சிதம்பரம்பிள்ளையின் மகன். அப்பனை விடப் பெரிய ஆளு, காமாட்சிகிட்டே கை வரிசையெ காட்டியிருக்கார்; அதுதான்...”

"சரிசரி அவுத்து விட்டுடுங்க. பாவமா இருக்கு?" என்றான் ராஜா.

"பாவமாவது, புண்ணியமாவது? பணம் தம்பி பணம்.”

“சாரங்கா... உனக்குப் பணம்தானே வேணும் இந்தா என்னை அவிழ்த்துவிடு, என் கையிலே இருக்கிற மோதிரம், கழுத்துச் செயின் ரெண்டையும் எடுத்துக்கோ என்னை விட்டுடு...” என்று கெஞ்சினான் சோமு.

"அப்புறம் என்ன? விட்டுடுங்க" என்றான் ராஜா.

"ராஜா நீ சொல்றதனாலெ இந்தப் பயலை விடறேன்" என்று கட்டுகளை அவிழ்த்து அவன் மோதிரத்தையும் கழுத்துச் செயினையும் கழட்டிக் கொண்டு அவனைத் துரத்தினான் சாரங்கன்.

போகும்போது ராஜாவை நன்றியுடன் பார்த்தான் சோமு.

“இனிமே புத்தியா பொழைச்சிக்கோ ஐயா?" என்று பெரிய மனிதன் மாதிரி புத்திமதி கூறினான் ராஜா. தலையைக் குனிந்து கொண்டு சத்திரத்திலிருந்து வெளியேறினான் சோமு.

"என்ன தம்பி, தங்கம் காரியம் என்ன ஆச்சு?" என்றான் சாரங்கன்.

"அவ ஆளு கொஞ்சத்திலே மசியறவளா இல்லே; எல்லாத்துக்கும் அழுவுறா. நானும் அவளுக்கேத்த மாதிரியெல்லாம் நடிச்சிக்கிட்டு இருக்கேன். எப்படியும் வழிக்குக் கொண்டாந்துடுவேன். இன்னம் ரெண்டு மூணு நாளு ஆகட்டும்" என்று கடைவாயில் பீடியைக் கடித்துப் பற்ற வைத்தான் ராஜா.

"சபாஷ்டா ராஜா" என்று அவன் முதுகில் தட்டினான் சாரங்கன்.

"ஆமா போலீசுத் தொந்தரவு எதுவும் நமக்கு ஏற்படுமோ!”

"அதெல்லாம் நம்மகிட்டே ஒண்ணும் நடக்காது. சப்-இன்ஸ்பெக்டரு நமக்கு ரொம்ப வேண்டியவரு. இங்கேகூட எப்பவாவது வருவாரு. நீ அதுக்கெல்லாம் ஒண்ணும் பயப்படாதே?” என்று தைரியம் கூறினான் சாரங்கன்.

"பயம் ஒண்ணுமில்லே, சும்மா கேட்டேன்.”

“சரி, சிதம்பரம்பிள்ளை கிட்ட அச்சாரம் வாங்கிடலாமா?”

“ஓ! தாராளமா - இன்னும் ரெண்டு நாளுலே எல்லாம் சரியாயிடும்.”

"ராத்திரி எப்படி இருந்தது சாராயம்? நம்ம பெருமாள் கடை வேலம் பட்டைன்னா ரொம்ப ஒசத்தி."

"அப்படியா? ஒரு கிளாஸ் அடிச்சவுடனே 'ஜிவ்'ன்னு ஏறிடுச்சி!"

"உம் இப்ப ஒரு பாட்டில்."

"ஊஹும் வேணாம். பேசமுடியாம வாய் உளறது ரெண்டு நாளு போகட்டும்!"

"அதுவும் சரிதான். சிதம்பரம் பிள்ளையெ அவகிட்டே தள்ளிட்டா ஒனக்கு 'ஜம்'னு ஒரு விருந்து - என்ன சரி தானே!"

"நம்ம பெருமாளு இருக்கானே - அதான் சாராயக் கடைக்காரன், நமக்கு ரொம்ப வேண்டியவன். எம்பேரைச் சொன்னா நடுங்குவான். ஒரு நாளைக்கு உன்னைக் கூட்டிக்கிட்டுப் போறேன்..."

"சரி, நா அங்கே போறேன்."

"எங்கே?"

"தங்கத்துக்கிட்டே."

"போ, போ. அவளை மயக்கறதுக்குப் பதிலா நீ மயங்கிடாதே?" என்று சிரித்தான் சாரங்கன்.

"சோமுவுக்கு நடந்த 'மரியாதை' தனக்கு ஒரு எச்சரிக்கையோ?" என்று எண்ணி நடுங்கிக் கொண்டே போனான் ராஜா.

*****

# 9

“இதென்ன கொக்குத் தலையிலே வெண்ணெய் வைக்கிற கதையாக இருக்கு. என்னை மயக்க உங்களை அனுப்பறதாவது?”

"கொக்குமில்லை வெண்ணெயுமில்லை... பெண்ணை மயக்க ஆணைத்தான் அனுப்புவாங்க."

“நீங்கள் என்னை மயக்கிட்டீங்களா?”

“இல்லை, நான் அவர்களைத்தான் மயக்கிக் கொண்டிருக்கிறேன். அதன் முடிவு என்ன பயங்கரத்தில் முடியுமோ!”

“என்னாலே உங்களுக்கு ரொம்ப சிரமம்!”

"தங்கம் இன்னைக்கோ நாளைக்கோ. அந்தக் கிழவன் சிதம்பரம்பிள்ளை இங்கே வருவான். அவனை ஏமாத்திப் பிட்டுக் கிளம்பிடணும்!”

"ஐயோ!"

"பயப்படாதே, தந்திரத்தால்தான் தப்பிக்க முடியும். கிழவனை அளவுக்கு மீறிக் குடிக்க வைத்து அவன் மயங்கிய பிறகு தோட்டத்துக் கதவைத் திறந்து கொண்டு போய்விடு.”

"போய்விடவா?”

"ஆமாம்; உனக்கு ஒரு ஆபத்தும் நேராமல் முன்னேற்பாடுகள் செய்து வைக்கிறேன்."

"நீங்கள்!”

“நானா? என் வழியே நானும் நடக்க வேண்டியவன் தான்.”

தங்கத்தின் கண்கள் கலங்கின. முகம் சிவந்து உதடுகள் துடித்தன. உள்ளத்து உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்க்க

மனம் இடம் தரவில்லை.

"ராஜாவின் அன்பும் கனிவும் நிரந்தரமாகக் கிட்டாதா?" என்று மனம் துடித்தது.

"அதுசரி, இங்கிருந்து தப்பியதும் நீ எங்கே போவாய்? என்ன செய்வாய்?" என்று ஆர்வத்துடன் விசாரித்தான் ராஜா.

அவள் மௌனமாய் நின்றாள். கண்கள் கலங்கிக் கலங்கி நீரைக் கொட்டின. சேலைத் தலைப்பைச் சுருட்டி வாயில் அடைத்துக் கொண்டு, குமுறிக் குமுறி அழுதாள்.

"தங்கம் என்ன இது? ஏன் அழுகிறாய்?" என்று பதறினான் ராஜா.

"நான் எங்கே போவேன்?" அவள் குரல் விக்கி விக்கி அடைத்தது.

"உலகம் பரந்து கிடக்கிறது என்று சொல்லுகிறார்கள், தங்கம்!"

"அது பரந்து கிடக்க வேண்டாம். உயிர் வாழ்வதற்குப் போதிய வசதியுடன் எங்காவது ஒரு மூலையில் குறுகிக் கிடந்தாலே போதும்!"

"தங்கம் உனக்கு எந்தவித உதவியும் செய்ய முடியாமல் இருப்பதற்கு வருந்துகிறேன்."

"நீங்கள் பக்கத்திலே இருந்தால்..."

"நானா... நான் எங்கே போகிறேன் என்று எனக்கே தெரியாது. உன்னோடு எப்படி வருவது?"

"நானும் அப்படித்தான் ராஜா, எங்கே போவது என்று எனக்கும் தெரியவில்லை..."

ராஜா தலையைச் சொறிந்து கொண்டே நின்றான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. தங்கத்தோடு தன் வாழ்வையும் பிணைத்துக் கொள்வது சகிக்க முடியாத

அபத்தமாகப் பட்டது. 'அந்த அபலைப் பெண் என்ன ஆவாள்?' என்று நினைத்த பொழுது மனம் குழம்பியது. அவளுக்கு வாழ்க்கை வீண்தானா? யாராவது ஒரு நல்லவன் அவளை மணந்து கொண்டால் அவளுக்கு விமோசனம் ஏற்படலாம். அதனால் மட்டும் என்ன விமோசனம் ஏற்பட்டுவிடப் போகிறது. அவளே, தன்னைத் தானே நம்பி வாழ முடியாதா... அவள் பிரச்னை அவனுக்கு பயங்கரமாக தோற்றமளித்தது.

'தங்கத்தைத் தப்புவித்த பிறகு நான் மட்டும் இங்கு இருக்க முடியுமா? சாரங்கன் கழுத்தை நெறித்துக் கொன்று விடுவான்... ஐயோ, நானும் தப்பிவிட வேண்டும். அவள் தப்பிப் போனதற்கு நான்தான் காரணம் என்று அவனுக்கு எப்படித் தெரியப் போகிறது...? தெரிந்து விட்டால்... தெரிந்து விட்டால்...?' அதை நினைக்கும் போதே அவன் குடல் நடுங்கிற்று!

"சரி நானும் உன்னோடு வருகிறேன், நாளை இரவு சாமர்த்தியமாக நடந்துகொள்ள வேண்டும். நம் தந்திரம் தோற்றுப்போனால் நம் உயிர்... அவ்வளவுதான்."

"நீங்களும் என்னுடன் வருகிறீர்களா? ராஜா... நான் பாக்கியசாலி" என்று பித்துற்றவள் போல் பிதற்றினாள்.

"பாவம்... தங்கம்!" என்று முனகிக் கொண்டான் ராஜா.

*****

# 10

மண்ணில் நடக்கும் அக்கிரமங்களுக்காக வானம் சில காலத்தில் அழுகிறது. சில காலத்தில் சினந்து தகிக்கிறது. சில வேளைகளில் பொங்கியெழுந்து பூமியைக் குமுற வைத்து அழித்தே விடுகிறது. அதனாலெல்லாம் உலகத்தில் நடக்கும் கொடுமைகள் நின்று விடுகின்றனவா? குறைந்து விடுகின்றனவா...

அன்று வானம் அழுது கொண்டிருந்தது. ஒரே இருள்... சந்திரிகை களைந்தெறிந்த சல்லாத் துணிபோல் இருந்த மேகப் படலம் கரிய பாறைகளாய் உருண்டு திரண்டன. பயங்கர ராக்ஷஸர்களைப் போல் உயர்ந்து நின்று ஒன்றோடொன்று மோதிச் சிதறி, உறுமிச் சிரித்து, எக்காளமிட்டுக் கெக்கலித்தன.

வருணதேவனின் பயங்கர வாள்வீச்சு மின்னித் தெறித்து இருளை வெட்டிக் கிழித்தது.

சத்திரத்து முற்றத்தில் கூடல் வாயிலின் வழியே நீர் வீழ்ச்சி போல் மழைநீர் பிரவகித்துத் 'தடதட'வென்று ஓசையெழுப்பிற்று. வீதியெங்கும் மழைநீர் 'சடசட'த்தது. தேங்கிக் கிடந்த நீர்க்குட்டையில் மழைத்துளிகள் எழுப்பிய குமிழ்கள் விளக்கொளியில் பிரகாசித்தன. தெருவிளக்குகளின் வரிசையில் ஒன்றிரண்டு காற்றின் அதிர்ச்சியால் அணைந்து விட்டன. மின்சாரக் கம்பிகளில் மழை நீரின் திவலைகள் முத்துப்போல் உருண்டு ஓடி உதிர்ந்தன. அந்த மழையிலும்கூடச் சுடலைக்கரை தகரக் கொட்ட கைக்குள் பிணம் ஒன்று எரிந்து கொண்டிருந்தது. தீ உயர்ந்து காற்றில் துடித்து மங்கித் திடீர் திடீரென ஜ்வாலை கிளப்பிற்று.

அந்த இருளில் சித்தாநல்லூர் பெரிய சாலையில் ஜல், ஜல் என்ற சதங்கை ஒலியுடன் ஒற்றை மாட்டு வண்டியொன்று வேகமாக ஓடி வந்து சத்திரத்து வாயிலில் நின்றது. அதனுள்ளிருந்து குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு சிதம்பரம்பிள்ளை இறங்கினார்! 'ஏய், சுருக்கா வண்டியை

ஓட்டிக்கிட்டுப்போ! மழை வலுக்கும் போலத் தோணுது. மாட்டைத் தாழ்வாரத்திலே கட்டாதே; கொட்டாயிலே கட்டு நீயும் அங்கேயே படுத்துக்கோ!” மழை இரைச்சலில் அவர் குரல் உரத்து ஒலித்தது.

"சரி சாமி.”

"ஏய், காலையிலே அஞ்சு மணிக்கெல்லாம் வந்துடு... பாக்கத்துக்குப் போகணும். இங்கே இருந்தே பொறப்பட்டுடலாம்" என்று இரைந்து கத்தினார் சிதம்பரம் பிள்ளை. பின்கட்டு அறையில் ஜன்னல் வழியாக மழையின் வினோதங்களைப் பார்ப்பதுபோல் நின்று மனசை எங்கோ மேயவிட்டுக் கொண்டிருந்த தங்கத்திற்கு, அந்தக் குரல் நெஞ்சில் உதைத்தது போல் இருந்தது; அவள் உடல் நடுங்கிற்று.

"அவன் வந்துட்டான்! ஜாக்கிரதை...” என்று எச்சரித்துவிட்டு அங்கு நின்றிருந்த ராஜா வெளியேறினான்.

"ராஜா...” அவள் குரல் நெஞ்சில் அடைத்தது. மீண்டும் ஜன்னலருகே நின்று சூன்ய இருளில் பார்வையை மேய விட்டாள்.

'டட் ட டார்...' என்று வானம் இடித்தது. மின்னல் தெறித்தது. காற்றில் சுழன்ற மழை நீர் ஜன்னலில் அறைந்து அவள் முகத்தை நனைத்தது. அவள் உணர்வற்று நின்றிருந்தாள். 'மரண ஜபம்' செய்து கொண்டிருந்த தவளைக் கூட்டத்தின் பேரிரைச்சல் மழையின் ஓலத்தில் மங்கி விட்டது. தங்கம் உடலே மரத்துவிட்டது போல் ஆடாமல் அசையாமல் நின்றிருந்தாள். அவள் மனம் இருளில் பாதை தேடி ஆடி அலைக்கழிந்து கொண்டிருந்தது.

"தங்கம்" என்ற ரஸியாவின் குரல் அவள் பின்னிருந்து குதூகலத்துடன் ஒலித்தது. தங்கம் மௌனமாய் நின்றாள்.

"தங்கம்” என்று தோளைப் பிடித்துக் குலுக்கினாள் ரஸியா. தங்கம் ‘வெடுக்’கெனத் திரும்பினாள். அவள் உடுத்தியிருந்த பட்டுச்சேலை விளக்கொளியில் 'பள

பள’த்தது! “இதென்ன முகமெல்லாம் தண்ணீர்... மழையிலே என்னா வேடிக்கை...?” என்று தங்கத்தின் முகத்தை முன்றானையால் துடைக்கப் போனாள் ரஸியா. "என் முகத்தை எனக்குத் துடைச்சிக்கத் தெரியும்" என்று எரிந்து விழுந்தாள் தங்கம். அவள் தலையில் சூடியிருந்த மல்லிகைச் சரத்திலிருந்து சில பூக்கள் உதிர்ந்தன. அவள் முகத்தில் மழை நீர் முத்து முத்தாய் நின்று வழிந்து சிவப்பு நிற ரவிக்கையின் மார்பகத்தை நனைத்து கருப்பாக்கி இருந்தது. அவள் நெற்றித்திலகம் ரத்தக் காயம் போல் கோரமாய் அழிந்து மூக்குத்தண்டில் வழிந்தது. அவள் வெறிபிடித்தவள் போல் நின்று விழித்தாள்.

"அவரை வரச் சொல்லட்டுமா?” என்றாள் ரஸியா.

"அவனை யாரும் அழைக்க வேண்டாம். அவனே வருவான்!”

"நீ மொகத்தைத் தொடச்சிப் பொட்டு வச்சிக்கோ.”

"ஏன்? இப்படி இருந்தா இவள் வேண்டாம்னு அவர் திரும்பிப் போய்விடுவாரோ?”

“அதுக்கில்லே...”

“எதுக்கும் வேண்டாம்... நீ தயவு செய்து வெளியே போ!”

ரஸியா மனம் வெதும்பி நின்றாள்.

"தங்கம்... நீ என் மேலே எதுக்குக் கோபப்படறே? உன்னை மாதிரி ஒருத்திதான் நானும்...” என்று அன்புடன் அவள் கையைப் பற்றினாள். தங்கம் அவள் கையைத் தள்ளவில்லை; மௌனமாய் நின்றாள். ரஸியா தன் முன்றானையால் தங்கத்தின் முகத்தைத் துடைத்தாள்; தங்கம் அதைத் தடுக்கவில்லை.

"சரி அவனை வரச்சொல்" என்ற உணர்ச்சியற்ற குரலில் கட்டளை இடுபவள் போல் மிடுக்குடன் கூறினாள் தங்கம்.

"இப்போதுதான் தங்கம்...! பிள்ளை சாதாரண ஆளில்லே... அவர் மனசுக்குப் பிடிச்சுப் போச்சுன்னா பணத்தைத்

தண்ணி மாதிரி இரைப்பாரு...” என்று மகிழ்ச்சியுடன் பிதற்றிக் கொண்டிருந்தாள் ரஸியா.

தங்கம் லேசாகச் சிரித்தாள். அப்பா...! அதற்குத்தான் எவ்வளவு பிரயாசை! சிரிக்கும் போதே அவள் உதடுகள் அழுகைக்காகத் துடித்தன. நெஞ்சில் குமுறிக் கிளம்பிய துயரத்தை அழுத்தி, மென்று விழுங்கிக் கொண்டு மீண்டும் சிரிக்க முயன்ற முயற்சியில் தோல்வியுறவே முகத்தை முன்றானையால் மூடிக்கொண்டு ஜன்னல் புறம் திரும்பிக் கொண்டாள் தங்கம்.

"இப்பவே வெக்கம் வந்துட்டுதா?” என்று கேலி பேசி விட்டு அறையைவிட்டு வெளியேறினாள் ரஸியா.

"எங்கே, சாரங்கனைக் காணோம்?” சிதம்பரம் பிள்ளையில் குரல் அறைக்கு வெளியே ஒலித்தது.

"சாயங்காலம் எங்கேயோ போனாரு...” இது ரஸியா.

"சரி, நீ மாடிக்குப்போ...! என்ன வேணும்? இந்தா...” ஒரு ரூபாயை எடுத்து அவள் கையில் எறிந்துவிட்டுத் தங்கத்தின் அறைக்குள் நுழைந்தார் ஸ்ரீமான் சிதம்பரம்.

“வாருங்கோ..." என்று மலர்ந்த முகத்துடன் வரவேற்றாள் தங்கம்.

"ஹி ஹி...” என்று இளித்துக்கொண்டு அங்கிருந்த கட்டிலில் உட்கார்ந்து மேலே போட்டிருந்த அங்க வஸ்திரத்தை எடுத்துத் தங்கத்திடம் நீட்டினார் பிள்ளை. அவள் அதைத் தன் இரண்டு கைகளாலும் மரியாதையாக வாங்கி, சுவரிலிருந்த ஆணியில் மாட்டினாள்.

"மழையிலேயா வந்தீங்க... நனைஞ்சு இருக்கே?"

"ஆமா, எவ்வளவோ வேலையிருக்கு; ஒனக்காகத் தான் மழையிலே ஓடிவந்தேன்" என்று பல்லைக் காட்டினார் பிள்ளை.

"என்னாலே உங்களுக்கு ரொம்ப சிரமம்.”

"சேசே சிரமமாவது? என்ன நிக்கறே? இப்படி உட்காரு."

"பரவாயில்லே..."

"ஏ குட்டி உட்காருங்கிறேன்..." என்று எட்டி அவள் கையைப் பற்றினார் பிள்ளை.

"இருங்க... கதவைத் தாழ்ப்பாள் போட்டுட்டு வர்ரேன்" என்று அவரிடமிருந்து விடுவித்துக் கொண்டு அறைக் கதவை மூடித் தாழிட்டாள். அவள் மனம் உள்ளூரத் துடித்துக் கொண்டிருந்தது. கால்களிரண்டும் அவளை அறியாமல் வெடவெடத்தன. அதற்காகவாவது அவள் உட்கார வேண்டியிருந்தது.

"ஒன்னே எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு."

“அப்படியா? உங்களுக்குப் பிடித்தமானதெல்லாம் இங்கே இருக்கு..."

"பிடித்தமானது எல்லாம்னா?"

“அதோ...!" என்று மேஜையின்மேல் வைக்கப்பட்டிருந்த சாராய பாட்டில்களையும் உணவு வகைகளையும் காட்டினாள்.

"சபாஷ்! ரொம்ப முன்னேற்பாடுதான்!"

“எல்லாம் ரஸியாவோட வேலை..."

"அவளுக்கு இன்னும் ஒரு ரூபா கொடுத்திருக்கலாமே..."

"காலையிலே கொடுத்தாப் போச்சு."

"ஆமாமா... காலையிலேதான். பின்னே இப்பவா?" என்று சிரித்தார். பிள்ளை.

மேஜை மேல் இருந்த சாராய பாட்டிலில் ஒன்றையெடுத்து வந்து அவர் முன் வைத்தாள் தங்கம். தட்டிலிருந்த மாமிசத்

துண்டுகளில் ஒன்றைக் கையிலெடுத்துச் சுவைத்தார் பிள்ளை.

"இந்தப் பாட்டிலில் இருக்கிறதையெல்லாம் குடிச்சிடுவீங்களா நீங்க?”

“ஓ...! இதென்ன, மிஞ்சி மிஞ்சிப்போனா ஆறு திராம் இருக்கும்...”

'அடே, சரியாச் சொல்லீட்டீங்களே, இதிலே நாலு திராம்தான் இருந்தது. நா, கொஞ்சம் குடிச்சிப்பிட்டுத் தண்ணியே ஊத்தி வைச்சேன்.’

"அது ஏன் அப்பிடி? - அதனாலே ஒண்ணுமில்லே, இன்னைக்கி இவ்வளவு குடிச்சா போதும்.”

“ஏன்”

"அது அப்படித்தான்...” என்று சப்தம் போட்டுச் சிரித்தார் பிள்ளை. வெளியே மழை பேரிரைச்சலிட்டுக் கொண்டிருந்தது.

"சரி. அந்தப் பாட்டிலையும் எடுத்துக்கிட்டு வா பேசிக்கிட்டே சாப்பிடுவோம்"

"உம்... அது எனக்கு."

“பின்னே எனக்கா கேட்டேன்? ரெண்டுபேரும் சந்தோஷமா பேசிக்கிட்டே சாப்பிடலாம்.”

“எனக்கு வெக்கமா இருக்கு.”

“நல்ல வெக்கம் போ...”

“நா' உங்க வாயிலே ஊத்தறேன்... உம்...'

"ஊஹும். பொறைக்கு ஏறிடும்.”

“நா' அப்பிடி ஊத்துவேனா?”

"உம் சரி - “ கையில் கறித்துண்டை வைத்துக்கொண்டு கண்ணாடித் தம்ளரில் வாயை வைத்து உறிஞ்சினார் பிள்ளை. அவர் முகத்துக்கு நேரே தம்ளரை பிடித்துக் கொண்டிருந்த தங்கம் முகம் சுளித்தாள். தம்ளரைக் காலி செய்ததும் கையிலிருந்த கறித்துண்டை வாயில் போட்டுச் சுகமாக மென்றுகொண்டே "நா உனக்குக் குடுப்பேனாம்...” என்று கொஞ்சினார் பிள்ளை.

"எனக்கு வெக்கமா இருக்கே?”

“என்னடி வெக்கம்?”

“நா நெறைய குடிப்பேனே..."

"அதுக்கு என்ன வெக்கம்? அந்தப்புட்டி முழுவதையும் நீ குடிப்பியாம்; நா' குடுப்பேனாம்' என்று மற்றொரு புட்டியையும் எடுத்து அதிலுள்ளதை ஒரு கிளாஸில் ஊற்றி அவள் முகத்துக்கு நேரே நீட்டினார். அவள் கண்ணாடித் தம்ளரில் முகம் கவிழ்ந்தாள்.

"உம் நீங்க?”

“நீ குடுத்தாத்தானே...”

ஒரு பாட்டில் முழுவதையும் குடித்துத் தீர்த்தார் பிள்ளை. சாராய நெடியுடன், மாமிசத்துண்டு அவர் வாயில் புரண்டு கொடுத்தது. கண்கள் சிவந்து விழிகள் செருகின.

"நீயும் குடிடி...” என்று குழறினார்.

"தோ... குடிக்கிறேன்...!” என்று பதிலுக்கு குழறிக் கொண்டே தன் தம்ளரைக் காலியாக்கினாள் தங்கம்.

"தங்கம்”

“உம்...!”

“நீ ரொம்பக் குடிக்கறே...”

“ஆமா, நா, பெரிய குடிகாரி-”

“குடிகாரன் - குடிகாரி... நா, குடிகாரன்; நீ குடிகாரி - ரொம்ப பொருத்தம்... ரொம்ப பொருத்தம்" என்று குழறினார் பிள்ளை.

"சரி சாப்பிடுவோமா-”

"நீ சொன்னா - நா, மாட்டேன்னு சொல்லுவேனா?” தங்கம் தள்ளாடியவாறே எழுந்து நடந்து மேஜைமேல் இருந்த தட்டுகளை எடுத்துச் சோறு பரிமாறினாள்.

"நீயும் சாப்பிடுடீ...”

“அப்புறம்...”

“அதெல்லாம் முடியாது - நீயும்...”

“சரி...”

அவளுக்கு ஒரு தட்டில் உணவு வகைகளை வைத்துக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தாள். இரண்டு கவளம் எடுத்து வாயில் வைத்தார் பிள்ளை. கட்டிலில் ஒரு புறமாகச் சாய்ந்து கொண்டு கால்களை நீட்டிச் சோற்றுத் தட்டை எடுத்து மடிமேல் வைத்துக் கொண்டார், கண்கள் ஏறச் செருகின.

"தண்ணீ... தண்!” கையால் சைகை காட்டினார் தலை தொய்ந்தது.

ஒரு தம்ளரில் தண்ணீர் எடுத்துப் புகட்டினாள் தங்கம்...

"சரி, நீ சாப்பிடு...”

“உங்களுக்கு ரொம்ப மயக்கம் வந்துடுச்சே...”

“இன்னா சொல்றே...”

“உங்களுக்கு ரொம்ப மயக்கம் வந்துடுச்சே...”

'சீ... சீ... பாத்தா அப்பிடித் தெரியுதா? எனக்குக் கொஞ்சங்கூட போதையில்லே... என்னவோ லேசா இருக்கு. தோ, பாரு... ஒம் பாட்டிலையும் காலி செய்யறேன்...' என்று தங்கத்தின் அருகே இருந்த பாட்டிலிலிருந்ததை எடுத்துக் குடித்துவிட்டு "என்னடி; வெறுந் தண்ணீ...?' என்ற சிவந்த கண்களை அகலத் திறந்தார் பிள்ளை.

"நான்தான் எல்லாத்தையும் குடிச்சிட்டேனே, தண்ணியெ சும்மா ஊத்தி வெச்சேன்" என்றதும் தண்ணியெ எதுக்கு ஊத்தி வைக்கிறது...? சனியனெ தூக்கி எறியாமே?" என்று பாட்டிலை விட்டெறிந்தார் அவர். அந்த பாட்டில் சுவரில் மோதி விழுந்து நொறுங்கிற்று. பிள்ளை சிரித்தார்.

"சரி, நாழியாச்சு; சாப்பிடுவோம்"... என்று தட்டிலிருந்த எலும்பை எடுத்துக் கடித்தார், கறியை விடுத்து எலும்பைச் சுவைத்தார். கடைவாயில் எச்சில் வழிந்தது. குறட்டை சப்தம் 'கொர் கொர்' என்று தொண்டையில் திணறிற்று... மெள்ள மெள்ளக் கட்டிலில் சாய்ந்தார் பிள்ளை.

தங்கத்தின் முகமே பேயறைந்ததுபோல் காணப்பட்டது. சுற்றும் முற்றும் பார்த்து விழித்தாள். கைகளும் காலும் பயத்தால் உதறின. ஜன்னல் பக்கம் நின்று தெருவைக் கவனித்தாள்.

“உம் தோட்டத்துக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வா!” என்ற ரகசியக் குரல் ஜன்னலருகே ஒலித்தது.

"ராஜா!” என இரு கைகளையும் மார்பில் குவித்துக் கொண்டு பெருமூச்சு விட்டாள் தங்கம். அறையில் எரிந்து கொண்டிருந்த விளக்கை ஊதி அணைத்தாள். ஒரே இருள். கதவு இருக்கும் இடம் கூடத் தெரியவில்லை.

தான் அதற்குள் விளக்கை அணைத்திருக்கக்கூடாது என்று தோன்றியது அவளுக்கு.

"உம் சீக்கிரம்... இன்னும் என்ன செய்யறே" அவள் தடவித் தடவிப் பார்த்தாள்; சுவர்தான் கைகளில் தட்டுப் பட்டது;

கதவைக் காணோம். அவளுக்கு அழுகை நெஞ்சைப் பீறிக்கொண்டு வந்தது.

"கதவைக் காணோம்...” அவள் அழுதே விட்டாள்.

"இங்கே பார் தங்கம்... நான் நிற்கும் ஜன்னல் தெரியுதா?”

"உம்...”

"இதுக்கு நேரே... அதுதான் கதவு...!" கதவின் தாழ்ப்பாளைச் சப்தமில்லாமல் திறந்துகொண்டு அறையைவிட்டு வெளியே வந்து தோட்டத்துக் கதவைத் திறந்தாள். அப்பொழுது தான் மழை நின்றிருந்தது. மழையில் மரக் கதவுடன் துருவேறிய இரும்புத் தாழ்ப்பாள் இறுகப் பிடித்துக் கிடந்தது. பயத்திலே வேறு அவள் கைகள் உதறின.

தாழ்ப்பாள் திறக்க வரவில்லை. பற்களைக் கடித்துக் கொண்டு தாழ்ப்பாளை இழுத்தாள். கை வழுக்கி ஆணியில் குத்தி ரத்தம் வடிந்தது. வலி தாளவில்லை.

"தங்கம்... இன்னும் என்ன நாழி?”

"தாழ்ப்பாள்... தாழ்ப்பாள்... திறக்க வரல்லே” அவள் குழந்தை போல விக்கி விக்கி அழுதாள்.

"நான் கதவை வெளியிலே இழுத்துப் பிடிக்கிறேன் - நீ தாழ்ப்பாளைத் தள்ளு!”

"உம்...”

“என்ன தெறந்துட்டுதா...?”

“இல்லே...”

“உம்... ம்... இப்போ...”

“ஊ... ஹும்... திறக்கல்லே ராஜா...”

"நீ அழற்தெ நிறுத்திட்டுத் தைரியமா இருந்தால்தான் முடியும்.”

"இல்லே, நா அழலே...” என்று முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

"சரி நா கதவை இழுத்துப் பிடிச்சிக்கிட்டேன், இப்போ அழுத்தித் திற."

“உம்"

'படார்' என்று சப்தத்துடன் அந்தக் கொக்கித் தாழ்ப்பாள் சுழன்று விழுந்து 'தடதட'வென்று ஆடியது. அந்த சப்தத்தில் அஞ்சி நடுங்கி நின்றாள் தங்கம்.

ராஜா, கதவை மெள்ளத் தள்ளித் திறந்தான்.

"ராஜா...” என்று அவன் கைகளைப் பற்றிக்கொண்டு அழுதாள். அவள் துயரத்தையும், நன்றியறிதலையும், சிரமங்களையும் அப்படித்தான் அவளால் காட்டிக் கொள்ள முடிந்தது.

"சரி. இப்போ ஏன் அழறே...? வா. முதல்லே இங்கே இருந்து போயாகணும்" என்று அவன் நடந்தான். அவனைப் பின் தொடர்ந்து அவளும் நடந்தாள்.

பாதை சறுக்கிற்று. சேற்றிலும் சகதியிலும் பாதங்கள் சிக்கின. இருவரும் தடுமாறி விழுந்து எழுந்து ஒருவாறாக, பெரிய சாலையை வந்தடைந்தார்கள்.

தெரு விளக்குகள் அவர்களைக் காட்டிக்கொடுக்க விரும்பாமல் அணைந்தன. ஒரே இருள். தன் கையே தனக்குத் தெரியாத இருள்.

“ராஜா நீங்க எங்கே இருக்கீங்க...?”

"இதோ இருக்கேன்" என்று கையை நீட்டி அவள் கரத்தைப் பற்றிக்கொண்டு நடந்தான் அவன். பயத்தால் சில்லிட்டுப்போன அவள் விரல்களுக்கு அவன் கையின்

வெதவெதப்பு சுகமளித்தது. மனசில் என்னமோ 'குளு குளு'த்தது. அவளுக்கு உடல் முழுவதும் சிலிர்த்தது; ரோமாஞ்சலி செய்தது, 'சில்லென்ற குளிர்க்காற்று வீசவே அவளையும் அறியாமல் அவள் விரல்கள் அவன் விரல்களை நெறித்தன. அதில் அவளுக்கு ஒரு சுகம்; ஹிதம்!

அவனைப் பொறுத்தவரை அவள் ஸ்பரிசம், 'ஸ்பரிசம்' என்ற உணர்ச்சிக்கு மேல் எதையும் உணர்த்தவில்லை. ஜாக்கிரதையுடன் அவள் கையைப் பற்றிக் கொண்டு இருளில் நடந்தான்.

"சத்திரத்தை விட்டுத் தப்பி வெளியே வந்தாய் விட்டது. இனிமேல் எங்கு போவது? என்ன செய்வது" - ராஜா தனக்குள் முணகிக் கொண்டான்.

"உலகம் பரந்து கிடக்கிறதாக நீங்கள் தான் சொன்னீர்கள்."

“உலகம் ஒரு பெரிய சத்திரம்!”

“இந்த ஊரை விட்டே நாம் போய்விட்டால்?”

“ஊர்கள் எல்லாம் ஒரே மாதிரியானவைதான்!”

“மனிதர்கள்...?”

"நல்லதும் கெட்டதும் எங்கும் உண்டு. நல்லது குறைவு; கெட்டது அதிகம். எங்கே போனாலும் நாம் வாழ முடியாது!"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?”

“இருட்டில் நடப்பவன் எதை நம்ப முடியும்?”

"இருட்டிலும் ஏதோ ஒரு திசையைக் குறி வைத்துத் தானே நடக்கிறோம்!”

"இருளில் குருட்டுத்தனமாக நாம் நோக்கி நடக்கும் திசையில் பாறையொன்று இருந்தால்...! பாதாளமாய் இருந்தால்"

"அதனால் நாம் நடக்காமலா இருக்கிறோம்?"

“ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுத்தான்...”

“இல்லை; இருள் போய்விடும் என்ற நம்பிக்கையில்”

“நீ பெரிய தத்துவார்த்தி மாதிரி பேசுகிறாயே.”

“இருட்டில்தான் தத்துவங்கள் பிறக்கின்றன.”

“அப்படியென்றால் வெளிச்சத்தில்?”

“வெளிச்சத்தில் கர்த்தரின் அருள் சுரக்கிறது.”

“நீ கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவளா?”

"இல்லை; கிறிஸ்தவப் பள்ளிக் கூடத்தில் கொஞ்ச நாள் படித்தேன்...”

“நீ எவ்வளவு வரை படித்திருக்கிறாய்?”

“அஞ்சு கிளாஸ்.”

ராஜா சிரித்தான்!

"ஏன் சிரிக்கிறீங்க?”

“நீ மலையாளத்துப் பெண் என்று தெரிகிறது.”

“எப்படி?”

“அஞ்சு கிளாஸ்,” என்று கூறிச் சிரித்தான் ராஜா.

"தமிழ் நாட்டிலேயே பிறந்தாலும் வளர்ந்தாலும் சில பழக்க வழக்கங்கள் எப்படிப் போகும்?"

"போக வேண்டுமென்று யார் சொன்னது?”

“நீங்கள் சொல்லலாம்.”

“நான் யாருக்கும் எதையும் சொல்லிக் கொடுக்க விரும்புவதில்லை." அவன் குரலில் சாதாரணமான கண்டிப்பு தொனித்தது. அவள் மௌனமானாள். அதற்கு மேல் அவர்கள் ஒன்றும் பேசவில்லை. பாதங்கள் சேற்றில் 'சதக் சதக்'கென தாளமிட்ட இருவரும் ரெயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தனர்.

மழை லேசாகத் தூற ஆரம்பித்தது. வெகு தூரத்தில் அடிவானத்தில் மின்னல் சாவதானமாகப் பிரகாசித்தது.

"தங்கம்!”

“என்ன?”

“இருட்டில் தத்துவங்கள் ஒன்றும் பிறக்கவில்லையா?”

“இல்லை!”

“மழை வரும்போல இருக்கே?"

மழைக்குப் பயந்து, மனிதர்களுக்குப் பயந்து, இருளுக்குப் பயந்து, வெளிச்சத்திற்குப் பயந்து ரயில்வே ஸ்டேஷனை நோக்கி விரைந்தனர். ராஜாவும் தங்கமும், திடீரென இருளை வெட்டிக் கிழித்துக் கொண்டு, எங்கிருந்தோ ஒளிவீச்சு அவர்கள் மீது பாய்ந்தது.

சாராயக்கடையின் கதவுகளில் ஒன்று திறக்கப் பட்டதும் அதன் வழியே பாய்ந்த கியாஸ் லைட்டின் வெளிச்சம் தங்கத்தின் மீது மட்டும் விழுந்து சிரித்தது. அவள் நடுநடுங்கி நின்றாள். ராஜா அவள் கையைப் பற்றிக் கொண்டு இருளில் நின்றிருந்தான்.

"யார்? தங்கமா?" - என்ற சாரங்கனின் குரல் சாராயக் கடை ஜன்னலிலிருந்து அதிர்ந்தது.

அவள் கையைப்பற்றி இழுத்துக்கொண்டு ராஜா ஓடினான். தங்கம் சகதியில் கால் சறுக்கி விழுந்தாள்...!

சாராய கடைக்குள்ளிருந்து கடைக்காரன் பெருமாளும் சாரங்கனும் வெளியே ஓடிவந்தனர். கீழே விழுந்து கிடந்த தங்கத்தைப் பிடித்துக் கொண்டான் பெருமாள்.

அவள் கையை உதறிவிட்டுத் தப்பி ஓடிய ராஜாவைப் பின் தொடர்ந்து ஓடினான் சாரங்கன். ராஜா, சேற்றிலும் சகதியிலும் விழுந்து புரண்டு எழுந்து ஓடினான். சாரங்கன் அவனை விடாமல் துரத்தினான். இருளில் திக்குத்திசை தெரியாமல் நோக்கின்றி, குறியின்றி, இலக்கின்றி ராஜா ஓடிக்கொண்டே இருந்தான்.

பெரியசாலை, மேட்டுத்தெரு, அதையடுத்த சிறிய சந்து, ஊருக்கு நடுவேயுள்ள கோயிலின் சந்நிதித்தெரு... அவன் ஓடிக்கொண்டே இருந்தான்; சாரங்கனும் விடுவதாய் இல்லை.

ராஜாவின் கால்கள் தள்ளாடின. கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய சந்து; சந்தில் முதல் வீடு ஒரு சிறிய பங்களா, காம்பவுண்ட் சுவரின் மீதேறி உள்ளே குதித்து ஒளிவதைத் தவிர வேறு வழியில்லை. ராஜா திரும்பிப் பார்த்தான். சாரங்கன் இன்னும் அத்திருப்பத்திற்கு வரவில்லை. சந்நிதித் தெருவில் காலடியோசை கேட்டது. சுவர் மீதேறி உள்ளே குதித்து விட்டான் ராஜா!

அடுத்த வினாடி சந்நிதித் தெருவின் திருப்பத்தில் வந்து நின்ற சாரங்கன் சுற்றும் முற்றும் பார்த்தான்.

ஆள் தப்பிவிட்டதை நினைக்கும்போது ஆத்திரமும் அவமானமும் அவன் நெஞ்சைத் தகித்தன. பற்களை 'நற நற'வெனக் கடித்தான்.

அந்தத் தெருவிலேயே வெகு நேரம் முன்னும் பின்னும் உலவினான். தெருவிளக்கின் மங்கிய ஒளியில் அவன் கண்கள் நெருப்புத் துண்டுகளைப்போல் கனன்று ஜ்வலித்தன. அவன் தனக்குள் வெறியுடன் சிரித்துக் கொண்டான். சட்டையில்லாத அவன் மார்பு வெண்கலம் போல விறைத்து உறுதி தட்டி நிமிர்ந்திருந்தது. அவன்

கூண்டுப்புலிபோல் தனிமையில் அந்த இரவில், நடுத் தெருவில் உலாவிக் கொண்டிருந்தான். அவன் நடக்கும் போது அவனுடைய குதிகால் பூமியில் அழுந்தி 'தங் தங்...'கென ஓசை கிளம்பிற்று. சமயாசமயங்களில் அவன் பாதங்கள் பூமியை ஆத்திரத்தோடு எற்றின.

அவன் கால்களுக்குத்தான் என்ன உறுதி!

உறுதி! - அவன் ஆளே உறுதிமிக்கவன்! சொல், பார்வை, நெஞ்சு, நினைவு யாவும் உறுதி, அவன் உறுதியின் உருவம்!

"அவன் யாராயிருக்கும்?" சாரங்கன் தனக்குள் முனகிக் கொண்டான்.

"கையில் கிடைத்திருந்தால்..." என்று தனது உறுதி மிக்க கைகளை முறுக்கேற்றிப் பார்த்துக் கொண்டான்.

"அந்தச் சிறுக்கியைப் பிடித்து நைய உதைத்தால் விஷயத்தைக் கக்கி விடுவாள்... இல்லாவிட்டால்... இல்லா விட்டால் - அவளைச் சுடலைக் கரையில் வெட்டிப் புதைப்பேன்" என்று கறுவினான் சாரங்கன். சற்று நேரத்தில் அவன் பெருமாள் கடையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

தப்பி ஓடிவிட்டவனைப் பிடிக்காமல், அவனை உதைக்காமல், கொல்லாமல் திரும்புவதை நினைக்க நினைக்க அவனுக்குச் சித்ரவதையாக இருந்தது.

'சத்திரத்தில் உள்ளவர்களையெல்லாம் ஏமாற்றி விட்டு அவள் எப்படி வந்தாள்?' என்று நினைக்க அவனுக்கு வியப்பாய் இருந்தது.

'அவள் ராஜாவைக் கூட ஏமாற்றி விட்டாளே' என்று நினைக்கையில் கோபம் அவன் நெஞ்சைத் தகித்தது.

'என்னையும் மீறி என் கையிலிருப்பவளைத் தட்டிக் கொண்டு போகும் சக்தி படைத்த அவன் யார்? அவன்

இருந்தால் நான் இருக்கக் கூடாது. நான் இருந்தால், அவன் இருப்பதில் அர்த்தமுண்டென்றால் அவனை...' என்று குமுறிக் கொதித்தது அவன் நெஞ்சு.

*****

# 11

சித்தநல்லூர் பெரிய சாலையில் கவிந்திருந்த இருளில் இரண்டு உருவங்கள் சத்திரத்தை நோக்கி வருகின்றன.

ஒன்று சாரங்கன். மற்றொன்று தங்கம்.

அவள் கூந்தலைப் பற்றி இழுத்துக்கொண்டு வெறியன் போல் நடந்தான் சாரங்கன். அவளும், தான் அழுவதிலோ கூக்குரலிடுவதிலோ பலனொன்றுமில்லை எனக் கருதி மௌனமாய், எதற்கும் துணிந்தவளாய், அலட்சியமாய் நடந்தாள்.

சத்திரத்து வாயிற்படிகளில் ஏறியவுடன், கதவைத் 'தட தட'வென்று இடித்தான் சாரங்கன், கதவு திறந்தே இருந்தது.

உள்ளே நுழைந்ததும் "ராசா ராசா' எனக் கூவினான் எங்கிருந்தும் பதிலில்லை.

"ஏய், ராசா...” என்று மாடியை நோக்கிக் கூவினான்.

"இந்தத் திருட்டுச் சிறுக்கி நம்மை எல்லாம் ஏமாத்திட்டா...” என்று ஊளையிட்டுக் கொண்டே அவள் கூந்தலைப் பிடித்து உலுக்கினான். அவள் அழவுமில்லை; கூச்சலிடவுமில்லை.

மாடியிலிருந்து கையில் விளக்குடன் ரஸியாவும் காமாட்சியும் இன்னும் சில வாடிக்கைக்காரர்களும் கீழிறங்கி வந்தனர்.

"ராஜா எங்கே?” என்று அவர்களிடையே கண்களால் துழாவினான் சாரங்கன்.

"காணோமே...” என்று நடுங்கிய குரலில் கூறினான் ரெஸாக்.

"இவ நம்ம எல்லோரையும் ஏய்ச்சிப்பிட்டு எவன் கூடயோ தப்பி ஓடினா...”

"உங்களை ஏய்ச்சிட்டு என்ன ஓடறது! நீங்கள் விலை கொடுத்து வாங்கிய அடிமையா நான்?" - தங்கத்தின் குரலில் உறுதி தெறித்தது.

"சரி, உன்னை விட்டுடறேன்... அவன் யாரென்று சொல். அவனுக்கும் உனக்கும் என்ன உறவு? அவனுக்கு நீ இங்கே இருப்பது எப்படித் தெரியும்? சொல்லு, சொல்லு..." அவள் கூந்தலைப் பிடித்து உலுக்கி முகத்தில் ஓங்கி அறைந்தான் சாரங்கன்.

அவள் முகம் நிமிர்த்திக் கண்களை மூடிக்கொண்டு உறுதியாய் நின்றாள். காமாட்சியும் ரஸியாவும் கண்களைத் துடைத்துக் கொண்டார்கள். அவர்கள் உடல் முழுதும் பயத்தால் நடுங்கிற்று.

"யாரவன் சொல்லு?" என்று கத்தினான் சாரங்கன்.

"ராஜா...!" அதைச் சொல்லும் போது அவள் குரல் நடுங்கிற்று. எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்டாள். அவள் உதடுகள் துடித்தன. அப்பொழுதுதான் அவள் வாய்விட்டு குமுறி 'ஓ'வென்று அழுதாள்.

"ராசாவா...? நிசமாகவா...?" தங்கத்தின் கூந்தலைப் பற்றிப் பிடித்திருந்த சாரங்கனின் கைகள் தளர்ந்தன. அவன் முகம் திடீரெனச் சுருங்கிற்று.

"தங்கம். நிசமாச் சொல்லு... ராசாவா?" என்று அவள் தோள்களைப் பிடித்துக் குலுக்கினான் அவன்.

அவள் கண்களைத் திறக்காமல், மூடிய இமைகளினூடே கண்ணீர் வழிய முகம் நிமிர்த்தி நின்று "ஆமாம்..." என்று விக்கினாள்.

அவன் இப்படி ஒரு நிலையை எண்ணிப் பார்க்கவே இல்லை. ராஜா தன்னை ஏமாற்றிவிட எண்ணுவான் என்று அவன் எண்ணியதே இல்லை. அப்படி ஏமாற்றினாலும் அவனை மன்னித்துவிட அவன் தயாராய் இருந்தான். ஏமாந்து போகவும் தயாராய் இருந்தான். தன் தம்பிக்கு

மாற்றாய் அன்பு செலுத்த அவனுக்குக் கிடைத்த ராசாவை அவன் எதை முன்னிட்டும் இம்சிக்கவோ, இழக்கவோ தயாராக இல்லை. அப்படிப்பட்ட நிலைமை வரும் என்று எதிர்பார்க்கவுமில்லை.

சாரங்கன் தங்கத்தின் முகத்தைக் கூர்ந்து நோக்கியவாறு மரமாய் நின்றான். அவன் கண்கள் கூடக் கலங்கின! "சரி இனிமேல் நீ உன் இஷ்டப்படி இருக்கலாம் - ராஜா எங்கே?” என்று கம்மிய குரலில் கேட்டான்.

"நான் உன்னைக் கேட்க நினைத்தேன்..." அவள் குரல் பரிதாபமாக ஒலித்தது.

"அவன் உன்னை எங்கே அழைச்சிட்டுப் போனான்? உங்கள் திட்டம் என்ன?”

"இந்த ஊரைவிட்டு எங்காவது போயிடறதுதான் திட்டம்.”

“முட்டாள்!” என்று சலித்துக் கொண்டு சத்திரத்துத் தாழ்வாரத்தில் முன்னும் பின்னும் உலாவினான் சாரங்கன். தங்கம் சுவரோரமாய் அமர்ந்து அழுது கொண்டிருந்தாள்.

அவர்களிடையே வெகுநேரம் அமைதி நீடித்து நிலவியது.

"என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் - " சாரங்கன் தனக்குள் முனகிக் கொண்டான்.

"சரி. இனிமேல் நீ என்ன செய்யப்போறே?"

அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

“நீ கொஞ்ச நாளைக்கு இங்கேயே இரு”

“ஐயோ!”

"இனிமேல் நீ பயப்படாதே! உன் இஷ்டத்துக்கு விரோதமாய் ஒண்ணும் நடக்காது!” என்று உறுதியளித்தான் சாரங்கன். ராஜாவுக்காக அவள் மீது அவன் பரிவு காட்டினான்.

அவளுக்கு எவ்விதத் தீங்கும் இழைக்க இனிமேல் அவன் உடன்பட மாட்டான்.

"சிதம்பரம்பிள்ளை - " என்று குறுக்கிட்டான் ரெஸாக்.

"எந்தக் கொம்பனாயிருந்தாலும் சரிதான்... தங்கம் ராசாவுக்குத்தான்"

"அவன் கிட்டே வாங்கின பணம்?"

"பணம்" என்று சொல்லிவிட்டுச் சப்தம் போட்டுச் சிரித்தான் சாரங்கன்.

"பணம் வாங்குவதுதான் என் வேலை; வாங்கியாச்சு, நியாயம் என்ன வேண்டிக் கெடக்கு இந்த விஷயத்தில்...?" என்று மீண்டும் சிரித்தான்.

"கிழவன் பணத்துக்குப் பதிலாக..."

“பணத்துக்குப் பதிலாக உதைதான் கிடைக்கும்...”

"அவன் உள்ளே இருக்கிறான்..." என்று உள்ளே இருந்து வந்த ரஸியா கூறினாள்.

"சரி, நீ அங்கே போ...!" என்றான் சாரங்கன். ரஸியா துள்ளிக் குதித்துச் சிதம்பரம் பிள்ளையின் அறைக்கு ஓடினாள்.

"காமாட்சி, தங்கத்துக்கு மாடியறையை ஒழித்துக் கொடு."

"எனக்கு அங்கே வேண்டாம்!" என்று இடை மறித்தாள் தங்கம்.

"சரி, இல்லாவிட்டால் இதோ, இந்தக் கூடத்து அறையில் போய் நீ படுத்துக்கொள்" என்றான் சாரங்கன்.

“இனிமேல் நீ இங்கு பயப்படக்கூடாது. இந்தச் சத்திரத்திற்குள் என்னை மீறி எதுவும் நடக்க முடியாது!” என்று அவளுக்குத் தைரியமளித்தான் சாரங்கன்.

தங்கம் எழுந்து சென்று கூடத்து அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக்கொண்டு அங்கு கிடந்த கோரைப் பாயில் விழுந்து குமுறிக் குமுறி அழுதாள்.

மன உளைச்சல் தீரும் வரை சாராயத்தைக் குடித்து விட்டு, பீடியைப் புகைத்துக்கொண்டு சத்திரத்துத் தாழ்வாரத்தில் உலவிக் கொண்டிருந்தான் சாரங்கன். பிறகு தாழ்வாரத் தூணில் சாய்ந்து பின்புறம் தூணைச் சேர்த்துக் கைகளைக் கட்டியவாறு வானத்தைப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தான் அவன்.

ஒன்றிரண்டு மழைத்துளிகள் அவன் முகத்தில் விழுந்தன. அவன் அதை லட்சியம் செய்யவில்லை. அவன் மனம் எங்கோ லயித்திருந்தது.

அறையில் படுத்திருந்த தங்கம் ராஜாவை எண்ணியெண்ணி அழுதாள்.

சாரங்கனின் போக்கு அவளுக்குப் புதிராக விசித்திரமாக இருந்தது.

ராஜா கூறிய வார்த்தைகள் அவள் செவிகளில் ஒலித்தன.

"இந்த ஜனங்கள் ரொம்ப நல்லவர்கள் தெரியுமா...? பணக்காரர்கள் துணிச்சல் மிகுந்த ஏழைகளை ரௌடிகளாக்குகிறார்கள்." - அந்த வார்த்தைகள் உண்மை என்பது அவளுக்குப் புரிந்தது; 'இவ்வளவும் தெரிந்த ராஜா ஏன் சாரங்கனைப் புரிந்து கொள்ளவில்லை.'

"சாரங்கன் உண்மையாகவே ராஜாவை நேசித்திருக்கிறான். ஆனால் ராஜாவோ நடித்தார்!"

"எல்லாம் என் விதி!-" என்று தன் விதியை நொந்து கொண்டு, தான் பெண்ணாய்ப் பிறந்த பாபத்துக்கு அழுது தீர்த்தாள் தங்கம்.

'ராஜா என்ன ஆனார்? எங்கே போய் மழையிலும் இருளிலும் சிக்கித் தவிக்கிறாரோ? இனிமேல் நான்

அவரைப் பார்க்கவே முடியாதா...? இனிமேல் நான்தான் என்ன செய்வது...? அவரையே நம்பி வழித்துணையாய், வாழ்க்கைத் துணையாய்க் கொண்டுவிட நினைத்த என் ஆசை?' - அவள் விம்மி அழுதாள்.

"நான் பாபி. தரித்திரம் பிடித்தவள்..." என்று தரையில் மண்டையை மோதிக் கொண்டாள்.

சாரங்கன் தாழ்வாரத்திலேயே நின்றிருந்தான். மழை வலுத்தது. மாடிக்குச் சென்று மேலும் கொஞ்சம் குடித்து விட்டு, அப்படியே வெறும் தரையில் படுத்து உறங்கிப் போனான். இருள் குமைந்து கொண்டிருந்தது. காற்று சுழன்றது. வானம் மின்னித் தெறித்தது. இரவு சோகமாய் ஒலித்தது.

*****

# 12

முன்பின் பழக்கமில்லாத புதிய இடத்தில் காம்பவுண்ட் சுவர் ஓரமாக அடர்ந்து செரிந்து வளர்ந்திருந்த அரளிச் செடியின் இலைகளினூடே மறைந்திருந்த ராஜா திடீரென மழை வலுக்கவே ஒதுங்குவதற்கு இடம் தேட, தலைநிமிர்ந்து இருளில் பார்வையைச் செலுத்தினான்.

அந்தக் குளிரிலும் அவன் முகம் பயத்தால் வியர்த்திருந்தது. அவனுக்கு மூச்சு இளைத்தது; கால்கள் வலித்தன. கண்கள் கலங்கின. அழவேண்டும் போல் தோன்றியது; அவன் மெள்ள எழுந்து நின்றான். எழுந்து நின்றவுடன் முழங்கால்கள் ஒன்றோடொன்று இடித்து மடிந்தன. தடுமாறிக் கீழே விழுந்தான். முழங்கால்களைத் தடவி விட்டுக் கொண்டு மீண்டும் எழுந்து நின்று சுவருக்கு மேலே தலையை உயர்த்திப் பார்த்தான். கண்ணுக் கெட்டிய தூரம் ஆளரவமே இல்லை. காற்றும் மழையும் மின்னிச் சுழன்றன.

மழைநீர் காற்றில் சுழன்று அவன் முகத்தில் அறைந்தது.

குளிரில் அவன் உடல் நடுங்கிற்று; பற்கள் இறுகின. ஒதுங்குவதற்கு கூட இடத்தைக் காணோம்.

பங்களாவின் கட்டிடச் சுவரை ஒட்டி மாடிப்படி; மாடிப்படியின் முடிவில் மாடி வாசற்படியின் முன்புறத்தில் உள்ள நிலைக்கதவின் 'டாப்'பினடியில் கொஞ்சம் ஒதுங்கலாம்.

அவனுக்குப் படிகளின் மீது ஏறி மேலே செல்ல அச்சமாக இருந்தது.

'யாராவது பார்த்துத் திருடன் என்று கூவினால்...'

'சீ அந்தப் பெயர் ஒன்றுதான் எடுக்கவில்லை!'

'இந்த நிலையில் என்னைத் திருடன் என்று சொன்னால் எவரும் நம்பலாம்."

மழையில் அவன் நனைந்து கொண்டே அரளிச் செடியின் அடியில் நின்றிருந்தான். திடீரெனத் தெரு விளக்கு அணைந்தது. கரிய இருள் தன் அகன்ற கைகளை வீசி கோயிற் கோபுரத்தையும் சந்நிதித் தெருவையும், அந்தச் சிறு பங்களாவையும் அணைத்துக் கொண்டது. மழை நிற்கவில்லை. ராஜாவின் சட்டையும் வேட்டியும் நனைந்தே விட்டது. அவன் நெற்றியில் மயிர் சரிந்து விழுந்திருந்தது. அதிலிருந்து மழை நீர் வழிந்து அவன் முகத்தை நனைத்தது. அவன் முகத்திலிருந்து நீரை வழித்து விட்டுக் கொண்டான்.

'இப்படியே இரவு முழுவதும் நனைவதா?' - அப்பொழுது அவனுக்குத் தாயின் நினைவு வந்தது.

'அம்மா இந்நேரம் குடிசைக்குள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருப்பார்கள். தன் மகன் இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு மழையில் நனைந்து கொண்டிருப்பதைப் பார்த்தால்' - அவன் கண்கள் கலங்கின.

'அம்மா!' அவன் தனக்குள் மெள்ள முனகிக் கொண்டான்.

'இருட்டில் யார் கவனிக்கப் போகிறார்கள்? படிகளில் ஏறி அங்கு ஒதுங்கி நின்று துணிகளைப் பிழிந்து கொண்டு அப்படியே கொஞ்ச நேரம் உட்கார்ந்து உறங்கினால்...!'

'அது ஆபத்து' என்று மனம் எச்சரித்தது.

'சரி, மழை நிற்கும் வரையிலாவது உட்கார்ந்து இருக்கலாம் அல்லவா?' - அவன் தைரியத்துடன் மாடிப் படிகளில் ஏறிச் சென்றான். கதவோரமாக ஒதுங்கி நின்று சட்டையைக் கழற்றிப் பிழிந்தான். சட்டையை இடுப்பில் சுற்றிக்கொண்டு வேட்டியையும் களைந்து பிழிந்தான். பிறகு வேட்டியை உடுத்திக் கொண்டு சட்டையால் தலையையும் முகத்தையும் உடம்பையும் துடைத்துக் கொண்டான். உடம்பில் சூடு பரவியதும் 'சில்'லென்று வீசிய வாடைக் காற்றில் பற்கள் 'கட கட'த்தன

அங்கு குறுக்கில் காலை நீட்டிக்கொண்டு ஒருவன் உட்காரும் அளவுக்கு இடம் இருந்தது. வாசற்படியில் உட்கார்ந்து கால்களை நீட்டிக்கொண்டு கதவில் சாய்ந்தான் ராஜா.

உடல் முழுவதும் குதுகுதுத்தது...

'இப்பொழுது ஒரு பீடி இருந்தால்?'

'சாரங்கனால் வந்த கெட்ட பழக்கம்!' என்று தனக்குள், மனசில், முனகிக் கொண்டான்.

மழைச்சாரல் வீசியது. கதவுடன் நெருங்கிக் கொண்டு உட்கார்ந்தான். சீ, சாரல்தான் என்னமாய் வீசுகிறது. இன்னும் சற்று ஒட்டி நெருங்கினான். கதவு சரியாய்த் தாழ்ப்பாள் போடாததால் 'படா'ரெனத் திறந்து கொண்டது. அவன் நிலைகுலைந்து கதவின் மறுபுறம் சாய்ந்தான்...

மேஜை விளக்கருகே உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்த அந்த இளம் பெண் திடுக்கிட்டு எழுந்தாள். அவள் பயந்து போய்க் கத்த முயன்றபோது தொண்டை வரவில்லை; விழிகள் பிதுங்க, பார்வை நிலைகுத்த அப்படியே நின்றாள். அவள் தன்னுணர்விழந்தவள் போல் வெறித்த பார்வையுடன் நின்றிருந்தாள். கீழே விழுந்த ராஜா வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து நின்றான்...! அவள் கூச்சலிட்டு விட்டால் என்ன செய்வது? என்ற பயம்!

அந்தப் பெண் அப்படியே ஒருகணம் நின்றாள். அவள் கூச்சலிடவில்லை...

அவள் இமைகள் மெள்ள மூடின... மறுகணம் 'தடா'லெனக் கீழே சாய்ந்தாள்...

ராஜா, அவசரமாக ஓடி அவளைத் தாங்கிப் பிடித்துப் பக்கத்திலிருந்த கட்டிலில் கிடத்தினான்; முகத்தில் தண்ணீர் தெளித்து, குடிக்கவும் புகட்டினான்.

ராஜாவுக்கு உடல் முழுவதும் நடுங்கிற்று. சற்று நேரத்திற்குப்பின் அவள் மெல்லக் கண்களைத் திறந்தாள் - பேந்தப் பேந்த விழித்தாள்!

அவன் மெதுவாகத் தணிந்த குரலில் பேசினான்:

“நான் இங்கே திருட வரவில்லை... கொள்ளையடிக்கவும் வரவில்லை, என்னை ஒரு திருடன் துரத்திக்கொண்டு ஓடி வந்தான்! அவனுக்குப் பயந்து இந்த வீட்டில் ஒதுங்கினேன். மழைக்குப் பயந்து இந்த மாடியின் கதவருகே நின்றேன். கதவு மூடியிருக்கும் என்று நினைத்தேன்... தற்செயலாகக் கதவு திறந்து கொண்டது. நீங்கள் பயப்பட வேண்டாம். நான் திருடனில்லை" என்று பதறிப் பதறி மெல்லிய குரலில் புலம்பினான்.

அவள் ஒன்றும் புரியாமல் விழித்தாள் என்றாலும் பயத்தால் அவள் உடல் நடுங்கிற்று.

"என்னை மன்னித்துவிடுங்கள்...” என்று தலை குனிந்து நின்றான்.

"நீ... நீ... யார்?” - அவள் வாய் குழறிற்று.

"நான் வெளியூர்க்காரன்... வேலை தேடி இந்த ஊருக்கு வந்தேன். துலுக்கன் சத்திரத்து ரௌடியொருவன் என்னைத் துரத்திக்கொண்டு ஓடி வந்தான்...”

அவள் கட்டிலில் மெள்ள எழுந்து உட்கார்ந்தாள். அவள் உடல் முழுதும் நடுங்கிக் கொண்டிருந்தது.

"பயப்படாதே! எனக்கு இது ஒரு நோய் - ஹிஸ்டீரியா”

அவர்களிடையே நீண்ட நேர மௌனம். வெளியே மழை 'கட கட'த்துக் கொண்டிருந்தது.

"அவனிடம் சிக்கிக் கிடந்த ஒரு பெண்ணை நான் காப்பாற்றி விட்டேன். அதனால் அவன் என்னைத் துரத்திக் கொண்டு வந்தான் - மன்னிக்கணும் - உங்கள் உதவிக்கு நன்றி; நான் வருகிறேன்" என்று திரும்பினான்.

"அந்தப் பெண் எங்கே?" - அவள் குரலில் இப்பொழுது பயம் இல்லை. அவன் மீது நம்பிக்கை ஏற்பட்டது அவளுக்கு. அவள் கேள்வியைக் கேட்டு விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட அவன் மாடி வாசற்படியில் நின்று திரும்பினான். அவன் தன் முகத்தை மட்டும் அவள் பக்கம் திருப்பிச் சொன்னான்.

"அவள் மறுபடியும் சிக்கிக் கொண்டாள்!"

அடப் பாவமே! அவளைச் சிக்கவைத்துவிட்டு நீ மட்டும் தப்பி ஓடி வந்துவிட்டாயா என்ன?"

"ஆமாம் - " அவன் மனசை அவமானம் நாண வைத்தது.

"அது சரிதான். நீயும் சிக்கிக் கொள்வதால் அவளுக்குத்தான் என்ன லாபம்? - அது சரி, உன் பெயர்?"

"ராஜா - "

அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள் அவள். அவள் கண்கள் படபடத்தன. அவனோ மௌனமாய் நின்றான்.

"உனக்குச் சொந்த ஊர் தில்லையம்பதிதானே?"

"ஆமாம் - "

"உனக்கெப்படித் தெரியும்?" - அவன் வியந்து நின்றான். உண்மையைக் கிரகித்துக் கொள்ள அவனுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை.

"கீதாவா, நீ" ஆச்சரியத்துடன் கேட்டான் அவன்.

"ஆமாம்... அத்தை உன்னைக் காணோம்னு கடுதாசி போட்டிருந்தாங்க... இரு இரு அப்பாவை எழுப்பறேன்!"

"ஐயோ, வேண்டாம் கீதா, வேண்டாம்..."

"ஏன்!"

"இந்த நிலையில் நான் யாரையும் பார்க்க விரும்பவில்லை. இப்போது நான் போயிடறேன். நாளைக்கு பகிரங்கமாக வர்றேன்."

"இந்நேரத்திலே நீ எங்கே போவே?”

அவன் லேசாகச் சிரித்தான்.

"இத்தனை நாளும் எங்கே போவேன்னு யாரும் கேட்கவில்லை..."

"நீ ஏன் முதல்லேயே இங்கே வரக்கூடாது?”

“வரவேணும்னு நினைக்கவும் இல்லே; நினைவும் இல்லே."

"சரி கொஞ்ச நாழி இரு. மணி இரண்டாச்சு; நாலு மணிக்கா போயிடலாம்.”

"அப்பா! என்ன குளிர்?" என்று கதவை அடைத்து விட்டு, மீண்டும் வந்து நாற்காலியில் உட்கார்ந்தாள் கீதா...

"எனக்கு உன்னை அடையாளம் தெரியல்லே ராஜா.”

“எனக்கும் தான்"

"நான் பயந்தே போனேன்... நிஜமா, நீ யாரோ திருடன்னு நெனச்சு... இன்னிக்கு என் உயிர் என்னுடையதில்லைன்னு முடிவு பண்ணிட்டேன்...” என்று குழந்தை போல் சிரித்தாள் கீதா.

சற்று நேரம் இருவரிடையேயும் அர்த்தமற்ற மௌனம். சிறிது நேரம் கழித்து அவள் தனக்குள் சிரித்துக்கொண்டே தலையை ஒருபுறமாகச் சாய்த்து,

"அத்தை மகன் அர்த்த ராத்திரியில் திடீர் விஜயம் செய்கிறார். விசித்திரம் தான்" என்று கேலி பேசினாள்.

அவள் அவன் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள்.

அவன் நெற்றியில் சுருண்ட கேசம் புரண்டு கொண்டிருந்தது. அழகிய விழிகளில் குழந்தையின் குறும்பு துள்ளாடியது.

"என்னைக் கேலி செய்யாதே கீதா; நான் வாழ்க்கையில் மிகவும் புண்பட்டவன்." அவன் வார்த்தைகள் வெம்பி இருந்தன. அவன் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டான்.

"ராஜா நான் ஏதாவது தப்பாகச் சொல்லி விட்டேனா? என்னை மன்னித்துவிடு!”

அவன் எதையோ நினைத்துக் கொண்டு சிரித்த வண்ணம் அவள் பக்கம் திரும்பினான்.

"உன்னைப் பார்த்து எட்டு வருஷங்களுக்கு மேலிருக்கும் இல்லையா?"

அவள் பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தாள்.

"கோபமா, கீதா?”

அவள் சிரித்துக்கொண்டே திரும்பினாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

“ஒன்றுமில்லை. எட்டு வருஷத்துக்கு முன் நாம் இப்படித்தான் பழகினோம்.”

“அப்பொழுது நாம் சிறுபிள்ளைகள்!” என்று ஏதோ நினைவில் கூறினான் ராஜா.

"நீ வீட்டை விட்டுக் கிளம்பி இத்தனை நாளாய் எங்கெங்கே போயிருந்தே?”

"எங்கெங்கேயோ சுத்தினேன்.”

“ஏன்?”

“சும்மாத்தான்.”

“உனக்கென்ன பைத்தியமா?”

"உம்... பைத்தியமும் கொஞ்சம் உண்டு" என்று அவன் சிரித்தான்.

"சரி, எல்லாம் அப்புறம் பேசலாம். இப்போ நீ படுத்துக் கொஞ்ச நேரம் தூங்கு, நான் பரீட்சைக்குப் படிக்கணும். நாலு மணிக்கு எழுப்பிவிடறேன். நீ ஏதாவது சாப்பிட்டியோ!”

"உம்... சாப்பிட்டேன்.”

“எங்கே?”

“எங்கேயோ சாப்பிட்டேன், அதற்கென்ன?”

“உன் துணி எல்லாம் ஈரமாயிருக்கே?”

“பரவாயில்லே...”

“குளிர் தாங்க முடியலே... பரவாயில்லேங்கிறியே...”

“வேறே என்ன பண்றது?”

"அதுதான் எனக்கும் புரியலை. இங்கே என் தாவணி தான் இருக்கு" என்று சிரித்தாள் கீதா.

"எட்டு வருஷத்துக்கு முன்னே விளையாடினது மாதிரி விளையாடினா நான் திருடனா மாறிடுவேன்...” என்று பயமுறுத்தினான் ராஜா.

“உம், மாறுவே! 'அப்பா'ன்னு கத்திடமாட்டேனா?”

“கத்தினா திருடன் விட்டுடுவானா, என்ன?”

"திருடனுக்கெல்லாம் ஒண்ணும் நான் பயப்பட மாட்டேன்."

"யாரு? நீதானே...? ஓ, கொஞ்ச நாழிக்கு முன்னே பார்த்தேனே...”

"சரி சரி, கொஞ்சம் சும்மாயிரு, நான் படிக்கணும்.”

“படி.”

"இந்தப் போர்வையை உடுத்திக்கொண்டு உன் சட்டை வேட்டியெல்லாம் கழட்டி அந்தக் கொடியில் உலரப்போடு!” என்று அவனிடம் ஒரு போர்வையை எடுத்துக் கொடுத்தாள் கீதா. அங்கிருந்த கட்டிலில் கிடந்த தனது படுக்கையை எடுத்துவிட்டு அவனுக்குக் கட்டிலின் மேல் படுக்கை தயார் செய்தாள்.

அவன் தனது உடைகளைக் கொடியில் உலர்த்தி விட்டுப் போர்வையை இடுப்பில் சுற்றிக்கொண்டு தன்னைத் தானே ஒருமுறை பார்த்துச் சிரித்துக் கொண்டான்.

"ரொம்ப நல்லா இருக்கு பர்மாக்காரன் மாதிரி" என்று சிரித்தாள் கீதா.

“சரி சூடா ஒரு கப் டீ குடிக்கலாமா?”

“டீயா?”

“ஆமாம்; நான் கண் விழித்துப் படிக்கிறதுக்காகத் தயார் செய்தது" என்று மேஜை மீதிருந்த பிளாஸ்க்கை எடுத்து இரண்டு தம்ளர்களில் டீயை நிரப்பி ஒன்றை அவனிடம் நீட்டினாள் அவள்.

“ஏது, ரொம்ப முன்னேற்பாட்டோடுதான் இருந்திருக்காப் போலிருக்கு...”

"உஸ்... சப்தம் போடாதே! அப்பா கீழே இருமும் சப்தம் கேட்கிறது" என்று எச்சரித்தாள் கீதா.

"இந்த நிலையில் யாரும் நம்மைப் பார்த்தால்...?” என்று தணிந்த குரலில் கேட்டாள் அவள். அதை அவனால் கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை.

"என்ன கெட்டுப்போச்சு? நடந்ததைச் சொல்லி விட்டுப் போகிறது?”

"சரி, டீ ஆறிப்போகிறது.”

“நீ இப்பொழுது எந்த கிளாஸில் படிக்கிறாய்!”

"ஸிக்ஸ்த் பாரம். எஸ். எஸ். எல். ஸி!" என்று சொல்லி விட்டு டீயைக் குடிக்க ஆரம்பித்தாள் கீதா!

அவன் குடித்துவிட்டுக் கொடுத்த தம்ளரை வாங்கிக் கழுவி மூடி வைத்துவிட்டுப் படிக்க முனைந்தாள்.

அவன் படுக்கையில் படுத்துப் புரண்டான்.

"அம்மா! என்ன கஷ்டம்... என்ன கஷ்டம்!" என்று தனக்குள் முனகினான் ராஜா.

"அப்படித்தான்! தாய் பேச்சைக் கேட்காமல் சுத்தினா அப்படித்தான் கஷ்டம் வரும்" என்றாள் கீதா.

"உன்னைப் புத்தி சொல்ல யாரும் அழைக்கலே. நீ படி!” என்று மறுபுறம் புரண்டு படுத்துக் கண்களை மூடினான் ராஜா.

அவனுடைய அகண்டு விரிந்த மார்பையும், உருண்டு திரண்ட புஜங்களையும் பார்த்துக் கொண்டே இருந்தாள் கீதா.

சிறிது நேரத்தில் அவன் தூங்கிப்போய் விட்டான். அவள் ஏதோ பழைய, பிள்ளைப்பிராய் நினைவுகளில் ஆழ்ந்தாள். பிறகு படிக்க முனைந்தாள்...

சுவரிலிருந்த கடிகாரம் நான்கு முறை ஒலித்தது.

"ராஜா... ராஜா... மணியாகி விட்டது...” என்று எழுப்பினாள். அவன் திடுக்கிட்டு எழுந்தான். கொடியில் கிடந்த தனது உடைகளை உடுத்திக் கொண்டான்.

தெருவில் மாடுகளின் கழுத்து மணிகள் ஒலிக்கும் சப்தம் கேட்டது. எங்கோ சேவல் கூவியது, காகங்கள் கரைந்தன. கோயிலருகே இரண்டு பண்டாரங்கள் உரத்த குரலில் பேசிக் கொண்ட சப்தம் தெளிவாய்க் கேட்டது.

அவள் மாடிக் கதவைத் திறந்து ஒரு முறை வெளியே சுற்று முற்றும் பார்த்தாள்.

அவன் புறப்படத் தயாரானான்.

"ராஜா!”

“என்ன கீதா?”

"நீ அவசியம் வந்துடணும். எங்கேயும் போயிட மாட்டியே?”

“இல்லை கீதா, வந்துடுவேன்.”

“ராஜா...” அவள் கண்கள் ஏனோ கலங்கின.

ஏனோ அழவேண்டும் போல் தோன்றிற்று அவளுக்கு. அவனுக்கு அவள் அழுவதன் அர்த்தம் புரியவில்லை.

"இதென்ன பைத்தியக்காரத்தனம்! ஏன் அழறே?”

"நான் ஒண்ணும் அழலே...” என்று முகத்தைச் சுளித்தாள் அவள் கண்கள் கலங்கித்தான் இருந்தன.

"சரி நான் வர்ரேன்...” அவன் மிகவும் ஜாக்கிரதையாகப் படிகளில் இறங்கினான். இருள் இன்னும் விலகவில்லை. காம்பவுண்ட் சுவரின் மீதேறி வெளியே குதித்தான். மாடிக்கதவருகே நின்று கீதா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் சந்நிதித் தெருவில் நடந்து சென்றான். அந்தத் தெருவின் மறுகோடியில், அந்த வைகறை இருளில் அவன் மறைந்தே போனான்.

கீதாவின் பார்வையிலிருந்து அவன் மறைந்ததும் அவள் கதவை மூடிக்கொண்டு உள்ளே போய்த் தன் படுக்கையில் சாய்ந்தாள்.

அவள் மனம் காரணமற்றுத் துடித்துக் கொண்டிருந்தது. அர்த்தமற்ற ஒரு ஊமைக்கனம் நெஞ்சில் அழுத்தியது.

காரணமின்றி, கண்களில் தாரை தாரையாய்க் கண்ணீர் வழிந்தது. அவளுக்கே தான் அழுவது அசட்டுத் தனமாகத் தோன்றியது.

ஏதேதோ எண்ணமிட்டவாறு அப்படியே அவள் உறங்கிப் போனாள்.

*****

# 13

பொழுது விடிந்துவிட்டது! குடிவெறியில் தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்த சிதம்பரம்பிள்ளையின் முகத்தில் ஜன்னல் வழியாகச் சூரியவொளி வீசிக் கொண்டிருந்தது. மழை நின்று விட்டது. மழையில் நனைந்த மரங்களிலிருந்து நீர்த்துளிகள் சொட்டிக் கொண்டிருந்தன. சூரியவொளியில் நீர் முத்துக்கள் பிரகாசித்தன. மரங்கள் ஒரே பசுமையாய் பார்ப்பதற்குக் குளிர்ச்சியாய்க் காட்சியளித்தன.

அறைக்குள் சிதம்பரம்பிள்ளை அலங்கோலமாய் விழுந்து கிடந்தார். அவர் மேலெல்லாம் இறைச்சியும் சோறும் சிதறிக் கிடந்தன. சோற்றுத்தட்டு, கட்டிலில் ஒரு புறம் உருண்டு கிடந்தது. சாரங்கன் அறை வாசற்படியில் நின்று இந்த அலங்கோலத்தைப் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

தங்கம் ஆற்றில் குளித்துவிட்டு வந்து சத்திரத்து முற்றத்தில் ஈரத்துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தாள்.

சிதம்பரம்பிள்ளை கண் விழித்தார்.

அவர் கண்கள் சிவந்து முகமே வெளிறிக் கிடந்தது. ஒரு வினாடி அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

படுத்துக்கொண்டே ஒருமுறை கண்களை சுழற்றிப் பார்த்தார்.

சுவர் ஆணியில் அவருடைய அங்கவஸ்திரம் தொங்கிக் கொண்டிருந்தது. இன்னொரு பக்கத்தில் வீசியெறிந்த சாராயக் குப்பி உடைந்து கிடந்தது.

அவர் பரபரப்புடன் திடுக்கிட்டு எழுந்தார். வாசற்படியில் நின்றிருந்த சாரங்கன் சிரித்தான்.

"என்ன பிள்ளைவாள், நல்ல தூக்கமோ? போதை தெளிஞ்சு போச்சா?" என்று கேட்டுக்கொண்டே சிரித்தான்.

பிள்ளை சாரங்கனை வெறித்துப் பார்த்தார்.

"எங்கே அந்தச் சிறுக்கி?" என்று கோபத்துடன் கத்தினார்.

அவர் குரலைக் கேட்ட தங்கம் தன் அறைக்குள் போய் ஒளிந்து கொண்டாள்.

"எங்கே அவள்?" என்று கத்தினார் பிள்ளை.

"என்ன பிள்ளைவாள், நான் கேட்க வேண்டியதை நீங்க கேட்கிறீர்களே? உங்களிடம் ஒப்படைத்த அந்தத் தங்கம் எங்கே?" என்று கேட்டுவிட்டு அலட்சியமாகப் பீடிப் புகையை ஊதினான் சாரங்கன்.

"சாரங்கா, என்னிடம் விளையாடதே! என் பணத்தைத் திருப்பிக் கொடு; இல்லாவிட்டால் அவளை என்னிடம் கொண்டு வந்து விடு!" என்று கோபத்தோடு கட்டளையிட்டார் சிதம்பரம்.

"இரண்டும் நடக்காது. சாரங்கனிடம் வந்த பணம் திரும்பாது! கூண்டிலிருந்து தப்பிய கிளி சிக்காது!"

"எல்லாம் உன் நாடகம் தானா?"

"இல்லாமற் போனதற்காக வருந்துகிறேன்."

"நீ என்ன சொல்கிறாய்?"

"அதைப்பற்றி இனிமேல் பேசக்கூடாது என்று சொல்கிறேன்."

"எதைப்பற்றி?"

"தங்கத்தைப்பற்றி... பணத்தைப்பற்றி..." அவன் குரல் கடுமையாக ஒலித்தது.

"பேசினால்?"

"பணம் இல்லை..."

“இது என்ன அநியாயம்?”

“நியாய அநியாயங்களைக் கடந்த இடத்தில் நீங்கள் நிற்கிறீர்கள்."

"என்னிடம் கதையளக்காதே சாரங்கா. நீ பேசுவது யாரிடம் தெரியுமா? ஜாக்கிரதை!" என்று பொறுமையிழந்து கூறினார் பிள்ளை. சாரங்கன் உடனே தோளில் கிடந்த துண்டை இடையில் சுற்றிக்கொண்டு கைகளைக் கட்டியவண்ணம் பணிவாக நின்றான்!

"சேர்மன் அவர்களே, மன்னிக்க வேண்டும். ஊர் பேர் தெரியாத பெண் ஒருத்தி, தன் ஆசைக்கிணங்க வேண்டும் என்று ஒரு முட்டாள் நினைப்பது உங்கள் தர்மப்படி என்ன நியாயமோ?”

"கேலி செய்கிறாயா; மரியாதையாக பணம் வரட்டும்.”

"சாரங்கனிடமிருந்து பணம் வராது, சாரங்கனின் கைகள் பணம் கொடுக்க நீளுவதில்லை."

"சாரங்கா என்ன நினைச்சிக்கிட்டு இருக்கே. இன்னைக்கே உன்னை லாக் - அப்பிலே தள்ளுவேன். ஜாக்கிரதை... எல்லோரையும் போல் என்னையும் நெனைக்காதே!”

"ஏய்... சிதம்பரம்...” சாரங்கன் குரல் கரகரத்தது. சிதம்பரம் பிள்ளைக்கு தூக்கி வாரிப் போட்டது. அவரை யாருமே அப்படிக் கூப்பிட்டதில்லை. கண்கள் சிவக்க அவர் தலைநிமிர்ந்து அவனைப் பார்த்தார். அவன் அவர் அருகே ஒவ்வொரு அடியாக நகர்ந்து கொண்டே பேசினான்.

"ஜாக்கிரதை! நான் நினைத்தால் இன்னைக்குச் சாயங்காலம் உன் பிணம் மயானக் கரையில் வேகும். என்னைத் தூக்கிப் போட்டால் என் பிள்ளைகள் அழுவாது. பெண்டாட்டி தாலி அறுக்க மாட்டாள். பணம் என்று இன்னொரு முறை பேசினால்... உம்...” அவன் பேசிக்கொண்டே அவரை நெருங்க நெருங்க அவர் பின்னுக்கு நகர்ந்தார். சுவரோரமாய் போய் ஒண்டி

நின்றார். சட்டையைப் பிடித்து அலக்காகத் தூக்கி நிறுத்தினான் அவன். அவர் கைகள் உதறின; வாய் பேச முடியாது திணறினார்.

"எனக்குப் பணமும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம், இனிமே உன் உறவே வேண்டாம்" என்று தனக்குள் புலம்பிக் கொண்டார்.

"சரி, அப்படியானால் நீங்கள் போகலாம். என்னைப் பயமுறுத்தி எதையும் சாதித்து விடலாம்னு நெனைக்காதீங்க. உங்களையெல்லாம் பயமுறுத்தவே நான் பிறந்து இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் சாரங்கன்.

"இந்தக் காலிப்பயக் கூட்டத்தோடு சகவாசம் வெச்சிகிட்டதுக்கு என்னைச் செருப்பால் அடிக்கணும்" என்று முனகிக்கொண்டே கோபமாக வெளியேறிப் போய் விட்டார், சிதம்பரம் பிள்ளை.

"நான் காலிப்பயல்; இவுரு மகா யோக்யர். வெறும் பய!" என்று முனகினான் சாரங்கன்.

"என்ன சாரங்கா, கறவை மாட்டைத் தொரத்திட்டியே…" என்றான் ரெஸாக்.

"இவன் போனா எத்தினயோ பேரு" என்று அலட்சியமாகக் கூறிக் கொண்டே பீடியைப் பற்ற வைத்தான் சாரங்கன். தங்கத்திற்கு அங்கு இருக்கவே பிடிக்கவில்லை. ஒவ்வொரு நிமிஷமும் அவள் மனம் அங்கிருந்து போய் விடத் துடித்தது. ஆனால் எங்கு போவது? அந்தச் சூழ்நிலையே அவளுக்குப் பிடிக்கவில்லை.

"நீ ஒண்ணும் பயப்படாதே அம்மா, நான் பார்த்துக்கறேன். அவன் என்ன பண்ணிடுவான்…?" என்று தங்கத்திற்குத் தைரியம் கூறினான் சாரங்கன்.

அதற்குள் யாரோ சில 'பெரிய மனிதர்கள்' சத்திரத்துக்குள் நுழைந்தார்கள். "வாங்கோ… வாங்கோ…" என்று அவர்களை

வரவேற்றான் ரெஸாக். தங்கம் அவர்கள் கண்ணில் படாமல் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

அவர்களை அழைத்துக் கொண்டு எல்லோரும் மாடிக்குப் போனார்கள். மாடியில் 'ரெங்காட்டம்' ஆரம்பமாகி விட்டது.

'இன்னிக்கு வேட்டைதான்' என்று ரஸியா காமாட்சியின் காதருகில் முணுமுணுத்தது தங்கத்தின் காதுகளில் விழுந்தது.

"சீச்சீ. நல்ல பெண்கள்! நல்ல மனிதர்கள்" என்று தனிமையில் முனகினாள் தங்கம்.

*****

# 14

சித்தநல்லூருக்கு நடுநாயகமாக விளங்குவது சிவன் கோவில். கோவிலுக்கு நான்கு புறத்திலும் வாசல்கள் இல்லாவிட்டாலும் வீதிகள் உண்டு. வீதிகள் அகலமானவை; வீதிகளில் உள்ள வீடுகள் உயரமானவை; அவற்றில் வாழும் மனிதர்கள் 'தரம்' உடையவர்கள்! - அந்த நான்கு வீதிகளிலும் உள்ள விரல்விட்டு எண்ணி விடக் கூடிய சிலர் மனம் வைத்தால் சித்தாநல்லூர் முழுவதையும் ஒரு கலக்கு கலக்கி விடலாம். அதை முழுமையாக அவர்கள் கலக்காமல் இருப்பதற்குக் காரணம் உண்டு; அவர்கள் அனைவரும் எந்த யுகத்திலும் ஒன்று சேர்வதில்லை. அவர்களுக்குள் அடிதடி, வெட்டுக் குத்து முதலியவைகள் ஏற்படுவதுண்டு. ஆனால் அது எப்பொழுதாவது தான். என்றாலும் 'கோடு' ஏறுவது இருக்கிறதே, அது இல்லாமல் அவர்களால் இருக்கவே முடியாது. பொழுது விடிந்து பொழுது போனால் ஒவ்வொருவருக்கும் வக்கீல் வீட்டுக்குப் போவதும், சட்ட ஷரத்துக்களை விவாதிப்பதும், சாட்சிக்கு ஆள் பிடிப்பதும்தான் நித்திய கருமம். எப்பொழுதாவது பிரத்தியேகமாக அவர்கள் செய்யும் கருமம், சாரங்கன் என்று பெயர் பெற்ற உள்ளூர் ரெளடிக்குத் தட்சிணை கொடுத்து, மந்திரம் சொல்லி அவன் 'லீலா வினோத’த்தை விலகி நின்று வேடிக்கை பார்த்து மகிழ்வது; அஞ்சுவது; வாய் சவடால் அடிப்பது; ஒன்றுக்குப் பத்தாக இட்டு - கட்டிப் பேசிச் சாரங்கனை சகல வல்லமை படைத்த 'மதுரை வீர’னாக்குவது.

இப்படியே தொன்றுதொட்டு வாழையடி வாழையாக உழன்று கொண்டு வருகின்றனர் அந்தத் தரமுடைய மனிதர்கள்.

இவர்களின் இப்படிப்பட்ட நித்ய கர்மாவில் சற்றும் பங்கு கொள்ளாமல் விலகி நின்று, சகலரின் அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமாகி அங்கு வாழ்ந்து வருபவர் ஒருவர் உண்டு. அவர்தான் ரிடையர்ட் தாசில்தாரான ஸ்ரீமான் வேதாசலம் பிள்ளை அவர்கள். வேதாசலம்

பிள்ளை 'பரப்பிரம்மம்' அல்ல. அவருக்கும் வாய்க்கால் வரப்புச் சச்சரவிலிருந்து, அடுத்த வீட்டுச் சாக்கடை தன் வீட்டு வழியே போகும் பிரச்னைவரை எல்லாம் எதிர்ப்படுவனவே என்றாலும், அவர் அதற்காகக் 'கோடு' ஏறுவதுமில்லை; சாரங்கனின் உதவியை நாடுவதுமில்லை. அதற்குக் காரணம் 'கோடு' ஏறுவது தகுதிக்கு உகந்தது அல்ல என்பதும் சாரங்கனின் உதவியை நாடுவது கீழ்த்தரமான செயல் என்பதும் மட்டுமல்லாமல் பணம் வேறு செலவாகும் என்பதே முக்கிய காரணம். சாரங்கனின் கைத்தடியை விடப் பலமான ஆயுதங்கள் அவர் வசம் உண்டு. அதுதான் சங்கரன் அருளிய தத்துவங்களும் வள்ளுவன் தந்த தமிழ்மறையும் இன்னும் அவர் கரைத்துக் குடித்த எத்தனையெத்தனையோ சாஸ்திரங்களும் இருக்கவே இருக்கின்றன எதிரியை மடக்க அல்லது மயக்க.

எப்படிப்பட்டவரிடத்தும் நயமாகப் பேசி காரியம் சாதிப்பதில் அவர் கைதேர்ந்தவர். 'சுயகாரியம்' யாருக்குத் தான் 'சுயநல'த்தை ஏற்படுத்தாது? யாருக்கும் தீங்கு எண்ணாது, எல்லாரும் இன்புற்றிருப்பதுவே யல்லாமல் வேறொன்றுமறியாதவர் என்ற புகழுடன் தான் மட்டும் இன்புற்றிருக்க வழி தேடிக்கொண்ட 'பராபரம்' அவர்.

அதற்கு அவர் என்ன செய்யமுடியும்? 'அவன் கொடுக்கிறான்' என்று வானத்தைக் காட்டுவார். அவர் படித்த தத்துவம் வயலில் இறங்கி வேலை செய்பவனைக் காட்டச் சொல்லவில்லை. அந்த ஊரிலும் 'அடையாறு வாசனை' கொஞ்சம் அடித்துக் கொண்டுதானிருக்கிறது என்றால் அதற்குக் காரணபூதர் ஸ்ரீமான் வேதாசலம்தான். ஹிந்து சனாதனத்தின் - அல்ல, அல்ல - ஹிந்து தர்மத்தின் வேர்கள் உலகெங்கும் ஓடிப் பரவியிருக்கின்ற ஒரே பெருமை பிரும்மஞானிகளுக்குத் தான் உண்டு என்றால் அதில் தனக்கும் கொஞ்சம் பங்கு உண்டு என்பவர் அவர்.

தாசில்தார் உத்தியோகத்திலிருந்து 'ரிடையர்' ஆனதிலிருந்தே அவருக்கு ஞான போதம் தழைக்க ஆரம்பித்தது. தத்துவ சாஸ்திரங்களைக் கரைப்பதும்

குடிப்பதும் அதைப் பற்றித் தர்க்கிப்பதும், அடித்துப் பேசுவதும் பிரசங்கம் புரிவதும் ஆதாரங்களை மேற்கோள் காட்டுவதும் அவருக்கு பொழுது போக்கல்ல; கலை, கடமை! - இது அவருடைய நிர்ணயிப்பே. உலகம் உய்ய அவர் சொல்கிறார்! ஞானம் பெறாதவர்கள், அனுபவமற்றவர்கள் பக்குவமடையாதவர்கள் இதற்காக அவரைக் கேலி செய்கிறார்களாம். அதற்காக அவர் கடமையிலிருந்து வழுவி விடலாமா...?

அவருடைய பங்களாவின் மாடியறையில் ஒரு பெரிய புத்தகசாலையே இருந்தது. அதுதான் அவருடைய நித்திய 'போதி' மரம் நித்திய ஞானத்தை நாள்தோறும் அளித்துக் கொண்டிருந்தது அது! - அதாவது மறந்து போன ஸ்லோகங்களை அடிக்கடி அங்குதான் அவரால் மனனம் செய்து கொள்ள முடியும்.

புத்தரும், இயேசுவும், நபியும், சங்கரரும், விவேகானந்தரும், பரமஹம்ஸரும், காந்தியும், வள்ளுவனும் சகலரும் அங்கு சிறையிலிருந்தனர். அவர் ஏறத்தாழ ஒரு அபேதவாதிக்குச் சமமானவர். எப்படியென்றாலோ எல்லோருமே தங்கள் வாக்கின் மூலம் ஹிந்து தர்மத்தை நிலை நாட்டுவதற்குத்தான் பாடுபட்டார்கள் என்று வாதிப்பார்; வெற்றி பெறுவார். அந்த வெற்றியில் ஒரு மேதையின் கம்பீரத் தோற்றத்துடன் சிரித்துக் கொள்வார். எந்தத் தத்துவமும் அவருக்கு முரண்பட்டதல்ல. இதற்காக அவர் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். நாள் பூராவும் கையில் ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் அதைப் படிக்கவும் படிப்பார். படிப்பதோடு மட்டுமல்லாமல் தான் மிகவும் அனுபவித்த வாசகங்களுக்கடியில் கோடு கிழித்து வைப்பார். எல்லாவற்றிற்கும் மேலாக புத்தகத்தை மார்பின் மீது போட்டுக் கொண்டே ஈசிச்சேரில் சாய்ந்து தூங்கவும் தூங்கிவிடுவார். அதற்கும் ஒரு காரணம் இருக்கலாம். அவருடைய அந்த மேலான தத்துவங்களை இதயபூர்வமாகக் கிரஹிப்பதற்கான வழியாக இருக்கலாம் அது.

அன்று மத்தியானம் நல்ல வெயில் நேரம். இரண்டு மணியிருக்கும், பிள்ளையவர்களின் செல்வப் புதல்வி கீதா பள்ளிக்குச் சென்றிருந்தாள். அவர் மனைவி அபிராமி அம்மாள் தோட்டத்துத் தாழ்வார் வாசற்படியில் முன்றானையை விரித்துப் படுத்திருந்தாள். உண்ட மயக்கம். பங்களாவின் முன்புறத்தில் அழகிய பசுங்கன்று காரணமின்றித் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. தோட்டத்தில் வேலைக்காரி துணி துவைத்துக் கொண்டிருந்தாள். தோட்டத்து வாசற்படிக்கு முன்புறத்தில் இருந்த தென்னை மரத்தின் மீதிருந்த ஒரு காகம் ஓயாமல் கரைந்து கொண்டிருந்தது.

"சீ, இது என்ன சனியன்? காலையிலிருந்து ஒரே சத்தம். எந்த விருந்தாளியைக் கொண்டுவந்து சேர்த்து என் கழுத்தை அறுக்கவோ?" என்று சலித்துக் கொண்டு எழுந்த அபிராமி காகத்தை விரட்டிவிட்டுத் திரும்பினாள்.

துவைத்து உலர்த்தி உடுத்திய தூய உடையுடன் தெரு வாசலில் ராஜா நின்றிருந்தான்.

"யாரது...?” என்றாள் அபிராமி.

“தெரியலையா மாமி...” என்று சிரித்துக் கொண்டே உள்ளே வந்தான் ராஜா.

"தூங்கியெழுந்தேன். கண்ணெல்லாம் ஒரே எரிச்சல்" என்று கண்களைத் துடைத்தவண்ணம் கூந்தலை இழுத்து முடிந்து கொண்டே,

"யாரு... லட்சுமி மகனா? ராஜா...? அடையாளம் தெரியுதே... வாடாப்பா. இப்போதான் சொல்லிக்கிட்டிருந்தேன். காத்தாலேருந்து என்னடாப்பா இந்தக் காக்கா ஓயாம கத்திக்கிட்டிருக்கேன்னு சொல்லி வாய் மூடல்லே... அது சரி, இது என்ன வேலை? அவள்கிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு வரப்படாது? பெத்த வயிறு எரியுமேடா... இவ்வளவு பெரிய பிள்ளைக்கு இது தெரியாதோ... சரி உட்காரு... என்னங்க உங்களைத்தானே, உங்கள் மருமகன்

வந்திருக்கான். நல்லாத் தூங்கினீங்க இந்த நேரத்திலே...” என்று வாய் ஓயாமல் பேசிக் கணவனாரின் உறக்கத்தைக் கலைக்க ஒரு குரல் கொடுத்து விட்டு அடுக்களைக்குள் நுழைந்தாள் அபிராமி.

"மருமகனா? அவன் எங்கே வந்தான் இதுக்குள்ளே... அதெல்லாம் இன்னும் கொஞ்ச நாள் போகணுண்டி...” என்று ஹாஸ்யம் பண்ணிக்கொண்டே ஈசிச்சேரில் எழுந்து உட்கார்ந்து ராஜாவைப் பார்த்தார் பிள்ளை.

"ஓ, நீயா? வாடா... வா உன் அம்மாகிட்டே சொல்லிக்காம ஊரைவிட்டுக் கிளம்பிட்டியாமே...? உன் அம்மா ரொம்பப் பயந்து போயிக் கடுதாசு எழுதியிருந்திச்சு? - இப்படிச் செய்யலாமா? தாய் சொல்லுக்காக மனைவியெக் கூடப் பகிர்ந்து கொண்டார்கள் பாண்டவர்கள்...” என்று தனது வேலையை ஆரம்பித்துவிட்டார் பிள்ளை.

“ஊரிலே ஒண்ணும் வேலையில்லை. அதனாலே ஏதாவது வேலை பார்க்கலாம்னு பொறப்பட்டேன்...”

"இதென்னடா பைத்தியக்காரத்தனம்? அப்படிப் போறவன் அம்மாவிடம் சொல்லிவிட்டு நேரே இங்கே வர வேண்டியதுதானே? கண்டபடியெல்லாம் சுத்தறதாவது? - சரி அதெல்லாம் போகட்டும். இப்போவாவது ஒழுங்கா வந்து சேர்ந்தியே. உட்காரு... அடியே அவனுக்கு ஏதாவது சாப்பிடக் கொண்டு வா" என்று அடுக்களையை நோக்கிக் கத்தினார்.

"எனக்குத் தெரியாதா?” என்று சிரித்துக்கொண்டே முறுக்கும் சீடையும் ஒரு தட்டில் வைத்துக்கொண்டு வந்தாள் அபிராமி அம்மாள். அவளுக்கு ராஜா வந்ததால் அதிருப்தி ஒன்றுமில்லையென்றாலும் அவளது சந்தோஷததிற்குக் காரணம் தன் 'காக்கை சோதிடம்' பலித்து விட்டது என்பதுதான்; "உங்களுக்கு ஞாபகம் இருக்கோ? கார்த்தாலேருந்து யாரோ விருந்தாளி தான் வரப்போறாங்கன்னு சொன்னேனே..." என்று நீட்டி முழக்கினாள் அபிராமி. வேலைக்காரியிடம், பால்காரனிடம், அடுத்த வீட்டுக்காரியிடம் எல்லாம் இந்தக் காக்கை

சோதிடம் பலித்த சமாச்சாரம் குறைந்தது ஒரு பத்து முறையாவது இனிமேல் ஒலிபரப்பப்படும்!

"சரி சரி நீயுமாச்சு, உன் காக்கையுமாச்சு, இவன் நம்ம பையன்... விருந்தாளியா என்ன?" என்று அவள் சோசியத்தைப் பொய்யாக்கினார் பிள்ளை.

"நம்ம பையனோ, பிறத்திப் பையனோ, நாம எதிர்பார்க்காம திடீர்னு வந்தா விருந்தாளிதான்" என்று 'விருந்தாளி' என்ற பதத்தை அகராதியின் ஆதாரமில்லாமலே விளக்க ஆரம்பித்தாள் தத்துவார்த்தியின் மனைவியான அபிராமி.

“சரி சரி, போய்க் காபி கொண்டுவா.”

அபிராமி உள்ளே சென்றதும் ராஜாவிடம் பேச ஆரம்பித்தார் பிள்ளை.

"நீ இவ்வளவு நாட்கள் எப்படியெப்படியெல்லாம் வாழ்ந்திருப்பாய் என்று என்னால் ஊகிக்க முடியும். உன் வயதில் நான் உலகம் தெரியாத சிறுவன். நீ பாக்கியசாலி அனுபவம் பெறுவது பெரும் பாக்கியம்!” அவர் பேச்சு அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. அவர் மேலும் தொடர்ந்தார்:

"அனுபவம், அதாவது ஞானம் எனப்படுவது, புரகிருதியினாலாகிய கர்மங்களின் ‘சமர்ப்பணமும், தியாகமுமாகிய கிரியைகள் எல்லாவற்றிலும் மிக மிக மேன்மையானதும் உயர்வானதுமான சமர்ப்பணமாகும்' என்று ஞானிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆத்மரீதியான வாழ்க்கையென்பதே அனுபவத்தினால் தானே வருவது? நான் சொல்வது உனக்குப் புரிகிறதா?”

- ராஜா விழித்தான். புரிகிறது என்றும் சொல்லாமல், புரியவில்லை என்றும் சொல்லாமல் அவன் விழித்துக் கொண்டேயிருந்தான்.

"பொதுவாக ஒரு மனிதனின் வெளி நடவடிக்கைகளைக் கொண்டுதான் அவனை நாம் நிர்ணயிக்கிறோம்...

இல்லையா?”

- அவன் பேசாமல் உட்கார்ந்திருந்தான். இல்லையென்றும் சொல்லாமல், ஆம் என்றும் சொல்லாமல் அவன் பேசாமல் உட்கார்ந்து கொண்டேயிருந்தான்.

"ஒருவன் மனத்தில் எவ்விதமான போராட்டங்கள் நடைபெறுகின்றன என்பதை நாம் கவனிப்பதே இல்லை. உண்மைதானே?”

- அவன் அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். உண்மையென்றும் சொல்லாமல் பொய் என்றும் சொல்லாமல் அவனும் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அப்படி ஒருவனின் மனத்தைக் கவனிக்க நம்மால் முடிவதில்லை. அதற்குரிய சக்தியையும் நாம் பெறவில்லை. ஆனால் ஆத்ம ரீதியான வாழ்க்கை என்பது இதுதானா!”

- அவன் ஒன்றும் விளங்காமல் தலையை ஆட்டினான். 'இதுதான்' என்றும் சொல்லாமல், 'இதுவல்ல' என்றும் சொல்லாமல் தலையை ஆட்டிக் கொண்டேயிருந்தான்.

"நான் ஆத்ம ரீதியான வாழ்க்கை வாழ முயல்கின்றவன். அதனால் ஒருவனின் புற நடவடிக்கைகளையும், மனப் போராட்டங்களையும் இயல்பான தன்மைகளையும் சேர்த்துப் பரிசீலித்தே ஒருவனை, ஒரு பொருளை - எதையும் கிரகிக்க வேண்டும். நான் அப்படித்தான் ராஜா உன்னைப் பார்க்கிறேன். என்னுடைய ஊனக் கண்களால் அல்ல; நம் இதயங்களில் எல்லாம் வீற்றிருந்து, நம்மையெல்லாம் ஆட்டுவிக்கும் பகவானை அறியும் ஞானக் கண் கொண்டு பார்க்க முயல்கிறேன்!”

இதற்கெல்லாம், இந்தத் தத்துவ உபன்யாசத்துக்கெல்லாம் என்ன அவசியம் நேர்ந்தது என்று அவனுக்குப் புரியவில்லை.

ஆனால் அவர் தனது தத்துவக் கிறக்கத்தில், ஞான போதத்தில் தன்னை மறந்து விளாசிக் கொண்டே இருந்தார்.

அவர் பேசுவது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது, ஆச்சரியமாய் இருந்தது.

"ராஜா, இந்த இளம் வயதிலேயே நீ மிகவும் சிரமப்பட்டு விட்டாய்; உன் மனம் மிகவும் புண்பட்டிருக்கலாம். எனக்குத் தெரியும்...” என்று சொல்லிவிட்டுச் சற்று நேரம் மௌனமாயிருந்தார்.

"மாமா எதையோ பிரம்மப் பிரயத்தனம் செய்து கண்டுபிடித்து விட்டார்!” என்று மனசில் முனகிக் கொண்டான் ராஜா.

"இவ்வளவு கஷ்டத்திற்கும் உன் அம்மாதான் காரணம். நான் படிச்சுப் படிச்சு சொன்னேன்: 'ஒரு குறையுமில்லாமல், நீயும் உன் மகனும் இங்கேயே இருந்துடலாம்'னு... கேட்டாத்தானே...? உடன் பிறந்த சகோதரன்கிட்டே என்ன கௌரவம் வேண்டிக் கிடக்கிறது? - உனக்கு அந்தக் குணம் இருக்கலாமோ என்னவோ? ஆனால் இருக்கக் கூடாது என்று சொல்வேன்... துன்பங்கள் எங்கிருந்தும் நம்மை நோக்கி வருவதில்லை; நாம்தான் துன்பங்களைச் சிருஷ்டித்துக் கொள்கிறோம். ‘புறன்' என்றும் 'தான்' என்றும் எண்ணுவதால்தான் ஜன சமூகம் அல்லலுறுகிறது. ஒருவன் உன்னை அடித்ததாக நீ எண்ணுவது எவ்வளவு பேதமை தெரியுமா? உண்மையில் யாரும் யாரையும் அடிப்பதில்லை. உன்னை நீயே அடித்துக் கொள்கிறாய். அவனை அவனே அடித்துக் கொள்கிறான். அதன் வேதனை அடித்தவனுக்கும் உண்டு; அடிபட்டவனுக்கும் உண்டு. விரோதிகள் என்றும், அந்நியமானவர்கள் என்றும் யாராவது இருக்கிறார்கள் என்று நாம் நினைத்தோமானால் நமக்குத் துன்பங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன என்று அர்த்தம்" - அவருடைய தத்துவம் சவ்வு மிட்டாய் மாதிரி இழுபட்டது. என்னதான் மென்றாலும் கரையாமல் நசுங்கிக் கொடுத்தது. அது அவன் மனசைக் குழப்பிற்று. மனம்

குழம்பக் குழம்ப அவன் முகம் மாறுபட்டது. முகம் மாறுபட மாறுபடத் 'தன் தத்துவம் அவன் மனசில் புகுந்து வேலை செய்கிறது' என்ற எண்ணத்தில் அவர் முகம் விகஸித்தது. அவர் முகம் விகஸிக்க விகஸிக்க தத்துவம் இழுபட்டது. கடைசியில் அவனுக்கு ஒரே தலைவலி! - தத்துவ ஞானம் என்றால் சும்மாவா...?

அவன் நெற்றி சுருங்கிற்று. நெற்றிப் பொருத்துக்களை விரல்களால் தேய்த்துக் கொண்டான்.

"என்ன ராஜா தலையை வலிக்கிறதா...? சரி கொஞ்ச நேரம் மாடியிலே போயிப் படுத்துக்கோ. நான் சொன்னதையெல்லாம் சிந்தித்துப் பார். சிந்தனையால் ஞானம் பெருகும். ஞானத்தால் மோட்சம் கிட்டும். 'செல்வங்களைக் கொண்டு செய்யப்படும் யாகங்களைக் காட்டிலும் ஞானத்தால் செய்யப்படும் யோகமே மேலானது' என்கிறது கீதை" என்று அவன் மாடிப்படிகளேறும் வரை சொல்லிக் கொண்டே இருந்தார் பிள்ளை.

"மேலானதுதான், தலைவலி வருகிறதே, என்ன செய்கிறது?" என்று தனக்குள் முணகிக் கொண்டான் ராஜா. என்றாலும் அவன் மாமாவின் பேச்சு அவனை மிகவும் ஆகர்ஷித்தது. அவன் புரிந்து கொண்டதெல்லாம் ஒன்று தான்: 'மாமா ரொம்பப் படித்தவர்!' என்பதுதான் அது. அவரிடம் அவனுக்கு ஒரு விசேஷ மரியாதை பிறந்தது. அவன் மாடிக்குச் சென்று முதல் நாளிரவு படுத்திருந்த கட்டிலில் சாய்ந்தான்.

படுத்துக் கொண்டே ஒருமுறை அறை முழுவதும் சுற்றிப் பார்வையை ஓட்டினான். அந்த அறையைச் சுற்றி இருந்த அலமாரிகள் நிறைய ஒரே புத்தகங்களாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு அலமாரியிலும் ஒவ்வொரு விதமான வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது!

'என்னை அடிப்பவர்களுக்காகவும் நான் பிறந்திருக்கிறேன். அவர்கள் பாபத்தையும் நானே சுமக்கிறேன்' -

'இடுக்கண் வருங்கால் நகுக...'

'உண்மையைவிட உயர்ந்த மதம் இல்லை' அவன் எல்லாவற்றையும் பார்த்தான். மாமாவின் மீது அவனுக்கு ஒரு பக்தியே ஏற்பட்டது. தலைவலியும் அதிகமாகியது. அப்படியே உறங்கிப் போனான்.

இரவு வெகு நேரம் விழித்திருந்ததால் ஏற்பட்ட களைப்பு இமைகளை அழுத்திற்று. காற்று மெல்லென வீசிக் கொண்டிருந்தது...

'நேற்று இரவெல்லாம் மழையில் ஒதுங்கக்கூட இடம் இன்றித் தவித்த அனாதை ராஜா இன்று என்ன சுகம் நித்திரை செய்கிறான்' என்ற நினைப்போ என்னவோ? உறக்க நிலையில் லேசான சிரிப்பு அவன் உதடுகளுக்கிடையில் விளையாடியது!

கீதாவுக்குப் பள்ளியில் பாடமே ஓடவில்லை. பரீட்சைக்கு இன்னும் இரண்டு நாள் தான் இருக்கிறது. அவள் மனம் ராஜாவை நினைத்தே துடித்துக் கொண்டிருந்தது.

பள்ளியிலிருந்து ஆவலுடன் வீட்டிற்கு ஓடிவந்தாள்.

"கீதா, ராஜா வந்திருக்கிறான்...” என்று அவள் வந்ததும் வராததுமாய் அவளிடம் அறிவித்தார் அவள் தகப்பனார்.

"அடியே! நீயே சொல்லு, கார்த்தாலேருந்து நான் சொல்லிக்கிட்டிருந்தேனா இல்லையா? காக்கா கத்துது யாரோ வரப்போறாங்கன்னு...” என்று ஆரம்பித்தாள் அபிராமி.

"நீயுமாச்சி உன் காக்கையுமாச்சு...!” என்று முணகினார் பிள்ளை.

ஆனால் கீதாவுக்கு இருந்த ஆனந்தத்தில் இருவர் பேச்சும் அவள் காதில் விழவில்லை. தன் சந்தோஷத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல்,

"எந்த ராஜா...?" என்று ஒன்றும் புரியாத மாதிரி கேட்டாள்.

"என்னடி இது இப்படிக் கேட்கிறே? தில்லையம்பதியிலேயிருந்து உங்க அத்தை கடுதாசி எழுதியிருந்துதே..."

"ஓஹோ...! சரி சரி, எனக்குப் பசிக்குது காபி குடும்மா..." என்று அடுக்களைக்கு ஓடினாள் கீதா.

"நல்லாருக்குடி, பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவ கால், கை கூட அலம்பாம, புத்தகக் கையோட அடுக்களைக்குள்ளே வந்து காபி கேக்கற லட்சணம்..." என்று சலித்துக் கொண்டாள் அபிராமி.

கீதாவுக்கு ஒன்றும் புரியவில்லை. புத்தகத்துடன் மாடிக்கு ஓடினாள்.

ராஜா கண்விழித்தபோது அவன் அருகே கையில் காபித் தம்ளருடன் கீதா நின்றிருந்தாள். அவள் பார்வை அவன்மீதே மொய்த்துக் கொண்டிருந்தது.

அவன் கண் விழித்ததும் அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே எழுந்து உட்கார்ந்தான். கையிலிருந்த காபித் தம்ளரை, டீபாயின் மீது வைத்துவிட்டு சோபாவில் அமர்ந்தாள் கீதா.

"என்ன ராஜா, நல்ல தூக்கமோ?"

"ஆமாம்... மணி என்ன இருக்கும்?"

"மணி ஆறாகிறது நான் வந்து அரைமணி நேரமா நிக்கிறேன். நீ கவனிச்சாதானே?" என்று சிரித்தாள்.

"சரி இப்போ கவனிக்கிறேன்" என்று முழங்கால்களை கட்டியபடி கட்டிலின் மேல் அமர்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் ராஜா...

"தயவுசெய்து கொஞ்சம் கவனிக்காமல் இரேன்..."

"இது என்ன, உன் இஷ்டப்படியெல்லாம் ஆடச் சொல்றியே?"

"சரி சரி, நான் உன்னை ஆடவும் சொல்லலே; பாடவும் சொல்லலே... நான் கீழே போறேன்" என்று கையில் காபித் தம்ளரை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினாள் கீதா.

"கீதா" ராஜாதான் கூப்பிட்டான்.

மாடிப்படிகளில் அவள் கால்கள் அப்படியே நின்றன. நின்று திரும்பினாள், அவன் அவள் அருகே வந்தான்.

"என்ன?"

"ஒண்ணுமில்லே."

"ஒண்ணுமில்லேன்னா எதுக்குக் கூப்பிடணும் உன் இஷ்டப்படியெல்லாம் என்னாலும் ஆட முடியாது."

"நீ ஆடினா ரொம்ப நல்லாயிருக்கும்."

"சரி என்ன விஷயம்?"

"அம்மா எழுதின கடுதாசி இருக்கா?"

"இருக்கும்."

"அதைக் கொண்டு வாயேன்."

"அப்பாவிடம் இருக்கிறது..."

"என்ன இருக்கு அப்பாவிடம்?" என்று கேட்டுக் கொண்டே மாடிப்படிகளில் ஏறினார் பிள்ளை.

"அத்தை எழுதின கடுதாசி."

"அதைத்தானே எடுத்துக்கிட்டு வர்றேன்..." என்று கையிலிருந்த புத்தகத்தினுள்ளிருந்து ஒரு கவரை எடுத்து அவனிடம் நீட்டினார் அவர். கீதா இறங்கிப் போய் விட்டாள்.

அங்கிருந்த சோபாவில் அமர்ந்து புத்தகத்தில் ஆழ்ந்தார் பிள்ளை. தாயின் கடிதத்தைப் படிக்க முனைந்தான் ராஜா.

"அண்ணா அவர்களுக்கு அநேக நமஸ்காரம். ஒரு வாரமாக ராஜாவைக் காணோம். அவன் புத்திசாலி; ஆண்பிள்ளை; எப்படியும் பிழைத்துக் கொள்வான் என்று எனக்குத் தெரியும். என்றாலும் மனம் கேட்கிறதா! நான் பெற்ற பிள்ளை எங்கே சென்று என்ன பாடுபடுகிறதோ என்று அடித்துக் கொள்கிறது. அங்கு வந்திருந்தால் தெரியப்படுத்துங்கள். அவனுக்குப் பிழைப்புக்கு ஏதாவது வழி செய்துவிடுங்கள். அவன் யாருக்கும் பாரமாக இருக்க வேண்டாம்.

தங்கள் பிரிய தங்கை,

லட்சுமி.”

கடிதத்தைப் படித்துவிட்டு உறையிடும்போது மாமா அவனைப் பார்த்தார்.

"ராஜா, உன் அம்மாவுக்கு நாளைக்குக் கடிதம் எழுதப் போகிறேன். ஆனால் உன்னை அனுப்பப் போவதில்லை, என்றாலும் உன் அம்மாவைப் பார்க்க வேண்டும் அல்லவா?” என்று மகிழ்ச்சியுடன் கூறினார் பிள்ளை.

ராஜாவுக்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை. எல்லாம் ஒரே குழப்பமாகவும் வியப்பாகவும் இருந்தது. இப்படிப் பட்ட அன்பான உறவினர்களும் தனக்கு இருக்கிறார்கள் என்று அவனுக்குத் தெரியாது. அவன் தாயும் அவர்கள் குணநலன்கள் பற்றி ஏதும் அவனிடம் சொன்னதில்லை.

"சரி பத்திரிகை படிக்கிறாயா?” என்று அங்கிருந்த செய்திப் பத்திரிகை ஒன்றை அவனிடம் கொடுத்துவிட்டு அவர் கீழிறங்கிச் சென்றார்.

பத்திரிகையில் அவன் படிக்க என்ன இருக்கிறது? இந்த வாழ்க்கை முறையே அவனுக்குப் புதிராக, புதிதாக இருந்தது.

இட்டிலி சுட்டு, அப்பளம் போட்டு விற்பனை செய்து வாழ்க்கை நடத்தும் தன் ஏழைத் தாயின் மெலிந்த உருவம்

அவன் கண்முன் நின்றது. கண்கள் கலங்கின.

"ராஜா... ராஜா" என்ற கீதாவின் குரல் மாடிப் படிகளில் ஒலித்தது அவன் அவசர அவசரமாய்க் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

"ராஜா! இது யாரு சொல்லு பார்ப்போம்..." என்று கையில் ஒரு போட்டோவுடன் அவன் எதிரே வந்து நின்றாள் கீதா.

அந்தப்படம் - அவன் நான்கு வயதுச் சிறுவனாக இருந்தபோது அவன் தந்தை அவனைத் தூக்கிக் கொண்டு நிற்கும் காட்சி!

"அப்பா...! செத்துப் போன என் அப்பா - அவர் மட்டும் இருந்தால்? - அவர் இருந்தால் மட்டும் என்ன? யாரும் யாருடைய வாழ்க்கையையும் மாற்றிவிட முடியாது!" அவன் தனக்குள் முனகிக் கொண்டான்.

“தெரியலையா?” கேலியாகக் கேட்டாள் கீதா. "தெரியாமல் என்ன! நானும் எங்கப்பாவும்.”

“நீ எவ்வளவு சின்னப் பையனா இருக்கே.”

"ஆமாம்.” அவன் அந்தப் படத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

“நீ இப்பொழுதுதான் உன் தந்தையைப் பார்க்கிறாய், ஆனால் உன் தந்தையின் ஆத்மா, அது எப்போதும் உன்னைப் பார்த்துக் கொண்டே இருக்கிறது. நீ தவறு செய்யும்போது உனக்காக வருந்துகிறது. நீ சத்புருஷனாக இருக்கும்போது உனக்காகப் பெருமை கொள்கிறது” என்று கூறிக்கொண்டே அவன் மாமா மாடி அறைக்குள் பிரவேசித்தார். அவன் அவரைப் பார்த்தான்!

அவர் கை ஏதோ ஒரு கனத்த புத்தகத்தின் தத்துவத்தை எடை போட்டுக் கொண்டிருந்தது.

"என்ன ராஜா பார்க்கிறாய்? பிரகிருதியின் தோற்றங்களான சேதன அசேதன ஜடங்கள் யாவும் அழிந்து

மறைந்து மூலப்பிரகிருதியுடன் ஐக்கியமாகி விடுகின்றன. ஆத்மா அழியாதது. நித்யமானது, ஜனனம், ஸ்திதி, மரணம் என்ற வரம்புகளெல்லாம் ஆத்மா அணியும் சட்டையான சடலங்களுக்குத்தான். ஆத்மா பிறப்பதுமில்லை; மரிப்பதுமில்லை. பகவான் பிறக்கவுமில்லை மரிக்கவுமில்லை" அவர் பார்வை எங்கோ நிலைத்திருந்தது. ராஜாவின் மனமோ இதிலொன்றும் லயிக்காது தன் தாயைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது.

அவர் மேலும் தொடர்ந்தார்.

"அதுவும் உன் தகப்பனாரைப் போன்ற ஸத்புருஷர்கள் மோக்ஷம் எய்தியவர்கள்! அவர் ஆத்மாவின் அருள் ஒளி நம்மிடையே சஞ்சரிக்கிறது. அவர் ஆத்மா சாந்தியடைய நமது செயல்கள் பரிசுத்தமானதாக இருக்க வேண்டும்.”

"கீதா, அப்பாவையும் ராஜாவையும் சாப்பிட வரச் சொல்லு" என்று கீழே இருந்து குரல் கொடுத்தாள் அபிராமி.

"கீதா, ராஜாவை இங்கேயே இருந்திடச் சொல்லப் போகிறேன், நீ என்ன சொல்கிறாய்?”

"வேண்டாம்பா... கீழே அம்மா சாப்பிடக் கூப்பிடறாங்க; இங்கேயே இருந்தா...”

ராஜா சிரித்தான்.

“நான் அதைச் சொல்லவில்லை. ராஜா நம்ம வீட்டிலேயே இருக்கப் போறான்னு சொன்னேன்" என்று அழுத்தமாகக் கூறினார் பிள்ளை. கீதா மௌனமாக இருந்தாள்.

"சரி. ராஜா நான் நாளைக்கு உன் அம்மாவுக்குக் கடிதம் எழுதிவிடப் போகிறேன். 'ராஜா இங்கேயே இருக்கப் போகிறான். என் விருப்பமும் அதுவே’ன்னு... என்ன சொல்றே!”

ராஜா மௌனமாக இருந்தான். அவன் முகம் சோர்ந்திருந்தது.

"என்னடா பேசாமலிருக்கிறாய்; கண்டபடியெல்லாம் சுத்தி என்னத்தைக் கண்டே...? இப்படியே, தான் தோன்றித் தனமாகச் சுற்றிக்கொண்டே இருந்தால் உலகமே வெறுப்புத்தட்ட ஆரம்பித்துவிடும். அதனால்தான் உறவினர்களோடும் சமூகத்தோடும் சேர்ந்து வாழவேண்டும் என்கிறேன். சஞ்சலங்களைத் தவிர்ப்பது துர்லபம். சமூகமென்பது பெரிய பெரிய ஞானிகளால் வளர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு கட்டுப்பாடு உண்டு. இதனின்றும் விலக விரும்புபவன் சமூக நெறிகளை மீறுகிறான். அதற்குக் காரணம் அவனது சஞ்சலங்களே.” மாமாவின் பேச்சு எங்கெங்கோ தாவிக் கொண்டிருந்தது. கடைசியில், "நீ இங்கேயே இரு. பிறகு பார்ப்போம், என்ன சொல்கிறாய்?" என்றார்.

“அவனை என்ன கேட்கிறது? நீங்க சொல்றதை மாட்டேன்னு சொல்லிவிடுவானோ?” என்று கையில் அகப்பையுடன் தோன்றினாள் அவன் மாமி.

சிரித்துக்கொண்டே தலையசைத்தான் ராஜா. கீதாவின் முகத்தில் சிரிப்புத் துள்ளாடியது.

*****

# 15

வசந்தம் வந்து விட்டது.

சித்தநல்லூர் சிவஸ்தலம். ஆகையால் வசந்தனின் ஆர்ப்பாட்டம் சற்று மிகையாகவே இருக்கும். ஆற்றின் தண்ணீர் குறைந்துவிட்டது என்றாலும் வற்றிவிடவில்லை. சஞ்சலத்துப் பளிங்கு போல் ஜலம் ஓடிக் கொண்டிருந்தது. படித்துறைகளின் அருகே மட்டும் இடுப்பளவு ஆழம் இருக்கும்; கரையோரங்களில் கல்யாண முருங்கை மரங்கள் இலைக்கோலம் தவிர்த்து மலர்க்கோலம் பூண்டு நின்றிருக்கின்றன. மரங்களுக்குப் பின்னே பரந்து கிடக்கும் நீலவானத்தின் பின்னணியில் மரங்களில் படர்ந்து சொரியும் நெருப்புத் துண்டுகள் போன்று செம்மலர்கள் பார்க்கப் பார்க்கப் பரவசம் தருபவை. கொன்றையும் வாகையும் தங்கள் கனவுகளை உதிர்க்கின்றன. இலையுதிர்த்து மலரின்றி, கொப்பும் குச்சியுமாய் மொட்டையாக, தவக்கோலம் தரித்திருக்கும் அரச மரம் அழகாக இல்லையா, என்ன? வெறும் புல்வெளியும் தென்னஞ் சோலைகளும் தூங்குமூஞ்சி மரங்களும் நாணற் புதர்களும் யாவும் மரகதக் காடுகளாய்த் திகழ்கின்றன. தென்றலும் தவழ்ந்து மகிழ்கிறது. பூமி தேவி மெய்சிலிர்க்கிறாள். தாவரங்கள் புஷ்பாஞ்சலி செய்கின்றன. விடாய் தீராத வேட்கையுடன் குயில்கள் குமுறிக் குமுறிக் கதறுகின்றன. மகிழ்ந்து மகிழ்ந்து பாடுகின்றன. வசந்த காலத்தில் பிரபஞ்சமே கனவு மயமாகிறது! கனவுகள் எல்லாம் உயிர் பெற்றுச் சிரிக்கின்றன.

அன்று அதிகாலையில் படுக்கையைவிட்டு எழுந்து விட்டான் ராஜா. மாடியறைச் சன்னலிலிருந்து கீழே பார்த்ததும் அவனுக்கு உடல் முழுதும் வசந்தத்தின் குதூகலம் பரவிற்று. பங்களாவின் முன்புறத் தோட்டத்தில் ஒரே மலர்க்குப்பை! தோட்டத்துப் பவழமல்லி மரம் ஆனந்த பாஷ்பம் சொரிவது போல் சரம்சரமாய் மலர் மழை பொழிந்து கொண்டிருந்தது.

சட்டையைப் போட்டுக் கொண்டு கீழிறங்கித் தோட்டத்தை நோக்கி நடந்தான் ராஜா.

தோட்டத்து மூலையில் பவழமல்லி மரத்தடியில் உஷைதேவி போல் கீதா நின்றிருந்தாள். அவள் மீது மலர்கள் உதிர்ந்து கொண்டிருந்தன. மடி நிறையச் செவ்வரளியும் பவழமல்லியும் நிறைந்து வழிந்தன. உதய காலக் கதிரவனின் பொன்மயமான ஒளிக்கதிர்கள் அவளைத் தழுவிக் கொண்டிருந்தன. சிலுசிலுத்த மென் காற்றில் அவள் சுருண்ட கேசம் நெற்றியில் அளைந்து கொண்டிருந்தது. பொன்னும் மணியும் நிறைந்து, அவளுடைய கழுத்தில் கிடந்த டாலர் செயின் பளீரிட்டது. அவன் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். அப்படியே நிற்கவேண்டுமென்று தோன்றியது. அவன் நின்று கொண்டே இருந்தான். அவன் நின்றிருப்பதை அவள் கவனிக்கவில்லை; தன் போக்கில் மலர் பறித்துக் கொண்டிருந்தாள். மடி நிறைந்து வழிந்தாலும் மனம் நிறையவில்லை. ராஜா தனக்குள் சிரித்துக் கொண்டான். அவன் நிழல் நீண்டு படர்ந்தது. அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"பயப்படாதே, கீதா! நான்தான்..."

“நான் ஏன் பயப்படுகிறேன்?”

"உனக்குத்தான் யாரையாவது திடீரெனப் பார்த்தால் மயக்கம் வந்துவிடுமே..."

"சரி சரி, காலை நேரத்திலே ஏன் வம்பு.”

“நான் உன்னிடம் வம்புக்கா வந்தேன்?”

“என்னைக் கேட்டால்...”

"உனக்குத் தெரியாமலா சொல்கிறாய், வம்புக்கு வந்திருக்கிறேன் என்று...”

"பின்னே, எனக்கு மயக்கம் வருவதைப் பற்றி உன்னை யார் கேட்டார்கள்?"

"நான் சொல்ல வந்தது..."

“என்னவாம்?"

“எனக்கும் அந்த மயக்கம் வரும்போல இருக்கிறது..."

“ஐயையோ...!"

"ஆமாம்... உன்னை... இல்லை; இந்தக் காலை நேரத்தில் இந்த மரங்கள், புஷ்பங்கள், செடிகள், அதோ பார் வானம். அப்பா! மயக்கம்தான் வருகிறது!" என்று திக்கித் திக்கிப் பேசினான் ராஜா. அவனால் அவளைப் பார்த்துப் பேச முடியவில்லை. "அதோபார் கிளி... மாங்காய் பழுக்க ஆரம்பிச்சுடுத்தே..." அவன் எதை எதையோ பார்த்துக் கொண்டு பேசினான்! அவன் மனம் கீதாவிடமே இருந்தது. கீதா எதையும் பார்க்கவில்லை; அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். மனம் எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்தது. "கீதா!" என்று கூப்பிட்டுக் கொண்டு திரும்பினான். அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் இதுவரை அப்படியொரு பார்வையைச் சந்தித்தது இல்லை. அவனும் அவளைப் பார்த்தான்; அவன் இதுவரை யாரையும் அப்படியொரு பார்வை பார்த்ததே இல்லை. அவன் கண்கள் 'பட பட'த்தது அவளுக்குத் தெரியாது. அவள் மனம் துடிதுடித்தது அவனுக்குத் தெரியாது. அவன் முகம் மலர்ந்தது அவளுக்குத் தெரியாது. அவள் மனம் கனத்தது அவனுக்குத் தெரியாது.

அவள் மடியிலிருந்த பூக்கள் நழுவின. அவன் சிரித்தான்; அவளும் சிரித்தாள்.

“என்ன சிரிக்கிறே?"

"ஒண்ணுமில்லே, நீ எதுக்குப் பூவையெல்லாம் இப்படிக் கஷ்டப்பட்டுப் பறிச்சேன்னுதான்" - அவன் மீண்டும்

சிரித்தான்.

தன்னையறியாமல் தன் மடியிலிருந்த மலர்கள் தரையில் கொட்டிச் சிதறி இருப்பதைக் கண்டதும் அவள் முகம் சிவந்தது.

“கைதவறி கொட்டிப் போனா இதிலே என்ன சிரிப்பு?" அவள் சிடுசிடுத்தாள்.

"கைதவறினால் சரிதான்...”

“இதென்ன, காலையிலே வம்பு...?”

"சரி, நான் போகிறேன்.” அவன் கிணற்றடியை நோக்கிப் போய்விட்டான்.

அவளுக்கு அவன் போவது சம்மதமில்லை. தடுத்து நிறுத்தவும் மனமில்லை. அவன் பின்னாலேயே நடந்தாள்.

"நீ எதுக்கு வர்ரியாம்? இதென்ன வம்பு?” என்று திரும்பினான் அவன்.

"ஏன்...? நான் கை கழுவப் போகிறேன், கையெல்லாம் ஒரே மண்!” என்று கையைத் தட்டிக் கொண்டாள் கீதா.

"ஓஹோ, பூவெல்லாம் அங்கே மண்ணிலே கிடக்கிறதே...! கையைக் கழுவினப்புறம் தான் மண்ணிலே கை வைப்பாயோ?”

“அது எங்கே கிடந்தால் உனக்கென்ன?”

"எனக்கொண்ணுமில்லை; மறுபடியும் கை மண்ணாப் போகும்னு சொல்றேன்.”

"அது எனக்குத் தெரியும்; நீ ஏன் இங்கே வந்தாய்...?”

“குளிக்கணும்!”

"ராஜா, ஆத்திலே போய்க் குளிச்சா எவ்வளவு நல்லா இருக்கும் தெரியுமா?”

"சரி, போய்க்குளி.”

“அப்பா திட்டுவாரே!”

"நான் ஆத்துக்குப் போய்க் குளிக்கப் போறேன்" என்று தன் தோளில் கிடந்த துண்டை எடுத்து தலையில் கட்டினான் ராஜா.

“உனக்கு நீந்தத் தெரியுமோ?”

"ஓ! நீ வேணுமானா இந்தக் கிணற்றில் விழுந்து பாரேன், நான் தூக்கிக்கொண்டு வர்ரேன்" - அவள் மௌனமாக நின்று அவனைப் பார்த்தாள்.

'நான் கிணற்றில் விழுந்ததற்காக நீ தூக்குவாயா? - தூக்குவதற்காக நான் விழவேண்டுமா?' என்று மனசிற்குள், கேட்டுக்கொண்டு குறும்புடன் அவனைப் பார்த்தாள்.

"ஆத்துக்குப் போறேன்னு சொல்லிட்டு, இங்கேயே நின்னு எதுக்கு வம்பளக்கணும்?” என்று முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டு கேட்டாள் சீதா.

"எதுக்காக? அதை இப்போவே சொல்லலாமா?” என்றான் ராஜா.

"எதை?” என்று முகம் சிவக்க, மனம் குதூகலிக்க அவனைத் திரும்பிப் பார்த்தாள். அதற்குள் அவன் தோட்டத்துக் கதவுக்கு வெளியே போய்விட்டான்.

***

ராஜா! ஆற்றருகே வரும்பொழுது அவன் மனம் குதூகலித்தது. ஆற்று நீர் குமிழியிட்டுச் சலசலத்துச் சிரித்தது. கரையோரத்தில் நாணற்புற்கள் சிரத்தில் வெண்முடி தரித்து மின்னிப் பொலிந்தன. ஆற்றின் கரையில் நின்ற மாமரக் கிளைகளிலிருந்து சிறுவர்கள் நீரில் குதித்து விளையாடிக் கொண்டிருந்தனர். பெண்கள் படித்துறையில் பித்தளைக் குடங்கள் வரிசையாக விளக்கிக் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தன. சூரியனின்

ஒளிக்கதிர்கள் அவற்றின் மீது பட்டுப் பிரகாசித்துத் தண்ணீருக்குப் பொன் மெருகு அளித்தன. பெண்கள் குளித்துக் கொண்டிருந்த துறையில் ஒரே கூட்டம்; ஆண்கள் படித்துறையில் கூட்டம் அதிகமில்லை. யாரோ இரண்டு பேர் மட்டுமே குளித்துக் கொண்டிருந்தனர். ஒருவன் காவி தரித்த பண்டாரம். அவன் அன்னக்காவடி துலாம்பரமாக அரச மரத்தடிப் பிள்ளையார் அருகே தகதகத்துக் கொண்டிருந்தது.

ராஜாவுக்குத் தண்ணீரில் விழுந்து நீந்திக் குளிக்க வேண்டுமென்ற ஆவல் அதிகமாயிற்று. படித்துறையை நோக்கி நடந்தான். தண்ணீரில் குளித்துக் கொண்டிருந்த மற்றொரு ஆசாமி திரும்பினான்...

ராஜாவின் கால்கள் அதற்குமேல் நகர மறுத்தன. மனசில் பொங்கிக் கொண்டிருந்த மகிழ்ச்சியெல்லாம் மறைந்தது - தண்ணீரிலிருந்தவன் சாரங்கன்!

"ஏ! ராசா..." என்று கத்தினான் சாரங்கன்.

ராஜா ஓட்டம் பிடிக்க ஆயத்தமானான்! அவன் கால்கள் நகர மறுத்தன; பயம் முழங்காலில் உறைந்தது.

சாரங்கன் இடுப்பில் கட்டிய ஈரத்துண்டுடன் எழுந்து நின்றான். ஒரே தாவில் படிக்கட்டுகளில் ஏறினான்.

"ஏய்... ராசா நில்லு, நில்லு..." என்று கூவிக் கொண்டே அவசர அவசரமாகப் படிக்கட்டுகளில் ஏறினான் சாரங்கன்.

"எதுக்கு நீ ஓடணும்...! எதுக்குன்னேன்...?" என்று கேட்டவாறு ராஜாவின் கைகளைத் தாவிப்பிடித்தான் சாரங்கன்.

"நீ... நீ அடிப்பே!" குழந்தை போல் பயந்து நடுங்கினான் ராஜா!

"நானா...? உன்னையா...? அடிப்பேனா...? ராஜா! நீ என்னை என்னன்னு நெனைச்சே? நான் முரடன்தான்!

எல்லோருக்கும் முரடனா இருக்கிறவன்... எவனாவது ஒருத்தனுக்காவது அன்பானவனா இருப்பான், தெரியுமா? நான் உன்னை அடிப்பேனா...? நீ ஏன் என்னை அப்படி நினைச்சே? என் தம்பி போல உன்னை நெனைச்சிருக்கேண்டா... அன்னைக்கு ஓடினது நீன்னு எனக்குத் தெரியாது - தங்கம் சொன்னா. சரி வா போவோம். நான் சொன்னேனே விருந்து, ஆமாம் இன்னைக்கு உனக்கு நான் விருந்து கொடுக்கப் போறேன் வா. வா போவோம்!" என்று சந்தோஷத்தில் படபடத்துப் பேசினான் சாரங்கன்.

“வேண்டாம்! நான் வீட்டுக்குப் போகணும்.”

"வீட்டுக்கா?”

"ஆமாம் இங்கே என் மாமா வீடு இருக்கு, அங்கே தான் நான் தங்கியிருக்கிறேன்.”

“உன் மாமாவா?”

“ஆமாம் வேதாசலம் பிள்ளை...”

“யாரு தாசில்தாரா?”

“ஆமாம்.”

"ஓஹோ! நீ பெரிய இடத்துப் பிள்ளை!” - சாரங்கனின் வார்த்தைகள் வரண்டிருந்தன!

"நீ என் கூட வந்து சாப்பிடுவியா?”

“ஏன் அப்படிச் சொல்றே?”

“என்ன இருந்தாலும் நீ தாசில்தார் மருமகன்!”

“அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே!”

“அப்படீன்னா, வா!”

"இல்லை சாரங்கா, இன்னொரு நாளைக்கு வர்ரேன், அது போகட்டும். தங்கம் எங்கே?”

“உன் நினைவிலேயே உருகிக்கிட்டிருக்கா?”

“அது என்ன?”

"நீ சரியான ஆளுடா, பெரிய பொம்பளை மயக்கி" என்று கண்களைச் சிமிட்டிச் சிரித்தான் சாரங்கன்.

"நீ ஆசைப்பட்ட பொண்ணை நான் காப்பாத்தித் தரமாட்டேனா? அதுக்காக நீ என்னை நம்பாம ஓடினியே - ஒனக்காக அந்தச் சிதம்பரம் பிள்ளையைக் கூட விரோதிச்சிக்கிட்டேன் தெரியுமா?”

"எனக்காகவா?"

“யாருக்காகவாம்? அவளுக்காகவா? அதொண்ணுமில்லை.”

ராஜாவின் மனம் குழம்பிற்று. தான் அவளைக் காதலிக்கவில்லையென்ற உண்மையை அவனிடம் சொல்லிவிட்டால் அவளுக்கு மீண்டும் பழைய நிலை ஏற்படலாம்.

"சரி, சரி - அவளை அங்கேயே இருக்கச் சொல்லு நான் அப்புறம் வர்ரேன்!”

"அப்புறம் என்னடா, அப்புறம்; பணம் கிணம் தரணும்னு பாக்கிறியா? அதொண்ணும் வேணாம், உன்னைப் பொறுத்த வரைக்கும் நம்ம சத்திரத்திலே எல்லாம் 'ரீ' ( free )" என்று சிரித்தான் சாரங்கன்.

"அதுக்கில்லே சாரங்கா, இப்போ நான் வீட்டோட இருக்கிறேன், இல்லையா? எங்கே காணோம்னு தேடுவாங்க. அதனாலே சாயங்காலம் சினிமாவுக்குப் போறதாச் சொல்லிட்டு வர்றேன்"

"சரி, அப்போ சாயங்காலம் எல்லாம் ரெடியாத் தயார் பண்ணி வெக்கறேன்.”

"ரெடியான்னா -”

“அதுதான் சொன்னேனே, பெருமாள் கடை-”

“ஐயையோ... அது வேண்டாம்! நான் திரும்பி வீட்டுக்குப் போகணுமில்லே-”

"சரி, சாப்பாடு?-”

“உம்.”

“வரணும்... இல்லைன்னா நான் வீட்டுக்கு வந்திடுவேன்.”

“வேண்டாம் வேண்டாம், நானே வர்ரேன்.”

“சரி நான் போகட்டுமா?"

"உம்... உம்...”

ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. காலைச்சுற்றிய பாம்புபோல் சாரங்கனின் உறவு அவனைத் துன்புறுத்தியது. தங்கத்தின் நிலையும், அவள் அவன் மீது கொண்டுள்ள காதலும், தனது நடிப்பும்... ஒரே குழப்பம். படித்துறையில் அமர்ந்து நீரில் கால்களை அமிழ்த்திக் கொண்டு அப்படியே சிலையாய் உட்கார்ந்திருந்தான்.

“மாமியும் மாமாவும், கீதாவும் என்னை எவ்வளவு உயர்ந்தவனாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்! நான் மீண்டும் சத்திரத்துக்குப் போவதா? தங்கத்தைக் காதலிப்பதாகப் பிரகடனப்படுத்துவதா? - அது வீட்டுக்குத் தெரிந்தால்...? தங்கத்தை நான் காதலிக்கவில்லை என்று கூறி மறுத்து விட்டால்...”

'ஐயோ, பாவம் தங்கம்...!'

'அதன் பிறகு என்னைப்பற்றி என்ன நினைப்பாள்...'

'அதற்காகத் தங்கத்திற்கு துரோகம் செய்து விடுவதா? என் மீது அவளுக்குத்தான் என்ன நம்பிக்கை!' என்றெல்லாம் வெகுநேரம் யோசித்துக் கொண்டே இருந்தான் அவன்.

கடைசியாக, நாடகத்தை இன்னும் கொஞ்ச நாட்கள் தொடர்ந்து நடத்துவது என்ற முடிவுக்கே வந்தான். தங்கத்தைக் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, சத்திரத்திலிருந்து வெளிக்கொணர்ந்து அவளுக்கு ஏதாவது ஒரு வழி ஏற்படுத்துவது வரை அடிக்கடி சத்திரத்துக்குப் போய் அவளைக் காதலிப்பதாகக் காட்டிக் கொள்ள வேண்டும். எப்படியானாலும் அவளிடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டும்! - என்ற தீர்மானத்துடன் வீடு திரும்பினான் ராஜா.

*****

# 16

வேதாசலம் பிள்ளையின் தத்துவ வேட்டுகளின் அதிர்ச்சியின் ஸ்தூலமான விளைவைப்பற்றி திட்டவட்டமாக எதுவும் கூறமுடியாது. எனினும் அவர் தத்துவ ஒத்தடம் கேட்பதற்கு ஹிதம் உடையதா, அல்லவா என்ற பிரச்னையையும் சற்றே ஒதுக்கி வைத்துவிட்டு அவரைப் பொறுத்தவரை அதன் பயன் என்னவென்று பரிசீலிப்போமானால் ஒரு விஷயம் மட்டும் புரியும்.

அவர் மிகவும் அனுபவமுடையவர் என்பது மட்டும் மல்லாமல்தான் பெற்ற - கற்ற - இன்பம் பெறுக இவ்வையகம் என்பதைக் கடைபிடிப்பவர் என்பதுதான் அது.

அதற்கு யாராவது ஒருவன் கிடைத்துவிட்டால்... அவனுக்கு காபி டிபன் கொடுத்து, ஒரு மணி நேரத்துக்குக் குறையாமல் அவனைத் தனது தத்துவத்தில் புடம் போட்டு எடுத்து விடுவார். இதற்காக, இந்தச் சிரமத்திற்காக, இந்த விடா முயற்சிக்காக, அவரைப் பாராட்டத்தான் வேண்டும்.

ஆனால் கொஞ்ச காலமாக அவருக்குத் தத்துவப் புடம் போடுவதற்கு ஆள் தேடி அலைய வேண்டிய அவசியமில்லாமற் போய்விட்டது. அதற்குத்தான் ராஜா இருக்கிறானே! அவர் தத்துவத்திலிருந்து தப்பிக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. மாடியிலிருக்கும் புத்தக சாலைக்குள் சென்று அவர் விரும்பும் புத்தகங்களில் ஒன்றைக் கையிலெடுத்து வைத்துக் கொள்வதுதான் அது.

"என்ன திருமந்திரமா? படி, படி...” என்று சொல்லி விட்டுப் போய் விடுவார் அவர்.

இதன் காரணமாக ராஜா நாள் முழுவதும் மாடியறைக்குள்ளே அடைபட்டுக் கிடக்க வேண்டியிருந்தது. அதன் விளைவாக ஏதோ சில புத்தகங்களைப் படிக்க வேண்டியிருந்தது. புத்தகங்கள் சில சுவை மிகுந்திருந்தன. அவனும் புத்தகப் புழுவானான்.

பகல் மணி மூன்று! வழக்கம்போல் மாடியறையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான் ராஜா. வெளியே வெயில் தகித்துக் கொண்டிருந்தது. ஜன்னலுக்கு வெளியே மொட்டையாக நின்ற அரசமரக் கிளைகளில் அமர்ந்திருந்த காகங்கள் வெம்மை பொறுக்க மாட்டாமல் பரிதாபகரமாக அலறிக் கொண்டிருந்தன. வெகு தூரத்தில் கானல் அலை அலையாக ஆடிக் கொண்டிருந்தது. வான வெளியில் வெண்ணிற மேகக்குவியல் குமைந்து குமைந்து பரவிக் கொண்டிருந்தது. மேகக் கூட்டம் ஊடே சென்று மறைத்து மறைத்து நகர்வதால் வெளிச்சம் திடீரென மங்குவதும், பிறகு சுளீரெனப் பிரகாசிப்பதுமாய் இருந்தது.

காற்றே இல்லை. புழுக்கம் தாங்க முடியாமல் கையிலிருந்த விசிறியினால் வீசிக் கொண்டு புத்தகத்தில் ஆழ்ந்திருந்தான் ராஜா.

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின்னடி என் மனத்தே -" அவன் முழங்கையிலிருந்து புத்தகத்தின் மீது வியர்வை சொட்டியது! மேல் துண்டால் உடம்பைத் துடைத்துக் கொண்டு புத்தகத்தை மூடி வைத்தான். எழுந்து சென்று ஜன்னல் கதவை விரியத் திறந்து வைத்தான். தோட்டத்து வாசற்படியில் அபிராமி முன்றானையை விரித்துப் படுத்துக் கொண்டிருந்தாள். உள்ளே நடுக்கூடத்தில் ஈஸிச்சேரில் சாய்ந்திருந்த வேதாசலம் பிள்ளை தனது கையிலிருந்த புத்தகத்தின் தத்துவங்களை 'இதயபூர்வ'மாகக் கிரகித்துக் கொண்டிருந்தார்.

அந்த வீடு முழுவதும் குதூகலமிக்க அமைதி சூழ்ந்திருந்தது. பேச்சுத் துணைக்கும் ஆளின்றி வெகு நேரம் மாடி வராந்தாவில் நின்று கானல் துடிக்கும் வெறும் வெளியை நோக்கிக் கொண்டிருந்த ராஜா, கீதாவுடன் சற்று அரட்டை அடிக்கலாம் என்று நினைத்து அவள் அறைக்குள் பிரவேசித்தான். கட்டிலின்மேல் தன்னை மறந்த நித்திரையில் லயித்திருந்தாள் கீதா. அவள் முகத்தில் வியர்வை முத்துக்கள் துளித்து வழிந்து கொண்டிருந்தன. அவள் மெல்லிய ரவிக்கை வியர்வையால் நனைந்து

உடலோடு ஒட்டிக் கிடந்தது. தலையணையின் மீது ஒரு நோட்டும் பேனாவும் அப்படியே கிடந்தன. அவன் கட்டிலருகே நின்று அவள் முகத்தை அர்த்தமற்று நோக்கினான்; ஒரு நிமிஷம் அப்படியே நின்றான், அயர்ந்த நித்திரை; இடையிடையே அவள் உதடுகள் துடித்தன. நெற்றி சுருங்கிற்று. வியர்வைத் துளிகள் ஒன்றுடன் ஒன்று கலந்து காதோரமாய் வழிந்தன. ஆழ்ந்த பெருமூச்சு; அவள் நெஞ்சு விம்மி விம்மி உயர்ந்து தாழ்ந்தது. அவனால் அங்கிருந்து நகர முடியவில்லை. காரணமின்றி அவன் ஹிருதய தாளம் கட்டுக்கு மீறி அடித்துக் கொண்டது. மனசில் என்னவோ கனத்து நெஞ்சை இறுக்கிற்று. அங்கிருந்து போய்விட விரும்பினான். தன் மேல்துண்டை அவள் முகத்துக்கு நேரே கொண்டு போகும்போது அவன் கைகள் நடுங்கின. மெள்ள ஒற்றினான். அவள் விழிக்காமல் புரண்டு படுத்தாள்.

'கீதா... கீதா' அவன் குரல் அவளை எழுப்பவில்லை. அவன் எழுப்ப விரும்பாமல்தான் கூப்பிட்டான். கையிலிருந்த விசிறியால் விசிறிக் கொண்டு அங்கேயே நின்று அந்த அழகை அனுபவிக்கத்தான் அவன் உள்ளம் விரும்பியது. ஆனால் அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள அவன் மறுத்தான். மெள்ள அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளியே செல்ல மனமின்றி வெளியேறினான். சற்று நேரம் மாடி வராந்தாவில் நின்று கொண்டிருந்தான். அவன் கால்கள் மீண்டும் கீதாவின் அறையை நோக்கி நகர்ந்தன; அறைக் கதவைத் தள்ளினான்.

என்ன...? ஆம்; அறைக்கதவு உட்புறம் தாழிடப் பட்டிருந்தது.

அவனுக்கு உடல் முழுவதும் நடுங்கியது.

'கீதா, தன்னை தவறாக நினைத்திருப்பாளோ?’

“சீச்சீ, நான் செய்தது தவறுதான்... என்ன தவறு செய்தேன்? எது தவறு...?"

துணிவாக, அறைக்கதவைத் தட்டினான்.

"கீதா...! கீதா" - அவன் குரல் உடைந்து கரகரத்தது! கீதா மேலாடையைச் சரிசெய்து கொண்டே கதவைத் திறந்தாள்.

அவன் எதிர்பார்த்ததைப் போல் அவள் முகம் கோபத்தால் சிவந்திருக்கவில்லை. நாணத்தால் சிவந்திருந்தது. மெல்லிய இதழ்களில் இளநகை நெளிந்தது.

"என்ன கீதா நல்ல தூக்கமா...?"

"ஆமாம்; ஒரு கனவு கூடக் கண்டேன்...!"

"என்ன கனவு சொல்லேன்"

"ஊஹும்!" அவள் முகத்தில் ரத்தம் குழம்பியது. நெற்றியில் குப்பென வியர்வை துளித்தது.

"உன் கனவில் நான் வந்தேனோ?"

அவள் பதில் சொல்லாமல் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"கீதா, அந்தக் கனவை நான் சொல்லட்டுமா...? உன் கனவில் நான் வந்தேன்... உன் முகத்தைத் துடைத்தேன்; அப்புறம் உனக்கு விசிறினேன். உன்னைப் பார்த்துக் கொண்டே நின்றேன். திடீர்னு நீ கண் விழித்துப் பார்க்கும் போது என்னைக் காணோம்! என்ன அப்படித்தானே!"

அவள் தன் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். தூக்கக் கலக்கத்தில் சிவந்த விழிகளில் ஈரம் படிந்திருந்தது. இமைகள் படபடத்தன. கண்கள் கூசின. "பகற் கனவு..." என்று அவள் தனக்குள் முனகிக் கொண்டது அவனுக்கும் கேட்டது.

"பகற் கனவுகள் பலிப்பதில்லை என்று சொல்வார்கள். நீ கண்டது கனவு அல்ல" என்று சொல்லிக் கொண்டே அவன் அவள் மீதிருந்த தனது பார்வையை மறுபுறம் திருப்பினான். அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

"கீதா!" என்று எதையோ நினைத்துக் கொண்டு திரும்பினான் ராஜா.

அவள் மாடிப்படியில் நின்று கொண்டிருந்தாள்.

"கீதா...! இங்கே வாயேன்..."

"ஊஹும்" என்று வேகமாக மாடிப்படிகளில் இறங்கிக் கீழே ஓடினாள் கீதா.

"கீதா... கீதா..." அவன் மௌனமாக நின்றான். மனம் மட்டும் ஒரு நிலையில்லை!

*****

# 17

அன்று மாலை...

ராஜா சத்திரத்தை அடையும்போது இருட்டிவிட்டது. தெருவிளக்குகள் இன்னும் தமது சேவையை ஆரம்பிக்கவில்லை. எதிரே ஆள் வந்தால் அடையாளம் தெரியும். கையெழுத்து மறையும் நேரம். சத்திரத்து முன் புறத்தில் விளக்கேற்றி வைத்துக் கொண்டிருந்தாள் ரஸியா. அவன் சத்திரத்துப் படிகளில் ஏறும்போது, பெரிய சாலையில் சதங்கை பூட்டிய காளைகளின் 'ஜல் ஜல்' என்ற ஒலி கேட்டது. வண்டியில் சிதம்பரம் பிள்ளை போய்க் கொண்டிருந்தார்.

ராஜாவை விரைத்துப் பார்த்தார். அவர் பார்வையைப் பொருட்படுத்தாமல் சத்திரத்துக்குள் நுழைந்த ராஜா ரஸியாவைப் பார்த்து "சாரங்கன் எங்கே?" என்றான்.

திடுக்கிட்டு திரும்பிய ரஸியா,

"நீயா?" என்று வியந்து நின்றாள்.

"நான்தான். சாரங்கன் எங்கே?"

"இதோ கூப்பிடுகிறேன்" என்று அவசர அவசரமாய் மாடிக்கு ஓடினாள் ரஸியா.

"ராஜா வந்திருக்கான்... ராஜா வந்திருக்கான்..." என்று ஒவ்வொருவரும் சொல்லிக் கொண்டனர்.

மாடியிலிருந்து சிரித்துக் கொண்டே இறங்கினான் சாரங்கன்.

ராஜாவின் கண்கள் தங்கத்தைத் தேடின.

"ஏய் தங்கத்தைத்தானே தேடறே? அதோ அந்த அறையில் உனக்காகக் காத்துக்கிட்டு இருக்கா" என்று சாரங்கன் சொன்னதும் ராஜா கூடத்து அறையை நோக்கி நடந்தான்.

"அதுக்குள்ளே என்னப்பா அவசரம்? கொஞ்சம் நாழி எங்ககிட்டேதான் பேசிக்கிட்டு இரேன்" என்று ராஜாவின் கரத்தைப் பற்றி இழுத்து தாழ்வாரத்திலிருந்த நாற்காலியில் உட்கார வைத்தான் சாரங்கன்.

"டீ குடிக்கிறியா?”

“ஊஹூம், வேண்டாம்”

“என்னடா வேண்டாம்? - காமாட்சி ரெண்டு கிளாஸ் டீ கொண்டுவா -"

"சரி; பீடி குடிக்கிறியா" - ராஜா மறுக்க முடியாமல் அவன் கொடுத்த பீடியைப் புகைத்துக் கொண்டிருந்தான்.

'பீடியிலும் ஒரு இன்பம் இருக்கிறது' என்று தனக்குள் முனகிக் கொண்டான் ராஜா.

காமாட்சி இரண்டு கண்ணாடி கிளாஸ்களில் டீ கொண்டு வந்தாள். ஆவி பறக்கும் டீயைப் பருகியவாறு இருவரும் அமைதியாக இருந்தனர். சாரங்கனின் கண்களில் அன்பும் கனிவும் சுடர் விட்டன. அந்த நேரத்தில் அவன் முகம்கூட அழகாக இருந்தது. காமாட்சியின் கண்கள் சாரங்கனின் அழகிலேயே லயித்தன. வேண்டுமென்றே அவன் மீது உரசிக் கொண்டு நின்றாள். சாரங்கன் லேசாகச் சிரித்துக் கொண்டே அவள் முகத்தைப் பார்த்தான்.

"என்னடி, உனக்குக் கூடக் காதல் பொறந்திடுச்சி?” என்று சாரங்கன் சொன்னதும் ராஜா மெள்ளச் சிரித்துக் கொண்டான். அவளுக்குக்கூட வெட்கம் வந்தது. தலையைக் குனிந்து கொண்டாள்.

"சரி, இந்தா" என்று அவள் கையில் கண்ணாடித் தம்ளர்களைக் கொடுக்கும்போது அவள் விரல்களைக் கிள்ளினான் சாரங்கன். ராஜா, முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டான்.

"தம்பி... இனிமே நீ இங்கே இருக்கக் கூடாது - அதோ அங்கே போகலாம்!" என்று கண்களைச் சிமிட்டி, கூடத்து அறையைக் காட்டினான் சாரங்கன்.

ராஜா எழுந்து சாரங்கன் காட்டிய அறையை நோக்கி நடந்தான்.

அறை வாயிலருகே சென்று திறப்பதா, தட்டுவதா என்று புரியாமல் நின்று கொண்டிருந்தான் ராஜா.

கதவுகளுக்கிடையில் சிறிதே இடைவெளி இருந்தது.

சற்று நேரத்தில் உள்ளேயிருந்து தங்கத்தின் குரல் கேட்டது.

"யார் அங்கே?"

"நான் தான்" - குரலிலிருந்தே அவள் ராஜாவைக் கண்டு கொண்டாள்.

"நான்தான்னா?" அவள் குரல் கம்மியொலித்தது கதவைத் திறந்தாள்.

"ராஜாவா" அவள் கரங்களில் மல்லிகைச் சரம் ஊசலாடிக் கொண்டிருந்தது.

"தங்கம்..." அவனுக்குப் பேச வரவில்லை.

"உள்ளே வரலாமே" என்றாள் புன்னகையுடன்.

"இப்படியா கூப்பிடறது? கையிலிருக்கிற மாலையைக் "கழுத்திலே போட்டுக் கூப்பிடுவாயா?" என்று தாழ்வாரத்திலிருந்து கூவினான் சாரங்கன்.

ராஜாவின் உடல் முழுதும் ஒருமுறை குலுங்கிற்று.

அசட்டுப் புன்னகையுடன் உள்ளே நுழைந்தான். அவள் அறைக்குள் நுழைந்ததும் கதவை மூடித் தாழிட்டாள் தங்கம்.

'ஏன்' என்பது போல் அவன் திரும்பிப் பார்த்தான். அவள் சிரித்தாள்.

"நாம் பேசுவதை அவர்கள் கேட்டு விட்டால்?”

“நாம் இப்பொழுது என்ன பேசப்போகிறோம்?”

“பின் எதற்காக வந்தீர்களாம்?”

“உன்னிடம் சில சங்கதிகள் சொல்லத்தான்...”

"அதை அவர்கள் கேட்கக் கூடாதல்லவா? அதற்காகத் தான். அதுவுமில்லாமல் எனக்கு இவர்களை கொஞ்சம் கூட பிடிக்கவில்லை."

'சரி, அதற்கென்ன ஒரு இரவு பூராவும் இருக்கவில்லையா?' என்று தனக்குள் முணகிக் கொண்டான் ராஜா.

அவள் தூணோரமாக உட்கார்ந்து பூத்தொடுக்க ஆரம்பித்தாள். அவள் கைகள் சந்தோஷ மிகுதியால் நடுங்கின. அவள் கண்கள் அடிக்கடி அவன்பால் சென்று சென்று மீண்டன. அவனோ கூரை முகட்டைப் பார்த்த வண்ணம் மௌனமாய், செய்வதறியாது ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.

"உனக்கு இவர்களைப் பிடிக்கவில்லையா...? அப்படியென்றால் உன்னை இங்கேயே இருக்கவேண்டுமென்று சாரங்கன் கட்டாயப்படுத்துகிறானா...?”

"அப்படியானால்தான் தப்பி ஓடலாமே! உங்களுக்காக என்னை இங்கேயே இருக்கச் சொல்லி வற்புறுத்துகிறான். இதற்கு என்ன செய்வது?”

"ஆமாம், தங்கம். நான் உன்னைக் காதலிப்பதாக அவன் நினைக்கிறான். இல்லாவிட்டால் அவன் முன் போலவே மாறிவிடுவான். ஆகையால் நாம் ஒருவரை ஒருவர் காதலிப்பதாக நடிக்க வேண்டும்.”

அவள் அதற்கு ஒன்றும் பதில் பேசவில்லை, அவள் பார்வை அவனிடம் எதையோ மானசீகமாக யாசித்தது.

“ஆமாம்; நடிக்க வேண்டும்...” என்று தனக்குள் முணு முணுத்தான் ராஜா.

“நடிப்பு, என்றைக்காவது ஒரு நாள் பொய்யாகிடும்!” என்றாள் தங்கம்.

"ஆகட்டுமே, அதற்குள் நம் காரியம் நடந்தால் சரிதான்.”

"நம் காரியம்! - அதென்ன?”

“இங்கிருந்து தப்பிச் செல்வது?”

"இனிமேல் அதற்கு அவசியம் இல்லை. இஷ்டப் பட்டால் நாமே இப்பொழுதே வெளியேறி விடலாம். இங்கிருந்து வெளியேறி, பிறகு எங்கு போவது? நீங்கள் என்னுடன் வரமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் என்ன இருந்தாலும் பெரிய வீட்டுப் பிள்ளை" அவள் குரல் நிஷ்டூரமாக ஒலித்தது.

"நீங்கள் இல்லாமல் நான் மட்டும் எங்கு போவேன் என்று நினைக்கிறீர்கள்? ராஜா... உங்களைத்தான் நான் நம்பி இருக்கிறேன். எனக்கு உங்களைத் தவிர வேறு யார் கதி...? நீங்கள் என்னிடமிருந்து விலகி விலகிப் போனால் பிறகு நான் என்ன செய்வது?” அவள் பேசிக் கொண்டே அழுதாள்.

"தங்கம், நீ என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?”

அவளது நீர் நிறைந்த விழிகள் அவனை நோக்கித் திரும்பின. எழுந்து அவன் அருகே வந்தாள். அவன் தோள்களின் மீது கைகளை வைத்து, "ராஜா...” என்றாள்.

அவள் கைகளை விலக்கினான் ராஜா.

"ராஜா, முன்பு நாம் தீர்மானித்தது போலவே எங்காவது போய் எப்படியாவது ஒன்றாக வாழ்வோம், என்ன சொல்றீங்க?” அவன் கரங்களைப் பற்றிக்கொண்டு கெஞ்சினாள் அவள்.

"நான் உன்னோடு எவ்வளவு நாட்கள் இருக்க முடியும்?" அவன் சிலை மாதிரி நின்று உணர்ச்சியற்றுப் போன குரலில் பேசினான்:

"ஆமாம் - நான் உன்னை நேசிக்கிறேன். காதலிக்கவில்லை!"

"என்ன? நீங்கள் 'நடிக்க வேண்டும்'னு சொன்னது உண்மையாகவேதானா..." அவன் கரங்களைப் பற்றியிருந்த அவள் கரங்கள் வெடுக்கென விலகின. இரண்டடி பின் நகர்ந்தாள். அந்தத் துயரத்தை அவளால் தாங்க முடியவில்லை. பின்புறமிருந்த தூணில் சாய்ந்து நின்று கொண்டாள். அவள் கண்கள், ராஜாவின் முகத்தை வெறித்து நோக்கின. தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்தது; உதடுகள் துடித்தன. அவள் மனம் குமுறி அழுதாள். அவன் மரமாய் நின்றான். அவள் மீது அவனுக்குக் கருணையிருந்தது! அதனால் அவள் கண்ணீர் விடுவதற்காக அவன் வருந்தினான்.

அவள்மீது அவனுக்குக் காதல் இல்லை. அதனால் அவள் கண்ணீரை அவனால் துடைக்க முடியவில்லை.

"தங்கம்!"

அவள் பதில் பேசாமல் நின்றிருந்தாள்.

"தங்கம், உனது அன்புக்கு நான் மரியாதை செலுத்துகிறேன். நான் காதலிக்கிறேன் என்று நினைத்து நீயும் தவறாகவே என்னைக் காதலிக்க ஆரம்பித்தாய். அதனாலென்ன, தவறைத் திருத்திக் கொள்வோம்...!"

"தவறு... தவறான காதல்... என் கடந்த கால துரதிர்ஷ்டவசமான நடத்தையைத் தயவு செய்து குத்திக் காட்டாதீர்கள்...! உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்" என்று கண்களில் நீர் வழிய, கை கூப்பினாள். ஆனால் அவள் வாய் வேறு என்னவோ பிதற்றிற்று.

"இல்லையில்லை; நான் உன் மனம் சங்கடப்பட வேணும் என்று நினைச்சு எதுவும் சொல்லவில்லை."

"நீங்கள் என்ன நினைச்சு எதைச் சொன்னாலும், என் மனத்தின் வேதனை எப்படியும் தீராது!"

அவன் தலை குனிந்து நெற்றியைத் தேய்த்துக் கொண்டான். நாற்காலியில் இப்படியும் அப்படியும் மாறி மாறி உட்கார்ந்தான்.

அவள் மௌனமாய் நின்று தனக்குத்தானே பேசிக் கொள்வது போல் கண்களில் கண்ணீர் வழிய புலம்பிக் கொண்டே இருந்தாள். அவள் உணர்ச்சி அவளுக்கு வயப்படாமல், அவளை வயப்படுத்திற்று.

அவள் ஜ்வர நிலையில் பிதற்றிக் கொண்டிருந்தாள்.

"எனக்கு யாருமில்லை; நான் அனாதை; கெட்டுப் போனவள்; ஓடுகாலி. யாரையும் விரும்ப எனக்கு அருகதையில்லை; நான் எல்லாரைக் காட்டிலும் தாழ்ந்தவள். என்மீது யாருக்கும் காதல் பிறக்க வேண்டாம். வேண்டவே வேண்டாம். நான் எப்படியும் வாழ்ந்துவிட்டுப் போகிறேன். ராஜாவுக்கு என் மீது அனுதாபம்! ஹும், அனுதாபம்! என் மனம் வெறுக்கும் சிதம்பரம் பிள்ளையின் இச்சைக்குப் பலியாவதைவிட, மோசமானது, என் மனம் காதலிக்கும் ஒருவரின் அனுதாபத்திற்கு நான் பலியாவது! யாருடைய அனுதாபமும் எனக்குத் தேவையில்லை. நானும் மனித உயிர்தான். ஒருவரின் அனுதாபம் எனக்குத் தேவையானால், எனது அனுதாபமும் இன்னொருவருக்குத் தேவை தான். அனுதாபம்; சீ, என்ன அவமானம்! யாருடைய உறவும் வேண்டாம். ராஜா! தயவு செய்து நீங்கள் போகலாம். உங்கள் உதவிகளுக்கு நன்றி. நீங்கள் போகலாம், போங்கள்! போய்விடுங்கள் -"

"தங்கம்!"

"போய்விடுங்கள்... என் எதிரில் நின்று என்னைச் சித்ரவதை செய்ய வேண்டாம்...! என் உணர்ச்சிகளைச்

சோதிக்க வேண்டாம்... ராஜா... ராஜா"

அவள் அவனை, அவன் உட்கார்ந்திருந்த இடத்தைப் பார்த்தாள்.

அவன் போய் விட்டான்! அறைக் கதவு திறந்து கிடந்தது.

"ராஜா..." அறைக்கு வெளியே போய்ப் பார்த்தாள். அவன் சத்திரத்தைவிட்டு வெளியேறி, பெரிய சாலையில் போய்க் கொண்டிருந்தான். அவன் நடையில் என்ன வேகம்!

அவள் மனம் குமுறிக் குமுறி ஓலமிட்டது!

"ராஜா, நான் நன்றிகெட்டவள்... என்னை மன்னித்து விடுங்கள்...” அவள் தன் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

அவள் இதயத்தில் அடைபட்டுக் கிடந்த உணர்ச்சிக் குமுறல்கள் எல்லாம் மருகிச் சிதைந்த ஓலம் அந்த அறையின் சுவர்களுக்கு மட்டும் தெரியும். சுவர்களுக்கு இதயம் கிடையாது. மனிதர்களுக்குத்தான் உண்டு என்ற விஷயம் அவளுக்கும் தெரியும். அதனால்தான் தனிமையில் அந்த அறையில் அவளால் மனம் விட்டு அழ முடிந்தது.

அழுகை! - அவளுக்குக் கிடைத்த ஒரே வரப்பிரசாதம்

*****

# 18

ராஜா வீடு திரும்பும் பொழுது இருட்டிவிட்டது. நல்ல இருட்டு! கோயிலைச் சுற்றி விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. கோயிலில் சந்தியா கால பூஜையின் 'கணகண'ப்பு ஒலித்துக் கொண்டிருந்தது. ராஜா வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

வழியெல்லாம் அவன் மனம் ஏதேதோ புலம்பிக் கொண்டிருந்தது.

'யாரும் யாரையும் காப்பாற்றியதில்லை; உதவிதான் செய்யலாம்.'

'கருணை! கருணை புரிய நீ யார்?'

'நான் கருணை புரியவில்லை? ஒருவருக்கொருவர் உதவி புரிவது மனித இயல்பு. உதவி புரியவேண்டும் என்பது கடமை.'

'ஆதரவற்ற, தனியாளான ஒரு பெண்ணை உன்னைப் போன்ற - வாழ்க்கையை உணர்ந்த உன்னைப் போன்ற - மனிதன் காதலிப்பது கடமையல்லவா?'

'காதலிப்பது கடமையென்று சொல்வதா?'

'இல்லை. அவள் உன்னைக் காதலிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொண்டுவிட்டு - அதன் பிறகு...?'

'காதலிக்கக்கூடிய சந்தர்ப்பங்களையா? நானா இல்லை, இல்லவே இல்லை...'

'அன்று மழையில் அவள் கரம்பற்றி நடக்கவில்லையா? அவள் தன் வாழ்க்கையை உன்னுடனேயே கழித்து விடலாம் என்ற நம்பிக்கையை நீ ஏற்படுத்தவில்லையா? தான் 'பாக்கியசாலி' என்று அவள் இதயம் கனிந்து பெருமிதத்துடன் கூறிக்கொண்ட பொழுது அவள்

நிலையைப் பற்றி நீ புரிந்து கொள்ளாதது யார் தவறு? ஒரு வாலிபன் ஒரு யுவதியுடன் சேர்ந்து வாழலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி, அவள் கரம் பற்றி வழி நடந்த பிறகு அவர்கள் காதலிக்கவில்லையென்றால் யார் ஒப்புக் கொள்வார்கள்...?'

'பாவம் தங்கம்!' என்று தனக்குள் முணகிக் கொண்டான் ராஜா.

'யாருடைய அனுதாபமும் எனக்குத் தேவையில்லை!' என்ற தங்கத்தின் குரல் அவன் செவிகளில் ரீங்காரமிட்டது. அவன் மனத்தை இரும்பாக்கி அவளை மறக்க முயன்றான்.

அவன் வீட்டையடையும்போது மணி எட்டு அடித்தது. நேரே மாடிக்குச் சென்று புத்தக அறைக்குள் போய் அங்கு கிடந்த சோபாவில் சாய்ந்து கொண்டான். மனம் ஒரு நிலையிலில்லை! "என்ன, சினிமாவுக்குப் போகலையா?" என்ற குரல் கேட்டுத் தலை நிமிர்ந்து பார்த்தான். அறை வாசற்படிக்கு வெளியே நின்றபடி, அறைக்கதவுகள் இரண்டிலும் கைகளை ஊன்றி தலையை உள்ளே நீட்டிப் புன்னகை தவழும் முகத்துடன் நின்றிருந்தாள் கீதா!

"உம்... உம்..."

"என்ன 'உம் உம்'?"

"தலைவலி..."

"தலைவலியா? காபி கொண்டு வரட்டுமா? சாயங்காலம் காப்பிகூட குடிக்காமெ அவசர அவசரமா ஓடிட்டியே... கொண்டு வரட்டா?"

"உம், கொண்டு வா."

"தலைவலிச்சா... அழற மாதிரி இருக்கியே... ஒரு வேளை அழறியோ...?"

"அடாடா... வம்பு பண்ணாமக் கொண்டு வாயேன்" என்று வலியச் சிரித்தான். கீதா காப்பி கொண்டுவர ஓடினாள்.

சற்று நேரத்திற்குப் பின் கையில் காப்பியுடன் கீதா அவன் அறையில் பிரவேசித்தாள். காப்பியை வாங்கிக் குடித்த ராஜா, "என்ன கீதா, காப்பி ரொம்ப இனிக்கிறது...?” என்று முகம் சுளித்தான்.

"இல்லையே, உனக்குச் சர்க்கரை பிடிக்காதுன்னு ஒரு கரண்டிதானே போட்டேன்...”

"அப்படியா...? பின்னே ஏன் இப்படி இனிக்கிறது?”

“இருக்காதே... நான்தானே போட்டேன்...”

“ஓ...! நீயா போட்டே? அதுதான்..."

"என்ன அதுதான்?”

"உன் கைப்பட்டா சர்க்கரை இல்லாமலே காப்பி இனிக்குமே...!” என்று சொன்னவுடன் அவள் முகம் ஏன் அப்படிச் சிவந்து விட்டது? - அவள் முகம் கவிழ்ந்தது.

அவன் நெஞ்சில் என்னவோ குத்திவிட்டது போன்று உதட்டைக் கடித்துக் கொண்டான். தான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது என்று தோன்றியது அவனுக்கு. அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. கீதா தம்ளரை எடுத்துக் கொண்டு மௌனமாக அறையிலிருந்து வெளியேறினாள்.

'அவளுக்கு என் மீது கோபமா...?

"கீதா...!” என்று கூப்பிட்டான்.

அவள் பழைய முகமலர்ச்சியுடனேயே திரும்பினாள்.

“என்ன?”

“போய்விட்டுத் திரும்பி வருகிறாயா...?”

“ஏன்?”

“உன்னிடம் ஒரு விஷயம் சொல்லலாம் என்று...”

அவள் முகம் மீண்டும் கவிழ்ந்தது.

"அது இல்லை கீதா…”

“எது இல்லை!” என்று முணுமுணுத்தது அவள் மனம்.

"அன்னிக்குத் துலுக்கன் சத்திரத்து ரௌடியிடம் சிக்கிக் கொண்டாளே ஒரு பெண் அவளைப்பற்றி…”

"இதோ வர்ரேன்…”

"இதை ஏன் அவளிடம் சொல்ல வேண்டும்?” என்று மனம் கிளர்ந்தாலும் யாரிடமாவது இதைச் சொல்வதன் மூலம் ஏதோ ஒரு ஆறுதல் - தான் குற்றமற்றவன் - என்ற உணர்வு ஏற்படும் போல் தோன்றியது.

கீதா வந்தாள்!

"அவள் என்ன ஆனாள்…?”

“ஒண்ணும் ஆகல்லே…”

“பின்னே? -உனக்கு அவளை எப்பிடித் தெரியும்?”

"ஒருநாள் ராத்திரி…” என்று அவன் கதை சொல்ல ஆரம்பித்தான். அவனுக்கு எதிரே ஒரு நாற்காலியில் உட்கார்ந்து அவன் சொல்வதை வியந்து, பயந்து கேட்டுக் கொண்டிருந்தாள் கீதா.

மணி ஒன்பது அடித்தது.

"இப்படி ஒரு தர்மசங்கடம்…” என்று கடைசியாகச் சலித்துக் கொண்டான் ராஜா.

"சரி அவளேதான் உன்னைப் 'போயிடு'ன்னு சொல்லிட்டாளே… இனிமே என்ன அவளைப்பற்றி…?" என்றாள் கீதா.

"பாவம்!”

“பாவம்தான்! யார்... என்ன செய்வது?”

"கீதா" என்று கீழேயிருந்து அபிராமியின் குரல் ஒலித்தது!

“இதோ வந்துட்டேன்.”

“கீதா, யாருகிட்டேயும் சொல்லிடாதே...!”

"இதோ, இப்போ போய்ச் சொல்றேன்...” என்று துள்ளி ஓடினாள் கீதா.

"கீதா... கீதா...”

அவள் 'தட தட'வென மாடிப்படிகளில் இறங்கிப் போய்விட்டாள்.

"நான் ஒரு முட்டாள். இவளிடம் போய்ச் சொன்னேனே...” என்று முணகினான் ராஜா.

*****

# 19

அன்று மத்தியானம் வேதாசலம்பிள்ளை வெளியே போய்விட்டு வரும்போது வழியில் சிதம்பரம் பிள்ளையைச் சந்திக்க நேர்ந்தது. பரஸ்பரம் குசலப் பிரச்னம் முடிந்ததும் வேதாசலம் பிள்ளையவர்கள் தமது தத்துவ விசாரத்தைத் தொடங்க ஆரம்பித்தார்.

'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ்வுலகு' என்று வேதாசலம் பிள்ளை திருக்குறள் வியாக்கியானம் ஆரம்பித்ததற்குக் காரணம் ஹிந்து மதத்தை நிலைநிறுத்துவான் வேண்டியே...

சிதம்பரம் பிள்ளை, ஊரிலே எவனோ செத்துப் போன சாதாரண விஷயத்தை இவரிடம் சொல்லப்போக, மனுஷன் பெரிய பெரிய தத்துவ முடிச்சுகளையெல்லாம் போட்டு இறுக்க ஆரம்பித்து விட்டார்.

சிதம்பரம் பிள்ளை திணறிப் போனார்.

"பாருங்கள். இதே விஷயத்தைச் சங்கராச்சாரியார் சொல்லியிருக்கிறார்: 'புனரபி ஜனனம் புனரபி மரணம், புனரபி ஜனனீ ஜடரே சயனம்'- நேற்றிருந்தவன் இன்றில்லாமல் மறைந்தது எவ்வளவு ஆச்சரியம் - அதே போல் நேற்றில்லாதவன் இன்று தோன்றுவதும். உயிர் ஒன்றே - ஜனனமும் மரணமும் மாறி மாறி வருகிறது. இதுதான் உயிர்களின் துன்பம். பாசங்களைக் களைந்து பகவானை அடைந்த உயிர்களுக்கு இந்நிலை ஏற்படுவதில்லை - இதையே வள்ளுவர் கூறுகிறார் பாருங்கள்; "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்றும் நிலையாமை காணப்படும்" வேதாசலம் பிள்ளையவர்களின் விஷய ஞானம் சிதம்பரம் பிள்ளைக்கு ஆங்கிலத்தை லத்தீன் பாஷையில் விளக்குவது போலிருந்தாலும் கௌரவத்திற்காக 'ஆமாம், ஆமாம்; த்ஸொ த்ஸோ'வென்று சிலாகித்துக் கொண்டே அவரைப் பின் தொடர்ந்து வந்தார்.

இருவரும் பேசிக்கொண்டே வேதாசலம் பிள்ளையின் வீட்டருகே வந்து விட்டனர்.

“அப்போ, நான் வரட்டுங்களா? இன்னொரு சமயம் பார்க்கிறேன்" என்று நமஸ்காரம் செய்தார் சிதம்பரம் பிள்ளை.

"அடடே ரொம்ப நல்லாயிருக்கே... இவ்வளவு தூரம் வந்துட்டு... வாங்க உள்ளே போவோம்" என்று வீட்டுக்குள் அழைத்து வந்து வராந்தாவில் கிடந்த சோபாவில் உட்காரச் சொல்லிவிட்டு,

"அடியே... சிதம்பரம் அண்ணா வந்திருக்காரே" என்று அபிராமியை கூப்பிட்டார் வேதாசலம்.

"வாங்க அண்ணா... இந்தப் பக்கமே காண்றது இல்லையே" என்று ஈரக் கைகளை முந்தானையில் துடைத்துக் கொண்டாள் அபிராமி.

"என்ன பண்றது வேலை ஒழியறதில்லை...”

"அன்னைக்கு அண்ணியெக் கோவில்லே பார்த்தேன்... எல்லாம் சவுக்கியம் தானே...? தம்பி என்ன பண்ணுது...?"

"இருக்கான் இன்னும் பொறுப்பு ஏற்படலே”

"எல்லாம் காலா காலத்திலே ஒரு கட்டுப்போட்டா தன்னாலே பொறுப்பு வந்துடும்..."

“ஆமா ஆமா... என்ன, தங்கச்சி சொல்றதைக் கேட்டீங்களா...? இனிமே ஒங்க சம்மதம்தான் பாக்கி...” என்று வேதாசலத்தைப் பார்த்துச் சிரித்தார் சிதம்பரம்.

"எல்லாம் பகவான் அனுக்ரஹம்போல் நடக்கும் - ”

“பகவான் அனுக்ரஹம் இருக்கட்டும். ஒரு நாளைக்கு அண்ணியை அழைச்சுக்கிட்டு வாருங்க... பேசிடுவோம். அவளும் பத்தாவது வரை படிச்சாச்சு...”

“அது இருக்கட்டும் அவுங்களுக்கு ஏதாவது கொண்டு வா?”

"ஒண்ணும் வேண்டாம்...”

“இருக்கட்டும் சம்மந்தி...”

"தண்ணீர் குடுங்க போதும்... உஸ்... என்ன வெய்யில்!” என்று அங்கவஸ்த்திரத்தால் விசிறிக் கொண்டார் சிதம்பரம்.

"அப்போ மோர் கொண்டு வர்ரேன்" என்று அபிராமி உள்ளே நுழைந்தாள்.

"முத்தி நெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனே...” என்று முணுமுணுத்துக் கொண்டு தோட்டத்திலிருந்து உள்ளே வந்த ராஜா, சிதம்பரம் பிள்ளையைக் கண்டு திடுக்கிட்டு நின்றான்.

அவரும் அவனை விழித்துப் பார்த்தார்.

"என்ன அப்படிப் பாக்கறீங்க, நம்ம பையன்தான். தெரியலையா? லட்சுமி மகன்... ஊர்லேருந்து வந்திருக்கான்...” என்று அறிமுகம் செய்வித்தார் வேதாசலம். ராஜா அவருக்கு நமஸ்காரம் செய்தான்...

இரண்டு உள்ளங்களிலும் இரண்டு விதமான புகைச்சல்! ராஜா அங்கு நிற்க விரும்பாமல் மாடிக்குப் போய் விட்டான்.

"பையன் என்ன படிச்சிருக்கான்..." என்றார் சிதம்பரம்.

"படிப்புக் குறைவுதான்... நல்ல புத்தி இருக்கு எப்பப் பார்த்தாலும் படிச்சிக்கிட்டுத்தான் இருப்பான்... வீணா, படிக்க வைக்காம லட்சுமி கெடுத்துட்டுது. எல்லாம் தகப்பன் இருந்தால்...” என்று பெருமூச்சு விட்டார் வேதாசலம்.

அபிராமி கொண்டு வந்த மோரைக் குடித்துவிட்டு விடை பெற்றுக் கொண்டார் சிதம்பரம்.

"இப்படிக் கொஞ்சம் வெளியே வாரீங்களா, ஒரு சமாச்சாரம்...” என்று போகும்போது வேதாசலத்தைத் தனியே அழைத்தார். அந்த அழைப்பு மாடிப்படியில் நின்றிருந்த ராஜாவுக்கு வயிற்றைக் கலக்கியது. "அட சொல்லட்டுமே... எனக்கு நான் நல்லவன். யாரு எப்படியும் என்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளட்டும்!” என்று முணகிக் கொண்டே மாடிக்குப் போய்விட்டான்.

சற்று நேரத்திற்குப்பின் வேதாசலம் பிள்ளை, மாடியில் ராஜா உட்கார்ந்திருந்த புத்தக அறைக்குள் பிரவேசித்தார். என்றுமில்லாதவாறு - முகத்தில் மகிழ்ச்சி குன்றி, புன்னகை இன்றி அவன் எதிரில் வந்து நின்றார். தத்துவ உபதேசம் புரியும் நிலையில் அவர் இல்லை என்பது அவனுக்குத் தெரிந்தது. அவன் அவரைப் பார்த்தான். அவன் முகம் கறுத்தது. சற்று தூரத்தில் புத்தக அலமாரியின் அருகே நின்றிருந்த கீதா சற்றே கலவரமடைந்தாள். அந்தச் சூழ்நிலை விவரிக்க இயலாத மனக்குமைச்சலைப் பிரதிபலித்தது.

வேதாசலம் பிள்ளை ஒன்றும் பேசாமல் கண்களை மூடி யோசனையில் ஆழ்ந்தார். ஒவ்வொரு வினாடியும் ஏதோ விபரீதத்தை எதிர்நோக்கி நின்று கழிந்தது.

"ராஜா...” என்ற வேதாசலம் பிள்ளையின் குரல் கரகரத்து ஒலித்தது.

அவன் தலை நிமிர்ந்து அவரைப் பார்த்தான்.

"நேற்று நீ எங்கு போயிருந்தாய்?"

அவன் மௌனமாய் நின்றான்.

“நீ துலுக்கன் சத்திரத்துக்குப் போயிருந்தாயா?”

"ஆமாம்" - அவன் தலையசைத்தான்.

“நீ அங்கேயே தங்கி இருந்ததுண்டா?”

“ஆமாம்...”

“அவளைப் பார்க்கத் தானே நீ போனாய்?”

“எவளை?”

"உன் சிநேகிதியை...” அவர் முகம் அருவருப்பால் சுளித்தது.

"ஆமாம்?”

"நீ அங்கே தங்கியிருந்த விஷயத்தை என்னிடம் ஏன் சொல்லவில்லை? - உன் கேவலமான ரகசிய உறவு தெரிந்துவிடும் என்றுதானே... நீ என்னை ஏமாற்றியதாக நினைக்கலாம். ஒருவன் மறைத்துவிட்டால் உண்மை மறைந்து விடுமா...?”

“நான் உங்களை ஏமாற்றவுமில்லை. ஏமாற்றியதாக நினைக்கவுமில்லை - என்னை மன்னித்து விடுங்கள்!” அவன் வார்த்தைகள் நடுங்கின.

"தவறுகளிலும் தூய்மை உண்டு. நீ அறியாமல் செய்யப்படும் தவறுகளே மன்னிக்கப்படும். எப்பொழுது உனது தவறுகளைப் பகிரங்கமாக நீ கூறிக்கொள்ளவில்லையோ அப்பொழுதே உன்னிடம் தூய்மை இல்லை என்றாகிறது. நீ என்னை ஏமாற்றிவிட்டாய். நீ இவ்வளவு மோசமானவன் என்று நான் நினைக்கவில்லை. உன் தந்தையைப் போன்ற நல்லவர்களுக்கு உன்னைப் போன்ற பிள்ளைகள் பிறக்கக் கூடாது! அட பாவி! உனக்கு நரகம்தான் கிடைக்கும்” - அவர் மனம் குமுறிப் பேசினார். அவன் தலைகுனிந்து கண்ணீர் வடித்தான்.

"மாமா... உங்களிடம் சொல்லாதது தவறுதான். நான் தவறு செய்துவிட்டேன்" என்றான் தழுதழுத்த குரலில்.

"என்னால் உன்னை மன்னிக்க முடியாது! பகவானைத் துதிசெய். மன்னிப்புக் கிடைக்கலாம்" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டார் அவர்.

“நான் நடந்ததைச் சொல்கிறேன்" என்று ஏதோ கூற முயன்றான் ராஜா.

"போதும் இதைப்பற்றி இனிமேல் எதுவும் கூறவேண்டாம்; போதும் போதும்" என்று காதுகளைப் பொத்திக் கொண்டு அங்கிருந்து வெளியேறினார் வேதாசலம்.

மாடிப்படியிலிருந்து மௌனமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அபிராமி உள்ளே வந்து நின்றாள்.

"எனக்கு அப்பவே தெரியும் - உன் முகத்தைப் பார்த்தப்பவே கொலைகாரன் மாதிரிதான் இருந்திச்சு! உங்க மாமாதான் தங்கச்சி மகனை தலையிலே தூக்கி வச்சிட்டு ஆடினார். பாத்தா பூனை மாதிரி இருக்கிறவனை நம்பக் கூடாது. வந்து பிறந்தியே அவளுக்குன்னு..." என்று காற்றைக் கையால் துழாவி வசை பாடிவிட்டுக் கீழே போய்விட்டாள் அபிராமி.

பொங்கி வரும் அழுகையை அடக்க முடியாமல் தன் அறைக்குள் நுழைந்தாள் கீதா!

ராஜா மௌனமாய் நின்றிருந்தான். இரண்டு நாட்களுக்கு முன் அவன் தாயிடமிருந்து வந்த கடிதம் நினைவுக்கு வந்தது. சட்டைப் பையிலிருந்து கடிதத்தை எடுத்துக் கண் கலங்கப் படித்தான்:

"பிரியமுள்ள ராஜாவுக்கு உன் அம்மா ஆசீர்வாதம் செய்து எழுதுவது:

உன் மாமா எழுதிய கடிதம் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி. நீ என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் தேசாந்திரம் போனது பற்றி எனக்கு வருத்தமில்லை. நான் எந்தக் காலத்திலும் யாரையும் நம்பி வாழ்ந்ததில்லை. தாலி கட்டிய கணவரே என்னைக் கைவிட்ட பிறகு யார் தான் சதம்?

மாமா வீட்டில் நீ மகிழ்ச்சியுடன் இருக்கிறாய் என்று கேள்விப்பட எனக்கு மிக்க மகிழ்ச்சி. மாமா நல்லவர்; என்றாலும் மனித குணம் நாளடைவில் கைத்துவிடும்!

நீ சிறு குழந்தையல்ல; உன் உசிதம் போல் நீ நடக்கலாம். நீ என்னதான் பெரிய மனிதனாக வளர்ந்தாலும் எனக்குக் குழந்தைதான். நான் உன் மனம் நோகும்படி என்னதான் செய்திருந்தாலும் தாயன்பு உனக்கு வேறு எங்கும் கிடைக்காது. நீ என்னிடம் என்னதான் கோபமாக இருந்தாலும் எனக்கு வேறு ஒரு மகன் கிடைக்கமாட்டான். உனக்கு எப்பொழுதாவது இங்கு என்னிடம் வர வேண்டும் என்று தோன்றினால் உடனே வந்துவிடு. மாமா என்னைக் கூப்பிட்டு எழுதி இருந்தார்; வர இயலவில்லை என்பதற்காக மன்னிக்கச் சொல்!

மாமாவிடம் சொல்; 'பெற்ற தாயிடம் கௌரவம் பாராட்டும் உலகில் வேறொருவன் வீட்டுக்குப் போய் விட்ட பெண் தன் சகோதரனிடத்தில் கௌரவம் பாராட்டுவது ஆச்சரியமில்லை'யென்று நீயே சொல்!

உன் பிரிய அம்மா,

லட்சுமி"

கடிதத்தின் ஒவ்வொரு வாசகமும் இனிமையான தாய் கண்டிப்புடையதாய், சுயகௌரவம் மிகுந்ததாய் இருந்தது!

"இப்படிப்பட்ட ஒரு தாய் - என் பாக்கியம்தான்!" என்று சிரித்தான் அவன்.

"அதெல்லாம் உன் தகப்பனாரிடமிருந்து பெற்ற ஞானம். உன் தகப்பனார் தனது ஞானச் செல்வத்தை உனக்கும் உன் தாய்க்குமாகப் பகிர்ந்தளித்து விட்டுப் போய் விட்டார்!" என்று என்றோ ஒருநாள் அவன் மாமா சொன்னபோது மகிழ்ந்து போனான் ராஜா! அதே மாமா சற்று நேரத்திற்கு முன்...

'நான் உண்மையிலேயே தவறு செய்திருந்தாலும் என்னை மன்னிக்கக் கூடாதா - '

'மன்னிப்பு, தத்துவங்களிலும், இதிஹாஸங்களிலும் எவ்வளவு தாராளமாக அனுமதிக்கப்படுகிறது!

வாழ்க்கையில்?’

'சமூகம் வேறு; சமூக நெறி வேறு' -

'பெரிய பெரிய ஞானிகளால் கட்டுப்பாடாக வளர்க்கப் பட்ட இந்தச் சமூகத்தில்தான் சாரங்கனும் இருக்கிறான். ரஸியாவும் காமாட்சியும் தங்கமும் இருக்கிறார்கள். அவர்கள் இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா?'

'சமூகத்தால் கடைப்பிடிக்க முடியாததுதான் சமூக நெறியோ? வாழ்க்கையில் கடைப்பிடிக்க முடியாத கனவுகள்தான் தத்துவமோ? - அதென்ன தத்துவம்? அதென்ன வாழ்க்கை?' -

'மாமாவின் குணமும், மாமியின் அன்பும் இவ்வளவு தானா?'

'சீ - என்ன மனிதர்கள்? என்ன வாழ்க்கை? - என்ன சமூகம்?'

'இவர்கள் என்னை மன்னிக்கமாட்டார்கள்!' என்று தனக்குள் முணகிக் கொண்டான் ராஜா.

'மன்னிப்பு! - ஹும்! இவர்கள் யார் என்னை மன்னிக்க? நான் யாரிடமும் மன்னிப்பை எதிர்பார்க்கவில்லை. மனிதன் நல்லவனாக, உண்மையில் நல்லவனாக வாழவேண்டும் என்றால் அவன் தவறுகள் செய்யவும் அனுமதிக்கப்பட வேண்டும். அது இயல்புதான் என்று உணரவேண்டும். இவர்கள் ஆயிரம் ஆயிரம் தத்துவங்களில் சஞ்சரித்தாலும் இவர்களின் தத்துவங்கள் வாழ்க்கைக்குப் பயன்படாத தத்துவங்கள்தான். வாழ்க்கைக்குத் தேவையற்ற வெறும் மாயாவாதங்கள்தான். வாழ்க்கையின் குருரங்களை மனிதக் கண்களால் பார்த்து உணரும் அளவுக்குப் பண்படாத மனிதர்கள். இவர்கள் யாரையும் மன்னிக்க மாட்டார்கள்! இந்த வரட்டு வேதாந்திகளால் வாழ்க்கையை உணரவும் முடியாது - '

அவன் தனக்குள் ஏதேதோ சிந்தித்த வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

'உனக்கு எப்பொழுதாவது என்னிடமே திரும்பி வந்து விடவேண்டும் என்று தோன்றினால் உடனே வந்துவிடு!' என்ற தாயின் வாசகம் அவன் செவிகளில் ஒலிக்கிறது.

தாயன்பு அவனை, அவன் எப்படிப்பட்ட குற்றவாளியாய் இருந்தாலும், தன் மகன் என்ற ஒரே பாசத்தால் 'மகனே' என்று இருகை நீட்டி அழைக்கிறது.

*****

# 20

தனிமையில் யாரும் அறியாவண்ணம் அழுது கொண்டிருந்த தங்கத்திற்கு வாழ்க்கையே அசட்டுத் தனமாகத் தோன்றியது. தன்னுடைய அசட்டுத் தனத்தினாலேயே தன் வாழ்க்கை பாழாய்ப் போய்விட்டதென்று தோன்றியது.

ராஜாவிடம் தான் நடந்து கொண்டதை நினைக்க நினைக்க அவளுக்கே தன் மீது வெறுப்பு குமைந்தது.

ராஜா தன்னைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டான் என்ற உணர்ச்சி; அந்தத் தனிமையின் சூன்யத்தில் வெறி பிடித்துவிடும் போலிருந்தது.

'ராஜாவுக்கும் தனக்கும் எவ்வித உறவுமில்லை என்ற ரகஸியம் சாரங்கனுக்குத் தெரிந்துவிட்டால்...? மீண்டும் சாரங்கன் கொடியவனாக மாறுவான்.'

அவள் யோசித்து யோசித்துப் பார்த்தாள்.

'நாம் நடிக்க வேண்டும்' என்ற ராஜாவின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

'ஆமாம், நடிக்க வேண்டும்' என்று தனக்குள் முணகிக் கொண்டாள்.

எழுந்து முகத்தைத் துடைத்துக்கொண்டு எப்போதும் போலவே நடந்து கொண்டாள்.

சாரங்கன் வந்தான்!

"எங்கே அவன்? போயிட்டானோ?”

“போயிட்டார்”

“என்கிட்ட சொல்லாமலே போயிட்டானே!”

“வீட்டிலே தேடுவாங்களாம் - இனிமே இங்கே அதிகமா வரமாட்டாரு போலிருக்கு...”

"ஏன்?"

"அவருக்கு இந்த இடமே பிடிக்கலியாம் - அதுவுமில்லாமல் அவர் என்னைக் கலியாணம் பண்ணிக்கப் போறாராம்...”

"அடி சக்கைன்னானாம் - உம், அப்புறம்?”

"அதுக்காக ஊருக்குப் போயி அவுங்க அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்து என்னை அழைச்சிக்கிட்டுப் போவாராம். அதுவரைக்கும் கூட நான் இங்கே இருக்கிறது அவருக்குப் புடிக்கலை - என்ன பண்றது?”

"பின்னே இந்தச் சத்திரம் மனுசனுக்குப் புடிக்குமா?” என்று சிரித்தான் சாரங்கன்.

“நான் கூட வெளியே போயி ஏதாவது வேலை செய்து தனியே இருக்கலாம்னு நெனைக்கிறேன்.”

"அடடே... கலியாணப் பொண்ணு வெளியே போயி வேலை செய்யறதாவது?" என்று சிரித்தான் சாரங்கன்.

"அதிலே என்ன கெட்டுப்போவுது! அதுவும் நீங்க எல்லாம் இருக்கும்போது எனக்கு என்ன பயம்? அவர் வரும்வரை ஏதாவது ஒரு குடிசையிலே இருக்கேன். அது எனக்கும் கௌரவம்...”

"அதெல்லாம் சரிதான்... நீ என்ன வேலை செய்யப் போறியாம்?”

அவள் மௌனமாய் இருந்தாள்.

"தங்கம் எனக்கொரு யோசனை தோணுது. நம்ம சந்தை மைதானமில்லே...”

"எனக்குத் தெரியாதே...”

"கோயிலுக்கு வடக்கே ஆத்தோரமா இருக்கே சந்தை மைதானம்..."

"ஆமா..."

"அங்கே மேக்காலே ஒரு நாலு சின்னக் காரை வீடு இருக்கு; அதுலே மொதல் வீட்டுக் கெழவி செத்துப் போயிட்டா... அந்த வீட்டிலே நீ இருக்கலாம்... அந்தக் கெழவி வெள்ளிக்கிழமையிலே - வாரச்சந்தை அன்னிக்கு சாப்பாடுக் கடை நடத்துவா. இப்ப யாருமில்லை. நீ அங்கே இருந்துகிட்டுச் சாப்பாட்டுக் கடை நடத்தினா என்ன?"

"சரி... அப்படியே செய்யலாம்... அதுக்கு ஏற்பாடு பண்ணுங்களேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள் தங்கம்.

"என்னத்துக்கு ஏற்பாடு?" என்று கேட்டுக்கொண்டே அங்கு வந்தாள் காமாட்சி.

"எனத்துக்கா...? ராஜா தங்கத்தை கலியாணம் கட்டிக்கப் போறான்..."

"ஓஹோ..." என்று உதட்டைப் பிதுக்கினாள் காமாட்சி.

"பின்னே நீயும் இருக்கியே... இப்பிடியா? அது பொண்ணு..." என்று சாரங்கன் கேலி பேசியதை அவளால் பொறுக்க முடியவில்லை.

"எவன் வந்து என்னை கலியாணம் செஞ்சிக்கிறதை நான் வாண்டாம்னு சொன்னேன் - "

அவள் கண்கள் கலங்கின. அவள் மனம் சபாபதியை எண்ணி வேதனையுற்றது. அவள் கண்களில் தங்கத்தைப் பார்க்கும் போது பொறாமை கொழுந்து விட்டு எரிந்தது.

"சீ - எதுக்காகச் சங்கடப்படறே? நான் சும்மா வெளையாட்டுக்குச் சொன்னேன். கலியாணம்னு பண்ணிக்கிட்டாத்தானா? இப்பமட்டும் நமக்கு என்ன கொறைவாம்?" என்று அவள் தோள் மீது கைபோட்டுக் கொஞ்சினான் சாரங்கன்.

அவள் நாணத்தோடு சிரித்துக் கொண்டாள்.

"சரி, தங்கம், அதுக்கு நான் ஏற்பாடு பண்றேன்" என்று தங்கத்திடம் கூறிவிட்டுக் காமாட்சியின் தோள் மீது கைபோட்டுக் கொண்டு அவளுடன் மாடிப்படியை அடைந்தான் சாரங்கன்.

மாடிப்படி மறைவிலிருந்து எழுந்த சிரிப்பொலி தங்கத்தின் மனசை என்னவோ செய்தது.

'காமாட்சி என்னைவிட பாக்கியசாலிதான்! அவளுக்கு இருக்கும் ஆதரவு கூட எனக்குக் கிடையாது' என்று தங்கத்தின் மனம் புலம்பியது.

'ஆதரவு' - அதற்காக அவள் இழந்திருப்பது என்ன ‘தெரியுமா?' என்று கிளர்ந்தது இன்னொரு மனம்.

'அதனால் என்ன? மானம் என்ன வேண்டிக் கிடக்கிறது. இந்த உலகத்தில்?' என்று எதிர்வாதம் புரிந்தது அறிவு.

'அப்படியானால் நானும்... நானும்' என்று தவித்தாள் அவள்.

'ஐயோ... முடியாது. நான் மாட்டேன்... அதைவிடச் செத்துப் போகலாம்' என்று திமிறியது அவள் உணர்வு.

அவள் தலையைப் பிடித்துக் கொண்டு அறைக்குள் ஓடினாள். அறைக்கதவு மூடிக் கொண்டது. மனக்கதவு திறந்து கொண்டது.

*****

# 21

தில்லையம்பதிக்குத் திரும்பிப் போய்விட வேண்டும் மென்று முடிவு கட்டிவிட்ட ராஜா. தான் போவதற்குள் தான் யாரையும் ஏமாற்றி அவர்களின் அன்பைச் சம்பாதிக்கவில்லை என்று நிரூபித்துவிட விரும்பினான்.

மாமாவுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுப் போய் விட வேண்டுமென்று முடிவு செய்தான் அவன். புத்தக அறைக்குள் நுழைந்து அங்கிருந்த மேசையின் டிராயரை இழுத்தான்.

அதனுள் கீதாவின் படம் இருந்தது. 'கீதா - அவளும் என்னைத் தவறாக நினைத்திருப்பாளோ? அப்படியானால் அவள் எனக்காக ஏன் அழ வேண்டும்?'

அவளுக்கு என் மீது என்ன அன்பு? - அந்தப் படத்தை எடுத்துச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்...! ஏன்...? என்னமோ தோன்றியது, எடுத்துக் கொண்டான். அவ்வளவுதான்!

அவன் கடிதம் எழுத ஆரம்பித்தான்:

"அன்பும் ஆதரவும் மிகுந்த பிரிய மாமா அவர்கட்கு.

உங்களிடம் இந்தக் கடிதத்தின் மூலம் விடை பெற்றுக் கொள்வதற்காக வருந்துகிறேன் மன்னிக்கவும்.

உங்களை ஏமாற்றி உங்கள் அனைவரின் அன்பையும் ஆதரவையும் நான் எத்தனை நாட்களுக்குப் பெற்று விட முடியும்.

நான் கெட்டுப் போனவன் என்று நீங்கள் முடிவு கட்டிவிட்டதைப் பற்றி எனக்கு வருத்தமில்லை. நான் உங்களை ஏமாற்றி விட்டேன் என்று தயவுசெய்து நினைக்க வேண்டாம்.

நான் 'கெட்டுப்போன’தற்கான காரணத்தை முன்னமேயே உங்களிடம் தெரிவிக்க வேண்டிய சந்தர்ப்பம் நேரவில்லை. அதைத் தெரிந்துகொண்டால் கூட நீங்கள் என்னை வெறுத்து விடுவீர்கள் என்று நான் எதிர் பார்க்கவில்லை; அது என் அறியாமை என்று இப்பொழுது உணர்கிறேன்; நான் தவறுதான் செய்துவிட்டேன்.

உங்கள் தத்துவப்படி - 'மாயையும் நானே; ஜோதியும் நானே' என்கிறான் கீதா நாயகன். அப்படியானால் இவ்வளவு நாட்கள் என் கண்களை மாயை மறைத்திருந்ததும், அதன் விளைவாய் நான் தவறுகள் செய்ததும் பகவத் பிரீதிதானே? அது எப்படியும் போகட்டும்!

புண்பட்ட என் மனதிற்குள் என் தாயின் அன்பு ஹிதமாக இருக்கும் என்று எண்ணி நான் போகிறேன். அன்புருவான உங்களுக்கும் மாமிக்கும் கீதாவுக்கும் என் இதயபூர்வமான நன்றி. நான் விடைபெற்றுக் கொள்கிறேன்.

தங்கள்

ராஜா"

கடிதத்தை எழுதி முடித்துவிட்டு ஒருமுறை படித்துப் பார்த்தான்.

"ராஜா...?” என்ற கனிவு மிகுந்த குரல் அவனைத் திடுக்கிட வைத்தது.

கண்களில் கண்ணீர் கலங்கி வழிய, பேசமுடியாமல் உதடுகள் துடிக்க அவன் பின்னே கீதா நின்றிருந்தாள்.

"கீதா... என்ன இது? ஏன் அழுகிறாய்...?"

கையிலிருந்த கடிதத்தை அவசர அவசரமாக மடித்துக் கொண்டே கேட்டான் ராஜா!

“சர்க்கரை போடாமலே இனிக்கும் என் கைபட்ட காப்பியை இனிமேல் யாருக்குக் கொடுப்பது என்றுதான்.”

"என்ன சொல்கிறாய் கீதா?”

"என்னை நீ ஏமாற்றவில்லை என்றுதான் சொல்லுகிறேன்.”

"என் தான்தோன்றித்தனமான வாழ்க்கை முறை யாருக்கும் வெறுப்பைத்தான் ஏற்படுத்தும்...”

"மாமாவைப் போன்ற தத்துவார்த்திகளுக்கு, தர்மத்தை மீறிய வாழ்க்கையை ஏற்றுக் கொண்ட மனிதர்களுடன் பழகிய நான் அதர்மவானாக, நரகத்துக்குச் செல்ல வேண்டியவனாகத்தான் தோன்றுவேன் - " வரட்சி மிகுந்த குரலில் அவன் பேசினான். அவள் இடை மறித்தாள்:

"தர்மம் மடிந்து அதர்மம் செழிக்கும்போது நான் அவதரிப்பேன்” என்று கீதாசிரியன் சொல்லிவிட்டதை நாள்தோறும் ஜபம் பண்ணுவதால் - தர்மம் எது; அதர்மம் எது என்று உணர்ந்ததாகிவிடுமா? தர்மம் ஏன் மடிகிறது? அதர்மம் ஏன் செழிக்கிறது? என்று யாராவது சொல்ல முடியுமா? தர்மமும் அதர்மமும் வாழ்வைப் பொறுத்த பிரச்னை; பரலோக சர்ச்சையல்ல... அப்பா யந்திரமாக வாழ்ந்து விட்டவர். அவருக்கு வாழ்க்கை தெரியாது...?”

அவள் பேசுவது அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. அவள் பேச்சு அவனுக்கு மேலும் மேலும் வியப்பூட்டிக் கொண்டிருந்தது.

"அப்பா சொல்கிறாரே, 'சமூகம் என்பது பன்னெடும் காலமாய் பெரிய பெரிய ஞானிகளால் வளர்க்கப்பட்டுக் கட்டுப்பாடாக இருந்து வருவது என்று... அதெல்லாம் வெறும் தத்துவம்! உண்மையில் அப்பாவைப் போன்றவர்களின், பெரிய மனிதர்களின் சமூகம் என்றைக்குமே ஞானிகளால் வளர்க்கப்படவில்லை. ஞானிகள் அதை வளர்க்க முற்பட்டார்கள் என்பது உண்மையே... அப்படிப்பட்ட ஞானிகளை அந்தச் சமூகம் பலிகொண்டது. அதன் பிறகு அவர்களின் தத்துவங்களுக்குக் கோவில் கட்டி, பூசை போட்டு, உடுக்கை அடித்துக் கொண்டிருக்கிறார்கள் அனைவரும். அவர்களில்

அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் அப்பாவும்..." அவள் பேச்சைக் கேட்டு அவன் பிரம்மித்துப் போனான். அவள் சிறிது நேரம் மௌனமாய் நின்றாள்.

"நான் சொன்னதில் ஏதாவது தவறு இருந்தால் மன்னித்து விடு!"

“அது எப்படியோ போகட்டும், மாமாவின் மனம் கைத்து விட்டது. நான் இனிமேல் இங்கு இருக்கவே முடியாது. நான் போகிறேன் கீதா.”

“அப்பாவின் மனம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி விடும். அவசரப்படாதே."

“இல்லை; நான் போகவேண்டும்!”

"வேண்டாம் ராஜா, நீ போகவேண்டாம்...” என்று அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் கீதா. அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

"இதென்ன சிறுபிள்ளைத்தனம்? இவ்வளவு நாட்களாக நாமெல்லாம் ஒன்றாகவா இருந்தோம். அது போல நினைத்துக் கொள் கீதா."

"அதெப்படி முடியும்? என் போட்டாவை மட்டும் நீ எடுத்துக்கொண்டு போவதாக நீ நினைக்கிறாய்...? நீ... என் இதயத்தையே எடுத்துக் கொண்டு போகிறாயே ராஜா...” - அவள் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டு விம்மினாள்.

"கீதா!" அவன் தொண்டை கரகரத்தது.

"கீதா, இதற்கென்ன அர்த்தம்?” அவனுக்கு ஒரு வினாடி ஒன்றும் புரியவில்லை.

அவள் அவனை முகம் நிமிர்த்திப் பார்த்தாள். அவள் கண்கள் கலங்கின. முகம் சிவந்து உதடுகள் துடித்தன. அவன் கண்களிலும் கண்ணீர் பெருகிற்று. நெஞ்சில் என்னவோ அடைத்தது. வார்த்தைகள் சிக்கின...

"நீ... நீ... என்னை... காதலிக்கிறாயா?”

"நான் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமா?” அழுகையினூடே அவள் மெல்லச் சிரித்தாள்.

'அடி கீதா... இதென்ன பைத்தியக்காரத்தனம்...’ என்று அவன் மனம் சிரித்தது.

*****

# 22

கீதா ராஜாவைக் காதலிக்கிறாள்.

அதற்கு அவன் அருகதையுடையவன்தானா? அவனுக்கு அவளுடைய காதல் பெரும் அதிர்ச்சியை அளித்தது. கீதாவை அவனும் நேசித்தான்... அவளையறியாமலே, தான் அவளுக்கு ஏற்றவன் தானா என்பதைச் சிந்திக்காமலே மனதிற்குள் அவளை அவன் காதலித்தான் என்பது உண்மைதான்.

ஆம்; அவளைக் காணுந்தோறும், அவள் வளர்ச்சியும் வனப்பும் அவன் மனத்தில் சலனங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அவள் பள்ளிக்குச் சென்றிருந்த நாட்களிலெல்லாம் அவன் தத்துவப் புத்தகங்களில் மூழ்கிக் கிடந்தாலும் 'அவள் எப்பொழுது வருவாள்? அவள் எப்பொழுது வருவாள்?' என்று, அவன் துடித்துக் கொண்டிருந்தது வெறும் பேச்சுத் துணைக்காக அல்ல; அவன் மனச் சலனத்தின் விளைவே அது! அவள் கையால் கொடுத்த காப்பி சர்க்கரை இல்லாமலே இனிக்கவில்லையா? - அங்கிருந்து சொல்லிக் கொள்ளாமல் போய்விட நினைத்த பொழுது கூட 'என்னவோ தோன்றியது? எடுத்துக் கொண்டேன்' என்ற சமாதானத்தோடு அவள் போட்டோவை எடுத்து வைத்துக் கொள்ளவில்லையா? - அவனை அறியாமலேயே அவன் அவளைக் காதலித்தான். ஆனால் அவளே, அவனிடம் 'உன்னைக் காதலிக்கிறேன்' என்று கூறுவாள் என்று அவன் கற்பனையும் செய்ததில்லை; கனவும் கண்டதில்லை!

விதியின் முடிச்சுகளை அவிழ்க்க யாரால் முடியும்? அவளைப் பிரிந்து செல்ல அவன் மனம் இடம் கொடுக்கவில்லை, என்றாலும் அவன் போயாக வேண்டும்!

"கீதா, நான் போய்த்தானாக வேண்டும்!" என்று அவளிடம் கூறியபோது அவள் கண்ணீர் விட்டாள்.

"ராஜா, இதென்ன பிடிவாதம்? இங்கிருந்து நீ போக வேண்டும் என்று யார் சொன்னார்கள்? நீ வீட்டிலேயே இருந்தால் சில நாட்களில் அப்பாவின் மனம் மாறிவிடும் நான் சொல்வதைக் கேள்..."

"என் அம்மா மட்டுமே, என்னை எந்த நிலையிலும் - நான் ஒரு பதிதன் என்று உலகமே தூற்றினாலும் ஏற்றுக் கொள்வார்கள்..."

"நானும் ஏற்றுக் கொள்வேன் ராஜா..."

"கீதா, உன் வாயால் இப்படிச் சொல்லிக் கேட்க நான் என்ன பாக்கியம் செய்தேன்..."

"நானும் பாக்கியசாலிதான் ராஜா..."

அவன் அவளை இரு கைகளிலும் வாரியணைத்துக் கொண்டான். அவன் நெஞ்சு பெருமிதத்தால் பொங்கி விம்மியது. என்ன நிம்மதி! என்ன இன்பம்!

***

'என்னையும் ஒருத்தி காதலிக்கிறாள்...!'

வாழ்க்கையே இல்லாத எனக்குக் காதல் ஒரு கேடா? வாழ்க்கையின் முடிச்சுகள் இதயத்தை உறுத்தினாலும் அதில் ரசனை இருக்கிறது. விதியை நினைத்துச் சிரிக்கலாம். அழுவதைவிட அது எவ்வளவோ மேல் அல்லவா?" அவன் தனிமையில் சிரித்துக் கொண்டான்.

மொட்டை மாடியில் நல்ல நிலவொளி! தோட்டத்துத் தென்னை மரக் கீற்றுகள் நிலவொளியில் பளபளத்தன. தூரத்தில், ஆற்றின் நீரோட்டம் பாலோட்டமாகத் தெரிந்தது. ராஜாவின் கண்கள் காரணமற்றுக் கலங்கின. சிரிக்க வேண்டும் போலிருந்தது; அழவேண்டு மென்றிந்தது - ஒரே உணர்ச்சிக் குழப்பம்! தனிமை அவன் மனசில் குறு குறுத்தது.

'என் இதயத்தில் உணர்ச்சி நரம்புகளில் ஜீவனுள்ள உதிரம் ஓடிக் கொண்டிருக்கிறதல்லவா? அதனால் அது கனவு காண்கிறது...! ஆனால் அது ஒருதுளிதான். அந்தக் கனவுத் துளி பிரளயமாக வெள்ளம் போல் கோஷித்துக் கொண்டு மகா சமுத்திரமாகப் பொங்கிப் புரளும் என்று தான் நினைத்தேனா?' - அவன் பெருமூச்செறிந்தான் முகத்தைத் தேய்த்துக் கொண்டு வானவெளியை வெறித்து நோக்கினான்!

'அந்த நப்பாசை என் ஜீவித லட்சியமாகிவிடும் என்று நான் நினைத்தேனா? பாவம் கீதா! என்னை காதலிக்கிறாள்!'

'என்னால் நீ துன்பங்களுக்கு ஆளாகப் போகிறாய்...!' உள்ளுணர்வு நடுங்கிய வண்ணம் உறுமிற்று.

'கீதா...! வாழ்க்கையில் நான் பெற்ற ஒரே பாக்கியம்' - துண்டை விரித்து மலர்ந்து படுத்தான்.

'காதல்! - எனக்குக் காதல்!' அவன் லேசாகச் சிரித்துக் கொண்டான். அவனுடைய வாழ்க்கை அவனுக்கு நினைக்க நினைக்கப் புரியாத மர்மமாய், இனந்தெரியாத சோகமாக என்னவென்று விளங்காத சூன்யமாய் அவனை மயக்கிற்று; மருட்டிற்று!

'இதுதான் வாழ்க்கையா? அப்படியென்றால் நான் வாழ்கிறேன்!' - அவனுக்கு ஒரே மயக்கமாய் இருந்தது; கண்கள் கிறங்கின.

"கீதா...!" என்று தனிமையில் வாய்விட்டுக் கூப்பிட்டான்.

"ராஜா!" அவனுக்குப் பின்னால் மண்டியிட்டு உட்கார்ந்து அவன் தலையை வருடிக் கொண்டிருந்தாள்

அவன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

"கீதா நீ கீழே படித்துக் கொண்டிருந்தாயே... இங்கே ஏன் வந்தே?"

"நீ கூப்பிட்டாயே..."

“உனக்கெப்படித் தெரியும்?”

“நான் உன்னைவிட்டு எங்கும் போகவில்லையே...”

“சரி சரி, கீழே போ...”

"உன் மீது எனக்கு நம்பிக்கை உண்டு!” அவள் அவன் தோள்களைத் தழுவிக் கொண்டாள். அவன் பார்வை எங்கோ வானத்தில் நிலைத்திருந்தது.

"நாம் ஒன்று சேர்வதற்கு எவ்வளவு இடைஞ்சல் ஏற்படும் தெரியுமா...?”

"அப்பாவையும் அம்மாவையும் தானே சொல்கிறாய்? அவர்கள் மனம் நாளடைவில் மாறிவிடும் ராஜா...”

"கீதா, நான் அதிருஷ்டசாலிதான் -”

“நான் மட்டும் என்னவாம்...”

“சரி, இப்போ நீ போயிடு...”

"ராஜா... இப்படியே என் உயிர் போய்விட்டால்...” அவனை அணைத்துக் கொண்டு அவள் பிதற்றினாள்.

"நீ இப்போ போயிடு கீதா... அதுவே எனக்கும் உயிர் போன மாதிரிதான்" என்று மெல்லச் சிரித்தான் ராஜா.

அவன் கரங்களிலிருந்து தன்னை மெள்ள விடுவித்துக் கொண்டு, பூனை போல் கீழிறிங்கித் தன் அறைக்குள் நுழைந்தாள் கீதா, அறைக் கதவைத் திறக்கும்போது கீழேயிருந்து வேதாசலம் பிள்ளையின் குரல் ஒலித்தது:

“யாரது" - அந்தக் குரல் மொட்டை மாடியிலிருந்த ராஜாவுக்கும் கேட்டது.

"நான் தாம்பா...?”

“இன்னும் தூங்கலே?”

“புத்தக அறையிலே படிச்சிக்கிட்டிருந்தேன்...”

“அவன் எங்கே?”

“மொட்டை மாடியிலே...”

"சரி, சரி, போய்த் தூங்கு!” அவர் குரல் வழக்கத்திற்கு மாறாகச் சற்றுக் கடுமையாகவே ஒலித்தது. கீதா மொட்டை மாடியிலிருந்து இறங்கியதை அவர் பார்த்திருக்கலாம்!

அவர் அறையில் வெகுநேரம் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரவில் அதிக நேரம் வரை அவர் அறையில் விளக்கு எரிந்தால் - அறைக்கதவும் மூடியிருந்தால் அவருக்கு மனநிலை சரியில்லை என்று அர்த்தம்.

வேதாசலம் பிள்ளையின் மனநிலை ராஜாவுக்குப் புரிந்திருந்தது. அவன் எதற்கும் தயாராய் இருந்தான். அது அவன் பிறவிக் குணம். மொட்டை மாடியிலிருந்து கீழே இறங்கிச் செல்ல மனம் வரவில்லை.

நிலா வெளிச்சத்தில் எண்ணங்கள் மனதை அலைக் கழிக்க, கனவுகள் தாலாட்ட அப்படியே உறங்கிப் போனான் அவன்.

*****

# 23

மறுநாள் காலை!

வழக்கம்போல் கீதா காப்பி கொண்டு வருவாள் என்று எதிர்பார்த்த வண்ணம் புத்தக அறையில் உட்கார்ந்திருந்தான் ராஜா. மாடிப் படியில் நிழல் தட்டியது. ஆவலுடன் கையிலிருந்த புத்தகத்தை மூடி விட்டுத் திரும்பிப் பார்த்தான்.

கையில் காப்பித் தம்ளருடன் அபிராமி அம்மாள் வந்தாள். வந்தவள் அவன் முன்னே மேசையின் மீது காப்பித் தம்ளரை வைத்துவிட்டு விடுவிடென கீழிறங்கிப் போய்விட்டாள்.

அவன் மனம் குழம்பியவனாய், காப்பியை எடுத்துப் பருகினான்; காப்பி கசந்தது - காப்பியில் சர்க்கரை என்னவோ அதிகம்தான்!

அபிராமி கீழிறங்கிப் போனவுடன் காப்பியை அப்படியே வைத்துவிட்டு மாடிச் சன்னல் வழியாகக் கீழே பார்த்தான்.

முன்புறக் கூடத்தில் ஒரு மூலையில் முகத்தைத் தாவணியால் மூடிக்கொண்டு கீதா உட்கார்ந்திருந்தாள். அவள் அழுகிறாள்...

"கீதா...!" அவன் மெள்ள முணகினான். அவள் தலை நிமிர்ந்து சன்னலில் தெரிந்த அவன் முகத்தைப் பார்த்தாள். கண்கள் சிவந்து கலங்கி இருந்தன.

"கீதா, உனக்கென்ன பித்தா பிடிச்சிருக்கு...? ஒங்கம்மா இதைக் கேட்டாள்னா உசிரை விட்டுடுவா" என்று நயமான குரலில் என்னவோ சொல்லிக் கொண்டிருந்தார் வேதாசலம் பிள்ளை.

"அப்பா...!" கீதா விம்மியழ ஆரம்பித்தாள். ராஜாவுக்குத் தலையே வெடித்துவிடும் போல் இருந்தது. சன்னல் கதவை

மூடிவிட்டு அங்கேயே உட்கார்ந்து அவர்கள் பேசுவதைக் கவனித்தான்.

"கீதா... ராஜாவை நல்லவன்னுதான் நானும் நெனைச்சேன். அவன் நம்ம குடும்பத்தின் பாபச்சின்னம்! சிறு பிள்ளைத்தனமா எதையும் நெனைச்சிக்கிட்டிருக்காதே. அவ்வளவுதான்" அவர் குரல் கண்டிப்பாய் ஒலித்தது. அறைக்கதவும் 'படீ'ரென மூடிக் கொண்டது.

ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை! ஒரு சமயம் கோபம் அவன் நெஞ்சைத் தகித்தது. மறுசமயம் துக்கம் அவன் நெஞ்சில் அடைத்தது. இன்னொரு சமயம் கண்ணீர் அவன் கண்களை மறைத்தது-கடைசியாக அவன் வாழ்வை நினைத்தபோது விரக்தியில் அவன் மனம் சிரித்தது.

'சீ! என் வாழ்க்கை இப்படியா சிரிக்க வேண்டும்?'

- அவன் தனக்குள் சிரித்துக் கொண்டபோது அறை வாயிற் படியில் கண்ணீருடன் கீதா நின்றிருந்தாள்!

"கீதா...!" என்று எழுந்தான்.

"ஏன் அழறே...?"

“அப்பா திட்டினார்...”

“பின்னே, கொஞ்சுவார்னு நினைச்சியா?”

“விளையாடாதே ராஜா.”

"விளையாட்டு...! வாழ்க்கையோடு நான் விளையாடுகிறேன் கீதா.”

அவள் மௌனமாய் நின்றாள்; சிறிது நேரத்திற்குப் பின் அவன் மெள்ள அவளருகே வந்து அவள் கரங்களைப் பற்றினான்.

"விடு ராஜா... கையை விடு...” என்று திமிறி அவன் கையில் ஒரு கடிதத்தைத் திணித்து விட்டுத் தன் அறைக்குள்

போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்டாள் கீதா.

சிறிது நேரம் மௌனமாய் நின்றிருந்த ராஜா அவள் கொடுத்த கடிதத்தைப் பிரித்து வாசிக்க ஆரம்பித்தான்.

'அன்புள்ள ராஜா,

நேற்று இரவு நாம் இருவரும் மாடியில் சந்தித்துப் பேசியதை அப்பா தெரிந்து கொண்டார். என் வாழ்க்கையில் இதுவரை என்னை முகம் சுளித்துப் பேசாத அப்பா ‘முட்டாள் பெண்ணே, உன் வாழ்க்கை குட்டிச் சுவராகத் தான் போகப் போகிறது. நான் செய்த பூர்வஜென்ம பாபங்களின் விளைவாய் வந்து பிறந்திருக்கிறாய்...' என்றெல்லாம் பேசிவிட்டார். நான் என்ன செய்வேன்...? அம்மாவுக்குத் தெரிந்தால் இன்னும் ரகளை ஏற்படும்! தெரியட்டும்! என்றைக்காவது தெரிய வேண்டியதுதானே! நீ எதற்கும் கவலைப்படாதே, ராஜா...'

அவன் அதற்குமேல் அந்தக் கடிதத்தைப் படிக்கவில்லை. கீழே இறங்கிச் சென்று மூடியிருந்த வேதாசலம் பிள்ளையின் அறைக் கதவை மெள்ளத் தட்டினான்.

“யாரது?”

“நான்தான், ராஜா...”

வேதாசலம் பிள்ளை கதவைத் திறந்தார்.

"என்ன விஷயம்?” அவனைப் பார்க்க விரும்பாதவராய் வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

“நான் இன்னைக்கு ஊருக்குப் போகிறேன்.”

“சரி... அதற்கென்ன ராத்திரிக்குத்தானே வண்டி?”

“இல்லை; நான் இப்பவே போறேன்...”

"நான் உனக்காகச் சொல்லவில்லை. என் உடன் பிறந்தவளின் மனமகிழ்ச்சிக்காக வேண்டியே

சொல்கிறேன். உன்னை நான் மகிழ்ச்சியுடன் அனுப்ப வேண்டும். இரு. ராத்திரிக்குப் போகலாம்... நீ சில விஷயங்களில் நல்லவன் அது எனக்குத் தெரியும்" என்று லேசாகச் சிரித்தார் பிள்ளை. அந்தச் சிரிப்பு அவன் மனத்திற்கு ஆறுதலாக இருந்தாலும் அது பழைய சிரிப்பாக இல்லை.

"சரி..." ராஜா மாடிக்குப் போய்விட்டான். சிறிது நேரம் கழித்து அபிராமியிடம் வேதாசலம் பிள்ளை பேசிக் கொண்டிருந்தது அவன் காதுகளில் விழுந்தது!

"அபிராமி உன் மருமகன் ஊருக்குப் போறானாம்; இன்னைக்கு ராத்திரியே போறானாம்..."

"ஆமாம்; பெத்தவளை விட்டுட்டு எத்தனை நாளுக்கு இங்கே இருப்பான். அவனும் வந்து ஆறுமாசத்துக்கு மேலே ஆகிறதே."

"நான் போவதை அனைவரும் விரும்புகின்றனர். கீதா பாவம், நான் என்ன செய்யமுடியும்?"

அவள் அதோ அழுதுகொண்டு நிற்கிறாள். "காலம் தான் அவள் கண்ணீரை மாற்ற வேண்டும்." அவளைப் பார்த்துக் கொண்டே அவன் முனகினான். அவள் அவனை பார்த்துப் பார்த்துப் பொருமிப் பொருமி அழுது கொண்டிருந்தாள்.

அன்று மத்தியானம் அவனுக்கு விருந்து!

ராஜாவும் வேதாசலம் பிள்ளையும் கூடத்து ஹாலில் இலைகளுக்கு முன் அமர்ந்திருக்கின்றனர். கீதா பரிமாறுகிறாள். அவன் இலையில் சாதத்தைப் போட்டு நெய் போடச் சொன்னால்... இதென்ன கண்ணீர் சிந்துகிறாள்? அவன் வெடுக்கென தலைநிமிர்ந்து அவளைப் பார்க்கிறான். பார்வைகள் மோதிச் சிலிர்க்கின்றன. அவள் கண்களில் கண்ணீர் பொங்கி, முகம் சிவந்து உதடுகள் துடிக்கின்றன. அவன் எதிரே நிற்க முடியாமல் நெய்க் கிண்ணத்தைக் கீழே போட்டுவிட்டு,

நெஞ்சை அடைக்கும் துயரத்தைமென்று விழுங்கிக் கொண்டு மாடிக்கு ஓடி விடுகிறாள் கீதா.

வேதாசலம்பிள்ளை இவற்றைக் கவனிக்காமல்; கவனிக்க விரும்பாமல் எங்கோ பார்க்கிறார்!

அன்று முழுவதும் கீதா சாப்பிடவுமில்லை; தன் அறையை விட்டு வெளியே வரவுமில்லை. ராஜா அவளைப் பார்க்கவுமில்லை. இதெல்லாம் ஏன் என்று அபிராமியம்மாளுக்கு விளங்கவுமில்லை.

'கொழந்தை என்னவோ சோர்ந்து சோர்ந்து இருக்கா திருஷ்டி சுத்திப் போடணும்' என்று தனக்குள் முனகிக் கொள்ளும் மனைவியைப் பார்த்து,

"நீயும், உன் குழந்தையும், திருஷ்டியும்...” என்று பற்களைக் கடிக்கிறார் வேதாசலம்பிள்ளை!

இரவு...

தெரு வாசற்படியில் வண்டி நிற்கிறது. வண்டிக்காரன் மூட்டை முடிச்சுகளை வண்டியிலேற்றுகிறான்; அவையெல்லாம் வேதாசலம் தன் தங்கைக்குக் கொடுத்தனுப்பும் அன்பளிப்புகள்.

"ராஜா இதை அம்மாவிடம் கொடு...” என்று அபிராமி ஒரு புதுப்புடவையை ஸ்பெஷலாகக் கொடுக்கிறாள்.

"போயி கடுதாசி போடு, புத்தியா பொழைச்சிக்கோ... நான் வேறென்ன சொல்றது? நீ குழந்தையல்ல...!” வேதாசலம்பிள்ளை புத்திமதி கூறுகிறார். அவர் கையிலிருந்து ஐந்து பத்து ருபாய் நோட்டுகள் வழிச் செலவுக்காகவும், அன்பளிப்பாகவும் அவன் கைக்கு மாறின.

அவன் இன்னும் நிற்கிறான்! - எதற்காக? -

"கீதா, கீதா...!” என்று அவன் மனம் ஜபிக்கிறது அவன் தயங்கித் தயங்கி நிற்கிறான். அவளைக் காணோம்.

"பொறப்படலாமுங்களா?" - வண்டிக்காரன் குரல்.

"போயிட்டு வா. ராஜா" மாமியின் அன்பான குரலும் மாமாவின் நடிப்பும் அவனுக்குத் தெளிவாகத் தெரிகின்றன. அவன் வண்டியில் ஏறிவிட்டான்.

"ஹேய்... தா... தா" வண்டிக்காரன் மாடுகளை அதட்டி விரட்டினான். மாடுகளில் உக்கழுத்துச் சதங்கை ஒலிக்க வண்டி நகர்ந்து விரைகிறது. வேதாசலம் பிள்ளையின் பங்களா மறைந்து விட்டது. வண்டி பெரிய தெருவுக்குத் திரும்பி பங்களாவின் பின்புறம் ஸ்டேஷனுக்குச் செல்லும் சாலை வழியே ஓடியது.

"ஹேய்... ஹேய்..." வண்டிக்காரனுக்குக்கூட அவனை அவளிடமிருந்து பிரித்துக் கொண்டு போவதில் அவ்வளவு உற்சாகம்; அவசரம்!

"மெதுவாகப் போ, அப்பா..."

“சரிங்க, பாதை ரொம்ப மோசம்தான்..." என்று மெதுவாக ஓட்டினான் அவன்.

“ஆமாம், பாதை ரொம்ப மோசம்தான்..." என்று முனகிக் கொண்டான் ராஜா.

"அதோ... அது யார்? பங்களாவின் வேலியோரத்தில்... யார்? - கீதாவா..."

வண்டி மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது.

கீதா, வேலிப்படலைத் திறந்து கொண்டு, வேலியோரமாக உள்ள சிறு சாக்கடைக் கால்வாயைத் தாண்டிக் குதித்து வண்டியருகே வந்து விட்டாள்.

"கீதா..."

“ராஜா..."

மாடுகளின் சதங்கையொலியில் அவர்கள் குரல் வண்டிக்காரனுக்குக் கேட்கவில்லை.

“அவளை என்னுடன் அழைத்துக் கொண்டு போய் விட்டால்…” என்றது மனம்.

"என் ஒருவன் பிழைப்புக்கே நான் என்ன செய்யப் போகிறேனோ?” முதன் முறையாக அவனும் அவளும் சேர்ந்து வாழத் தடையாக இருந்த அந்தப் பெரிய பிரச்னையை அப்பொழுதுதான் நினைத்துப் பார்த்தான் அவன். அவள் வண்டியைப் பிடித்துக் கொண்டு நடந்தாள். அவன் அவள் கன்னங்களைத் தன் கைகளில் ஏந்தி அவள் முகத்தில் குனிந்து முத்தமிட்டான்!

அவள் முகத்தை ஏந்திக்கொண்டிருந்த அவன் கரங்கள் அவள் புஜத்தில் இறங்கின - அப்படியே அவளைத் தூக்கிக் கொள்ள நினைத்தது மனம். நினைத்ததையெல்லாம் செய்யமுடியுமா? -

நினைத்ததையெல்லாம் செய்தால், வருவதையெல்லாம் அனுபவிப்பது யார்? - இருவர் கரங்களும் - ஒன்றை ஒன்று தழுவின… விரல் நுனியில் பிடி அவிழ்ந்தது. அவள் அவன் கைகளுக்கு எட்டும் தூரத்தில் நின்று விட்டாள். வண்டி நகர்ந்து கொண்டிருந்தது. கீதா அதோ நிற்கிறாள்…!

“நேரமாச்சு சாமி…” என்று காளைகளை விரட்டினான் வண்டிக்காரன். மாடுகள் ஓடின. சாலையிலுள்ள மரங்கள் ஓடின.

சாலையின் நடுவிலே நின்று கைகளைத் தலைக்கு மேல் உயர்த்தி வீசி விடை கொடுத்தனுப்புகிறாள் கீதா. சாலையின் திருப்பத்தில் வண்டி திரும்பும் போது அவளுக்குத் தெரியவில்லை. விழிகளை நீர்த்திரை மறைத்து விட்டது.

"அடி, கீதா…” வண்டியில் போய் கொண்டிருந்த ராஜா முகத்தைக் மூடிக் கொண்டான். ஆறு மாதங்களுக்கு முன் அவன் யாரோ, அவள் யாரோ…? அதற்குள் என்ன

பிணைப்பு; என்ன தவிப்பு... என்ன சோகம்...? அவன் உதடுகள் துடித்தன.

*****

# 24

கிட்டத்தட்ட ஒரு வருஷத்திற்குப்பின் அவனுடைய சொந்த ஊரில், அவன் வாழ முடியாத ஊரில், அவனைத் துரத்தியடித்த ஊரில் காலடி வைத்துவிட்டான் ராஜா.

"தில்லையம்பதி” என்ற ரெயில்வே ஸ்டேஷன் போர்டைப் பார்த்தவுடன் மனசு கும்மாளி போடுகிறது என்ன இருந்தாலும் அது அவன் சொந்த ஊர் அல்லவா? மூட்டை முடிச்சுகளைத் தோளிலும் கையிலும் சுமந்து கொண்டு வீட்டை நோக்கி நடந்தான். வீடு நெருங்க நெருங்க அவன் மனம் படபடத்தது!

'அம்மா திட்டுவார்களோ...?’

'திட்டினால் என்ன, அம்மாதானே...?’

“சார்... வண்டி வரட்டுங்களா?”

“வேண்டாம்!”

"இட்லிக்காரியின் ஏழை மகன்தானே நான்? எனக்கு எதற்கு வண்டி? - எங்கெங்கோ சுற்றி மீண்டும் என் அம்மாவிடமே வந்துவிட்டேன். இனிமேல் என்ன செய்வது? இந்த ஊரில்...?” அதை நினைக்கும்போது அவன் கண்ணெதிரே... மளிகைக்கடை முதலாளியும் செருப்புக் கடைக்காரனும் அவனது வாடிக்கைகாரர்களும் நின்று அவன் முகத்திற்கெதிரே கைகளை நீட்டிக் கொண்டு 'அகம்பாவி!- முரடன்! போக்கிரி - ஓடுகாலி, வெட்கம் கெட்டவனே திரும்பவும் வந்துவிட்டாயா' என்று அட்டகாசமாய்க் கேலிச் சிரிப்பு உகுப்பதுபோல் தோன்றியது. நெற்றியில் வழிந்த வியர்வையைப் புறங்கையால் துடைத்துக் கொண்டான். 'என் அம்மாவிடம் நான் வருகிறேன் - நீங்கள் யார் தடுக்க? இதிலென்ன வெட்கம்...?'

'நான் உங்களிடம் வேலை கேட்கப் போவதில்லை! என் அம்மாவுக்கு உதவியாக இருக்கப் போகிறேன். அம்மா கைநோக மாவு அரைக்கும்போது நானும் கூட

அரைப்பேன்... அப்புறம் இட்லி வியாபாரத்தை இன்னும் கொஞ்சம் பெரிசுபடுத்தி, இட்லி கடையாக்கி வருபவர்களுக்கு பரிமாறுவேன்... சாயங்கால நேரத்தில் பட்சணங்கள் செய்து கொண்டுபோய், பார்க்கிலும் சினிமா கொட்டகைகளிலும் நானே விற்பனை செய்வேன் - அம்மாவுக்கு இவ்வளவு உதவியாக இருக்கும்... வாழ்க்கை நடத்த இது போதும்! நான் எதற்கு இந்த ஈனர்களிடம் கைகட்டி நிற்க வேண்டும்! - இந்த யோசனையை அம்மாவிடம் சொன்னால், பூரித்துப் போவார்கள்! "இப்போதாவது உனக்கு பிழைக்கணும்னு நல்ல புத்தி வந்துதே...!" என்று அணைத்துக் கொள்வார்கள்...' அவன் முகத்தில் சிரிப்பும் மகிழ்ச்சியும் துள்ளாடியது. கால்கள் விரைந்தன.

'கீதா!' அவன் முகம் சுருங்கிற்று!

'கீதா - பெரிய உத்தியோகஸ்தரின் படித்த பெண், பணக்கார வீட்டுச் செல்லக் குழந்தை தன் கணவனாகப் போகிறவன் - கணவன்? ஒரு இட்டிலி மசால்வடை விற்கும் தெரு வியாபாரி என்பதை அவள் மனம் ஏற்குமா...? சமூகம்தான் சிரிக்காமல் இருக்குமா...?’

‘கீதா அப்படி நினைப்பாளா!'

'ஏன், அவளும் பெண்தானே? இன்று அவளுக்கிருக்கும் உணர்ச்சி மேலிட்டால் ஏற்றுக் கொண்டாலும், காதலுக்குப் பேதம் இல்லையென்று சொல்லிக் கொண்டாலும் நாளடைவில் மனம் சலிக்காதா...?'

'அது பற்றியெல்லாம் எனக்கு கவலையில்லை. யார் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நான் என் அம்மாவுக்குப் பாரமாய் இருக்க முடியாது...?’

இதனால் என் காதல் மறுக்கப்படுமானால், வாழ்க்கை மறுக்கப்படுமானால் அவற்றை நான் இழந்து விடத் தயார்...! கண்ணீருடன், குமுறும் இதயத்துடன், என் காதலை

என்னுள்ளேயே கொன்றுவிடத் தயார். அவன் மனம் தன் எதிர்காலத்தைத் தீவிரமாக அலசிக் கொண்டிருந்தது.

இதோ அவன் வீடு, அந்த ஏழையின் குடிசை! அவன் உள்ளே நுழையும்போது ஒரே இருள்.

"அம்மா"

“யாரது? - ராஜா, வாடா கண்ணே...”

“என்னம்மா உடம்புக்கு?” படுக்கையில் கிடந்த அவன் தாய் எழுந்து அவனை அணைத்துக் கொண்டாள்.

“அம்மா, என்னை மன்னிச்சுடு அம்மா, இனிமேல் உன் மனம் நோகும்படி நடக்கமாட்டேன்" அவன் தேம்பித் தேம்பி அழுதான்.

"இதென்ன, சின்னக் குழந்தை மாதிரி அழறே? எனக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லை - மாடக் குழியில் தீப்பெட்டி இருக்கு, எடுத்து வெளக்கைக் கொளுத்து" என்று சொல்லிவிட்டு ஒரு மூச்சு இருமித் தீர்த்தாள் அவள், மூச்சுத் திணறித் திணறி வந்தது. கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டு மாடக்குழியிலிருந்த தீப்பெட்டியை எடுத்து விளக்கைப் பொருத்தினான் ராஜா.” விளக்கு வெளிச்சத்தில் தன் தாயைக் கூர்ந்து கவனித்தான். அவள் மெலிந்து கிழடு தட்டிப் போய், பாயோடு கிடந்தாள்.

“அம்மா... இப்படி இளைச்சுப் போயிட்டியே... உடம்பு சரியில்லைன்னு ஒரு கடுதாசி போடப்படாது...?”

"போற உயிரை யார் வந்து தடுக்க முடியும்? இளைச்சுப் போகாம இனிமேத்தான் வாழப்போறனாக்கும்...! நீ நல்லா இருந்தா அது போதும்... ஒரு வருஷத்திலே நீ எவ்வளவு வளர்ந்துட்டே... சீ! தாய்க் கண்ணோ, பேய்க் கண்ணோன்னு சொல்லுவாங்க...” அவன் கையைப் பற்றிக் கொண்டு பாசம் குழையப் பேசிக் கொண்டிருந்தாள் லட்சுமி.

“அம்மா...”

“என்னடா...?”

“நீ என்ன சாப்பிட்டே?”

“ஒண்ணும் செல்லலைடா, கண்ணா.”

"பட்டினியாவா இருக்கே... அம்மா, நான் ஒரு பிள்ளை உனக்கிருந்தும் என்னால் உனக்கு ஒரு உதவியும் இல்லை.”

"நீ இன்னும் குழந்தைதான்...! எனக்கென்னடா கொறைச்சல்?”

"அம்மா, உனக்கு ஏதாவது சாப்பிட வாங்கியாறேன்.”

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்டா... கொஞ்ச நாழி இரு; ஒரு நிமிஷத்திலே அடுப்பு பத்தவெச்சுச் சமைச்சுடறேன்...” என்று இருமிக் கொண்டே எழுந்தாள்.

"நல்லாருக்கு... உன் உடம்பு இருக்கிற நெலையிலே... அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம், பேசாம படுத்திரு.”

"கண்ணா...!”

“என்னம்மா?”

"என் கையாலே ஒனக்கு சமைச்சுப் போட்டு எவ்வளவு நாளாயிட்டுது - " அவள் கண்கள் கலங்கின.

"உனக்கு உடம்பு குணமாகட்டும்!”

"நாலு நாளா ஒண்ணுமே முடியலே... அம்புஜம் வந்து பால் மட்டும் காய்ச்சிக் குடுத்துட்டுப் போனா... அதைக் கூடக் குடிக்க முடியலே... ரெண்டு நாள் பார்த்துக்கிட்டு உனக்குக் கடுதாசி எழுதலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே நீயே வந்துட்டே... எங்கே உன்னைப் பார்க்காம செத்துப் போயிடுவேனோன்னு நெனைச்சேன்...”

“அம்மா அப்படிச் சொல்லாதேம்மா." அவன் அழுது கொண்டே அவள் கரங்களைப் பற்றிக் கொண்டான்.

அவள் இடைவிடாமல் இருமினாள்!

“ஊரிலே எல்லாரும் சௌக்கியம்தானே? - அண்ணா அண்ணி... கீதா எப்படிடா இருக்கா?"

"உம்... இருக்கா...”

"அவளுக்கென்ன கொறை? ஒத்தைக்கு பொண்ணு... படிக்கிறாளா!”

"முடிச்சுட்டா...”

லட்சுமி பெருமூச்சு விட்டாள்!

"என்னம்மா?”

"இருக்கும் சீரோடு நாம் இருந்தா நடக்கும் நடப்பே வேறேதான். கீதாவை உனக்கு இப்போ கொடுப்பாங்களா? நாம்தான் கேட்க முடியுமா?” - அவன் மௌனமாய் இருந்தான். பிறகு அவளே என்ன நினைத்தாளோ? அவன் முதுகைத் தடவியவாறு.

"உனக்கென்னடா, ராஜான்னா ராஜாதான்... உனக்குன்னு ஒருத்தி இந்த உலகத்திலே பிறந்திருக்காமலா போயிடுவா?” என்று ஆறுதல் கூறினாள்.

"இருக்காம்மா, அவ கீதா தான்!”

"மாமா சொன்னாராடா?” அவள் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன. 'ஏன் சொன்னோம்?' என்று உதட்டைக் கடித்துக் கொண்டான்.

'எனக்குத் தெரியும். அண்ணா வார்த்தை பிசகமாட்டார்? சின்ன வயசிலே உன்னையும் அவளையும் மடியிலே உக்காத்தி வெச்சுக்கிட்டு 'இது பொண்ணு... இது மாப்பிள்ளை'ன்னு எத்தனை தடவை சொல்லியிருக்காரு தெரியுமா?” என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினாள் லட்சுமி.

"இப்போ மாமா சொல்லலே அம்மா. கீதாவே சொன்னா...”

"நீ இன்னம் கொழந்தைதாண்டா, இதைப் போயி அவகிட்டே நீ கேட்டியோ?”

"நான் கேக்கலே, அவளேதான் சொன்னா."

"அது அவள் விருப்பமா என்ன? அண்ணா ஒத்துக்கிட்டாலும் அண்ணி சம்மதிக்காது...”

“அண்ணா மட்டும் சம்மதிப்பாரோ? இந்த உலகத்திலே ஒரு பயலும் சம்மதிக்க மாட்டான்"

"எவன் சம்மதிக்க மாட்டான்? ஏன் சம்மதிக்க மாட்டான்? நீ என்ன ஜாதி கெட்டுப் பொறந்திட்டியோ? அவங்ககிட்டே காசு பணம் இருந்தா அவங்களோட... மொறை ஒண்ணும் கெட்டுப் போகாது" அவள் ஆத்திரத்தோடு பேசினாள். மீண்டும் இருமல்!

"அதுக்கு இப்போ என்னம்மா? நீ தூங்கு, விளக்கின் ஒளியைக் குறைத்துவிட்டு அவனும் படுத்துக் கொண்டான். இரவெல்லாம் அவன் தாய் இருமிக் கொண்டும் புலம்பிக் கொண்டும் இருந்தாள். அவன் தூங்கவே இல்லை. அடிக்கடி அவளைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தான். நல்ல ஜூரம். நெஞ்சுவலி பொறுக்க மாட்டாமல் துடித்தாள். அவள் கைகளைப் பற்றிக் கொண்டு “என்னம்மா செய்யுது... என்ன வேணும்?” என்று வினவினான் ராஜா. உழைத்து உழைத்துக் காய்ப்பேறிப் போன அவள் கரங்களைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் வடித்தான் அவள் அருமை மகன்.

'என் ராஜா வந்துட்டான். என் ராஜா வந்துட்டான்' என்று ஜூர நிலையில் பிதற்றிக் கொண்டிருந்தாள் லட்சுமி

ராஜாவுக்குத் தன் தாயின் நிலை பரிதாபமாக இருந்தது.

*****

# 25

சித்தநல்லூர் பெரிய சாலையை அடுத்த சந்தை மைதானத்திற்கு மேலண்டைப்புரத்தில் வரிசையாக இருக்கும் நான்கு காரைக் கட்டிடங்களில், முதலில் இருக்கும் சிறு வீட்டின் முன்புறத்தில் கரிய மரப்பலகை ஒன்று தொங்குகின்றது. அது இப்பொழுது திருப்பி வைக்கப் பட்டிருக்கிறது. வெள்ளிக் கிழமைதோறும் அதன் மறுபுறம் வெளியே தெரியும்படி அது மாற்றி வைக்கப்படும்.

"ராஜா சாப்பாட்டுக் கடை-முழுச் சாப்பாடு அணா 0-4-0” என்று கோணல் மாணலாய்க் கிறுக்கிக் கிறுக்கி, சுண்ணாம்பினால் எழுதப்பட்டிருக்கும் வாசகத்தை அதில் காணலாம்.

தங்கத்திற்கு வாழ்க்கை அமைதியுடன் ஓடிக்கொண்டிருக்கிறது. மனம் மட்டும் ராஜாவை எண்ணித் தவிக்கிறது என்பது யாருக்கு தெரியும்?

அன்று வெள்ளிக் கிழமை. அந்த வீட்டுத் திண்ணையில் கூலிக்காரர்களும் கூடைக்காரிகளும் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர். வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் சம்பளத்திற்கு ஒரு சிறுவனை வேலைக்கமர்த்திக் கொள்வாள் தங்கம். அவனுக்கு மூன்று வேளைச் சாப்பாடும் எட்டணா சம்பளமும் அன்று கிடைக்கும். அவன் பெயர் ராமு; அருகே உள்ள கிராமத்தில் இருப்பவன். வாடிக்கையாக வெள்ளிக்கிழமை தோறும் வந்துவிடுவான். தங்கம் சமைத்த உணவை அனைவருக்கும் பரிமாறுவதுதான் அவன் வேலை.

வீட்டுத் திண்ணையில் பந்தி நடந்து கொண்டிருக்கிறது. ராமு பரிமாறிக் கொண்டிருக்கிறான். சந்தை மைதானத்தில் நடுவேயுள்ள பெரிய ஆலவிருட்சத்தின் அடியில் மயிலைக் காளைகள் பூட்டிய வில்வண்டி நிற்கிறது. வண்டிக்குள்ளிருந்து இறங்கிய சிதம்பரம் பிள்ளை 'கூலிங்கிளாஸை' எடுத்து அணிந்து கையிலுள்ள குடையையும் விரித்துப் பிடித்தவாறு சந்தையை நோட்டம்

விடுகிறார். சந்தையில் வரி வசூலிக்கும் கணக்கர்களும் வியாபாரிகளும் அவருக்கு மரியாதை செய்கின்றனர். கூழைக்கும்பிடு போட்ட வண்ணம் அவரைத் தொடர்கிறது ஒரு கும்பல். சிதம்பரம் பிள்ளை தங்கத்தின் சாப்பாட்டுக் கடையருகே வந்து நிற்கிறார்.

"ராஜா சாப்பாட்டுக்கடை...!" என்று வாய்விட்டு வாசிக்கிறார்.

"கிழவிதான் செத்துப் போயிட்டாளே... இப்ப யாரு நடத்தறது?"

“ஒரு குமரிங்க” என்கிறான் சிதம்பரம் பிள்ளையைப் புரிந்து கொண்ட கணக்கன்.

“அது யாரையா, அது...?” என்று வாயைப் பிளக்கிறார் சிதம்பரம்.

"அமோவ், சாப்பாட்டுக் கடைகாரம்மா... கொஞ்சம் இப்படி வாயேன்" என்று வாசற்படிக்குள் தலையை நீட்டிக் கூப்பிடுகிறான் கணக்கன்.

"யாரது?" என்றவாறு கதவருகே வந்து நிற்கிறாள் தங்கம்.

"ஓ நீதானா?” என்று சிரித்தார் பிள்ளை.

"ரொம்ப நல்ல வேலை செஞ்சே; அந்தச் சத்திரத்திலே இருந்து வெளியே வந்து இப்படியெல்லாம் பொழைக்க வழி செஞ்சிகிட்டது உன் புத்திசாலித்தனம் தான்...” என்று குழைய ஆரம்பித்தார் பிள்ளை. அவள் பதில் பேசாமல் கதவின் மறைவில் ஒண்டி நின்றாள்.

"அப்போ நா வர்றேன்... சாயங்காலமா வர்ரேன் அங்கிருந்து நகர்ந்தார் சிதம்பரம் பிள்ளை.

அவர் சென்றவுடன் அவள் மனம் பயத்தால் துடித்தது. அவளுக்கு மனசை என்னவோ அழுத்தியது.

"ராமு, ராமு...” என்று நடுங்கும் குரலில் அழைத்தாள்.

"என்னம்மா..." என்று ஓடிவந்தான் அச்சிறுவன்.

இடுப்பில் ஒரு சிகப்புத்துண்டு. சற்றுத் தடித்த உடல். மாநிறம்; தலைமழுங்க மொட்டை; ஒளிவீசும் கண்கள்; பதினாறு வயசு ஆகிறதென்றாலும் குழந்தை முகம் மாறவில்லை. பழனியாண்டியின் திருவுருவம் போல் தோற்றம்!

"இப்போ வந்தானே அவனைப் பார்த்தியா? பயம்மா இல்லே?”

"இவனுக்கேம்மா நாம் பயப்படணும்?”

“எனக்குப் பயம்மா இருக்கு ராமு...”

"நீங்க ஒண்ணும் பயப்படாதீங்க... அவன் என்ன பண்ணிடுவான்? கரண்டியாலே மண்டையெப் பொளந்திட மாட்டேனா?” அவன் கண்களில் கோபம் கனன்றது. உதடுகள் துடித்தன... அவன் கைகள் கரண்டியை இறுகப் பற்றின.

"ராமு, இன்னிக்கு நீ வீட்டுக்குப் போகாதே. ராத்திரிக்கு இங்கேயே இரு...”

"ஓ, இருக்கேன்...” என்று கூறிவிட்டு, சாப்பிடுபவர்களுக்குப் பரிமாறப் போய்விட்டான் அவன்.

"ராமு!”

“என்னம்மா?”

“இங்கே வாயேன்." அவன் மீண்டும் உள்ளே வந்தான்.

"துலுக்கன் சத்திரத்துக்குப் போயி நம் சாரங்கண்ணன் இல்லே, அவரைக் கூட்டியா?” என்று சொல்லிக் கொண்டிருக்கையில், “சாரங்கனுக்கென்ன அவசரம்?” என்று சிரித்துக் கொண்டே நிலைப்படியைப் பிடித்துக் கொண்டு சாரங்கன் நின்றிருந்தான்!

"கொஞ்ச நாழிக்கு முன்னாலே அவன் வந்தான்?"

"யாரு...?"

"சிதம்பரம் பிள்ளை!"

"சிதம்பரம் பிள்ளையா? வந்து...?"

"சாயங்காலம் வர்ரேன்னு சொல்லிட்டுப் போறான்!"

"சாயங்காலமா? வரட்டும் வரட்டும்!"

"எனக்குப் பயமா இருக்கே..."

"எதுக்கு பயம்...? எனக்குச் சந்தோஷமாயிருக்கு"

"சந்தோஷமா?"

"ஆமா, இன்னிக்குச் சாயங்காலம் அவன் வரட்டும்!

சரி, நீ எதுக்கும் பயப்படாதே; அதோ தெரியுது பாரு. பெருமாள் கடை. அங்கேதான் நான் இருப்பேன். சாயங்காலம் அவன் வரும்போது நீ சாதாரணமா பேசிக்கிட்டிரு. நான் வந்து அவன்கிட்டே விஷயத்தோடு பேசிக்கிறேன்; சரி நான் வரட்டுமா?" என்று திரும்பினான் சாரங்கன்.

"சாப்பிட்டுப் போங்களேன்."

"அதெல்லாம் முடியாது! ராஜா வந்ததும் கலியாண சாப்பாடு போட்டாத்தான் சாப்பிடுவேன்; இப்பவே ஏமாத்திடலாம்னு பார்க்கிறியா!" என்று அவன் சிரித்தான்.

"அவன் ஏதாவது கடுதாசி எழுதினானா...? எப்ப வருவான்?"

"ஒண்ணுமே தெரியலை... கடுதாசியும் வரலே..." தங்கத்தின் கண்கள் கலங்கின.

"இதுக்கா சங்கடப்படறே...? போன காரியம் எப்படி இருக்கோ? எப்படியும் இந்த மாசமில்லாவிட்டாலும் அடுத்த

மாசம் வந்திடுவான்; கவலைப்படாதே... கலியாணச் சாப்பாடு. ஏமாத்திப்பிடாதே...!" என்று கண்களைச் சிமிட்டிச் சிரித்து விட்டுச் சென்றான் சாரங்கன்.

"ராஜா... கலியாணச் சாப்பாடு... ஏமாத்திப் பிடாதே!" என்ற வார்த்தைகளை அவள் மனம் முணுமுணுத்துக் கொண்டிருந்தது!

"ராஜா உங்களைப் பார்க்கவே முடியாதா?"

நெஞ்சை அடைக்கும் துக்கத்துடன் உள்ளே சென்று தனிமையிற் கலந்தாள் தங்கம்.

*****

# 26

அந்தி நேரம்; சந்தை கலைந்து விட்டது. சந்தை வியாபாரிகள், கொண்டு வந்த பொருள்களையெல்லாம் விற்று விட்டு, வேண்டும் பொருள்களை வாங்கிக் கொண்டு கும்பல் கும்பலாகத் திரும்புகின்றனர். ஆற்றுப் பாலத்தின் மீது தெம்மாங்கின் இசை ஒலிக்க, தமது மாடுகளை ஓட்டி நடக்கின்றனர் மாட்டுக்காரர்கள். மலைவாயிலில் சூரியன் நழுவுகிறான். எங்கும் செவ்விருள் படலம்! அந்தச் செவ்விருள் பகைப்புலனில் சித்தாநல்லூர் பெரிய சாலையில் சாரி சாரியாகக் கட்டை வண்டிகள் ‘லொட லொட'த்து நகர்கின்றன.

"குள்ளஞ்சாவடி சந்தையிலே... கூத்துப் பார்க்க நிக்கையிலே - ஏ குட்டித் தில்லாலே!” வண்டிக்காளைகள் தெம்மாங்கின் சுவையில் லயித்தவண்ணம் அமைதியாக நடக்கின்றன. திடீரென 'ஜல்ஜல்' சதங்கை ஒலிக்க பெரிய சாலையில் புழுதிப்படலம் கிளப்பியவாறு சிதம்பரம் பிள்ளையின் வில்வண்டி ஓடி வருகின்றது. தெம்மாங்கின் இசை தடைப்படுகிறது. மாடுகள் மருண்டு மயிலைக் காளைகளுக்கு வழிவிடுகின்றன. பெரிய சாலையிலிருந்து ‘தடதட'வென சந்தைத் திடலுக்குள் இறங்கிய வண்டி மெதுவாக நகர்ந்து தங்கத்தின் சாப்பாட்டுக் கடையருகே சற்றுத் தூரத்தில் நிற்கிறது. வண்டியிலிருந்து இறங்கிய சிதம்பரம் பிள்ளை வெள்ளிப் பூணிட்ட கைத்தடியைச் சுழற்றியவாறு தங்கத்தின் வீட்டிற்குள் நுழைகிறார். வாசற்படிக்கு அருகேயுள்ள மாடக்குழியில் ஒளிமங்கிய சிம்னிவிளக்குச் சிணுங்கிக் கொண்டிருந்தது. தோட்டத்தில் - வாசற்படிக்கருகே தங்கமும், ராமுவும் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருக்கின்றனர். வாசற்படியில் நிழல் தட்டுகிறது. தங்கம் திடுக்கிட்டுத் திரும்புகிறாள்!

"யாரது? - " ராமுவின் குரலில்தான் என்ன ரௌத்திரம்!

சிதம்பரம்பிள்ளை அவன் குரலைப் பொருட்படுத்தாமல் "தங்கம், இன்னும் உனக்கு வேலை ஓயலியா...? பையன் யாரு?" என்கிறார்.

அவள் ஒன்றும் பேசமுடியாமல் எச்சிலைக் கூட்டி விழுங்குகிறாள்! சாம்பலும் மண்ணும் கையில் குழம்பி இருக்கின்றன. நெற்றி வியர்வையை புறங்கையால் துடைத்துக் கொள்ளுகிறாள்.

"யாரா இருந்தா உனக்கென்ன?" என்று ராமு சீறினான்.

"ராமு சும்மாயிருடா..." என்று கெஞ்சினாள் தங்கம்.

"இங்கே உட்காரக்கூட ஒண்ணுமில்லையே..." என்று சுற்றிலும் பார்க்கிறார் பிள்ளை.

"சாப்பிடறவங்களே கீழே உக்காந்து சாப்பிடறாங்களாம்! இவருக்கு உட்காரக் குருச்சி போட்டு வெப்பாங்களா?" முனகிக் கொள்கிறான் ராமு.

"என்ன தங்கம், பேசமாட்டேங்கறே... நடந்ததெல்லாம் நானும் மறந்திட்டேன். இதுவும் நல்லதுதான். நம்ம இஷ்டப்படி இருக்கலாம். இன்னொருத்தன் வந்து நம்மைப் பயமுறுத்தவாணாம் பாரு. அதுவுமில்லாம நீயும் என் ஒருத்தனோடேயே இருக்கலாம். உனக்கு வேண்டியதையெல்லாம் நான் செய்வேன். என்ன தங்கம்?" என்று குழைந்தவாறு அவளருகே நெருங்கினார் பிள்ளை. அவள் பின் நகர்ந்து தோட்டத்து வாசற்படிக்குச் சென்றாள். அவள் பின்னே செல்லச் செல்ல இளித்துக் கொண்டே அவளை நெருங்கினார் பிள்ளை.

"ஓஹோ சேர்மன் அவர்களா? வரணும் வரணும்" என்று குரல் கேட்டுச் சாவதானமாகத் திரும்பினார் சிதம்பரம்.

கடைவாயில் பீடியைச் செருகிப் புகைச்சுருள்களை ஊதியவாறு தலைநிமிர்ந்து, ஒரு கண்ணைச் சுருக்கி, முகத்தை ஒரு புறம் சாய்த்துக் கொண்டு நிலை உத்திரத்தில் கைகளை ஊன்றிய வண்ணம் வாசற்படியில்

நின்று சிரித்தான் சாரங்கன்; அவன் கண்கள் லேசாகச் சிவந்திருந்தன. காரணமற்று, சிதம்பரம் பிள்ளையைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தான் அவன்.

"நீ ஏன் இங்கு வந்தாய்?" என்று முகத்தைச் சுளித்தார் சிதம்பரம்.

"சரியான கேள்வி. இன்னொரு தடவை கேளுங்கள். நான் ஏன் இங்கு வந்தேன்? சிதம்பரம் பிள்ளையின் புத்தி சாதுரியம் யாருக்கு வரும்! சேர்மன் அவர்களே இன்னொரு முறை கேளுங்கள்...” என்று குடிவெறியில் கால்கள் பின்னித் தடுமாற உள்ளே நுழைந்தான் அவன்.

“மரியாதையாக இங்கிருந்து போய்விடு!” என்று கத்தினார் பிள்ளை.

"மரியாதை...! சாரங்கனிடமிருந்தா மரியாதையை எதிர்பார்க்கிறீர்? என்ன பேராசை ஐயா உமக்கு?” என்று மீண்டும் சிரித்துக் கொண்டே சாரங்கன் அவரை நெருங்கினான்.

“நீ போகப் போகிறாயா; இல்லையா?”

"நான் வந்த காரியம் முடிந்தவுடன் போய்விடுகிறேன்? தங்கத்தைப் பற்றிப் பேசக் கூடாதுன்னு சொன்னேனா இல்லையா?” என்று உறுமினான் சாரங்கன்.

"நான் உன்னிடம் யாரைப் பற்றியும் பேசவில்லையே!” என்று சாவதானமாக, சுவரில் சாய்ந்தவாறே கூறினார் பிள்ளை.

"என்னிடம் வக்கீல் வாதம் செய்ய வேண்டாம். இங்கு ஏன் வந்தீர்? நான் உமக்கு என்ன சொன்னேன்?” என்று உரத்துக் கூவினான்.

"ஞாபகமில்லை சாரங்கா...” என்று நடுங்கும் குரலில் கூறினார் பிள்ளை. அவன் கரம் அவர் கழுத்தில் இறுகி இருந்தது.

"நான் நினைத்தால் உன் பிணம் இன்னிக்கே மயானக் கரையில் வேகும். என்னைத் தூக்குமேடைக்கு அனுப்பினால் என் பெண்டாட்டி தாலி அறுக்க மாட்டாள். தெரியுமா...? ஹே"...

"சாரங்கா, நமக்குள்ளே ஏன் இந்த விரோதம்? எவ்வளவு ஒத்துமையா இருந்தோம்" என்றவாறு அவன் கைகளைப் பற்றிக் கொண்டு கெஞ்சினார் பிள்ளை.

"சரி, நம் சினேகிதம் இப்பவும் இருக்கணும்னா நான் சொல்றபடி தங்கத்திடம் வாலாட்டக் கூடாது”

"சாரங்கா, என்னைவிட எங்கோ கிடந்து வந்த இந்த அனாதை உனக்கு வேண்டியவளாயிட்டாளா?"

"அது வேற விஷயம். நான் சொல்றதை நீர் கேட்கணும். அப்புறம், இப்ப உம்மகிட்ட இருக்கிற பணமும் நமக்குத் தேவை... என்ன பார்க்கிறீர்...?”

"சாரங்கா, என்னைப் பயமுறுத்தாதே?"

“தைரியமிருந்தால் நீர் பயப்படாமலிரும்.”

“உனக்கு என்மேல் என்ன விரோதம்?”

“ஒன்றுமில்லை; எனக்குப் பணம் தேவை.”

அவர் தமது சட்டைப்பையிலிருந்து பர்ஸை எடுத்து இரண்டு பத்து ருபாய் நோட்டுக்களை அவனிடம் நீட்டலானார். அவர் கையிலிருந்த பர்ஸையும் சேர்த்துப் பிடுங்கிக் கொண்டான் சாரங்கன்.

“சரி, இதோடு நீ போய் விடும். என் வேலையில் குறுக்கே நிற்காதே" என்று சாதுரியமாகச் சிரித்தார் பிள்ளை.

"முதலில் நீர் வெளியேறும்," கைகளை உயர்த்தி வாசற்படியை நோக்கிப் பாதை காண்பித்தான் சாரங்கன். அவன் முகம் உணர்ச்சியற்றுக் கல்லைப் போல் இறுகி இருந்தது. "இது அநியாயம்!” என்று பதறினார் பிள்ளை.

"சேர்மன் அவர்களே, நியாய அநியாயத்தைக் கடந்த இடத்தில் நாம் நிற்கிறோம்.”

"சாரங்கா! நீ என்னை ரொம்ப அவமானப் படுத்துகிறாய்!”

"சே, சே... அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் கௌரவமாகப் போய்வாருங்கள்?"

“சரி” என்று விறைப்புடன் கூறிவிட்டு வெளியேறினார் சிதம்பரம் பிள்ளை.

ஆலமரத்தடியில் நின்றிருந்த வண்டியில் உறங்கிக் கொண்டிருந்த வண்டிக்காரனின் முதுகில் தனது கைப்பிரம்பால் 'சுளீர்' என்று ஒன்று வைத்தார். அவன் திடுக்கிட்டெழுந்து கையிலிருந்த சாட்டையால் காளையின் முதுகில் இரண்டு வைத்தான். காளைகளிரண்டும் வெறி கொண்டு பாய்ந்தன. சிதம்பரம் பிள்ளையின் கோபத்திற்கு அந்த வேகம் அதிகமாகத் தெரியவில்லை. பெரிய சாலை மேட்டில் வண்டி ஏறும்போது தங்கத்தின் வீட்டு வாசற் படியிலிருந்து சாரங்கனும் ராமுவும் சப்தம் போட்டு சிரிக்கும் ஓசையைக் கேட்டுப் பற்களைக் கடித்தார் சிதம்பரம்! "இந்த சாரங்கனைத் தொலைத்த பிறகுதான் மறுவேலை" என்று இருளில் உறுமினார் அவர்.

*****

# 27

நாளுக்கு நாள் ராஜாவின் தாய்க்கு உடல் நிலை மோசமாகி வந்தது. அந்த நிலையில் அவனும் அருகே இல்லாமலிருந்தால் அவள் எப்பொழுதோ செத்துப் போயிருப்பாள். நாட்கள் ஒவ்வொன்றும் அவன் தாயின் மரணத்தை எதிர்பார்த்து எதிர்பார்த்து விடிந்தது, கழிந்தது.

இப்பொழுதெல்லாம் அவளால் பேசக்கூட முடிவதில்லை. ஸ்மரணைகூட, சில சமயங்களில் இருப்பதில்லை. கண்கள் மட்டும் கலங்கிக் கலங்கி தன் அருமை மகனின் முகத்தை ஏக்கத்தோடு நோக்கும்.

"மகனே, நீ எப்படியடா வாழப்போகிறாய்.” என்று கேட்பது போலிருக்கும் அந்தப் பார்வை.

"அம்மா, அம்மா... என்னம்மா இப்பிடிப் பார்க்கிறே?"

அவள் பதிலுக்கு உதட்டைப் பிதுக்கினாள்.

“நான் செத்துப் போயிடுவேண்டா ராஜா...” என்று அவள் மனம் அவளுக்குள் முணுமுணுத்தது.

"ஐயோ அம்மா, நான் எப்படியம்மா இருப்பேன். எல்லோராலும் வெறுக்கப்பட்ட எனக்கு, நீ ஒருத்திதானே அம்மா ஆதரவு? ஐயோ அம்மா! நான் அனாதையாய்ப் போயிடுவேனே; அப்புறம் 'அம்மா'ன்னு ஆசையோடு யாரைக் கூப்பிடுவேன்...? நீ சாகாதே அம்மா; நீ சாகாதே." அவன் நெஞ்சைப் பீறிக்கொண்டு அழுகை வெடித்தது!

அவன் தாயின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினான். அவளுடைய அன்புக் கரங்கள் அவன் தலையை வருடின; அவள் கண்களில் கண்ணீர் பெருகிக் கலங்கி கபாலக் குழியில் வழிந்து காதோரமாக வடிந்தது. பார்வை வீட்டின் கூரை முகட்டில் நிலைகுத்தி நின்றது; அவன் சிரத்தில் விழுந்து கிடந்த அவள் கரங்கள் இறுகின: தலை சரிந்தது. முகத்தில் சாந்தியின் நிறைவு...

"அம்மா... ஐயோ அம்மா...” அவன் கதறல் அவள் காதுகளில் விழவில்லை.

"ஏண்டா ராஜா இப்படிக் கத்தறே" என்று கேட்க அவன் தாய் இல்லை! அவன் 'ஓ'வென்று அலறினான்.

'மரணம் - இயற்கையின் நியதி' என்று அப்பொழுது தெரிகிறதா?

அடுத்த வீட்டிலிருந்தும் பக்கத்து வீட்டிலிருந்தும் யாராரோ வந்தார்கள். அவன் தாயின் தலைமாட்டில் விளக்கேற்றி வைத்தார்கள். ஊதுவத்தி கருகிக் கொண்டிருந்தது. எல்லோரும் கூடி நின்று அழுதார்கள். பிலாக்கண ஓலம் விட்டு விட்டு ஒலித்தது: நீண்டது. அந்தத் தெருவிலுள்ள ஏழைகளின் துன்பங்களுக்கெல்லாம் அந்த வீடு அன்று சுமைதாங்கியாய் இருந்தது. வாசலுக்கு நேரே உள்ள கயிற்றுக்கட்டிலில் பிணம் கிடத்தப்பட்டிருந்தது. அபிராமி அம்மாள் அன்புடன் கொடுத்தனுப்பிய புதுப் புடவை அவள் மீது போர்த்தப்பட்டிருந்தது. நெற்றியில் சாம்பல் மினுமினுக்க கண்களில் ஈக்கள் மொய்க்க வெளிறிப் போன அந்த முகம்...

“அம்மா அம்மா..." என்று இதயம் கேவிக் கேவிப் புலம்ப, கண்களில் நீர்வழிய, கைகளை மார்பின் மேல் கட்டிய வண்ணம் தாயின் தலைமாட்டில் மரமாய், சிலையாய், ஜடமாய் நின்றிருந்தான் ராஜா.

"ராஜா என்ன நிக்கறே? மாமாவுக்குத் தந்தி கொடுத்தியா?” பக்கத்து வீட்டு அம்புஜம் அவன் தோள்களைக் குலுக்கினாள்.

"மாமாவுக்கா? இதோ போறேன்...” என்று தபால் ஆபீசுக்கு ஓடினான். அன்று முழுதும் அவன் அவனாக இல்லை.

"என் அம்மா இனிமேல் இல்லை; எனக்கு யாருமில்லை" நாளெல்லாம் இதே புலம்பல்.

அவன் தாய்க்காக எல்லோரும் அழுதனர். அவன் மனம் அழக்கூடிய நிலையிலில்லை. அது கலங்கியோ அல்லது மரத்தோ போய்விட்டது. அவன் மௌனமாக அழாமல் மனசை இறுகப் பற்றிக் கொண்டு தாயின் சவத்தருகே உட்கார்ந்திருந்தான். மனம் சித்தாநல்லூர் அனுபவத்தால் தத்துவ விசாரணை செய்து கொண்டிருந்தது!

'இவள் யார்? என் முன் கிடக்கும் இந்த எலும்புக் கூடு...? என் தாய்! இல்லை. இப்பொழுது வெறும் ஜடம். தாயாக இருந்தால், பெற்ற பிள்ளை அழும்போது அமைதியாக படுத்துக் கொண்டிருப்பாளா?'

"இவள் யாரோ...?"

“என் தாய் எங்கே?”

'இதோ என் எதிரே கிடக்கும் ஜடத்தின் இயக்கமே என் பிறப்பின் உற்பாதம். இவள் அனுபவித்த இன்பத்தின் விளைவுதான் எனது ஜனனம்! இவள் வயிற்றில் சின்னஞ் சிறு பனித்துளியாய் புகுந்து, அவள் ரத்தத்தோடு ரத்தமாய், மாமிசமாய், தவளை உருவாய், உருவற்ற உருவாய் பிண்டத் திசுவாய் வளர்ந்து, இதயத்துடிப்புப் பெற்று, அவள் சுவாஸத்தையே கிரஹித்து அவள் உடம்புச் சூட்டிலேயே சூடேற்று, அவளையே தின்று, வளர்ந்து, ஒரு நாள் கருப்பையிலிருந்து பிதுங்கி, பனிக்குடத்தைச் சிரத்தால் உந்திக் கிழித்துக்கொண்டு உலகுக்கு அறிமுகமாகிய நான் இந்த என் உடல் வளர்ந்து வலுப்பெற்ற இந்த என் தசைக்கூட்டம் - தனித்து விட்டது. நஞ்சுக் கொடியோடு தாய்க்கும் சிசுவுக்கும் உள்ள பந்தம் போய் விடுமா...? பாசக்கொடியின் மறுமுனை அவள் இதயத்தில் அல்லவா இருக்கிறது? - அவள் போய்விட்டாள்! - அந்தக் கொடியின் மறுமுனை தீய்ந்து விட்டது! - நான் ஏன் இன்னும் இருக்கிறேன். அன்பின் உறைவிடம் போன பின் நான் வரண்ட நெஞ்சனாய் மாறிவிட்டால்...'

'நேற்றிருந்த என் அம்மாவா இது? இல்லை; இல்லவே இல்லை. என் அம்மா எங்கே?' அவனுக்கு ஒன்றும்

புரியவில்லை. மரணம் - தெளியாத மாயையாய், ஜனனம் - விளங்காத ரகசியமாய், பிரபஞ்சமே அர்த்தமற்ற குழப்பமாய்த் தோன்றியது. பிரமை பிடித்தவன் போல் அமர்ந்திருந்தான்!

"புனரபி ஜனனம்... புனரபி மரணம்;... புனரபி ஜனனி... ஜடரே சயனம்" - குரல் வந்த திக்கை நோக்கித் திரும்பினான். வண்டியிலிருந்து இறங்கி பகவத் தியானம் செய்தவாறே உள்ளே நுழைந்தார் வேதாசலம்... சற்று நேரம் தங்கையின் சடலத்தை வெறித்துப் பார்த்தார்:

"ஆத்மா சட்டையை உதறிவிட்டுப் பறந்து விட்டது. எதற்காக அழுகிறீர்கள்! ஏன் அழவேண்டும்? பகவானைத் தியானம் செய்யுங்கள். மீண்டும் மீண்டும் பிறந்து கொண்டே இருக்கிறோம். மீண்டும் மீண்டும் இறந்து கொண்டே இருக்கிறோம். ஆசைகளைத் துறந்தவன், கருமத்தை மட்டும் கடமையாகக் கருதிப் பலனைக் கருதாமல் எவன் பகவத் தியானத்தில் ஈடுபடுகிறானோ அவன் மீண்டும் பிறப்பதில்லை. அந்த ஆத்மா சாயுச்யநிலை அடைந்து விடுகிறது" - அவர் தத்துவ ஒத்தடம் ராஜாவுக்கு ஹிதம் அளிக்கவில்லை!

மனசிலே அரிப்பிருந்தால், கனம் இருந்தால், சோகத்தின் கொப்பளங்கள் இருந்தால் வார்த்தை விளையாட்டு விளையாட முடியுமா...?

"மாமா, பந்தங்களை அறுத்தெறி என்று உபதேசிப்பது ரொம்ப சுலபம்! நீங்கள் அப்படித்தான் வாழ்கிறீர்களோ? எல்லா உயிர்களிலும் இருப்பதாகக் கூறும் உங்கள் பகவான் உங்கள் உயிரிலும், கீதாவின் உயிரிலும் மட்டுமே இருப்பதாகத்தானே நீங்கள் முடிவு கட்டி விட்டீர்கள்?” அவனுக்கு வந்த ஆத்திரத்தில் சம்பந்தா சம்பந்தமில்லாமல் வார்த்தைகள் துடித்தன.

வேதாசலம் நிதானமாகப் பேசினார்: "இதென்னடா, உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது? கீதாவைப் பற்றி

என்ன பேச்சு? உனக்கு அவளைக் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அவ்வளவு தானே...”

"எனக்கும் அதைப்பற்றி கவலையில்லை. ஆனால் என்னிடம் வந்து பந்தங்களை அறுத்துவிடுமாறு உபதேசம் புரிய உங்களுக்கு அருகதையில்லை. நீங்கள் தத்துவம் படித்திருக்கலாம். வாழ்க்கை தெரியாத மனிதர்...”

“உனக்கென்னடா தெரியும்...? பிஞ்சில் பழுத்தவன்... உனக்கா என் மகளைக் கொடுப்பேன்?”

அவர் வார்த்தைகளைக் கேட்டு அவன் முகம் சிவந்தது. கோபத்தில் லேசாகச் சிரித்தான்:

"நான் பிஞ்சிலே பழுத்ததிருக்கட்டும்...? நீங்கள் முற்றியும் பழுக்கமாலிருக்கிறீர்களே... உங்களிடம் நான் பெண் கேட்கவில்லையே...! எனக்கொன்றும் தெரியாதுதான்... ஆனால் நீங்கள் சொன்ன வார்த்தைகள் எல்லாம் - உபதேசங்கள் எல்லாம் - என் மனசில் இருக்கின்றன - உங்களுக்குத் தத்துவம் பேசுவது பொழுது போக்காய், கௌரவமாய் போய்விட்டது. இங்கு யாருக்கும் உங்கள் தத்துவம் தேவைப்படவில்லை!”

"அடப்பாவி, உன் கண்களை மாயை மறைத்திருக்கிறது; நீ அதிகம் துன்பப்படப் போகிறாய்?”

"என் கண்களை மறைத்திருக்கும் மாயையும் பரப்பிரம்மமாகிய பகவானின் அம்சமே - இழவு வீட்டில் தத்துவக் குழப்பங்கள் வேண்டாம்...!" அவன் தன் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டான்.

'எவண்டா சம்மதிக்கமாட்டான்? - ஏண்டா சம்மதிக்க மாட்டான்? - நீ என்ன ஜாதி கெட்டுப் பொறந்திட்டியோ - ' அவன் தாயின் கோபக்குரல் மனசில் ஒலித்தது.

வேதாசலம்பிள்ளை சிறிது நேரம் மௌனமாய் நின்றார்.

அவனை விரைத்து நோக்கினார்.

"சீ, இங்கே வந்ததே தப்பு; மரியாதை கெட்ட நாய்!" என்று உறுமிவிட்டுக் குடிசையிலிருந்து வெளியேறினார்.

'நாய் மட்டும் உயிரில்லையா, அந்த உயிரில் பகவான் இல்லையா?' என்று அத்வைதம் பேசிச் சிரித்தது ராஜாவின் மனம்.

"ராஜா, இதெல்லாம் நல்லாயிருக்கா? அவர் கோவிச்சுக்கிட்டுப் போறார் பாரு, கூப்பிடு" என்று அவனைத் தள்ளினாள் அம்புஜம்.

ஒரு நிமிஷத்தில் தன்னை உணர்ந்தான் ராஜா. 'வீட்டிற்கு வந்த மாமாவிடம் என்ன இப்படி நடந்து கொண்டேன்' என்று மனம் துணுக்குற்றது.

"மாமா, மாமா..." என்று கூவிக் கொண்டே அவர் முன் ஓடினான் அவன்.

"உம், விலகி நில்" என்று முகம் சுளித்தார் வேதாசலம்.

"என்னமோ வருத்தத்திலே தெரியாமலே பேசிவிட்டேன். மன்னிச்சிடுங்க மாமா" என்று கெஞ்சினான் ராஜா.

"தெரியும்டா எனக்கு; கோவிச்சுக்கிட்டுப் போறானே, பொண்ணு கொடுக்க மாட்டானேன்னு தானே இப்போ வந்து இந்த வேஷம் போடறே" என்று அகம்பாவத்துடன் சிரித்தார் வேதாசலம். அவர் சிரிப்பு அவன் நெற்றிப் பொருத்தில் அறைவது போன்றிருந்தது. வழியைவிட்டு விலகி நின்றான்.

"சீ, நீயும் ஒரு மனுஷனா?" என்று மனம் காறி உமிழ்ந்தது.

"நீங்கள் போகலாம். உங்களிடம் நான் வேஷம் போடவில்லை; போட்டதுமில்லை. அப்படி நீங்கள் நினைத்தால் கோளாறு உங்களிடத்தில்தான். நீங்கள் போகலாம்" என்று கரம் உயர்த்தி நமஸ்கரித்தான் ராஜா.

"நீங்க என்னங்க, என்னமோ சின்னப் பையன் சொல்லிட்டான்னு..." என்று சில பெரிய மனிதர்கள்

அவரைத் தடுத்தழைத்தார்கள். அவரும் திரும்பினார். ராஜாவின் முகம் சிவந்தது; குடிசை வாசலில் கைகளை விரித்து வழி மறித்தவாறு, "இங்கே கிடக்கும் என் தாயின் பிணத்தின் மீது ஆணை! அந்த மனிதர் இங்கே வரக் கூடாது" என்று வெறிபிடித்தவன் போல் கூவினான். அவ்வளவுதான்; எல்லோருடைய குரலும் ஒடுங்கியது; வேதாசலம்பிள்ளை போய்விட்டார்.

"இருந்தாலும் இவனுக்கு இவ்வளவு வாய்த் துடுக்கு கூடாது. ஒரு வார்த்தை கூட விட்டுக் கொடுக்காமல் பேசினா, பெரியவருங்கிற மரியாதை வேணாமா...” என்று ஒரு பெரியவர் கோபாவேசமாகக் கூறினார்.

"இங்கே மரியாதை செய்வதற்கு யாரும் யாரையும் அழைக்கவில்லை. மரியாதைக்காரர்கள் தாராளமாய்ப் போகலாம்!” என்று பதிலுக்குக் கூவினான் ராஜா.

"அது கெடக்கு, தறுதலை?”

“லட்சுமி வயத்திலே இப்படி ஒரு கொரங்கு வந்து பொறக்குமா? சீ...”

“அவளை மட்டும் என்ன, கொஞ்சமா படுத்தி வெச்சுது? இப்ப அவளை எடுத்துத் தின்னுட்டு அது நிக்கறதை பாரு..."

“இது உருப்படவா? ஹும்...”

"நாதியத்துத் தெருவிலே நிக்கப் போகுதே. அப்போ தெரியும்.”

"தகப்பன் இல்லாத தறுதலையா வளர்ந்துடுத்து... இனிமேல்தானா வெளங்கப் போகுது?" இப்படிப் பலவாறு பேசிக்கொண்டு அந்தத் தெருவில் பெரிய மனிதர்கள் என்று பெயர் படைத்தோர் அனைவரும் வெளியேறினர்.

'முட்டாள்கள்... போகட்டும்' என்று பேசாமலிருந்து விட்டான் ராஜா.

பிணத்தருகே அவன் மட்டுமே இருந்தான். அவனுக்கிருந்த ஆத்திரமெல்லாம், துயரமாய் அழுகையாய்ப் பீறிட்டுக் கிளம்பியது.

"அம்மா... என்னென்னவோ நெனைச்சி வந்தேனே. இப்படி என்னை மோசம் பண்ணிட்டியே அம்மா. உன் மனசு சந்தோஷப்படும்படியா நடந்துக்கணும்னு நெனைச்சி வந்தேனே. என்னாலே உனக்குச் சந்தோஷமில்லாமெ, திருப்தி இல்லாமெ செத்துப் போயிட்டியே அம்மா... ஐயோ அம்மா..." அவன் குரல் தெரு முழுவதும் ஒலித்தது. தரையில் கிடந்து புரண்டு துடித்து பூமி கிழிபடக் கதறினான்.!

"ராஜா..." என்ற கனிவு மிகுந்த குரல் அழுகையினூடே ஒலித்தது... அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். கண்களில் கண்ணீர் வழிய கேவிக்கொண்டு அம்புஜம் நின்றிருந்தாள்.

"அக்கா"

"ராஜா, உனக்கும் எனக்கும் ஒரே ஆதரவாய், அம்மாவாய் இருந்த ஆச்சி போயிட்டாங்களே..." என்று அவளும் ஓலமிட ஆரம்பித்தாள்.

'பாவம், அம்புஜம்' - அவள் நிலையைப் பார்க்கும் போது அவன் அழலாமா? அழுதுகொண்டே இருக்கத் தான் முடியுமா? தன்னைப் பெற்ற பாபத்திற்காக அந்தத் தாயின் வயிற்றில் அவன் தீ வைக்க வேண்டாமா? -

தெருவில் மூங்கிலில் பாடை கட்டிக் கிடக்கிறது! புதுச்சட்டியில் நெருப்பு! நெருப்பு வைக்க அவன் -

ராஜாவும் அம்புஜமுமாகச் சேர்ந்து பிணத்தைத் தூக்கிக் கிடத்தி இரண்டு குடம் தண்ணீரைக் கொட்டி நெற்றியில் - சகல தத்துவங்களையும் தன்னுள் அடக்கிய - சாம்பலைப் பூசி, வாயில் சந்தனம் அப்பி, புதுத்துணி போர்த்தி மயான யாத்திரைக்குத் தயார்ப்படுத்தி விட்டார்கள்.

தெருவில் சுடலைச்சங்கின் ஊளை விம்மி உயர்ந்தது; நீண்டு தாழ்ந்து ராஜாவின் வயிற்றைக் கலக்கியது. அவன் தாயை தூக்கிக் கொண்டு போய் பாடையில் கிடத்தி விட்டார்கள். கையில் நெருப்புச் சட்டியுடன் அவன் முன் செல்ல, அவன் பின்னே அவன் தாய் நாலு பேர் தோள் மீது பவனிவர, "ஆச்சி... என்னெ வுட்டுட்டுப் போறீங்களே, ஆச்சீ...!" என்ற ஒற்றைக் குரலில் பிலாக்கண ஓலம் கேவிக் கேவி ஒலித்தது! அவன் திரும்பிப் பார்த்தான். கைகளைத் தலைமீது உயர்த்தி நமஸ்கரித்த வண்ணம் அவன் வீட்டிற்கெதிரே நின்று அம்புஜம் கதறிக் கொண்டிருந்தாள்!

*****

# 28

ராஜாவின் தாய்க்குக் கொள்ளி வைப்புச் சம்பிரதாயங்கள் நடந்து ஒரு வாரத்திற்கு மேலாகி விட்டன. அந்தத் தனிக்குடிலில் அவன் தனியனாய் வாழ்ந்தான். எதிர்காலம் ஒரே இருள் மயமாய் - நம்பிக்கைகளெல்லாம் நைந்து நாசமாகி, வெறிச்சோடிக் கிடந்தது.

என்னமோ வாழ்ந்து வந்தான்!

எப்பொழுதாவது பக்கத்து வீட்டு அம்புஜம் வந்து சமைத்துப் போட்ட பொழுது சாப்பிட்டான். அப்பொழுதெல்லாம் சோற்றைப் பிசைந்து ஒரு கவளம் வாயருகே கொண்டு போகும் போது,

'என் கையால் ஒனக்கு சமைச்சுப் போட்டு எவ்வளவு காலம் ஆயிடுச்சி' என்ற தாயின் பரிவுக்குரல் - அந்தப் பாசக்குரல் அவன் நெஞ்சில் அடைக்கும்; கண்கள் கலங்கும். கண்ணீர் வழியத்தான் சாப்பிடுவான். அம்புஜத்தின் கனிவுமிக்க ஆறுதல் வார்த்தைகள் அவனைத் தேற்றும். அவள் யாரோ...? அவன் யாரோ? அவளுக்குத் தான் அவன் மீது எத்தனை பாசம்! எல்லோராலும் வெறுத்து ஒதுக்கப்படும் அவனிடம் அவளுக்குத்தான் என்ன பரிவு!

ஒரு நாள் காலை...

ராஜா மட்டும் குடிசையில் தனியே இருந்தான். பித்துப் பிடித்தவன் போல் கூரைமுகட்டைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான். க்ஷவரம் செய்யப்படாததால் முகத்தில் மெல்லிய கரிய ரோமம் லேசாகப் படிந்திருந்தது. என்ன செய்வதென்று புரியாத மந்தம்; சோர்வு. அப்பொழுதுதான் அவன் வந்தான்! - குடிசைக்குச் சொந்தக்காரனான கிழவன்.

"தம்பீ..." என்ற குரல் கேட்டு வெளியே வந்தான் ராஜா.

“உட்காருங்க தாத்தா” என்று திண்ணையைக் காட்டினான். திண்ணையில் உட்கார்ந்து அவர் பேச ஆரம்பித்தார்.

ஊரார் விரோதத்தின் விளைவு அவனுக்குப் புரிய ஆரம்பித்தது.

“குடிசையை நீ காலி பண்ணியாகணும். நேத்தோடு ஒங்க வாடகைப் பணம் சரியாப் போச்சு...” என்று எங்கோ பார்த்துக் கொண்டே கூறினார் கிழவர்.

"ஓ! அதற்கென்ன தாராளமாய்” என்று சொல்லி விட்டு ஒரு கோணிப்பையில் அவன் தாய் விட்டுப் போன சம்பத்துக்களான, இட்டிலிச் சட்டியையும் மற்றும் சில தட்டுமுட்டுச் சாமான்களையும் போட்டுக் கட்டினான். கொடியில் கிடந்த துணிமணிகளை ஒரு மூட்டையாய்க் கட்டி, இரண்டையும் குடிசைக்கு வெளியே கொணர்ந்து திண்ணைமீது வைத்துவிட்டு, அந்த க்ஷணமே வீட்டுச் சாவியைக் கிழவனிடம் கொடுத்து விட்டான். வீட்டை இழுத்துப் பூட்டிக்கொண்டு அவனைத் திரும்பிக் கூட பார்க்காமல் போய்விட்டார் அந்தப் பெரிய மனிதர். 'என்ன வாழ்க்கை...’ நினைக்க நினைக்க அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. சிரித்துக் கொண்டான்! அழுவதை விடச் சிரிப்பது நல்லதல்லவா?

எங்கே செல்வது? என்ன செய்வது? என்றெல்லாம் சிந்திக்க இயலாமல் மனம் குழம்பிக் கிடந்தது. நாளெல்லாம் மூட்டையைப் பார்த்துக் கொண்டு ஊரான் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தான். திண்ணையிலாவது குந்திக் கிடக்க அனுமதித்தானே, அந்த மட்டில் வீட்டுக்காரன் நல்லவன்தான்.

நெஞ்சில் துயரம் சுமையாய்க் கனத்தது; பசி வேறு. மூட்டைமீது சாய்ந்தவாறு கண்ணை மூடினான் - அயர்ந்த நித்திரை.

"தம்பீ என்ன இது? இங்கே உட்கார்ந்திருக்கே, வெளக்கைக் கொளுத்தக்கூடாதா?” என்ற அம்புஜத்தின் குரல் எழுப்பும் போது இருள் கவிழ்ந்து விட்டது!

"விளக்கா... வீடு இருந்தால் அல்லவோ விளக்கேற்ற?" அம்புஜத்திற்கு விஷயம் விளங்கிவிட்டது!

"அட பாவிகளா! ராஜா. என் வீடு உன் வீடு அல்லவா; உன் தாய் என் தாயாக இருக்கவில்லையா? வா, வந்து என் வீட்டில் விளக்கேற்றி வை. வா ராஜா!" என்று அவனை அழைத்துக் கொண்டு மூட்டையுடன் தன் குடிசைக்குச் சென்றாள் அம்புஜம். அவள் பின்னே மூட்டைகளுடன் சென்றான் ராஜா. அம்புஜம் வீட்டைத் திறந்து விளக்கேற்றினாள். அடுப்பை மூட்டிச் சமைக்க ஆரம்பித்தாள்.

"ராஜா, ஆச்சி வயித்திலே நானும் பிறந்திருக்கக் கூடாதா? உன்னைப்போல ஒரு தம்பி எனக்கு இருந்தால்..."

"இப்ப மட்டும் என்ன அக்கா, நான் உனக்குத் தம்பி இல்லையா?" அவன் ஒரு நிமிடம் யோசித்தான்...

"இட்டிலிக்கடை நடத்தினால் என்ன? அம்மாவுக்கு உதவியாக இருக்க நினைத்தேனே. அதே மாதிரி அம்புஜத்திற்கு உதவியாக இருந்தால்... இட்டிலிக்கடை நடத்தி பட்சணம் விற்று..."

“அக்கா, எனக்கொரு யோசனை தோணுது...”

“என்ன ராஜா!”

“நம்ம ரெண்டு பேருமா சின்னதா ஒரு இட்லிக்கடை வெச்சி நடத்தலாம். நீ பட்சணம் செய்து கொடு. நான் சாயங்கால நேரத்திலே, பார்க்கிலே, சினிமா கொட்டகையிலே எல்லாம் போய் விற்பனை செய்கிறேன். என்ன சொல்றே அக்கா?”

"அதுவும் நல்ல யோசனைதான் ராஜா... இந்த மாசம் சம்பளம் வாங்கின பிறகு அவுங்ககிட்டே சொல்லிட்டு வேலையிலிருந்து நின்னுடறேன். நமக்கு கொஞ்சம் முதல் வேணுமே!"

"அதுவும் சரிதான்!"

அன்று இரவு வெகு நேரம் வரை அவர்கள் தாங்கள் நடத்தப்போகும் வியாபாரத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த முடிவு இருவருக்கும் மிகவும் திருப்தியளித்தது.

அவள் அவனுக்கு சாதம் போட்டாள். சாப்பிட்டு விட்டுத் திண்ணைக்குச் சென்று படுத்துக் கொண்டான் ராஜா.

படுத்தவுடன் உறக்கம் வந்து விடுகிறாதா?

'கீதா...' திடீரென அவள் நினைவு வந்தது.

'தெரியும்டா எனக்கு. கோவிச்சிகிட்டுப் போறானே. பொண்ணு கொடுக்க மாட்டானேன்னு தான் இப்போ வந்து இந்த வேஷம் போடறே?' - வேதாச்சலம் பிள்ளையின் சிரிப்பு அவன் காதுகளிற் குடைந்தது.

'ராஜா, நீ, என் ராஜா'

'நாம் ஒன்று சேர்வதற்கு எவ்வளவு இடைஞ்சல்கள் ஏற்படும் தெரியுமா?'

'அப்பாவையும் அம்மாவையும் தானே சொல்கிறாய்? அவர்கள் மனம் நாளடைவில் மாறிவிடும் ராஜா' பழைய நிகழ்ச்சிகள் அவன் நெஞ்சில் கவிந்தன. புரண்டு படுத்தான்.

'நான் கீதாவை மறந்துவிட வேண்டியதுதானா...?'

'அவள் எங்கே? நான் எங்கே...? அவள் படித்தவள்! பணக்காரி. நான்?'

'கீதாவை நான் மறந்துவிடவா? ஐயோ, கீதா!' அவன் கண்களில் கண்ணீர் கலங்கியது. படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்தான்.

'கீதாவை நினைத்து வருந்திப் பயனில்லை; அவளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியவர்கள் அவளுடைய பெற்றோர்; அவள் யார்? நான் யார்? அவளுக்கு எது உசிதம்

என்று நினைக்கிறாளோ, அதன்படி நடக்கட்டும், அவள் பெற்றோரைத் தன் விருப்பத்திற்குச் சம்மதிக்க வைப்பதோ, அவர்கள் விருப்பத்திற்கு அவள் சம்மதிப்பதோ, அவள் உரிமை. கீதா எனக்குத்தான் என்று சொல்ல எனக்குத்தான் என்ன உரிமை? - கீதாவின் நினைவை நிர்ப்பந்தமாக மனசைவிட்டு விலக்கினான். தன் இட்டிலிக் கடை வியாபாரத்தை நினைத்துக் கொண்டே உறங்கிப் போனான்!’

*****

# 29

மறுநாள் காலை.

அம்புஜம் வேலைக்குப் போய்விட்டாள். தனிமையில், எதிர்காலப் புல்வெளியில் மனசை மேயவிட்டு விட்டுத் திண்ணையில் சிலை போல் உட்கார்ந்திருந்தான் ராஜா.

"ஐயா, இந்த வீட்டிலே யாருமில்லையா? பூட்டிக் கிடக்கே?” என்று குரல் கேட்டுத் திரும்பினான். தபால்காரன் நின்றிருந்தான்.

"என்ன விஷயம்?”

"ராஜா என்ற பெயருக்கு ஒரு கவர் வந்திருக்கு"

"நான்தான் ராஜா. அந்த வீட்டைக் காலி பண்ணிட்டேன்"

"காலமாயிட்டாங்களே பெரியம்மா. அவங்க மகனுங்களா நீங்கா? அவுங்க பேசறதைக் கேட்டுகிட்டிருந்தாலும் போதுங்க, ஊரிலே ஒரு பிள்ளை இருக்கிறதா அடிக்கடி சொல்லுவாங்க - நான் வரும்போதெல்லாம் உங்ககிட்டேருந்து வர்ர கடிதாசியே எதிர்பார்த்துக் கொண்டே இருப்பாங்க" - தபால்காரன் மனமுருகிப் பேசினான். கண்களைத் துடைத்துக் கொண்டே கடிதத்தை வாங்கினான் ராஜா. கடிதத்தின் மீது கீதாவின் மணியான எழுத்துக்கள் மின்னின; ஆர்வத்தோடு பிரித்துப் படித்தான்.

"அன்புள்ள ராஜா,

உனக்கு நான் என்ன எழுதுவது என்றே புரியவில்லை. என் மனம் அவ்வளவு குழம்பி இருக்கிறது. அத்தை இறந்த அன்று அப்பா வந்தபோது நீ அவரிடம் சண்டை போட்டு வாய்க்கு வந்தபடி யெல்லாம் பேசினாயாம். என்னால் நம்பமுடியவில்லை. என்றாலும் ஏதோ சச்சரவு நிகழ்ந்திருக்கிறது என்று புரிந்துக் கொள்கிறேன். கொஞ்சம் பொறுமையாக இருந்திருக்கலாம்; ஏனென்றால் பெரியோர் செய்யும் சிறு பிழையெல்லாம் சிறியோராகிய

நாம் பொறுக்க வேண்டும் என்பது புதுமொழி! அது போகட்டும். அப்பா இங்கு வந்தவுடன் என்னைக் கடுமையாக கண்டித்தார். நீ இருப்பதாகக் கூட நான் நினைக்கக் கூடாதாம். விஷயத்தை அம்மாவிடம் கூட சொல்லி விட்டார். அம்மா அதை முதலில் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

'என்னமோ சிறுசுகள்... அவன் என்னைக் கலியாணம் பண்ணிக்கிறியான்னு கேட்டிருப்பான். அவ ஆகட்டும்னு சொல்லியிருப்பா - இதுக்கு போயிப் பிரமாதப்படுத்தறீங்களே' - என்று சாதாரணமாக எப்போதும் போல் சொல்லிவிட்டார்கள். ஆனால் அப்பாவோ, ஆரம்பித்து விட்டார்...

ஒரு பருவப் பெண்ணைப் பார்த்து ஒரு வாலிபன் 'என்னைக் கலியாணம் பண்ணிக் கொள்கிறாயா' என்று கேட்பது ஹிந்து தர்மத்துக்கே விரோதம். 'ஆகட்டும்' என்று அவள் சொல்வது ஹிந்து தர்மத்துக்கே இழுக்கு!' - என்றெல்லாம் ஏதேதோ பேசிக் கொண்டே இருந்தார். இவர்களின் தத்துவக் கோட்டைக்குள் புகுந்து திண்டாட என்னால் முடியாது; எனக்குத் தெரியாது. நான் செய்தது சரியென்றுதான் என் மனம் சொல்கிறது.

- நான் உன்னை நினைக்கக் கூடாது என்று தடை, என் மனத்திற்கு என்னாலேயே தடைபோட முடியவில்லை இவரால்தானா முடியப் போகிறது? எப்பொழுதும் உன் நினைவுடனேயே இருக்கிறேன். நீ இப்பொழுது என்ன செய்கிறாய்? எப்படி வாழ்க்கை நடத்துகிறாய் என்பதையெல்லாம் அறிய உள்ளம் துடிக்கிறது ராஜா! நம்முடைய எதிர்காலம் ஒரே இருள் மயமாய் இருக்கிறது. தனிமையில் கண்ணீர்விட்டு அழுவதைத் தவிர வேறு நிவர்த்தி இல்லை. உன்னைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. உன்னிடம் பேச வாய் துடிக்கிறது. உன் குரலைக் கேட்கச் செவிகள் ஏங்குகின்றன. நான் என்ன செய்வேன் ராஜா? எனக்குப் பைத்தியம் பிடித்து விடுமோ என்று நான் பயப்படுகிறேன்.

கடைசியாக ஒரு விஷயம்...

நீ சொல்லியிருக்கிறாயே, நம் ஊர்க் கிழட்டுக் காவாலி சிதம்பரம் பிள்ளை, அவன் மகன் சோமுவுக்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுக்க நிச்சயித்திருக்கிறார்களாம். இந்தச் செய்தியைக் கேட்டவுடன் நான் ஹிஸ்டிரியா தாக்குதலுக்காளானேன். இப்பொழுது கூட படுக்கையிலிருந்து கொண்டுதான் இதை எழுதுகிறேன். உனக்கு எழுதுகிறேன் என்ற ஆர்வத்தில்தான் இவ்வளவு நீண்ட கடிதத்தை எழுத எனக்குச் சக்தி இருக்கிறது. இவர்கள் பேசும் கல்யாண ஏற்பாட்டை நினைத்தால் வயிறு பற்றி எரிகிறது! இந்தப் பாபத்தைச் செய்துவிட்டு மோட்சம் எய்த நினைக்கிறார் அப்பா. தாய் தகப்பனுடன் வீட்டிலிருப்பது பேய் பிசாசுகளுடன் காட்டிலிருப்பதுபோல் இருக்கிறது. ஏதாவது பேசினால் வாய் ஓயாத வசவு... ராஜா நான் துணிந்துவிட்டேன்...

எப்பொழுது வேண்டுமானாலும் நான் சம்யுக்தையாக மாறத் தயார்! நீ பிருத்வியாக மாறுவாயா? உன் பதிலை எதிர்பார்க்கிறேன். கடிதங்கள் பத்திரமாக என்னிடமே வந்து சேர வேலைக்காரியின் மூலம் வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன்.”

உன் கீதா."

குழப்பத்தையடுத்துக் குழப்பமாய் சிக்கலுக்கு மேல் சிக்கலாய்க் குவியும் வாழ்க்கை நிகழ்ச்சிகள் அவனை அழவும் வைக்கவில்லை; சிரிக்கவும் வைக்கவில்லை.

‘வேடிக்கையான ஜன்மம்' என்று தன்னை நொந்து கொண்டான்.

‘அடிப் பேதைப் பெண்ணே, என் மீது நீ இத்தனை அன்பு வைக்கலாமா?' என்று மனம் முணகியது. அவன் மௌனமாய் அமர்ந்து அவளைப் பற்றியே யோசித்தான்.

'கீதாவுக்கும் எனக்கும் வெகு தூரம், அது சித்த நல்லூருக்கும் தில்லையம்பதிக்கும் உள்ள தூரம் அல்ல;

சமூக பேதங்களால் உயர்வுக்கும் தாழ்வுக்கும் உள்ள இடைவெளி; அது என்னை மிரட்டுகிறது. கீதா என்னுடன் ஓடி வந்துவிடத் தயாராகிவிட்டாள் - வேடிக்கைதான்!’

'சமூகத்தின் வாய்கிழியப் பேசப்படும் புனிதமும் பெண்மையும் ஒவ்வொரு நிமிஷமும் சுக்குநூறாக உடைக்கப்படுவதற்குத் தயாராக இருக்கிறது. அதற்குப் பயந்துதான் அவற்றைப் பற்றி அதிகம் பேசவேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. தனியே ஒரு இளைஞனும் யுவதியும் இந்த உலகத்தின் கட்டுகளை அறுத்துச் சுதந்திரமாக வாழ முடியுமா என்ன? அப்படிப் போனவர்களின் கதைகள் எனக்குத் தெரியும்!’

'ஏன் எவ்வளவோ இளைஞர்களும் யுவதிகளும் சமூகத்தை எதிர்த்து மணம் புரிந்துகொண்டு காதலர்களாக வாழவில்லையா?’

'ஆம்; வாழ்கிறார்கள்! அவர்கள் பணமுடையவர்களாக இருக்கிறார்கள். அல்லது உற்றார் உறவினர் ஆதரவு பெற்றவர்களாக இருக்கிறார்கள்; அப்படி இருப்பவர்கள் கூடத் தவறி விழுந்து நொறுங்கிப் போயிருக்கிறார்கள். என்னைப் போன்ற ஏழை. அனாதை, தற்குறி. சீசீ, எனக்குக் காதலாவது? வாழ்க்கையாவது?' - அவன் தனக்குள் சிரித்தான். 'நான் பிருத்வி'யாக மாறுவதும், அவள் 'சம்யுக்தை'யாக மாறுவதும் நல்லதல்ல. என்னால் கீதாவுக்கு வாழ்க்கையே இல்லாமல் போகட்டும், அவள் வாழ்க்கை கறைபடுத்தப்பட வேண்டாம்' அவன் முகத்தில் அசைக்க முடியாத உறுதி; அதில் சோகம், அவன் அவளுக்குக் கடிதம் எழுதினான்.

'நான் எப்படி வாழ்கிறேன். என்ன செய்கிறேன் என்று அறிய உன் மனம் துடிப்பதாக நீ எழுதியிருந்தாய். ஆவலில் துடிக்கும் உன் மனத்தைத் துன்பத்தால் துடிக்க வைக்க நான் விரும்பவில்லை. ஆதலால் அதை அறிய உன் மனம் துடிக்க வேண்டும்.’

'உன் தகப்பனாரின் பிடிவாதத்தை மாற்றமுடியும் என்ற நம்பிக்கை உனக்கே இல்லாதபோது நான் என்ன செய்வது? அவர் பிடிவாதத்தை நம்மால் மாற்ற முடியாது தான்! நம் மனத்தை நாம் மாற்றிக்கொள்ள முடியும் அல்லவா? இந்த வார்த்தைகள் உன் கண்ணைக் கலக்குகின்றன என்று எனக்குத் தெரிகிறது. நான் என்ன செய்வேன் கீதா? காலம் உன் கண்ணீரைத் துடைக்கட்டும். அதற்குள் எனக்குக் கண்ணீரே வற்றிப் போகலாம்.'

'என் இதயத்தில் உன் நினைவைக் கொல்ல முயல்கிறேன். இது கோழைத்தனம் என்றால், நான் கோழைதான். 'கோழை!' என்று கூறி, காறி உமிழ்ந்துவிட்டு என்னை மறக்க முயற்சி செய் கீதா. இந்தப் பரிதாபகரமான முடிவுக்கு நானே பொறுப்பு என்று நீ முடிவு செய்தால் அதற்காக என்னை மன்னித்துவிடு! உன் மேல் அளவு கடந்த பிரீதியும் தூய்மை மிக்க பக்தியும் இருப்பதால்தான் இந்த முடிவுக்கு வந்தேன். உன்னை இழி சொல்லுக்கோ, வாழ்க்கையின் சக்திக்கோ பலியாக்க நான் விரும்பவில்லை. அதைவிட நீ சோமுவை மணந்து வாழ்வதையே நான் விரும்புகிறேன். சோமு சந்தர்ப்பங்களினால் கெட்டுப் போனவன். உன்னுடன் அவன் பழக நேர்ந்தால் உன் அன்பால் அவன் தூய்மையடைந்து விடுவான். உன் எதிர்காலம் வளமுற்றிருக்க உன் வாழ்க்கையில் நீ வெற்றியடைய, சுகமடைய, இன்புற்றிருக்க இதய பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன் கீதா, என்னை மன்னித்துவிடு, மறந்துவிடு கீதா, மறந்துவிடு!'

'விரக்தியெனும் ஈட்டிகளால் குத்தப்பட்டு, ரத்தம் கக்கித் துடிதுடிக்கும் இதயத்தோடு நம் காதலைக் கொன்று விட்டேன், கீதா, கொன்றுவிட்டேன்!'

'காதலில், கடமையில், வாழ்க்கையில் எல்லாவற்றிலும் நான் தோற்றுவிட்டேன். கீதா தோற்று விட்டேன்!' வெறி பிடித்ததுபோல் அவன் கைகள் காகிதத்தில் கிறுக்கின; வாய்விட்டு அழுதுகொண்டே கடிதத்தை எழுதி

அனுப்பிவிட்டான். மனமே இறுகிவிட்டது போன்ற உணர்வு; அப்பொழுதே வெடித்துவிடும் போன்ற சுமை...!

‘கீதா - காதல்... அதெல்லாம் பழங்கதை; தேய்ந்த கனவு; வெறும் பொய்!' அவன் தனக்குள் கரகரத்த குரலில் முனகிக் கொண்டான்.

*****

# 30

கீதாவிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை. எழுதவும் வேண்டாம் - ஆம், அவள் அவனை மறந்துவிட வேண்டும். அவன் துயரத்தில் ஆழ்ந்து போயிருந்தான்...! வாராது போல வந்த மாமணியைத் தோற்றுவிட்டானல்லவா? அந்த நிர்ப்பந்தம் அவன் நெஞ்சை நொறுக்கி விட்டது. கீதாவின் அன்பு முகம் அவன் கண்முன் தோன்றித் தோன்றிச் சித்ரவதை செய்தது. யாருடைய கௌரவத்திற்கோ அதன் தூய அன்பைப் பறிகொடுத்த சோகம் மனசை அரித்துக் கொண்டிருந்தது.

சோகத்தில் சாம்பிப்போன அவனுக்கு ஆறுதலளித்தவள், அன்புடன் தேறுதல் கூறியவள் அம்புஜம் தான்! - அவள் அன்பு, கீதாவின் பிரிவையும் தாயின் மறைவையும் மறக்கச் செய்து கொண்டிருந்தது.

'அக்கா... நீ மட்டும் இல்லாவிட்டால்...?' என்று அவன் நினைக்கும் போது கண்களில் நன்றியுணர்ச்சியுடன் கண்ணீரும் பொங்கியது.

'அந்த அளவுக்காவது நான் பாக்கியசாலிதான்' என்று திருப்தி அடைந்தான்.

திருப்தி! - அவன். திருப்தியாயிருப்பதா...? எந்தத் தெய்வத்துக்குப் பொறுக்கும்? பிரளயம் வந்துவிடாதா? அவன் திருப்தி நீடிக்காமலிருக்க, பிரளயம் வராமலிருக்க அவ்வூர் 'நல்லோர்' பலர் கூடி 'மகாயக்ஞம்' ஒன்று நடத்தினார்கள்! ஒருவர் காதில் ஒருவர் 'மந்திர உச்சாடனம்' செய்தார்கள்! 'வாண வேடிக்கை' முதல், 'திருவீதி ஊர்வலம்' வரை வாயாலே போட்டுத் தீர்த்தார்கள்! - அப்பா! அவர்களுக்குத்தான் என்ன கொண்டாட்டம்! பாவம், அவர்கள் கொண்டாட்டத்திற்கும் மகாயக்ஞத்திற்கும், அம்புஜத்தையும் ராஜாவையுமா ஆண்டவனாகவும், அம்மனாகவும், ஆகுதியாகவும் ஆக்கவேண்டும்? - அட பாவிகளா...? - அம்புஜத்தின் தலை சுழன்றது!

அவள் முகத்தில் ரத்தம் குழம்பி நின்றது. குடிசையில் திண்ணையில் உட்கார்ந்திருந்த ராஜாவைப் பார்த்ததும் பேசாமல் உள்ளே போய்விட்டாள்! அவள் அன்று மத்தியானம் கூடச் சாப்பிடவில்லை. மூன்று வேளையும் சாப்பிட அவர்கள் எங்கே போவார்கள்? அதற்குத்தான் வருந்துகிறாளோ! என்று அவன் மனம் குழம்பியது.

'அதற்கு வருந்துவானேன்...? நான் ஏதாவது தப்பு செய்து விட்டேனோ...?' உள்ளிருந்து அம்புஜத்தின் அழுகைக் குரல் விக்கி விக்கி ஒலிப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டான்.

"அக்கா... ஏனக்கா அழறே... என்ன நடந்தது...?"

"தம்... பீ -" அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவமானத்தால் அவள் உடல் குன்றிச் சிறுத்தது. முகத்தை மூடிக்கொண்டு கீழே விழுந்து 'ஓ'வென்று கூவி அழுதாள்!

"என்ன அக்கா, சொல்லிவிட்டு அழேன்..." அவன் குரல் துயரத்தில் கம்மி ஒலித்தது.

"தம்பீ... தம்பீ... தம்-பீ" என்ற ஒரே வார்த்தை தான் அவள் அழுகையில் அவனுக்குப் புரிந்தது.

அவனுக்கு ஒன்றும் புரியவுமில்லை; புரியாமல் அவள் அழுவதைப் பார்த்துக் கொண்டிருக்கப் பொறுமையுமில்லை. பற்பலவிதமாய் எண்ணமிட்டவாறு மீண்டும் தெருவில் வந்து உட்கார்ந்தான். சற்று நேரத்திற்குப்பின் அவள் அழுகைக் குரல் தணிந்தது. உள்ளே சென்றான்; ஒன்றும் பேசாமல் அவளையே உற்றுக் கவனித்தான்... அவள் தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் அடக்க முடியாத துயரத்தில் உதடுகள் துடித்தன... "தம்பீ... உலகம் பொல்லாதது..." என்று கூறி மீண்டும் விம்மினாள். அவன் சிரித்தான்.

"ப்பூ... இவ்வளவுதானா? இதுக்குப்போய் நீ அழுதா சரியாப் போய்விடுமா...? திடீர்னு உனக்கு ஏன் இந்த ஞானோதயம் வந்தது?"

“உலகத்துக்கு அக்கா - தம்பி உறவைக் கூடப் புரிஞ்சிக்க முடியலைடா, தம்பி...”

“என்ன?” அவனுக்கு நெஞ்சில் உதைத்தது போல் இருந்தது. நிலைகுலைந்து நின்றான்.

"ராசா, உன்னையும் என்னையும்...”

"ஐயோ, அக்கா...” அவன் செவிகளைப் பொத்திக் கொண்டு கத்தினான். அந்தக் கதறல் செவிட்டுச் சனங்களின் காதுகளில் விழவில்லை. அவர்கள் நிலை குருட்டு மனிதர்களின் பார்வைக்கு விளங்கவில்லை.

"ஈனச்சனங்கள்;- அப்படிக் கேவலமாகப் பேசியது யாரக்கா, யார்? - அந்த நாக்கை அறுக்கிறேன்-யார்? சொல்லு அக்கா, சொல்லு -!”

"தம்பீ, ஒருவர் சொல்லவில்லை - ஊர் சொல்லிக் கொள்கிறது? ஊர் வாயை மூட முடியுமா?”

“மூட முடியாது-கிழித்தெறிந்தால்-”

"ராஜா நீ அப்பிடித்தான் பேசுவே... உன் வயது அப்படி, நம்மேல் சுமத்தியிருக்கும் பழியைப் போக்க ஒரே ஒரு வழிதான் உண்டு."

“என்ன, சொல்லு... நான் செய்கிறேன்"

“ராஜா... நீ இங்கிருந்து போய்விடு...” தன் மனத்தை இரும்பாக்கிக் கொண்டு தன் குரலால் அல்ல... ஊராரின் குரலால் சொல்லிவிட்டாள் அவள்.

"சரி அக்கா, நான் போகிறேன்," அவன் அங்கிருந்து வெளியே அடியெடுத்து வைத்தான். ஒரு வினாடி நின்றான். உள்ளே அம்புஜத்தின் அழுகைக் குரல் அவன் நெஞ்சை உலுப்பிற்று.

'அழட்டும். நன்றாக அழட்டும்... இந்த ஈனர்களின் நடுவே பிறந்துவிட்ட பாவத்திற்காக அழட்டும்!' அவன் கண்களில்

கண்ணீர் வழிந்தது. 'என்னென்ன எண்ணி இருந்தேன்... அம்மாவும் என்னை ஏமாற்றி விட்டார்கள்! அம்புஜமும் என்னை ஏமாற்றி விட்டாள்! சீ! என்ன கேவலமான மனிதர்கள். என்னிலும் பத்து வயது மூத்தவள் அம்புஜம். அதைப் பற்றியெல்லாம் அவர்களுக்கென்ன...? தாயையும் புணர்ந்து வளர்ந்த மனுஷ ஜாதிதானே...' அவன் புறப்பட்டு விட்டான்.

"ராஜா...!" அவள் குரல் அவன் பிடரியைத் தொட்டது. நின்றான்.

"தம்பீ... என் மேல் வருத்தப்படாதே...?"

"இல்லை அக்கா..." அவன் குரல் அடைத்தது.

"அப்படியானால் இரு! நாளைக்குப் போகலாம், இன்னும் ஒரு வேளை என் கையால் சமைச்சி..." வார்த்தைகள் அழுகையில் குழறின.

அவன் மௌனமாய் உட்கார்ந்து விட்டான்.

அன்றிரவு ஒரே சோகம்! துடிப்பு! பயங்கரம்... ஒருவரைப்பற்றி ஒருவருக்கு மனசின் அடித்தளத்தில் விவரிக்க இயலாக் கூச்சம்! பயம் கசப்பு. எப்படியோ இரவு கழிந்தது.

பொழுது விடிந்தது. சாலையில் கவிந்திருந்த இருள் படலம் விலகி வழி வகுத்தது.

அவளிடம் கண்ணீருடன் விடை பெற்றுக் கொண்டு நடந்தான் ராஜா.

எங்கே...? பழைய சூன்யம்; பழைய மருள்.

'எங்கே...? எங்கு வேண்டுமானாலும்...' என்று தனக்குள் முனகிக் கொண்டான் ராஜா.

விரிந்த வான்வெளியின் கீழ், பரந்த பூமியில் ஒரு மனிதப் புழு ஊர்ந்து செல்லத்தானா இடமில்லை!

*****

# 31

ராஜாவின் சாரமற்ற, கைத்துப்போன வாழ்க்கை நிகழ்ச்சிகள் எதையோ நோக்கிச் செல்வது போல் பாவனை காட்டி ஒரு சுற்றுச் சுற்றி சென்ற இடத்தில் வந்து நின்று விட்டது.

அந்தச் சுழற்சியில் அவன் கண்டதெல்லாம், புலப்படாத, புரியாத, விடியாத, சூன்யம்! அந்தச் சூன்யத்தில் அவன் பெற்றதெல்லாம் தீராத, தேறாத, தெளியாத விரக்தி, அந்த விரக்தியில் திசைமறந்து, திசைகெட்டுத் திரியும் அவன், தன்னை மறந்து, தன்னையறியாமலேயே சித்த நல்லூரை அடைந்து விட்டான்.

அதோ, அந்தச் சத்திரம்

'காதலா...? உனக்கா?' என்று சத்திரம் அவனைப் பார்த்துச் சிரிக்கிறது. அவன் அதைக் கண்டு மருண்டான்.

"வா, வா - உன்னைப் போன்றவர்களுக்காகவே நான் இருக்கிறேன். நான் விழுங்கிய எந்த மனிதனும் ஜீரணிக்கப் படாமலிருந்ததில்லை... வா, வா...” அவன் அந்தச் சத்திரம் தன் கண்களில் படாத தூரத்துக்கு ஓடிவிட, விரும்பினான். ஓடினான்...

ஓடி ஓடி அவன் வந்து நின்ற இடம் ஒரு கல்யாண வீடு. வாழைக்குலைகளும், தோரணங்களும் கட்டிய கல்யாணப் பந்தலின் முன்புறத்தில் வரிசையாகக் கார்களும் வண்டிகளும் நிற்கின்றன.

கொட்டு மேளம் தட்டி முழங்குகிறது.

பட்டாடை உடுத்துப் பகட்டாக வரும் பெரிய மனிதர்களை வாசலில் நின்று பன்னீர் தெளித்துச் சந்தனம் கொடுத்து வரவேற்பவர்-அவர்தான். சித்தநல்லூர் ரிடையர்ட் தாசில்தார் ஸ்ரீமான் வேதாசலம் பிள்ளை, கீதாவுக்கு கலியாணம்!

தன்னை யாராவது கவனிக்கிறார்களா, என்று சுற்றிலும் ஒருமுறை பார்த்துக் கொள்கிறான் ராஜா.

அவனை யாராவது பார்த்தாலும் கண்டு கொள்ள முடியாது, அவன் தோற்றம் அவர்களுக்குப் புரியாது. சோகத்தில் மூழ்கிய அவன் கண்கள், மகிழ்ச்சியில் மின்னிடும் அவர்களின் விழிகளுக்குத் தெரியாது. தாடியும் மீசையும் வளர்ந்து அழுக்கேறிய கந்தலில் மறைந்திருக்கும் அந்தத் தரித்திரனைச் செல்வச் சீமான்களான அந்தப் பாக்கியசாலிகளால் புரிந்துகொள்ள முடியாது.

கல்யாண வீட்டுக்கு முன் இருக்கும் எச்சிற் தொட்டியைச் சுற்றி எத்தனையோ பேர் நின்றிருக்கிறார்கள். அந்த 'எச்சில் இலைச் செல்வர்'களின் நடுவேதான் அவனும் நிற்கிறான். அவர்கள் போடும் எச்சிலையைப் பொறுக்கவா அவன் நின்றான்? முடியுமானால் அவர்கள் முகத்தில் காறி உமிழவும் அவன் தயாராக இருந்தான்!

பங்களாவின் முன் வராந்தாவில் மணக்கோலத்தோடு சோமு நிற்கிறான். அவனைச் சுற்றிலும் நண்பர் கூட்டம் கூடி நின்று கேலிபேசிச் சிரித்துக் கொண்டிருக்கிறது.

'மாடிச் சன்னலருகே நிற்பது யார்...?'

'கீதா!'

சர்வாலங்கார பூஷிதையாக கண்களில் கண்ணீர் வழிய வானத்தை வெறித்துப் பார்த்தவாறு நின்றிருந்தாள் கீதா...!

ராஜாவின் உடல் நாணிக் கூசிற்று!

'கீதா, என்னை மன்னித்துவிடு! நான் கோழை; துரோகி, பதிதன்; புழு; அலி...! என்னை மன்னித்துவிடு கீதா...' என்று அவன் மனம் அவள் பாதங்களில் விழுந்து கெஞ்சியது.

ஐயோ, என்ன வேதனை, என்ன வேதனை!

மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டு தலை நிமிர்ந்து பார்த்தான்...

கீதாவின் பார்வை ஒருகணம் ராஜாவின் மீது கவிந்து அவன் விழிகளில் குத்திட்டு நின்றது. அவள் கண்களில் திடீரென ஒளி மங்கிற்று - முகம் சுருங்கியது. சன்னற் கம்பிகளைப் பிடித்திருந்த அவள் கரங்கள் தளர்ந்தன. சன்னலுக்கு வெளியே இரு கைகளையும் தொங்கவிட்டுக் கம்பிகளில் முகம் புதைத்துத் தலை சரிய அவள் வீழ்ந்து விட்டாள்! சிரம் தொய்ந்தது!

யாரோ அலறினார்கள். வீட்டிலிருந்தவர்களெல்லாம் திரண்டு மாடிக்கு ஓடினார்கள். கலியாண வீடு இழவு வீடாக மாறியது!

ஆம்; கீதா செத்துப் போனாள்!

ராஜா! -

அவன் வெறியனைப் போல நடந்தான். கால்கள் தடுமாறிப் பாதங்களில் மிதிபட்டு வேஷ்டி கிழிய அவன் நடந்துகொண்டே இருந்தான். அவன் முன்னே, செக்கச் சிவந்து நுரை கக்கிப் பாயும் நதியின் நடுவே அன்புருவான அவன் கீதா, அதோ அதோ நின்று இரு கைநீட்டி அவனை அழைக்கிறாள்.

கீதாவின் மலர்க்கரங்களில் விழப்போன அவனைப் பின்புறமிருந்து ஒரு கரம் இழுத்தது. - சாவின் கரங்களில் விழ இருந்த அவனை வாழ்வு இழுத்தது.

அவன் மருண்டு மருண்டு விழித்தவாறே திரும்பி நோக்கினான். தலையில் விறகுக் கட்டுடன் நின்றிருந்தவள் தங்கம்.

"ராஜா... என்னெ மன்னிச்சிடுங்கோ...” தலையிலிருந்து விறகுக் கட்டைை இறக்கிக் கீழே போட்டுவிட்டு அவன் கரங்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் தங்கம்.

"தங்கமா? -" அவன் ஆச்சரியத்துடன் பார்த்தான்!

"இதென்ன ராஜா, கோலம்? - வாருங்கோ - வீட்டுக்குப் போகலாம் -”

"வீடு -”

“ஆமாம் - நம் வீட்டுக்குப் போகலாம் -” அவன் கைகளைப் பற்றி அழைத்துச் சென்றாள் தங்கம். அவன் ஒன்றும் பேசாமல் மௌனமாக அவளுடன் நடந்தான்.

*****

# 32

வெள்ளிப் பனி மலையின் முகடுகளுக்கு அப்புறத்திலே, சந்திரனின் பொன்னூஞ்சலில் அமர்ந்து, மேகத்தின் சல்லாத் திரையை நீக்கி அவனைப் பார்த்துக் கொஞ்சிச் சிரிக்கும் தேவ மகள், கீதாதான்!

உயிரைக் கருவறுக்கும் குளிரில், பனிப்பாறைகளில் பாதங்கள் சறுக்கித் தடுமாறி, விழுந்து கையிலே மலர் மாலையும் கண்களில் துன்ப மாலையும் கொண்டு வழி நடந்த அவன் - ராஜா - அவளைக் கண்டுவிட்டான்.

"என்று வருவாய் ராஜா, நீ என்று வருவாய்?" என்று சோக கீதம் இசைக்கும் கீதாவை நோக்கிப் பாய்ந்தோடினான் அவன்.

"கீதா...!" என்று அந்த அருவத்தை ஆரத்தழுவி, அகமுருக உச்சிமோந்து, உவகை பொங்க முத்தமிட்டான். காற்று வெளி கானமிசைத்தது. தாரகைச் சிதைவு மலராய்ப் பொழிந்தது - திடீரென அவன் பாதங்கள் பூமியில் பாவின; அவன் மண்ணில் நின்றான். அவள் வானவெளியில் மறைந்தாள்!

"கீதா" - அவன் எழுந்தான்! எல்லாம் கனவு, பிரமை, மருள்!

அப்போது பொழுது சாய்ந்து இருள் கவிய ஆரம்பித்துவிட்டது.

"ராஜா - " அவன் கரங்களுக்கிடையில் சிக்கிக் கண்ணீர் விட்டு அழும் தங்கத்தின் குரல் துயரத்தில் கம்மியது.

கண்களைத் திறந்து அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

"தங்கம்...!"

"ராஜா, சாப்பிடலியா..."

"ஊஹும்..." அவன் தலையை ஆட்டினான்.

"எனக்குப் பசிக்கல்லே... வெளக்கை அணைச்சிட்டு நீ போய்ச் சாப்பிட்டுப் படுத்துக்கோ..."

"தூக்கத்திலே என்னவோ புலம்பினீங்களே..."

"அதெல்லாம் அப்புறம் சொல்றேன் தங்கம். என் மனம் சரியில்லை. பைத்தியமே பிடிச்சிடுமோன்னு பயமா இருக்கு. சரி நீ போ."

அவள் விளக்கை அணைத்துவிட்டுச் சமையலறைக்குள் போய்ப் படுத்துக் கொண்டாள்! அந்த இருண்ட அறையில் அவன் மட்டும் தனியே கிடந்து மனம் புழுங்கினான்.

'என் கீதாவைப் பிணக்கோலத்தில் கிடத்தி எல்லோரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள்...'

ஊணின்றி, உறக்கமின்றி குழம்பிய சித்தனாய், குமுறும் உள்ளத்துடன் அந்தத் தனியறையில் கிடந்த அவன் செவிகளில் வெகு தூரத்திலிருந்து சுடலைச் சங்கின் ஊளையும், சேகண்டியின் ஓசையும் காற்றில் மிதந்து வந்து ஒலித்தன. எழுந்தான்!

ஆற்றையடுத்த சுடலைக் கரையில் மயான ஊர்வலம் ஒன்று செல்கிறது. அவன் அறைக்கதவைத் திறந்து கொண்டு ஓசை செய்யாமல் எழுந்து வெளியே நடந்தான்!

ஆற்றங்கரையருகே செல்லும் மயான ஊர்வலத்திற்கு முன்னே முகத்தைத் துண்டால் மூடிக்கொண்டு குமுறிய வண்ணம் செல்பவர், வேதாசலம் பிள்ளைதான்!

இருவர் அவரைத் தாங்கிப் பிடித்திருக்கின்றனர். அவர் தளர்ந்து நடந்தார்.

'புனரபி ஜனனம் புனரபி மரணம்' என்று ஸ்லோக மனனம் செய்ய இப்பொழுது அவரால் முடியவில்லை. அன்று ராஜாவின் தாய் இறந்த பொழுது பிணத்தின் முன் நின்று செய்த உபதேசம், எவ்வளவு பொய்யானது என்பதைத் தன் மகளின் பிணத்தின் முன்னே அவர் நிருபித்துக்

கொண்டிருந்தார். ராஜா சற்று தூரத்தில் நின்று அந்தக் காட்சியைப் பார்த்தான்.

'மண ஊர்வலத்தை ஆனந்தத்துடன் அனுபவிக்கிறார்...' மாமா

'ஆமாம்... எனக்குத் திருப்திதான்... ' அவனுக்குச் சப்தம் போட்டுச் சிரிக்கத் தோன்றியது. அவன் தனிமையில் நின்று சிரித்தான்; அவன் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

பிரேத ஊர்வலம் நகர்ந்தது...

யார் கண்ணிலும் படாமல் சற்று தூரத்தில் அவனும் அவர்களைப் பின் தொடர்ந்தான்.

ஊதுவத்திகளின் பிணவாடை; மயானச் சங்கின் அழுகுரல்; சேகண்டியின் கால நடை; மணப்பெண் கீதா!

சுடலைக்கரையில் பிணக்குழி தயாராக இருந்தது. மணல் மேட்டில் பாடை இறக்கப்பட்டது. அவன் தூரத்தில் செடி மறைவில் உளம் வெதும்பி நின்றான். கியாஸ் லைட்டின் வெளிச்சத்தில் கீதாவின் முகத்தைப் பார்க்க அவன் கண்கள் அலைந்தன. கண்களைத் துடைத்துக் கொண்டு உற்று நோக்கினான். கண்கள் இரண்டும் நீருற்றாய் மாறிவிட்ட பின் பார்வை ஏது? பார்க்கின்ற விழிகள் தான் ஏது...? ரோஜா மாலையில் சரிகைகள் ஜ்வலித்தன.

வேதாசலம் வாய்விட்டு அழுதார்!

'அழுது என்ன பலன்! எல்லோரும் சேர்ந்துதான் கீதாவைக் கொன்றுவிட்டீர்களே...? கொன்ற பாவம் அழுதால் தீருமா'

'பெற்றவன் மகளைக் கொல்வானா?'

'கொல்வான்! அவன் - கௌரவம் அவளைக் கொல்லும்; அவன் பிடிவாதம் அவளைக் கொல்லும்; அவன் பிறந்த சமூகம் அவளைக் கொல்லும்! மனித ஜாதி எதையும் கொல்லும்...! உணர்ச்சிகளை, லட்சியங்களை, காதலை,

அன்பை, வாழ்வை எல்லாவற்றையுமே கொல்லும். ஹிருதயத்தையே கொன்று விட்டால்... எல்லாம் கொல்லப்பட்டு விடாதா...? கொலைத் தொழில் அதன் பிறப்புரிமை! மனிதர்கள் ஒரு சமூகமாக, ஒரு ஜாதியாக ஒன்று சேர்ந்ததே கொலைத் தொழிலின் அடிப்படையில் தானே? கூட்டாகச் சேர்ந்து எதையாவது கொன்று தீர்க்க வேண்டும். இதுவே மனுஷத்வம்...?' அவன் மனம் குருட்டுப் புலி போல் உறுமிக் கண்டபடி விழுந்து சாடிற்று.

'கொலைகாரர்களே! உங்களுக்கு அழுகை வேறு கேடா? பாபிகளே! நீங்கள் தத்துவம் பயின்றது எதற்கு?'

'சீ சீ... மிருக ஜீவிதம்...!'

பிணத்தைப் புதை குழியில் இறக்குகிறார்கள்!

'ஐயோ! என் கனவை, வாழ்வில் நான் பெற்ற ஒரே பாக்கியத்தைப் புதை குழியில் இறக்குகிறார்களே...' அவள் தந்தை கண்களை மூடிக்கொண்டு ஒரு பிடி மண்ணை அள்ளிப் போட்டு விட்டார். அவரைத் தொடர்ந்து கீதாவின் மீது, அந்தப் புனிதத்தின் மீது, எல்லோரும் மண்ணை, காற் புழுதியை வாரி இறைக்கிறார்களே... அவன் தனிமையில் தரையில் விழுந்து புரண்டு துடித்தான்.

"எல்லோரும் போய் விட்டார்கள்! இருளில் எழுந்து நிற்கிறான்"

"அடி கீதா..." அவன் குரல் எங்கும் எதிரொலிக்காமல் காற்று மண்டலத்தில் யாத்திரை புரிகிறது!

'இனிமேல் நீ இல்லை... இல்லவே இல்லை! கீதா என்றொரு பிறவி இல்லை; பேதைமை இல்லை; இனிமேல் உனக்கு விரக்தி இல்லை; சோகம் இல்லை; கண்ணீர் இல்லை; வாழ்க்கையின் கொடுமை முட்களால் துன்பப்பட்டு துடிக்கும் துடிப்பு இல்லை' அவன் வாய்விட்டுக் கூவிப் பிதற்றினான்; அழுதான்; சமாதியை நோக்கி நடந்தான்.

அதன் மீது சந்தனமும் குங்குமமும் புஷ்பங்களும் சிதறிக் கிடந்தன. அந்த மண் மேட்டின் மீது கவிழ்ந்து படுத்துக் கொண்டான்.

அவன் வாய் முணுமுணுத்தது!

*'ஊரைக் கூட்டி ஒலிக்க அழுதிட்டுப்*

*பேரை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்*

*சூறையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு*

*நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே...'*

"ராஜா..." என்று பின்புறமிருந்து தங்கத்தின் குரல் ஒலித்தது. அவள் அவனை அணைத்துக் கொண்டு 'ஓ'வெனக் கதறினாள்.

"இதென்னங்க...?"

“தங்கம் நீ ஏன் இங்கே வந்தே!"

“எனக்குப் பயமா இருக்கே... இதெல்லாம் என்னங்க?"

"சொல்லுகிறேன்..." அவன் நடந்ததையெல்லாம் சொல்ல ஆரம்பித்தான். இருளில் மயானக்கரை மேட்டில் துலுக்கன் சத்திரத்து வாசற்படியில் போதையுடன் உட்கார்ந்திருந்தான் சாரங்கன். தன்னை மறந்த லயம்! சத்திரத்துப் படிகளில் யாரோ ஒருவன் ஏறுகிறான். பூட்ஸ் சப்தம் கேட்கிறது. சாரங்கன் செவிகளுக்கு கேட்கவில்லை; அதை அவன் பொருட்படுத்தவும் இல்லை. வந்தவன் நேரே உள்ளே நுழைகிறான். வாசற்படியின் குறுக்கே உட்கார்ந்திருக்கும் சாரங்கனின் காலில் ஒரு உதை...

"யார்ரா அவன்?" என்று எழுந்த சாரங்கன் வந்தவனின் முகத்தை உற்றுப் பார்க்கிறான்.

“ஓ, இன்ஸ்பெக்டரு ஸாரா...? வாங்க ஸார்..." இன்ஸ்பெக்டர் ஆணவத்தோடு விறைத்துக் கொண்டு நிற்கிறார்.

சாரங்கனுக்குக் கோபம் மூள்கிறது. தெரியாமல் உதைத்ததற்காக மன்னிப்புக் கேட்பார் இன்ஸ்பெக்டர் என்று எதிர்ப்பார்த்தான் சாரங்கன். வேண்டுமென்றே உதைத்திருக்கிறான் என்பதைக் கண்டதும் அவன் முகம் கோபத்தால் சிவக்கிறது; விகாரமாகச் சுருங்குகிறது!

"ஐயா, இன்ஸ்பெக்டரே வழியில் ஆளு உக்காந்திருக்கிறது கண்ணுக்குத் தெரியலியோ!"

"வழியிலே உட்காந்தா அப்படித்தான்... இது தர்மசத்திரம்... நான் உன்னை எச்சரித்துவிட்டுப் போகவே வந்தேன்..." என்று அங்கிருந்த நாற்காலியில் அமர்கிறார் அந்த இளம் போலீஸ் அதிகாரி.

"என்ன சமாச்சாரம்?" என்று கடுமையாகக் கேட்டான் சாரங்கன்.

"உன்னைப்பற்றி, சேர்மன் சிதம்பரம் ஒரு புகார் கொடுத்திருக்காரு..."

"ஓஹோ! அவன் புகார் கொடுக்கறதுக்கு முன்னாலே என்னைப் பத்தி உங்களுக்கு ஒண்ணும் தெரியாதா...?"

"என்னிடம் அதிகமா பேசினா, மரியாதை நடக்கும்..." என்று கையிலிருந்த லாத்தியைக் காட்டுகிறார் இன்ஸ்பெக்டர்.

“பயம்மா இருக்குது ஸார்... உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா?" என்று பணிவான முறையில் கேட்கிறான் சாரங்கன்.

தொடைகளின் மீது லாத்தியை வைத்து உருட்டிக் கொண்டே தலை நிமிர்ந்து அலட்சியமாக சிகரெட் புகை ஊதியவாறு,

"என்ன?" என்கிறார் இன்ஸ்பெக்டர்.

"நீங்க உட்கார்ந்திருக்கீங்களே நாற்காலி. அது மந்திர நாற்காலிங்க... எந்திருச்சீங்கன்னா மண்டை தெறிச்சிப் போகும்" என்று கபடச்சிரிப்பு சிரித்தான் சாரங்கன்.

"உம்..." இன்ஸ்பெக்டரின் கை லாத்தியை இறுகப் பற்றிப் பிடிக்கிறது. தன்னைச் சுற்றிலும் ஒருமுறை பார்க்கிறார். யாருமில்லை; எல்லோரும் மாடியில் இருக்கிறார்கள். வாசற்படியில் வழியை மறித்துக்கொண்டு நிற்கிறான் சாரங்கன். ஒருமுறை சிகரெட்டின் "கையை ஒரு மூச்சு பலமாக இழுத்தவாறு யோசிக்கிறார் இன்ஸ்பெக்டர்."

'ஒரு ஆள்தான் இருக்கிறான். அதுவும் போதை! இப்படி நடக்கும்னு - தெரிஞ்சா, கூட ஒரு கான்ஸ்டேபிளைக் கூட்டுகிட்டு வந்திருக்கலாம்... எக்கச்சக்கமா மாட்டிக்கிட்டோமே; வகையா லாத்தியாலேயே ஒண்ணு போட்டா ஆளு விழுந்திடுவான்...' என்று நினைத்து லாத்தியை உயர்த்தி அவர் எழுந்திருக்க முயன்றார்.

மறுகணம் நாற்காலியோடு அவரைத் தூக்கி முற்றத்தில் எறிந்தான் சாரங்கன். அவர் கையிலிருந்த லாத்தி சுழன்று எங்கோ போய் விழுந்தது. நாற்காலியுடன் அலங்கோலமாய் விழுந்து கிடந்த அவர்மீது பாய்ந்தான் சாரங்கன். அவர் சட்டையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி மோவாயில் ஒரு குத்து...

முற்றத்துத் தூணருகே கவிழ்ந்து விழுந்தார் இன்ஸ்பெக்டர்... மீண்டும் பிடரியைப் பிடித்துத் தூக்கி நிறுத்துகிறான். இன்ஸ்பெக்டர் தனது சக்தி முழுவதையும் சேர்த்துக் கையை உயர்த்தி குத்துகையில் அவர் கையைத் தட்டியெறிந்து மீண்டும் ஒரு குத்து...

கீழே விழுந்த இன்ஸ்பெக்டரால் எழுந்திருக்க முடியவில்லை. நெற்றியிலும் மூக்கிலும் வாயிலும் ரத்தம் குழம்பி வழிகிறது...

ஒரு கையால் அவர் பெல்டைப் பற்றி ஆளைத் தூக்கி நிறுத்துகிறான் சாரங்கன்.

சாரங்கனின் முகம் புலியின் முகம் போல் பயங்கரமாய் இருந்தது. அவன் ஒரு மிருகம் போல் குனிந்து நின்றான்.

இரண்டு கைகளையும் முறுக்கேற்றித் தயாராக நீட்டிக் கொண்டு இன்ஸ்பெக்டரின் முன்னே சென்று,

"அதிகமாப் பேசினால் மரியாதை நடக்குமோ?" என்று சிரிக்கிறான்.

இன்ஸ்பெக்டர் ஒன்றும் பதில் பேசவில்லை... "உம் போய் சேருங்கள்!" லாத்தியை எடுத்து அவர் கையில் கொடுக்கிறான். இன்ஸ்பெக்டர் சத்திரத்திலிருந்து வேகமாக வெளியேறுகிறார். சாரங்கன் மாடிக்கு ஓடுகிறான். ரெங்காட்டமும், குடியும் ஏக அமர்க்களமாக நடைபெறுகிறது.

"ஏய்... ஆட்டத்தை நிறுத்துங்க... ஐயா, நீங்களெல்லாம் இடத்தைக் காலிபண்ணுங்க, இன்னும் ரெண்டு நாளைக்கு யாரும் இந்தப் பக்கம் வரக்கூடாது!" என்று கூவுகிறான்.

"என்ன விஷயம்?" என்று பதறினான் ரெஸாக்.

"இன்ஸ்பெக்டரு இங்கே வந்தான். சக்கையா உதைச்சு அனுப்பி இருக்கேன். என்னைப் பிடிக்கப் போலீசு வரும் நா, விடியற்காலையிலே இருட்டோடப் போயிடப் போறேன். எங்கேயாவது... ஆமா, முந்தி மாதிரிதான். சரி நான் போயி தங்கத்தையும் கூட்டிக் கிட்டுப் போகப் போறேன். அவள் தனியா இருந்தா சிதம்பரம்பிள்ளை விடமாட்டான்...?" - எல்லோரும் சாரங்கனின் விவஸ்தை கெட்ட செயலுக்காக எரிச்சலுடன் முனகுகின்றனர். ரெஸாக் கோபத்தோடு விரைகிறான். அதையெல்லாம் சாரங்கன் பொருட்படுத்தாமல், அவசர அவசரமாகத் தங்கத்தின் வீட்டிற்கு ஓடுகிறான்.

"தங்கத்தை கொண்டு போய் ராஜாகிட்டே சேத்துடணும்!- அப்புறம் என்னைப் போலீசுக்காரங்க புடிச்சிக் கிட்டாலும் பரவாயில்லை...!" என்று தனக்குள் முணகிக் கொண்டே இருளில் மறைந்தான் சாரங்கன்.

*****

# 33

“ராஜா... நீங்க என்னோடேயே இருந்துடுங்க... நாம் ரெண்டு பேரும் சேர்ந்து இருந்தா எவ்வளவு நல்லாயிருக்கும்?” தங்கம் தன் மனசில் உள்ளதைச் சொல்ல முடியாமல் திணறினாள்.

அவன் மௌனமாய் இருந்தான்...! நீண்ட பெருமூச்சு அவன் இதயத்தைப் பீறிக் கிளம்பியது.

"தங்கம்... நீ நல்லவள்... நான் உன்னைக் காதலிக்கத் தான் செய்கிறேன்...”

"நிஜமாகவா...”

"ஆமாம் தங்கம், ஆமாம்... நான் உன்னோடும் சாரங்கனோடும் பழகினாலும், முன்பெல்லாம் நான் பெரிய இடத்துப் பிள்ளை என்று நினைத்தே ஒதுங்கி நடந்து கொண்டேன். எனக்கு வாழ்க்கை புரிந்துவிட்டது. உன்னைப்போல் நான், என்னைப்போல் நீ... எனக்கு நீ துணை: உனக்கு நான் ஆதரவு. நம்மை எந்தப் பேதங்களும் பிரிக்கப் போவதில்லை... தங்கம்..."

அவள் கண்களில் கண்ணீர் பெருகிற்று... உதடுகள் துடித்தன. ஹிருதய தாளம் கட்டுக்கு மீறித் துடித்து உடலே வியர்த்தது.

"ராஜா!” அவள் அவனை அணைத்துக் கொண்டு விம்மினாள்.

"இந்த அன்பு என்றும் நீடித்தால் அதுவே போதும்...” அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மும் குரலில் முணகினாள் தங்கம்.

"நீங்கள் தற்கொலை செய்துகொள்ள மாட்டீர்களே”

“மாட்டேன்.”

அவன் உதடுகள் துடித்தன. கண்கள் கலங்கின.

"சரி, வாருங்கள் வீட்டுக்குப் போகலாம்" அவள் கரத்தைப் பற்றிக் கொண்டு சந்தை மைதானத்தை நோக்கி நடந்தான் ராஜா. பெரிய சாலையில் வரும்போது விளக்கு வெளிச்சத்தில் அவள் முகத்தைக் குனிந்து கவனித்தான்.

"யாரோ வருகிறார்கள்...!" என்று விளக்குக் கம்பத்தருகே கையைக் காட்டினாள் தங்கம். கம்பத்தில் சாய்ந்து ஏதோ நினைவில் பீடிப்புகையை ஊதியவாறு நின்றிருந்தான் சாரங்கன்

"சாரங்கா..."

"ராசா..." என்று ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டான் சாரங்கன்.

"எங்கேடா... சொல்லிக்காம கம்பி நீட்டிட்டே கலியாணத்துக்கு ஏற்பாடு பண்ணியாச்சா... உங்கம்மா ஒண்ணும் சொல்லலே...?" அவன் குரலில்தான் என்ன குதூகலம்!

"ஊஹூம்... அம்மா செத்துப் போயிட்டாங்க."

"ஐயையோ, நெசமாவா..." என்று பதறினான் சாரங்கன்.

"சரி, சரி, வாங்க வீட்டுக்குப் போவோம்..." என்று இருவரையும் அழைத்தாள் தங்கம்.

மூவரும் வீடு நோக்கி நடந்தனர்.

"தங்கம் கலியாணச் சாப்பாடு எப்போ போடப் போறே...?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் சாரங்கன். அவள் தலையைக் குனிந்து கொண்டே மௌனமாய் நடந்தாள்.

"ராசா... எப்போ கலியாணச் சாப்பாடு போடப் போறே...?"

"கலியாணத்தன்னிக்கு..."

சாரங்கன் முகம் மர்மமான சோகத்தில் சுருங்கிற்று.

"ராஜா... நான் அதுக்கு, குடுத்து வெக்கலே.”

அவன் குரல் கம்மி ஒலித்தது.

“அதுக்குள்ள ஒண்ணும் செத்துப் போகமாட்டே?" என்று சிரித்தான் ராஜா.

"செத்துப் போனாலும் போகலாம்...”

"ஐயோ, அப்படியெல்லாம் சொல்லாதீங்க...” என்று இடைமறித்தாள் தங்கம், சாரங்கன் உரக்கச் சிரித்தான்!

"செத்துப்போறதுன்னு சொன்னா உயிரு போயிடுமோ...?”

“நான் நாளைக்கே செத்துப் போகக் கூடத் தயார்...”

“சரி... சரி, அதைப்பத்தி என்ன பேச்சு...?” என்று கடிந்து கொண்டாள் தங்கம். அதற்குள் வீட்டை வந்தடையவே தங்கம் கதவைத் திறந்து விளக்குத் திரியை உயர்த்தினாள்.

"சாப்பிடலாமா...” என்று இருவரையும் அடுக்களைக்கு அழைத்தாள்.

"உம், அதெல்லாம் முடியாது... கலியாணச் சாப்பாடு... ஏமாத்தப் பார்க்கிறியே...” என்று சிரித்தான் சாரங்கன்.

"இனிமே நான் ஒண்ணும் ஏமாத்த மாட்டேன்... நீங்கதான் ஏமாத்தாம வந்திடணும்..."

“நான் ஏமாந்திடுவேனோ?” நெற்றியில் துளிர்த்த வியர்வையை வழித்து விட்டுக் கொண்டான் சாரங்கன்.

"இதைத்தான் கலியாணச் சாப்பாடுன்னு நெனச்சிக்கிட்டு சாப்பிடேன். நம்ம கலியாணத்திலே இதைவிட என்ன அதிகமா இருந்துடப் போகுது" என்று கைகளை அலம்பிக் கொண்டான் ராஜா.

"அப்போ... ராஜா, இங்கே வா... தங்கம் நீயும் வா-” என்று இருவரையும் அருகே அழைத்து இருவர் கைகளையும்

பற்றிப் பிடித்துக் கொண்டு,

"தங்கம், நான் உனக்கு எவ்வளவோ கொடுமை செஞ்சேன். அதையெல்லாம் மறந்துடு... ராஜா, என் தம்பிக்கு பதிலா உன் மேலே ஆசை வெச்சேன்... என் உயிருள்ள வரைக்கும் அந்த ஆசை மாறாது. நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா வாழணும்...” என்று ஆசீர்வதித்து இருவர் கரங்களையும் சேர்த்து வைத்தான்.

"ராஜா நாளைக்குக் காலையிலே... நீங்க ரெண்டு பேரும் இந்த இடத்தைக் காலி பண்ணிட்டுப் போயிடணும்-” சாரங்கனின் குரல் தாழ்ந்து ஒலித்தது.

“ஏன்?” என்று பதறினாள் தங்கம்.

"சிதம்பரம் பிள்ளை பழிதீர்க்க முடிவு பண்ணிப்பிட்டான். இன்னிக்கு போலீஸ் இன்ஸ்பெக்டரு வந்து அவனுக்காக என்கிட்டே வம்பிளுத்தான். தனியா மடக்கிக்கிட்டு அடிச்சிட்டேன். அதனாலே இனிமே நான் இங்கிருக்கக் கூடாது... நான் காலையிலே போயிடுவேன். நான் இல்லாம நீங்களும் இருக்கக் கூடாது. அதனாலே ராஜா, தங்கத்தைக் கூட்டிக்கிட்டு உங்க ஊருக்குப் போயிடு...”

“சரி...”

"ராஜா, நான் இதுவரை மனுசனா வாழல்லே. உங்களோட சேர்ந்து ஒரு மனுசனா வாழணும்கறதுதான் என் ஆசை. என்னைக்காவது ஒரு நாள் நான் உன்கிட்டே வந்தா ஒரு புது மனுசனை உன்னோட சேர்த்துக்குவியா?” என்று மனம் குமுறிக் கேட்டான் சாரங்கன்.

"நிச்சயமா! இப்போ நீ சாப்பிடு" என்று அவன் கையை இறுகப் பற்றினான் ராஜா.

"வேண்டாம் ராசா... சாப்பாடெல்லாம் ஆச்சு... அப்புறம் உங்க வீட்டுக்கு வரும்போது...” என்று கண்களைச் சிமிட்டிச் சிரித்தான் சாரங்கன்.

"அப்போ நான் வரேன்" என்று ராஜாவின் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டுத் தங்கத்தை நோக்கிக் கைகளை ஆட்டி விடை பெற்றுக் கொண்டு சந்தை மைதானத்தில் கவிந்திருந்த இருளில் மறைந்து, பெருமாளின் சாராயக் கடையே நோக்கி நடந்தான் சாரங்கன்.

*****

# 34

பொழுது இன்னும் விடியவில்லை. ஒரே இருட்டு... கண்கள் குருடாய் விட்டனவா என்று ஐயுறச் செய்யும் இருட்டு. அந்த இருட்டை இருட்டு என்று சொல்வதற்காக, தூரத்தில் எங்கோ ஒரு சிறு விளக்கின் மாணிக்கப்பறல் சிதறாமல் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

ராஜாவும் தங்கமும் ஆளுக்கொரு சிறிய துணி மூட்டையைச் சுமந்து கொண்டு தங்கள் பயணத்தைத் தொடங்கி விட்டார்கள்!

"தங்கம்...”

“என்ன...?”

“நாம் இப்போ எங்கே போகிறோம்?”

“உங்களுக்குத்தானே தெரியும்.”

“சொல்லட்டுமா?”

“உம்...”

"இருளில் கூட நாம் ஏதோ ஒரு இலக்கைக் குறி வைத்துத்தானே நடக்கிறோம்... பொழுது விடிந்துவிடும் என்ற நம்பிக்கையில் தானே நடக்கிறோம்”

ஒருநாள் மழை இரவில் புறப்பட்டபோது நடந்த சம்பாஷணை அவளுக்கு நினைவு வந்தது. அவன் கரங்களை உணர்ச்சியுடன் இறுகப் பற்றினாள்!

“நீங்கள் தத்துவார்த்தி மாதிரிப் பேசுகிறீர்களே...”

"உனக்கு இருட்டில் தத்துவங்கள் ஒன்றும் பிறக்கவில்லை?”

"நான் சொன்னது இந்த இருட்டல்ல...”

திடீரென பெரிய சாலையில் ஒரே ஒளிப்பிரவாகம். சத்திரத்து வாயிலருகே ஒரு பெரிய ‘போலீஸ் வான்' உறுமி

நிற்கிறது. காரின் வெளிச்சத்தில் பெரிய சாலையில் ஓருவம் தள்ளாடி நடந்து முன்னேறிச் செல்வது தெரிகிறது.

"நில் நகர்ந்தால் சுடுவேன்..." என்று போலீஸ் அதிகாரியின் குரல் கம்பீரத்துடன் ஒலிக்கிறது. சந்தை மைதானத்திலிருந்து பெரிய சாலையில் ஏறப்போன தங்கத்தைப் பிடித்து இழுத்து நிறுத்தினான் ராஜா.

சாலையில் இரு கைகளையும் உயர்த்தியவாறு நின்றிருந்தான் சாரங்கன்.

'போலீஸ் வேனி'லிருந்து ஜவான்கள் இறங்கினர். சத்திரத்தைச் சூழ்ந்தனர். சிலர் உள்ளே நுழைந்தனர்.

இன்ஸ்பெக்டர் கையில் ரிவால்வருடன் சாரங்கனை நெருங்கினார். அவன் அலட்சியமாக நின்றான்.

"நான் எதற்கும் தயார்! போலீஸ்காரனின் விலங்கு என் கையில் பட்டதும் இல்லை; படப்போவதுமில்லை" என்று கூறிச் சிரித்தான் சாரங்கன். அவன் வார்த்தைகள் குழறின.

இன்ஸ்பெக்டரின் பின்னால் இரு ஜவான்கள் துப்பாக்கிகளுடன் வந்தனர். அவர்களில் ஒருவன் கையில் கைவிலங்கு இருந்தது.

'போலீஸ் வேனின்' முன்புற வீட்டிலிருந்து ஒருவர் இறங்கினார்.

“யாரு... சிதம்பரம்பிள்ளை...?”

"என்னப்பா சாரங்கா, சௌக்கியமா? என் பிணம் மயானக் கரையிலேயா வேகும்?” என்று கேலிச் சிரிப்புடன் அவன் சட்டையைப் பிடிக்க கைகளை நீட்டினார் அவர்.

"ஆ... என்ன தைரியமடா -” என்று அவர்மீது சீறிப் பாய்ந்து, சிதம்பரம் பிள்ளையின் கழுத்தைப் பிடித்துக் குரல் வளையை நெறித்தான், சாரங்கன்...

'டூமீல்... டூமீல்...' என்று இன்ஸ்பெக்டரின் கையிலிருந்த துப்பாக்கி புகை கக்கிச் சீறிற்று.

சாரங்கனின் பிடி தளர்ந்தது - தளர்ந்த அவன் கரங்களைத் தட்டிவிட்டார் சிதம்பரம்.

குண்டுபட்டு ரத்தம் பீறி வழியும் விலாப்புறத்தை அழுத்திப் பிடித்தவாறு நின்றான் சாரங்கன்.

அவன் கண்கள் வெறித்து விழித்தன.

வாய் பிளந்தது; பிளந்து பிளந்து கோணிக் கோணி வலித்தது... மூச்சு இளைத்தது.

நின்று இரண்டடி எடுத்து வைத்தான்.

கால்கள் நிலைக்காமல் தடுமாறின.

"த... தம்பீ..." என்ற முனகல் அடிவயிற்றிலிருந்து கிளம்பி, குரல் வளையில் அடைத்தது.

துடித்துத் துடித்து விலாவை அழுத்திப் பிடித்தவாறு திணறித் திணறி நிமிர முயன்றான்; முகமெல்லாம் வியர்வை வழிந்தது, தான் செய்த தவறுகளுக்கெல்லாம் வருந்துவது போல் கண்கள் கலங்கின.

நின்று, சுழன்று பூமியில் வீழ்ந்தான் அவன்.

சித்தநல்லூர் பெரிய சாலையில் சத்திரத்தின் முன்னிலையில் சாரங்கனின் பிரேதம் கவிழ்ந்து முகம் புதைந்து வீழ்ந்து கிடந்தது.

சாலையோரத்தில் நின்றிருந்த தங்கம் குமுறி அழுதாள். அவள் வாயை அழுத்திப் பொத்தினான் ராஜா. சத்திரத்திற்குள் நுழைந்த ஜவான்கள் திரும்பினர்.

அவர்களுக்கு முன்னே ரெஸாக், ரஸியா, காமாட்சி மூவரும் கைகளில் விலங்கு பூட்டப்பட்டு லாரியில் ஏற்றப்பட்டார்கள்.

இன்னும் சில 'வாடிக்கைக்காரர்களும் கைது செய்யப்பட்டனர்.

சத்திரத்து வாசலில் போலீஸார் துப்பாக்கியுடன் காவல் புரிந்தனர்! அனைவரையும் ஏற்றிக் கொண்டு 'போலீஸ் வேன்' உறுமியவண்ணம் பின்புறமாக நகர்ந்து திரும்பி வந்த வழியே விரைந்தது.

தங்கம் மனம் குமுறி அழுதாள்! அவளை ஆறுதல் கூறி அணைத்துக் கொண்டு சாலை வழியே நடந்தான் ராஜா.

"அவன் முடிவு அப்படித்தான் இருக்கும். அது அவனுக்கும் தெரியும். அவன் சாகவேண்டியவன்தான். அவனால் சமூகத்துக்கு, உலகத்துக்கு எவ்வித லாபமும் இல்லை... அவன் சமூகத்தின் புல்லுருவி!”

தங்கத்தின் விம்மல் குறையவில்லை.

"சாரங்கன் சமூகப் புல்லுருவி; கொல்லப்பட வேண்டியவன்... சிதம்பரம் பிள்ளை?” - அவள் குரலில் ஆத்திரம் குமுறியது.

அவன் பதில் சொல்லவில்லை...

மௌனமாக நடந்தான் –

பொழுது விடிந்தது!

அவர்கள் நடந்து கொண்டே இருந்தனர். கால் வலித்தது...

மரத்தடியில் அமர்ந்தனர்; வாய்க்காலில் இறங்கி, கால் கை அலம்பி, முகம் கழுவி, குளிர்ந்த தண்ணீரை அள்ளிக் குடித்தனர். வெயில் தகித்தது!

மரத்தடி நிழல் சுகமளித்தது. சுகமாகக் காற்று அடிக்கும்போது மெய்சிலிர்த்தது. சற்று நேரம் உட்கார்ந்திருந்தவுடன் எழுந்து நடக்கத் தோன்றிற்று.

இருவரும் ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டு நடப்பதில் இன்பம் இருந்தது.

“ராஜா…” அவள் அவன் விரல்களை நெறித்தாள்!

"என்ன?”

“நாம் இப்போ எங்கே போகிறோம்?”

“தில்லையம்பதிக்கு”

“அங்கே யாரு இருக்கா?”

“ஏன், அக்கா இல்லியா?”

" அங்கேதான் எல்லோரும் உன் மேலே வீண் அபவாதம் சுமத்தி விரட்டிட்டதாகச் சொன்னீங்களே…”

"இனிமே அதுக்கு வழியில்லை.”

“ஏன்?”

"இனிமேதான் நீ இருக்கியே, எல்லா 'அபவாத’த்தையும் சுமக்கறதுக்கு."

"அபவாதமா?”

"ஆமாம், எனக்கு மனைவின்னு ஒருத்தி பெயரெடுப்பது அவளுக்கு அபவாதம்தான்” அவன் வார்த்தைகள் விரக்தியால் கைத்திருந்தன.

"அப்படிச் சொல்லாதீர்கள். நான் பாக்கியசாலி!”

“பாக்கியசாலி!” அவனுக்குக் கீதாவின் நினைவு வந்தது; கண்கள் கலங்கின.

"நம்ம பயணம் தில்லையம்பதியோடாவது முடியணும்" என்று பிரார்த்தித்துக் கொண்டாள் தங்கம்.

ராஜா லேசாகச் சிரித்தான்!

"வாழ்க்கையே ஒரு வழிப்பயணம் - எல்லோருக்கும் ஒவ்வொரு பாதை; ஆனால் இலக்கு ஒன்றே போகும் வழி ஒன்றானால் வழித்துணையும் ஏற்படுகிறது. துணை எவ்வளவு நாளைக்கு...! நாம் அவர்களை இழந்து விடுகிறோம்; அல்லது அவர்கள் நம்மை இழந்து விடுகிறார்கள்."

"நான் உங்களை இழந்துவிடமாட்டேன்!" என்று அவனைத் தன்னோடு சேர்த்து நெருக்கினாள் தங்கம்.

"இப்படித்தான் கீதாவும் நினைத்திருந்தாள்."

"ஆமாம். வாழ்க்கை ஒரு வழிப் பயணம்தான்..." என்று மனசில் முணகிக் கொண்டு தலையசைத்தாள் தங்கம்.

அனுபவச் சுமைகள் இதயத்தில் கனக்க, ஏதோ ஒரு நம்பிக்கையொளியில், தடம் புரிந்து கொண்டு, எதையோ இலக்காக வைத்து அவர்கள் வழி நடந்தனர்.

ஆம், வாழ்க்கை அவர்களை அழைக்கிறது. வாழ்க்கையை நோக்கி அவர்கள் நடக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அவர்கள் பயணம் தொடர்ந்தது! பாதை நீண்டது...

(முற்றும்)